# மக்கள்தொகைத் தத்துவத்தின் அடிப்படைகள்



முன்னேற்றப் பதிப்பகம்

# மக்கள்தொகைத் தத்துவத்தின் அடிப்படைகள்

பொறுப்பு ஆசிரியர் பேராசிரியர் தி. இ. வலென்தேய்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்
ஆசிரியர் குழு: க. யெ. அஞனியெவா,
யூ.அ. பிழிலான்ஸ்கி, தி.இ. வலென்தேய், இதரர்

ОСНОВЫ ТЕОРИИ НАРОДОНАСЕЛЕНИЯ
*на тамильском языке*

THE FUNDAMENTALS OF POPULATION THEORY
*in Tamil*

© Издательство «Высшая школа», 1977
© திருத்தங்கள், பிற்சேர்க்கைகளுடனான
தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

О $\frac{0703000000-316}{014(01)-86}$ 348—86

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . . . 5

**அத்தியாயம் ஒன்று**
மக்கள்தொகை வளர்ச்சியின் பிரதான நியதிகள் . . . . 7

**அத்தியாயம் இரண்டு**
வர்க்கங்களின் தோற்றத்திற்கு முந்திய சமுதாயத்தில் மக்கள்தொகை . . . . . . . . . . . . . 28

**அத்தியாயம் மூன்று**
அடிமையுடைமைச் சமூக அமைப்பில் மக்கள்தொகை . . 52

**அத்தியாயம் நான்கு**
நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் மக்கள்தொகை . . . 69

**அத்தியாயம் ஐந்து**
மக்கள்தொகை பற்றிய பூர்ஷ்வாக் கருத்தமைப்பின் தோற்றம் . . . . . . . . . . . . . . 81

**அத்தியாயம் ஆறு**
மக்கள்தொகைப் பிரச்சினைகளைப் பற்றிய ருஷ்ய சமுதாய சிந்தனை . . . . . . . . . . . . . . . 97

**அத்தியாயம் ஏழு**
முதலாளித்துவ மக்கள்தொகை விதி . . . . . . . 111

**அத்தியாயம் எட்டு**
முதலாளித்துவத்தின் கீழ் ஜனத்தொகைப் போக்கின் நியதிகள் . . . . . . . . . . . . . . 121

**அத்தியாயம் ஒன்பது**
வளர்முக நாடுகளின் மக்கள்தொகைப் பிரச்சினைகள் . 144

**அத்தியாயம் பத்து**
சோஷலிசத்தில் மக்கள்தொகையின் பொருளாதார விதி . . . . . . . . . . . . . . . . 157

**அத்தியாயம் பதினொன்று**
சோவியத் யூனியனில் மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய பொது விவரங்கள் . . . . . 166

அத்தியாயம் பன்னிரண்டு
சோஷலிசத்தில் உழைப்பு மூலாதாரங்களின் வளர்ச்சி
யில் ஜனத்தொகை அம்சங்கள் . . . . . . 186

அத்தியாயம் பதின்மூன்று
சோவியத் யூனியனில் குடிமக்களின் இடப்பெயர்ச்சி . . 193

அத்தியாயம் பதினான்கு
சோவியத் யூனியனில் மக்களின் குடியேற்றப்
பிரச்சினைகள் . . . . . . . . . . . . 201

அத்தியாயம் பதினைந்து
மக்கள்தொகையைப் பற்றிய ஞான முறை. மக்கள்
தொகை ஆய்வின் முறையியல் பிரச்சினைகள் . . 208

அத்தியாயம் பதினாறு
மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்
கள் . . . . . . . . . . . . . . 226

அத்தியாயம் பதினேழு
ஜனத்தொகை மற்றும் பொருளாதார நிகழ்ச்சிப்
போக்குகளின் பரஸ்பரத் தொடர்புப் பிரச்சினைகள் 240

அத்தியாயம் பதினெட்டு
மக்கள்தொகையின் பூகோளம் . . . . . . . . 257

அத்தியாயம் பத்தொன்பது
மக்கள்தொகையும் சட்டமும் . . . . . . . . 264

அத்தியாயம் இருபது
மக்கள்தொகைக் கொள்கையின் தத்துவார்த்த அடிப்
படைகள் . . . . . . . . . . . . . 275

## முன்னுரை

மக்கள்தொகை என்பது பரவலான சமூக விஞ்ஞானங்கள் மற்றும் பல இயற்கை விஞ்ஞானங்களின் ஆராய்ச்சிப் பொருளாகும். இது அந்த ஆராய்ச்சியின் சர்வாம்ச அணுகுமுறையை முன்நிர்ணயம் செய்கிறது. மேலும் பல்வேறு விஞ்ஞானங்களின் இணைப்பில் பொது தத்துவார்த்த, அடிப்படை மற்றும் பயன்மிகு ஆராய்ச்சிகளுக்கான புதிய வாய்ப்புகள் தோன்றுகின்றன. குறிப்பாக சர்வாம்ச அணுகுமுறைதான் புதிய தத்துவார்த்த அமைப்பாகிய மக்கள் தொகை பற்றிய ஞான முறையை உருவாக்க வழிகோலியது. இந்தச் சர்வாம்ச ஞான முறை மக்கள்தொகை பற்றிய புள்ளி விவர ஆய்வியல் (demography), மக்கள்தொகையின் பொருளாதாரம், சமூகவியல், பூகோளம், சுற்றுப்புறச் சூழலியல் மற்றும் பல நெருங்கிய விஞ்ஞானங்கள், விஞ்ஞானப் போக்குகளை ஒன்றிணைத்து நிற்கிறது. இவையனைத்தும் மக்கள் தொகை பற்றிய பொதுவான தத்துவத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைகின்றன. இத்தத்துவமானது மக்கள்தொகையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிப் போக்குகளின் சாரத்தை ஆழமாகப் பகுப்பாய்வு செய்ய உதவுகிறது, அதே நேரத்தில் இவற்றைப் பற்றிய ஞானத்தை ஒரே நிலையான, தர்க்க ரீதியான அமைப்பாக ஒன்றுசேர்க்கிறது, சோஷலிசச் சமுதாயத்தில் மக்கள்தொகை வளர்ச்சியை நிர்வகிக்கும் விஞ்ஞான அடிப்படைகளை உருவாக்க வழிகோலுகிறது.

இந்தப் பொதுத் தத்துவம் ஒரே முழுமை என்ற வகையில் இயற்கை மற்றும் சமுதாய வளர்ச்சியின் நியதிகளை அறியும் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் பிரிக்க இயலா அங்கமாகும். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினால் கண்டுபிடிக்கப்பட்டு, அடித்தளமிடப்பட்ட மக்கள்தொகைத் தத்துவத்தின் அடிப்படைகள் இதன் மூலையாணிகளாகும்.

மக்கள்தொகைத் தத்துவத்தின் அடிப்படைகள், ஜனத்தொகை இயக்கப் போக்குகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் முக்கிய நியதிகளைக் காட்டுகின்றன. இந்த அடிப்படைகளை எடுத்துரைத்ததானது மக்கள்தொகை வளர்ச்சியின் வரலாற்றுடனும் மற்றும் இதன் பிரச்சினை பற்றிய பல்வேறு கருத்துக்களின் விமரிசனத்துடனும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ளது. நூலின் தனி அத்தியாயம் மக்கள்தொகை பற்றிய ஞான முறையின் பொது விளக்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மக்கள்தொகைத் தத்துவ அடிப்படைகளினுள் உட்புகுதல் எனும் பிரதானக் கடமையின் தொடர்பில் மட்டுமே மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்றன.

அத்தியாயம் ஒன்று

# மக்கள்தொகை வளர்ச்சியின் பிரதான நியதிகள்

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் வரம்புகளுக்குள் தம் வாழ்க்கை நடவடிக்கைகளை நிறைவேற்றும் மக்களின் ஒட்டு மொத்தம்தான் மக்கள்தொகை என்று புரிந்து கொள்ளப் படுகிறது. பூமியளவிலும் கண்டம், நாடு, இதன் உட்பிரிவு கள், கிராமப் பிரதேசங்கள், நகரங்கள் அளவிலும் மக் கள்தொகை ஆராயப்படலாம். இது எப்போதுமே, குறிப் பிட்ட ஒரு சமூக மக்களினத்தின் இயற்கையான அடிப் படையை உருவாக்கும், குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களின் சிக்கலான ஒட்டுமொத்தமாகும். மக்களின் இந்த ஒட்டுமொத்தம் நிலையானதல்ல, இது இடையறுமல் வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சி, அளவுக் குறியீடுகளின் இயக்கப் போக்கில் மட்டுமின்றி சமுதாய வளர்ச்சியின் ஒவ் வொரு வரலாற்று காலகட்டத்திலும் மக்கள்தொகையின் பண்பு ரீதியான மாற்றத்திலும் வெளிப்படுகிறது.

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் கருத்து நிலைகளை சமுதாயத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு பரப்பும் முகமாக மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தை உருவாக்கினர். சமுதாய வளர்ச்சியின் பொது விதி களைப் பற்றிய விஞ்ஞானமாகிய வரலாற்றுப் பொருள்முதல் வாதம் அதே சமயத்தில் மக்கள்தொகை உட்பட சகலவித சமுதாயப் புலப்பாடுகளையும் ஆராய்வதற்கான ஒரே சரி யான முறையாகத் திகழ்கிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவம்தான் மக்கள்தொகை யின் சமூக சாரத்திற்கு உண்மையிலேயே விஞ்ஞான பூர்வமான விளக்கத்தைத் தருவதையும் சமுதாய வளர்ச்சியில் இதன் முக்கியத்துவம் மற்றும் இதற்குள்ள இடத்தை நிர்ணயிப் பதையும் எனவே மக்கள்தொகை வளர்ச்சியின் நியதிகளை வரையறுப்பதையும் சாத்தியமாக்குகிறது. சமுதாயம் மனி

தர்களால் ஆனது, இவர்கள் சமுதாய வாழ்க்கையின் அவசியமான அங்கமாகும்; ஒரு குறிப்பிட்ட குறைந்த பட்ச அளவு மக்கள் இல்லாவிடில் சமுதாயத்தால் வாழ முடியாது. ஆனல் இதைப் புரிந்து கொள்வது மட்டுமே மக்கள் தொகையின் சாரத்தை விளக்க போதுமானதல்ல. இந்தக் கருத்து விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவம் தோன்றுவதற்கு முன்னரே உருவாக்கப்பட்டது, இக்கருத்து இன்றைய பூர்ஷ்வா சமூகவியலர்களுக்கும் உரித்தானது. இவர்களுடைய கண்ணோட்டத்தின்படி சமுதாயம் என்பது தனிநபர்களின் இயந்திரகதியான ஒட்டுமொத்தமாகும். ஆனல் உண்மையில் சமுதாயம் என்பது மக்களுடைய பரஸ்பர செயலாக்கத்தின் விளைவாகும், மனிதர்களுக்கு இடையிலான உறவுகளின், எல்லாவற்றிற்கும் மேலாக சமுதாயத்தின் அடிப்படையை, இதன் பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தும் உற்பத்தி உறவுகளின் ஒரு குறிப்பிட்ட முறையாகும். சமுதாய வளர்ச்சியில் உற்பத்தி முறை தீர்மானகரமான சக்தியாகும். பொருளாயத நலன்களின் உற்பத்தி போக்கில் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான ஒற்றுமை இந்த உற்பத்தி முறையில் உருக்கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சிப் போக்கு எப்போதுமே, மனிதகுல வளர்ச்சியின் எல்லா கட்டங்களிலும் சமுதாய ரீதியானதாகும். மனிதன் என்ருல் சமூக மனிதன் எனப் பொருள். இவனல் சமுதாயத்திற்கு வெளியே, மற்ற மனிதர்களுடனை உற்பத்தி உறவுகளுக்கு அப்பால் வாழ முடியாது, எனவே உற்பத்தி உறவுகளுக்கு அப்பால் மக்கள்தொகையும் நிலவ இயலாது. அதே நேரத்தில் உற்பத்திக் கருவிகள் ஒரு புறமிருக்க, இவற்றை உற்பத்தியில் பயன்படுத்தும் மனிதர்கள்தான் முதலாவதாக சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளாவார்கள். உழைப்பாளிகள் மிக முக்கியமான உற்பத்திச் சக்தியாவார்கள். **“மனிதகுலம் முழுவதன் முதல் உற்பத்திச் சக்தி தொழிலாளி, உழைப்பாளி”*** என்ருர் வி.இ. லெனின்.

இவ்வாருக பொருளாயத நலன்களின் உற்பத்தி முறை என்பது சமுதாய வளர்ச்சியின் தீர்மானகரமான சக்தியாகும், பூகோள சூழ்நிலேயுடன் சேர்ந்து மக்கள்தொகை— சமுதாயத்தின் பொருளாயத வாழ்க்கைக்குத் தீர்மானகர

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 38, பக்கம் 359 (ருஷ்யப் பதிப்பு).

மான நிபந்தனையாகும். மக்கள்தொகை என்பது இயற்கை வரையறுப்பு மட்டுமல்ல, இது உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சிப் போக்குடன் பல்வேறு இழைகளால் நேரடியாகவும் எதிர்மறையாகவும் தொடர்பு கொண்டது, சமூக உற்பத்தியின் அடிப்படை மற்றும் அகப்பொருள் என்று விஞ்ஞானக் கம்யூனிச ஆசான்கள் காட்டினர்.

''குடிமக்கள்'' எனும் தொடர்பில்லாத கருத்து, பொதுவாக ''உற்பத்தி'' எனும் கருத்தைப் போன்றே சூட்சுமமானது. ''எந்த வர்க்கங்கள் குடிமக்களை உருவாக்கியுள்ளனவோ அவற்றை ஒரு புறமாக ஒதுக்கி வைத்தால் குடிமக்கள் என்பது சூட்சுமமானதாகும். எவற்றின் அடிப்படைகளில் இந்த வர்க்கங்கள் அமைந்துள்ளனவோ அவை, உதாரணமாக கூலியுழைப்பு, மூலதனம் முதலியவை எனக்குத் தெரியாவிடில் வர்க்கங்கள் என்பது வெற்று ஒலியாகும். கடைசியாக நான் குறிப்பிட்டவை பண்ட மாற்று, உழைப்புப் பிரிவினை, விலைகள் முதலியவற்றை முன்னனுமானிக்கின்றன''* என்றார் கா. மார்க்ஸ். ''குடிமக்கள்'' எனும் கருத்தை இவ்வாறு அணுகும் போது மக்கள்தொகையை இதன் மிகப் பல்வேறான உறவுகளின் பின்னணியில், முதலாவதாக சமுதாய உற்பத்தி, பகிர்வு, நுகர்வு உறவுகளின் பின்னணியில் ஆராய வேண்டும்.

மக்கள்தொகையைப் பற்றிய போதனை பொருள்முதல்வாத இயக்கவியல் எனும் நிலையான அஸ்திவாரத்தைப் பெற்று, மார்க்சிய-லெனினிய மூலவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட சமுதாய வளர்ச்சி விதிகளை, எல்லாவற்றிற்கும் மேலாக சமுதாய உற்பத்தியின் வளர்ச்சி விதிகளை நேரடியாக ஆதாரமாகக் கொண்டுள்ளது. மக்கள்தொகையானது வர்க்கங்களாகப் பிரிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சமூக உறவுகளில் இவற்றின் இடையே மிகப் பல்வேறான தொடர்புகள் (பொருளாதார, அரசியல், தேசிய, மத, குடும்ப) நிலவுகின்றன. செயல்முனைப்பான உழைப்பு நடவடிக்கையில் ஈடுபட வல்ல மனிதர்கள்தான் சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்தியாவார்கள், இவர்கள்தான் உற்பத்தியின் மற்ற அங்கங்களுக்கு உயிரூட்டுகின்றனர். உற்பத்திச் சக்திகளின்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 12, பக்கம் 726 (ருஷ்யப் பதிப்பு).

ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் உழைக்க வல்ல குடிமக்கள் சமுதாயச் செல்வத்தின் அளவுகளையும் எதிர்கால பொரு ளாதார வளர்ச்சியின் வாய்ப்புகளையும் பெரிதும் நிர்ணயிக்கும் முக்கியக் காரணியாவார்கள். குடிமக்களின் எண்ணிக்கை சமுதாய வளர்ச்சியின் வேகத்தை துரிதப்படுத்தியோ குறைத்தோ அதன் மீது தாக்கம் செலுத்துகிறது. ஆனால் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் சமுதாயத்தின் கட்டமை வையோ, ஒரு வரலாற்று அமைப்பிலிருந்து இன்னொரு அமைப்பிற்கு மாறிச் செல்லும் காரணங்களையோ விளக்க வில்லை. குடிமக்களின் எண்ணிக்கையோ நெருக்கமோ சமு தாய அமைப்பின் தன்மையை நிர்ணயிக்கவில்லை, இவை சமுதாய வளர்ச்சியின் தீர்மானகரமான சக்திகளும் அல்ல.

மார்க்சிய இயக்கவியல் முறை என்பது ஒரே முழுமை என்ற வகையில் இயற்கை மற்றும் சமுதாய வளர்ச்சியினு டைய நியதிகளின் வெளிப்பாடாகும். இந்த முழுமையின் பல்வேறு பகுதிகள் பரஸ்பரத் தொடர்புடையவை, இடை யறுமல் வளர்ச்சியடைபவை. நமது அறிதல் போக்கு புறவய ரீதியான யதார்த்தத்திற்கு ஏற்றது என்பதை இம்முறை அடிப்படையாகக் கொள்கிறது. மார்க்சிய-லெனினிய விஞ் ஞானமானது, மக்கள்தொகை என்பது சமூக புலப்பாடு, இது சமூக வளர்ச்சியின் விதிகளுக்குக் கட்டுப்பட்டது எனும் மிக முக்கிய ஆரம்ப முறையியல் கோட்பாட்டை ஆதார மாகக் கொண்டு இயங்குகிறது. மக்கள்தொகையின் விதிகள் மற்றும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்ய ஆக்கபூர்வ மாகப் பயன்படுத்தப்படும் மார்க்சியம்-லெனினியம்தான் மக்கள்தொகையின் நிலையையும் இதன் செயல்துடிப்பு மிக்க பகுதியாகிய உழைக்கும் மக்கள் திரளினரின் நிலையையும் இதன் உண்மையான பிரச்சினைகளையும் எதிர்காலத்தையும் தெளிவுபடுத்த உதவுகிறது. அடிமையுடைமை அமைப்பில் உழைக்கும் மனிதனை ''பேசும் கருவி'' என்ற நிலை வரை தாழ்த்துவதும் பொருளாதார ரீதியாகவும் சட்ட ரீதியாக வும் இவனை முற்றிலும் உரிமையற்றவனுக்குவதும் நிலவின. சகலவித செல்வங்களையும் உருவாக்கியவர்களுக்கு, மிகப் பெரும்பாலான மக்கள் திரளினருக்கு சாதாரண மனிதச் சூழ்நிலைமைகளில் உழைக்கும் வாய்ப்புகள் மறுக்கப்பட் டிருந்தன. எனவே மக்கள்தொகைக்கும் இந்தச் சமுதாய-வரலாற்று அமைப்பின் முக்கியப் பிரச்சினை புறவய ரீதியாக

அடிமையுடைமையில் அடங்கியிருந்தது. அடிமையுடைமை அமைப்பு நிலப்பிரபுத்துவ அமைப்பால் மாற்றப்பட்டதை யடுத்து (இம்மாற்றத்தின் சாரம் புரட்சிகரமானது) இது தீர்க்கப்பட்டது. நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் பண்ணை யடிமை உரிமை மக்கள்தொகையின் பிரதான பிரச்சினை யாக இருந்தது. சமூக, பொருளாதார வளர்ச்சியின் புறவய ரீதியான கோரிக்கைகள் காலப் போக்கில் நிலப்பிரபுத்துவ உறவுகளைப் புரட்சிகரமாக முதலாளித்துவ உறவுகளால் மாற்றீடு செய்வதற்கு இட்டுச் சென்றன.

முதலாளித்துவ உற்பத்தி முறையில் மக்கள்தொகையின் முக்கியப் பிரச்சினை, உற்பத்திச் சாதனங்களின் உடைமை யாளர்கள் கூலியுழைப்பைச் சுரண்டுவதில் அடங்கியுள்ளது. முதலாளித்துவ உற்பத்தி முறையே சார்புநிலை அமித ஜனப் பெருக்கை உண்டாக்குகிறது. ''இப்படிப்பட்ட சூழ்நிலை களில், பாட்டாளி வர்க்கத்தினரில் இப்பகுதியின் சக்திகள் விரைவாக பலமிழந்தாலும் இதன் எண்ணிக்கை அதிகமாகும் வடிவத்தில் இப்பகுதியின் எண்ணிக்கை கூடும். இவ்வாறாக தொழிலாளிகளின் விரைவான தலைமுறை மாற்றம் தேவைப் படும். (குடிமக்களின் மற்ற வர்க்கங்களின் விஷயத்தில் இந்த விதி செல்லுபடியாகாது.) இந்தச் சமூக தேவையா னது பால்யத் திருமணங்களாலும்—இது பெருவீத தொழில் துறையின் தொழிலாளிகள் எந்தச் சூழ்நிலைகளில் வாழுகின் றார்களோ அச்சூழ்நிலைகளின் அவசியமான பின்விளைவாகும் —வேலை செய்யும் குழந்தைகளை உற்பத்தி செய்வதற்காக இவர்களின் சுரண்டல் தரும் பரிசாலும் திருப்திபடுத்தப் படுகிறது.''*

சோவியத் நாட்டில் மக்கள்தொகை பிரச்சினைகள், முதலாளித்துவத்திற்கு என்றென்றைக்குமாக முடிவு கட்டிய மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியால் தீர்க்கப் பட்டன. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், ஜெர் மானிய பாசிசத்தையும் ஜப்பானிய இராணுவ வெறியையும் தோற்கடித்து சோவியத் மக்கள் வெற்றி வாகை சூடியதன் விளைவாக ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இருந்த ஒரு சில நாடுகளின் மக்களும் மற்றும் க்யூப மக்களும் முதலாளித்துவ முறைகளை ஒழித்துக் கட்டவும் தம் நாடுகளின் மக்கள்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கங்கள் 656—657 (ருஷ்யப் பதிப்பு).

தொகையின் முக்கிய சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் வாய்ப்பைப் பெற்றனர். சோஷலிச, கம்யூனிசக் கட்டுமானப் பாதையில் காலெடுத்து வைத்துள்ள நாடுகளில் மக்கள் தொகைப் பிரச்சினைகள் உற்பத்திச் சக்திகள் மேற்கொண்டு வளர்ச்சி அடையும் போதும் உற்பத்தி உறவுகள் மேம்பாடு அடையும் போதும் தீர்க்கப்படுகின்றன.

மக்கள்தொகை வளர்ச்சிப் போக்குகள் உருவாவதில் பொருளாதாரக் காரணியின் முக்கியத்துவத்தை நிரந்தரமாகக் கவனத்தில் கொள்ளும் அதே நேரத்தில் மற்ற காரணிகளைக் கவனிக்காமல் விடுவது பெரும் தவறாகும். பி. எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினர்: "...வரலாற்றின் மீதான பொருள்முதல்வாதக் கருத்தின்படி யதார்த்த வாழ்க்கையின் உற்பத்தியும் புனருற்பத்தியும்தான் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கில் இறுதியாக தீர்மானகரமான அம்சங்களாகும். நானே மார்க்சோ இதற்கு மேல் எப்போதுமே கூறியதில்லை. பொருளாதார அம்சம் மட்டுமே ஒரே தீர்மானகரமான அம்சம் எனும் பொருளில் யாராவது இக்கருத்து நிலையைத் திரித்துரைத்தால் அவர் இதை ஒன்றுமே இல்லாத, தெளிவற்ற, பொருளற்ற வாக்கியமாக மாற்றுகிறார்... சில சமயங்களில் இளைஞர்கள் தேவைக்கதிகமாக பொருளாதார அம்சத்திற்கு முக்கியத்துவம் தருகிறார்கள் என்பதில் ஓரளவிற்கு மார்க்சும் நானும் குற்றவாளிகள்தான். எங்களுடைய எதிரிகளை மறுக்கும் போது அவர்கள் மறுத்த முக்கியக் கோட்பாட்டை நாங்கள் கோடிட்டுக் காட்ட வேண்டியிருந்தது. பரஸ்பர செயலாக்கத்தில் ஈடுபட்டுள்ள மற்ற அம்சங்களின் மீது உரிய கவனம் செலுத்த எப்போதும் எங்களுக்கு நேரமும் இடமும் வாய்ப்புகளும் கிடைக்கவில்லை... முக்கியக் கருத்து நிலைகளைக் கிரகித்த உடனேயே (அதுவும் எப்போதுமே சரியாக இல்லை) புதிய தத்துவத்தை முற்றிலும் புரிந்து கொண்டதாயும் இதை உடனேயே பயன்படுத்த முடியுமென்றும் துரதிர்ஷ்டவசமாக இடைவிடாமல் எங்கும் கருதுகின்றனர். புதிய 'மார்க்சியவாதிகளில்' பலரின் மீது என்னால் இக்குற்றச்சாட்டைச் சுமத்த முடியும்; இதனால் தானே விசித்திரமான குழப்பமும் கூட ஏற்பட்டது."*

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 37, பக்கங்கள் 394, 396 (ருஷ்யப் பதிப்பு).

மக்கள்தொகைப் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்யும் மார்க்சிய இயக்கவியல் முறையானது ஒவ்வொரு தனிப்பட்ட விஷயத்திலும் பரஸ்பரத் தொடர்புடைய சமூக-பொருளாதார புலப்பாடுகளையும் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் இயக்கத்தை நிர்ணயிக்கும் அரசியல், கலாச்சார, சட்ட, மத, அன்றாட வாழ்க்கைக் காரணிகளையும் பன்முக நோக்கில் ஆராய்வதை முன்னனுமானிக்கிறது. ஜனத்தொகை இயக்க விதிகள் பொருளாதாரக் காரணிகளால் நிர்ணயிக்கப்பட்டாலும் இயற்கைச் சீற்றங்கள் (வறட்சி, வெள்ளம்), சமூக-உயிரியல் காரணிகள் (தொற்று நோய்), மேற்கட்டுமானக் காரணிகள் (உதாரணமாக யுத்தங்கள்) போன்றவற்றின் குறிப்பிட்ட தாக்கங்களைக் கவனத்தில் கொள்ளும் அவசியத்தை இது அகற்றவில்லை. அதே சமயம் மேற்கட்டுமானக் காரணிகளும் ஒரு சில சந்தர்ப்பங்களில் வேறு காரணிகளும் (உதாரணமாக ஒரு சில இயற்கைச் சீற்றங்கள், தொற்று நோய்களின் அளவுகளும் விளைவுகளும்) சமுதாய வாழ்வின் சமூக-பொருளாதார சூழ்நிலைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ''நாம் ஆராயும் துறையானது பொருளாதாரத் துறையிலிருந்து எவ்வளவுக்கெவ்வளவு விலகி நிற்கிறதோ, எவ்வளவுக்கெவ்வளவு அது முற்றிலும் சூட்சுமமான சித்தாந்த துறையை நெருங்கி வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அதன் வளர்ச்சியில் நாம் தற்செயலான அம்சங்களைக் கண்டுபிடிப்போம், அதன் வளைகோடு அவ்வளவுக்கவ்வளவு வளைவுகளைக் கொண்டிருக்கும். இந்த வளைகோட்டிற்கு நடு அச்சை நீங்கள் வரைந்தால், நாம் ஆராயும் காலகட்டம் எவ்வளவுக்கெவ்வளவு நீண்டதோ, நாம் ஆராயும் துறை எவ்வளவுக்கெவ்வளவு பரவலானதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக இந்த அச்சு பொருளாதார வளர்ச்சியின் அச்சை நெருங்கி வரும், அவ்வளவுக்கவ்வளவு இணையாக இது செல்லும்''* என்று எங்கெல்ஸ் எழுதினர்.

மக்கள்தொகை வளர்ச்சிப் போக்குகள் உருவாவதன் மீது ஏதாவதொரு விதத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகள் ஏராளமாக இருந்தபடியால் இந்த வளர்ச்சியின் தீர்மானகரமான நியதிகளை வெளிப்படுத்துவது குறிப்பாக முக்

* கா. மார்க்ஸ், பி.எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 39, பக்கம் 176 (ருஷ்யப் பதிப்பு).

கியமானதாயிருக்கிறது. மனித வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் மக்கள்தொகை வளர்ச்சி விதிகளையும் இந்நிகழ்ச்சிப் போக்கை சமுதாய வளர்ச்சி முழுவதும் நிர்ணயிக்கும் முறையையும் நிலைநாட்டுவது மக்கள்தொகை பற்றிய போதனையின் மையக் கடமையாகும். வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மூன்று வகையான விதிகளை முன்வைக்கிறது: 1) மனித வரலாறு பூராவும் செயல்படும் சர்வபொது விதிகள்; 2) ஒரு சில சமூக-பொருளாதார அமைப்புகளுக்கு மட்டும் உரித்தானவை; 3) நாம் பகுப்பாய்வு செய்யும் அமைப்பினுள் இயங்கும் அல்லது குறிப்பிட்ட அமைப்பின் ஒரு கட்டத்திற்கு மட்டும் உரித்தான விதிகள், குறிப்பிட்ட காலகட்ட நியதிகள் என்றழைக்கப்படுபவை.

குடிமக்களின் வளர்ச்சி மனிதகுல வரலாறு பூராவும் காணப்படுகிறது, இது ஒரு சர்வபொது விதியாகும். உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி மக்கள்தொகை வளர்ச்சியின் அடிப்படையாகத் திகழ்கிறது. ஆதிக்கம் செலுத்தும் சமுதாய உறவுகள்தான் மக்கள்தொகை வளர்ச்சியின் வேகங்களும் இதன் பண்புக் குறியீடுகளும் மாறுவதற்கான சமூகக் காரணம். ''புனருற்பத்திப் போக்கில் புறவய ரீதியான சூழ்நிலைகள் மட்டும் மாறவில்லை (உதாரணமாக, கிராமங்கள் நகரமாகின்றன, வெற்று வெளிகள் வயல்களாகின்றன, இத்தியாதி), உற்பத்தியாளர்களே புதிய பண்புகளை தம்மிடையே வளர்த்து, உற்பத்தியின் பயனாய் தம்மைத் தாமே மாற்றி, புதிய சக்திகளையும் புதிய கருத்துக்களையும் தோற்றுவித்து, புதிய பழக்க முறைகளையும் புதிய தேவைகளையும் புதிய மொழியையும் ஏற்படுத்தி தாங்களே மாறுகின்றனர்''* என்றார் மார்க்ஸ். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி பற்றிய சர்வபொது விதியும் தேவைகளின் வளர்ச்சி பற்றிய சர்வபொது விதியும் சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்தியும் முக்கிய நுகர்வுச் சக்தியும் தோன்ற இயற்கையான மூல ஊற்றாகிய மக்கள்தொகை வளர வேண்டும் எனக் கோருகின்றன. முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக அமைப்புகளில் பெரும்பாலும் வேலையாட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் உற்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 46, பாகம் I, பக்கங்கள் 483—484 (ருஷ்யப் பதிப்பு).

பத்தி வளர்ச்சியடைந்தது. தொழிற் புரட்சியானது பாட்டாளியின் எண்ணிக்கை ரீதியான அதிகரிப்பை மட்டுமின்றி பாட்டாளியின் பண்பு ரீதியான மாற்றத்தையும் இவனுடைய திறமையின் அதிகரிப்பையும் கல்வி வளர்ச்சியையும் கோரியது. விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியை அடுத்து இன்னமும் அதிகமான மாற்றங்கள் நிறைவேற்றப் படுகின்றன. சோஷலிசச் சூழ்நிலைகளில் கோட்பாட்டு ரீதியாகப் புதிய வேலையாள் தோன்றி வருகிறான்.

''குடிமக்களின் வளர்ச்சி'' எனும் கருத்தில் சமூக-பொருளாதார மற்றும் உயிரியல்-ஜனத்தொகை இயல் காரணிகளின் தாக்கத்தினால் குடிமக்கள் மத்தியில் நடைபெறும் மாற்றங்களைப் பற்றிய பண்புரை அடங்கியுள்ளது. குடிமக்களின் இயற்கையான புனருற்பத்திப் போக்குகளைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிடப்படவில்லை. பொதுக் கல்வித் தரம், தொழில் பயிற்சி, குடிமக்களின் ஆரோக்கியம், பல்வேறு வடிவங்களில் குடிபெயர்ச்சிப் போக்குகள், நாட்டின் பரப்பிலும் பல்வேறு வகையான, அளவான குடியிருப்புகளிலும் குடிமக்கள் குடியமர்வது உட்பட குடிமக்களின் புனருற்பத்தி அமைப்பிலும் ஜனத்தொகைக் கட்டமைப்புகளுடைய இயக்கப் போக்குகளிலும் ஏற்பட்ட மாற்றங்களின் மிகப் பல்வேறான விளைவுகளைப் பற்றியும் இங்கே பேசப்படுகிறது.

குடிமக்களின் வளர்ச்சி என்பது ஒரு வரலாற்று ரீதியான கருத்தாகும். ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் குடிமக்களின் வளர்ச்சி அதிகமான அல்லது குறைவான வேகத்தில் நடைபெறுகிறது, தன் வெளிப்பாட்டில் விசேஷ மாற்றங்களை அடைகிறது; இது உற்பத்தி முறையின் தன்மையால் நிர்ணயம் செய்யப்படுகிறது. இது மக்கள்தொகை விதிகளை அறியும் முறையியலுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும், ஏனெனில் மனிதகுலம், வரலாற்று ரீதியாக ஒன்றையடுத்து ஒன்றாக வரும் வெவ்வேறு சமூகச் சூழ்நிலைகளில் (இவை சமுதாய வளர்ச்சியின் அந்தந்தக் கட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் உற்பத்தி முறையின் தாக்கத்தினால் உருவாகின்றன) வாழ்ந்து கொண்டிருக்கிறது.

மக்கள்தொகை வளர்ச்சி விதியானது திட்டவட்டமான சமுதாய அமைப்பிலுள்ள பொருளாதார விதிகளின் முறையுடன் இயல்பாக இணைந்துள்ளது. ''...வரலாற்று ரீதியாக

குறிப்பிட்டார். மனித சமுதாயத்தில் உள்ள குடிமக்களின் இயற்கையான புனருற்பத்திக்கும் விலங்குலகிலும் தாவர உலகிலும் உள்ள இனப்பெருக்கத்திற்கும் இடையிலான கோட்பாடு வழிப்பட்ட வேறுபாட்டை மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக்காட்டினர். **இயற்கையின் இயக்க இயல்** எனும் படைப்பில் எங்கெல்ஸ், விலங்கினங்கள் அதிக பட்சம் சேகரிப்பு நிலையைத்தான் அடைந்துள்ளன, மனிதனே இவற்றிற்கு மாறாக உற்பத்தி செய்கிறான் என்று குறிப்பிட்டார்; இந்த வேறுபாட்டின் காரணமாக மட்டுமே விலங்கினங்களின் விதிகளை மனிதச் சமுதாயத்திற்குப் பயன்படுத்த முடியாதென கோடிட்டுக் காட்டினர்.* குடிமக்களின் புனருற்பத்தியைத் தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதச் சமுதாயத்திற்கேற்ற ஒரே போக்காகக் கருதக் கூடாது என்பதன் மீது லெனின் விசேஷக் கவனம் செலுத்தினர்.** பல்வேறு விலங்கினங்களின் இனப்பெருக்க வளம் மிகவும் மாறுபட்டது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலையானது. இனப்பெருக்க வரையளவுகள் பழக்கப்பட்டு கொண்டதற்கான அறிகுறி என்றும் இது வெவ்வேறு வாழ்க்கைச் சூழ்நிலைகளைப் பொறுத்து மாறுபடும் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மனிதனை விலங்குலகிற்கு எதிராக வைத்த மார்க்ஸ், வரலாற்று வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் உற்பத்தி முறையினால் நிர்ணயிக்கப்படும் வெவ்வேறான சமூகச் சூழ்நிலைகளில் மனிதன் பொருளாயத நலன்களை உற்பத்தி செய்கிறான் என்று கோடிட்டுக் காட்டினர். மார்க்சிய-லெனினியத்தின் இந்தக் கருத்து நிலை மக்கள்தொகையின் நியதிகளை அறிவதற்கான முறையியலை நிர்ணயிப்பதில் முக்கிய இடம் வகிக்கிறது. இந்த நியதிகளுக்கும் விலங்குலகிலும் தாவர உலகிலும் நிலவும் இனப்பெருக்க நியதிகளுக்கும் இடையில் பொதுவான உடற்கூறு இயல் ரீதியான அடிப்படை இருந்தாலும் (இது எப்போதுமே கூறப்பட்டு வந்துள்ளது) இந்நியதிகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. விலங்கினத்திலும் தாவரங்களின் மத்தியிலும் வரம்பற்ற இனப்பெருக்கப் போக்கு உள்ளது என்று மார்க்ஸ் எப்போதுமே

---

* பிரெடெரிக் எங்கெல்ஸ், **இயற்கையின் இயக்க இயல்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 501.

** வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 1, பக்கங்கள் 475-476 (ருஷ்யப் பதிப்பு).

கூறியதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மனிதன் வளர்க்கும் மிருகங்கள் மற்றும் தாவரங்களின் புனருற்பத்தி (கால்நடைகள், பறவைகள், தானியங்கள்) கணிசமான அளவு வெறும் பொருளாதார நோக்கங்களால் நிர்ணயிக்கப்படுகிறது, தேவையை அல்லது சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் சமூகச் சூழ்நிலைகளைச் சார்ந்த ஒரு குறியீடாக விளங்குகிறது.

குடிமக்களின் இயற்கையான வளர்ச்சிப் போக்கு சம்பந்தமாக மனிதச் சமுதாயத்தில் உள்ள நியதிகளை ஆராயும் போது குடிமக்களின் இயற்கையான புனருற்பத்தி வேகங்களுக்கான சமூக-பொருளாதாரக் காரணங்களின் தன்மையையும் சாரத்தையும் முதலாவதாகத் தெளிவுபடுத்த வேண்டும். பிறப்பு, இறப்புப் போக்குகள் இதில் அடங்கும். இந்த இடத்தில், இந்நிகழ்ச்சிப் போக்குகளில் உயிரியல்* மற்றும் சமூக அம்சங்களின் பரஸ்பரச் செயலாக்கத்தின் சிறப்பியல்புகள் பற்றிய முக்கியப் பிரச்சினை நம் முன் நிற்கிறது. பூர்ஷ்வா மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலர்கள் மற்றும் சமூகவியலர்களின் மத்தியில் பரவலாகப் பரவியுள்ள கருத்திற்கு மாறாக மார்க்சும் எங்கெல்சும் மக்கள்தொகைப் பெருக்கமானது சமுதாயத்தைச் சார்ந்திராத உயிரியல் காரணிகளால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவதில்லையென்றும் சமூக அமைப்பின் தன்மை மற்றும் இதன் வளர்ச்சி தரத்திற்கேற்ப இது துரிதப்படுத்தப்படுகிறது அல்லது இதன் வேகம் குறைகிறது என்றும் நிரூபித்தனர். இவ்வாறாக, உயிரியல் காரணிகளின் குறிப்பிட்ட முக்கியத்துவத்தை அகற்றாத வரலாற்றுப் பொருள்முதல்வாதம் குடிமக்களின் இயற்கையான புனருற்பத்தி போக்குகளை நிர்ணயிப்பதில் சமூக-பொருளாதார காரணிகளுக்கே தீர்மானகரமான பங்குண்டு என்று கருதுகிறது.

இறப்பு விகிதத்தைப் போன்றே பிறப்பு விகிதத்திற்கும் சமூகக் காரணங்கள் உண்டு. குடிமக்களின் இயற்கையான புனருற்பத்தியின் நியதிகளை ஆராயும் போது பிறப்பு, இறப்பு

---

* பாலுணர்ச்சி, குழந்தை பெறும் திறமை, புதிதாக பிறக்கும் குழந்தைகளின் மத்தியில் பால் விகிதம், மரபு வழிப் பண்பியல் கட்டமைவு, இயற்கையான மரணத்தின் தவிர்க்க இயலா தன்மை மற்றும் சில காரணிகளை உயிரியல் காரணிகளாகக் கருதலாம்.

மட்டங்களின் மீது ஏராளமான காரணிகள் தாக்கம் செலுத்துவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பிறப்பை எடுத்துக் கொண்டால் திருமணம் செய்து கொள்ளும் வயது, குடும்பத்தின் உள்ளே குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல், பெண்கள் திருமணமாகாதிருத்தல், மலட்டுத் தன்மை, பிறக்கும் போதே இறந்து பிறப்பது போன்ற காரணிகள் பெரிதும் முக்கியமானவை. ஆனால் நிச்சயமாக இந்தக் காரணிகளால் மட்டுமே பிறப்பு விகிதம் நிர்ணயிக்கப்படுவதில்லை. பெண்களின் சமுதாய நிலை, மக்களின் பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகள் எந்த அளவிற்குப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனும் அம்சம், பெற்றோர்களின் சமூக நிலை மற்றும் கலாச்சார மட்டம், குடிமக்களின் பாலான அந்தந்த அரசியலைப் பிரதிபலிக்கும் சட்ட முறை, நகர வாழ்க்கையின் வளர்ச்சி இன்னும் சில சமூக அம்சங்கள் ஆகியன பெரும் பங்காற்றுகின்றன.

மக்கள்தொகை விதிகளையே பகுப்பாய்வு செய்வதுதான் குடிமக்கள் வளர்ச்சி நியதிகளை ஆராய்வதில் சந்தேகத்திற்கிடமின்றி தீர்மானகரமான அம்சமாகும். ஏனெனில் ''விதி'' எனும் கருத்தானது, குறிப்பிட்ட வரலாற்றுக் காரணிகளால் நிர்ணயிக்கப்படும் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்க்கையின் உற்பத்தி எனும் சர்வபொது நிகழ்ச்சிப் போக்கின் முற்றொருமை மற்றும் தொடர்புகள், பரஸ்பரத் தொடர்புகள் மற்றும் முழுமை ஆகியவற்றை மனிதன் அறிவதில் உள்ள கட்டங்களில் ஒன்றாகும். மார்க்சிய-லெனினியம் மக்களின் இயற்கையான புனருற்பத்தியை நிர்ணயிக்கும் ''என்றென்றும் நிரந்தரமான'' விதிகள் இருப்பதை மறுக்கிறது. ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகள் வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகளைப் பொறுத்தவை. இச்சூழ்நிலைகள் தம் பங்கிற்கு உற்பத்திச் சக்திகள் மற்றும் ஆதிக்கம் செலுத்தும் சமூக உறவுகளின் வளர்ச்சி மட்டத்தையும் பொறுத்தவை. ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் குறிப்பிட்ட சடத்துவம், இவற்றின் மாற்றங்கள் சமூக அமைப்பு உருவாவதுடனும் புதியதைக் கொண்டு இதை மாற்றீடு செய்வதுடனும் காலத்தில் பொருந்தி வராததற்கு இட்டுச் செல்கிறது.

முதலாளித்துவத்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலையைப் பகுப்பாய்வு செய்த மார்க்ஸ் ஒரு சில ஜனத்தொகை

வளர்ச்சி விதிகளை முன்மொழிந்தார். இவற்றின்படி பிறப்பின் எண்ணிக்கை, இறப்புகள், பூர்ஷ்வாச் சமுதாயத்திலுள்ள குடும்பங்களின் முழு அளவு ஆகியவை வெவ்வேறான தொழிலாளர் பிரிவினருக்கு உள்ள வாழ்க்கைச் சாதனங்களின் அளவிற்குத் தலைகீழ் விகிதத்தில் உள்ளன. ''பிறப்பு, இறப்பு எண்ணிக்கை மட்டுமின்றி குடும்பங்களின் முழு அளவும் ஊதிய மட்டத்திற்கு, அதாவது வெவ்வேறான தொழிலாளர் பிரிவினரின் ஜீவாதார சாதனங்களின் அளவிற்குத் தலைகீழ் விகிதத்தில் உள்ளது. முதலாளித்துவச் சமுதாயத்தின் இவ்விதியைக் காட்டுமிராண்டிகளுக்கோ அல்லது நாகரிகமடைந்த காலனிவாதிகளுக்கோ பயன்படுத்தினால் அது பொருளற்றதாயிருக்கும். இது தனிப்பட்ட முறையில் பலவீனமான, இடையறாது வேட்டையாடப்படும் விலங்கின வகைகளின் பரந்த அளவு புனருற்பத்தியை நினைவுபடுத்துகிறது''* என்று மார்க்ஸ் எழுதினார். இந்த விதிகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு, அதாவது முதலாளித்துவத்திற்கு மட்டுமே உரித்தானவை, வெவ்வேறான தொழிலாளர் பிரிவினரின் மத்தியில் வெவ்வேறாக வெளிப்படும், சமுதாயத்தின் பிற பிரிவினரைப் பாதிக்காதவை. ஆனால் பொருளாதார வளர்ச்சி மட்டத்திற்கும் பிறப்பு, இறப்பு விகிதங்களுக்கும் இடையில் பல்வேறு ''இடைப்பட்ட'' அங்கங்கள் உள்ளன. தேசியப் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், மக்களின் கலாச்சார மட்டம், பொருளாயத மற்றும் ஆன்மீகத் தேவைகளின் கட்டமைப்பு, பிறப்பு விகிதத்தின் மீதான நிலையான கருத்துகளில் பிரதிபலிக்கக் கூடிய, அதாவது மக்களின் மத்தியில் உள்ள வெவ்வேறு சமூகக் குழுக்களின் பிறப்பு, இறப்பு சம்பந்தமான கொள்கைகள் உருவாவதன் மீது சந்தேகத்திற்கிடமற்று தாக்கம் செலுத்தும் சட்ட வரையளவுகள் மற்றும் மத வறட்டுத் தத்துவங்கள் போன்ற மறைமுகக் காரணிகள் இந்த ''இடைப்பட்ட'' அங்கங்களாகும். இறப்பு விகிதத்திற்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் இடைப்பட்ட விகிதத்தைப் பொறுத்தமட்டில் இவற்றின் இடையேயுள்ள நிபந்தனையற்றச் சார்புநிலை மிகவும் நேரிடையாகத் தெரிகிறது.

மேலே கூறப்பட்ட சமூகக் காரணிகள் ''இடைநிலை அங்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 658 (ருஷ்யப் பதிப்பு).

கங்களாக'' மட்டுமே இருக்கின்றன. ''மனிதனின் இனப் பெருக்கச் சூழ்நிலைகள் பல்வேறு சமூக உறுப்புகளின் அமைப்பை நேரடியாகப் பொறுத்துள்ளன, எனவே இந்த உறுப்புகளில் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகத்தான் மக்கள்தொகை விதியை ஆராய வேண்டுமே தவிர ''சூட்சும மாகவோ'' வரலாற்று ரீதியாக வெவ்வேறான சமூக அமைப்பு வடிவங்களுடன் தொடர்புபடுத்தாமலோ ஆராயக் கூடாது''* என்று லெனின் குறிப்பிட்டார்.

மக்கள்தொகை பற்றிய மார்க்சிய விஞ்ஞானத்தின் முறையியலின் மேற்கொண்ட வளர்ச்சிக்கு லெனினியத் தத்துவார்த்தப் பாரம்பரியங்கள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை. தன்னுடைய ஆரம்பக் கால படைப்புகளி லேயே மக்கள்தொகைப் பிரச்சினைகளின் மீது கவனம் செலுத்திய லெனின் பன்முறை இந்தப் பிரச்சினைகளின் பகுப் பாய்விற்குத் திரும்பி அதை ஆழப்படுத்தினார். பல படைப்பு களில் அவர் மக்கள்தொகைத் தத்துவம் மற்றும் ஆராய்ச்சி முறையியல் சம்பந்தமான கோட்பாட்டு வழிப்பட்ட பிரச் சினைகளை பன்முக நோக்கோடு ஆய்வு செய்தார்.

சமுதாய வளர்ச்சியில் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் பெரும் முக்கியத்துவத்தை லெனின் எப்போதுமே கோடிட்டுக் காட்டினார். மனித வரலாற்றில் பல்வேறு கட்டங்களில் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் அமைப்பு முழுவதன் வளர்ச்சி தொடர்பாக லெனின் குடிமக்களின் பங்கை ஆராய்ந்தார். மக்கள்தொகை வளர்ச்சியின் ஒரு அம் சம் கூட லெனினின் கவனத்திலிருந்து தப்பவில்லை. குடிமக் களின் சமூக இடம் பெயர்வாற்றலின் மீதும் இதைப் பாதிக் கும் காரணிகளின் மீதும் அவர் எவ்வளவு கவனம் செலுத் தினார் என்பது நன்கு தெரிந்ததே. சமுதாய வளர்ச்சிப் போக்கில் குடிமக்களின் சமூகக் கட்டமைவின் மாற்றங் களைப் பகுப்பாய்வு செய்த லெனின் ஒவ்வொரு சமூக-வர லாற்று அமைப்பிலும் நிலவிய மக்கள்தொகையின் முக்கியப் பிரச்சினைகளைக் காட்டுகிறார், வர்க்கங்களாக, சமூகக் குழுக் களாகப் பாகுபாடு செய்யப்பட்ட குடிமக்களின் மீதான உற்பத்தி உறவுகளின் தாக்கத்தை எடுத்துரைக்கிறார்; குடி மக்களினுடைய இடப்பெயர்ச்சியின் பல்வேறு வடிவங்களின்

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 1, பக்கம் 476, (ருஷ்யப் பதிப்பு).

மீது, குறிப்பாக ருஷ்யப் பரப்பில் மக்கள் ஓரிடம் விட்டு இன்னொரு இடம் மாறுவதன் மீது பெரும் கவனம் செலுத்தினார்; கிராம மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்வதையும் பிரதேசங்களுக்கு இடையிலான இடப்பெயர்ச்சித் தொடர்புகளையும் பருவக்கால இடப்பெயர்ச்சியையும் பரிபூரணமாக ஆராய்ச்சி செய்தார். குடிமக்களின் இயற்கையான வளர்ச்சியின் பால், பிறப்பு, இறப்பு, திருமணக் கூட்டுறவுகள் உருவாகி முறிவடைவது ஆகியவற்றின் பாலான தன் உறவை லெனின் வரையறுத்தார்; இந்த வளர்ச்சியில் சமூக வாழ்க்கைக்கு உள்ள முக்கியத்துவத்தைக் குறிப்பாகக் காட்டினார்; மக்கள்தொகை வளர்ச்சியின் மூன்று வகைகளையும் (சமூக, இடஞ்சார்ந்த, இயற்கையான வகைகள்) பகுப்பாய்வு செய்தார்; உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் வளர்ச்சியடையும் போது மக்கள்தொகை வளர்ச்சியின் மிக முக்கியக் கோட்பாடுகளை அவர் தத்துவார்த்த ரீதியாக ஆதாரப்படுத்தினார். இதன் தொடர்பாக லெனின், உற்பத்திச் சக்திகள் மேம்பாடு அடையும் போது, சோஷலிசச் சமுதாயம் உருவெடுத்து முன்னேறுகையில் இதற்குரித்தான புதிய குடியமர்த்தலின் நியதிகளைப் பற்றியும் எழுதினார்.

குடிமக்களின் பிரச்சினைகளை சமுதாய வாழ்க்கையின் திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகளோடு தொடர்புபடுத்தி பார்த்து லெனின் தான் ஆராயும் பிரச்சினைகளை ஒவ்வொரு படைப்பிலுமாக மேன்மேலும் வளர்த்து செழுமைப்படுத்தினார். தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள், பெண்களின் வேலை வாய்ப்பு, சமூக வாழ்வில் இவர்களின் நிலை, குடும்ப உறவுகள், உணவு, ஆரோக்கியப் பிரச்சினைகள், உயிருள்ள உற்பத்திச் சக்தியாகிய மனிதன் வாழ்ந்து, வளரத் தேவையான இன்னும் பல பிரச்சினைகள் ஆகியவற்றை இது சாரும். லெனின் எப்போதுமே மக்கள்தொகை விதிகளை வரலாற்று ரீதியாக அணுகி பகுப்பாய்வு செய்தார். இது மார்க்சிய விஞ்ஞானத்தின் மிக முக்கியமான முறையியல் கோட்பாடாகும். வளர்முக நாடுகளின் மக்கள்தொகைப் பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளவும் இந்நாடுகளுடைய மக்களின் முன்னுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ''ஜனத்தொகை வழி'' என்றழைக்கப்படும் வழியைத் தேட ஏகாதிபத்தியத்தின் நவீன ஆதரவாளர்களைத் தூண்டிவிடும் உண்மையான காரணங்களைத்

தெளிவுபடுத்தவும் தேவையான முறையியல் அடிப்படைகளை லெனினியப் படைப்புகள் தருகின்றன. வளர்முக நாடுகளைத் தமது மூலப்பொருள் சப்ளை நாடுகளாக வைத்து கொள்ள முயலும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின், முதலாவதாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகபோகங்களை, ஏகாதிபத்தியத்தைப் பற்றிய லெனினிய போதனை அம்பலப் படுத்துகிறது. வளர்முக நாடுகளில் உள்ள சமூக-பொருளாதாரப் புலப்பாடுகளை ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் மற்றும் புரட்சிகர மாற்றப் பாதைகளில் அகற்றப்பட முடியாத, இயற்கையான, என்றென்றும் நிரந்தரமான புலப்பாடுகளாகச் சித்தரிக்க இன்றைய பூர்ஷ்வா ஜனத்தொகை வல்லுனர்கள் தமது நடவடிக்கையால் முயலுகின்றனர்.

மக்கள்தொகைத் தத்துவத் துறையில் லெனினியக் கருத்து நிலைகள்—சோஷலிச மற்றும் கம்யூனிசக் கட்டுமானச் சூழ்நிலைகளில் ஆராய்ந்து தீர்க்கப்பட வேண்டிய நவீன பிரச்சினைகளின் மீதான கண்ணோட்ட முறையாகும். மக்கள் தொகை ஆராய்ச்சியில் லெனினியப் படைப்புகளால் ஒரு புதிய, லெனினியக் கட்டம் துவங்கியது என்று கூற எல்லா அடிப்படைகளும் உண்டு.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினின் படைப்புகள், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சிக் காங்கிரஸ்களின் முடிவுகள், கட்சியின் மத்திய கமிட்டி மற்றும் சோவியத் அரசாங்கத்தின் தீர்மானங்கள், கட்சியின் பெருந்தலைவர்களின் படைப்புகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு சோவியத் விஞ்ஞானிகள் மக்கள்தொகை பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை வளர்க்கின்றனர்,இதன் பிரச்சினைகளைத் தீவிரமாக ஆராய்கின்றனர். மக்கள்தொகை பற்றிய ஞான முறையின் அடிப்படையில் இது சர்வாம்ச ரீதியாக ஆராயப் படுகிறது; இதன் இதயம்—மக்கள்தொகை பற்றிய புள்ளி விவர ஆய்வியலாகும். சமூக, பொருளாதார, உயிரியல், பூகோளக் காரணிகளின் அடிப்படையில் மேற்கூறிய ஆய்வியல் மக்கள்தொகையின் கட்டமைவு, அமைப்பு, இடமாற்றம் மற்றும் இயக்கப் போக்கு ஆகியவற்றின் புலப்பாடுகளையும் நிகழ்ச்சிப் போக்குகளையும் ஆராய்கிறது. இந்தப் பிரச்சினைகளில் குடிமக்களின் சமூக இடம்பெயர்வாற்றல்*,

* மக்கள்தொகையின் சமூக இடம்பெயர்வாற்றல் அல்லது சமூக இயக்கம் என்ருல் ஒரு சமூகக் குழுவிலிருந்து வேருெரு குழுவிற்கு மக்கள் செல்வதாகும்.

இவர்களின் இயற்கையான வளர்ச்சி*, இடப்பெயர்ச்சிப் போக்குகள்**, குடிமக்களின் குடியேற்றம், இவர்களுடைய பண்புக் குறியீடுகளின் மாற்றம், குடிமக்களின் ஆரோக்கியம் முதலியவை முக்கியமானவை. மேற்கூறிய புலப்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிப் போக்குகளின் நியதிகளைக் கண்டுபிடிப்பது, இவற்றோடு தொடர்புடைய காரண-காரிய சார்புநிலைகளை நிலைநாட்டுவது, இதன் அடிப்படையில் சோஷலிசச் சமுதாயம் மற்றும் அரசின் திட்டமிட்ட நடைமுறை நடவடிக்கைகளைத் தீட்டுவது ஆகியனதான் மக்கள்தொகை பற்றிய ஞானமுறையின் நோக்கமாகும்.

மார்க்சியம்-லெனினியம் சமுதாய வளர்ச்சியை இயற்கையின் வளர்ச்சியிலிருந்து ஏதோ பிரிப்பதாகக் குற்றம் சாட்டி பூர்ஷ்வாச் சமூகவியலர்களும் ஜனத்தொகை வல்லுனர்களும் உண்மையைத் திரித்துரைக்கின்றனர். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் வரலாற்றை இயற்கை மற்றும் சமுதாயத்தின் ஒற்றுமையாகக் கருதினார்கள், ஏனெனில் மனிதச் சமுதாயத்தின் தோற்றத்திற்கு இயற்கை எப்படிக் காரணமோ அதே போல் இதன் வாழ்க்கை முழுவதற்கும் இது காரணம் என்று மேலே கோடிட்டுக் காட்டப்பட்டது. ''...மனிதர்கள் இருக்கும் வரை இயற்கையின் வரலாறும் மனித வரலாறும் பரஸ்பரம் ஒன்றையொன்று நிர்ணயிக்கும்.''*** பொருளாயத உற்பத்தியானது வாழ்வின் உற்பத்தியையே முன்னனுமானிக்கிறது: வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தி, சுற்றியுள்ள இயற்கையைப் பேணிக் காத்து

---

* மக்கள்தொகையின் இயற்கை வளர்ச்சி (புனருற்பத்தி) என்பது மக்கள் தம்மைத் தாமே புதுப்பித்துக் கொள்வதாகும், பிறப்பு, இறப்புப் போக்குகளின் (இவை சமூக ரீதியாக நிர்ணயிக்கப்படுபவை) தாக்கத்தால் ஏற்படும் தலைமுறைகளின் மாற்றம். பரவலான பொருளில் மக்கள்தொகையின் புனருற்பத்தி என்பது இதன் அளவுநிலைக் குறியீடுகளுடன் மட்டுமின்றி பண்புநிலைக் குறியீடுகளுடனும் தொடர்புடையது.

** குடிமக்களின் இடப்பெயர்ச்சி—அந்தந்த பிரதேசங்களின் எல்லைகளைக் கடந்து மக்கள் செல்வது, என்றென்றைக்குமாக அல்லது ஓரளவு நீண்ட காலத்திற்கு நிரந்தர இருப்பிடத்தை மாற்றுவது அல்லது முறையாக இதற்குத் திரும்புவது.

*** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 3, பக்கம் 16 (ருஷ்யப் பதிப்பு).

மேம்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும். மனிதன் தோன்றிய பின் இயற்கை வளர்ச்சியில் புதிய குணும்ச ரீதியான நியதியும் தோன்றியது. ''குடிமக்கள்—சுற்றுப்புறச் சூழல்'' எனும் முறையில் மக்கள்தொகையின் இடத்தை நிர்ணயிப்பதற்குப் பெரும் தத்துவார்த்த மற்றும் தேசியப் பொருளாதார முக்கியத்துவம் உண்டு. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரஸ் (1976) மக்கள் தொகைப் பிரச்சினைகளைச் சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளுடனும் சோஷலிச ரீதியாக இயற்கையைப் பயன்படுத்துவதுடனும் நெருக்கமாகத் தொடர்புபடுத்தியது.* மக்கள் தொகை பற்றிய ஞான முறையில் மேற்கூறிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள், புதிதாகத் தோன்றிவரும் விஞ்ஞானப் போக்குகளால் (மக்கள்தொகைப் பொருளாதாரம், மக்கள்தொகை வாழ்க்கைச் சூழல் இயல்) இணைக்கப்படுகின்றன.

மக்கள்தொகை சம்பந்தமான பரவலான பிரச்சினைகளை (ஜனத்தொகை ஆராய்ச்சிகளுக்கான தத்துவ, முறையியல், அரசியல், அணுகுமுறைப் பிரச்சினைகளை வகுப்பதில்) ஆராய்வதில் சோவியத் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். தம்முடைய படைப்புகளில் இவர்கள் மக்கள்தொகை பற்றிய மார்க்சிய-லெனினியப் போதனையை வளர்க்கின்றனர், குடிமக்களின் வாழ்வில் உள்ள பல நியதிகள் எப்படி சமூக-பொருளாதாரப் புலப்பாடுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை பகுப்பு மற்றும் தொகுப்பின் அடிப்படையில் ஆராய்கின்றனர். குடிமக்களுடைய வயதுவாரியான கட்டமைவில் ஏற்படும் மாற்றத்தோடு தொடர்புடைய பிரச்சினைகள், வீட்டு வசதி, குடும்ப வருமானம் உட்பட பல்வேறு காரணிகள் பிறப்பு விகிதத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள், நாட்டுப் பரப்பில் குடிமக்கள் குடியமரும் பிரச்சினைகள், கிராமப்புற பிரதேசங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் வருவது, பெரிய நகரங்களில் அளவிற்கதிகமாக மக்கள் குவிந்திருப்பது, குடிமக்களுடைய புனருற்பத்தியின் மீது இந்தக் காரணிகள் அனைத்தும் செலுத்தும் தாக்கம் ஆகிய பிரச்சினைகளின் மீது

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசின் ஆவணங்கள், மாஸ்கோ, 1976, பக்கம் 73 (ருஷ்ய மொழியில்).

சோவியத் விஞ்ஞானிகள் ஆழ்ந்த கவனம் செலுத்து கின்றனர்.

சமுதாயத்திலுள்ள எல்லா உறுப்பினர்களின் இடைய றுது அதிகரித்து வரும் பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகளை மேன்மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்வதற் கான புறவய ரீதியான அவசியத்திற்கும் யதார்த்தமான வாய்ப்பிற்கும் வளர்ச்சியடைந்த சோஷலிசச் சமுதாயம் வழிகோலுகிறது. ''தேசியப் பொருளாதாரத்தின் நிலை யான, முன்னேக்கிய வளர்ச்சி, விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியைத் துரிதப்படுத்துவது, பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவது, நாட்டின் உற்பத்தி உள்ளாற்றலை அதிக செயலாக்கத்தோடு பயன்படுத்துவது, சகலவித மூலாதாரங்களையும் பலவிதங்களில் சிக்கனப்படுத்து வது, வேலையின் தரத்தை மேம்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் வளர்ப்பதுதான் பதினென்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரதானக் கடமையாகும்''* என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரஸ் (1981) சுட்டிக்காட்டியது.

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங் கிரசின் ஆவணங்கள், *மாஸ்கோ, 1981, பக்கம் 38 (ருஷ்ய மொழியில்).*

*அத்தியாயம் இரண்டு*

## வர்க்கங்களின் தோற்றத்திற்கு முந்திய சமுதாயத்தில் மக்கள்தொகை

"மனித வரலாறு அனைத்தின் முதல் முற்கோள் உயிர்வாழும் மானுடத் தனிநபர்களின் இருத்தலே. இவ்வாறு நிலைநாட்டப்பட வேண்டிய முதல் மெய்நடப்பு இந்தத் தனிநபர்களின் வாழ்க்கை அமைப்பும் இயற்கையின் இதர கூறுகளுடனான அவர்களது பிந்திய உறவும் ஆகும்"* என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினார்கள். இதற்கேற்ப Homo sapiens எனும் இன்றைய மனித இனம் தோன்றிய நிகழ்ச்சிப் போக்கைப் பார்ப்போம். 18ம் நூற்றாண்டின் இறுதியில், 19ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே பிரபல இயற்கை விஞ்ஞானிகளின், முக்கியமாக தா. ஹக்ஸ்லியின் படைப்புகளில் மனிதனுக்கும் குரங்குகளுக்கும் இடையிலான உயிரியல் ரீதியான உறவு, குறிப்பாக மனிதக் குரங்குகள் என்றழைக்கப்பட்டவையுடன் மனிதனுக்கு இருந்த உறவு நிலைநாட்டப்பட்டது. சார்ல்ஸ் டார்வின், **மனிதனின் தோற்றமும் பால் தேர்வு முறையும்** *(1871)* எனும் படைப்பில் தான் ஏற்கெனவே உருவாக்கிய வகைகளின் தோற்றம் பற்றிய பரிணாமத் தத்துவத்தைப் பயன்படுத்தி குரங்குகளைப் போன்ற முன்னோர்களிடமிருந்து மனிதன் வந்ததை முதன்முதலாக விஞ்ஞான பூர்வமாக நிரூபித்தார். மனிதனின் பண்டைய கால முன்னோர்களின் புதைபடிவ மிச்சங்களைக் கண்டுபிடித்ததானது இத்தத்துவத்தை மெய்ப்பித்தது, இக்கண்டுபிடிப்புகள் மனிதனுடைய உயிரியல் பரிணாமத்தின் தொடர்ச்சியான கட்டங்களாகும்.

மனிதன் தோன்றிய நிகழ்ச்சிப் போக்கு எப்போது துவங்கியது என்பது இதுவரை துல்லியமாக நிலைநாட்டப்படவில்லை. சமீப பத்தாண்டுகளின் மானிடவியல் மற்றும் தொல்பொருள்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 20.

ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் இந்த் ஆரம்பத்தை மேன் மேலும் நூற்றுண்டுகளின் ஆழத்திற்கு இட்டுச் செல்கின் றன. இப்போதுள்ள விவரங்களின்படி நிமிர்ந்த நிலையில் நடந்து கற்களை எறிந்து அவற்றை உழைப்புக் கருவியாகப் பயன்படுத்திய ஆஸ்திரேலொபிதேக்குகள் (Australopithecines) என்ற குரங்கு மனிதர்கள் 15,00,000 ஆண்டுகளுக் கும் முன்னராக தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் வாழ்ந்தனர். எந்தப் பிரதேசத்தில் மனிதன் தோன்றிய நிகழ்ச்சிப் போக்கு நடைபெற்றது என்பது நிலைநாட்டப்படவில்லை. ஆனால் இந்தப் பிரதேசம் ஆப்பிரிக்காவில், வெப்பமண்டலக் காடுகள் ஸ்டெப்பி புல்வெளிகளாகவும் வெப்பமண்டல சமவெளி களாகவும் மாறிய இடங்களில் இருந்தது என்று கருத ஆதா ரங்கள் உள்ளன. நிலப்பரப்பு இவ்வாறு மாறியதுதான் மனி தனின் முன்னோர்கள் மரங்களிலிருந்து பூமிக்கு இறங்கி நேராக நடக்கத் துவங்கி தமது முன்னங்கால்களை விடுவிக்க உதவியிருக்க வேண்டும். பிதெகான்த்ரோப்புகள் (Pithecanthropes) என்ற குரங்கு மனிதர்கள் பரிணும வளர்ச்சியில் இதை விட சிறிது உயர்ந்த கட்டத்தில் இருந்தனர்; இவர் களுடைய புதைபடிவ மிச்சங்கள் ஜாவா தீவில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. சினன்த்ரோபஸ்கள் (Sinanthropuses) என்ற குரங்கு மனிதர்கள் (வட சீனுவில் கண்டுபிடிக்கப்பட்ட வற்றைக் கொண்டு இவர்கள் ஆராயப்பட்டனர்) இன்னமும் உயர்வான கட்டத்தில் இருந்தனர்; இவர்கள் தெளிவான பேச்சை உடையவர்களாயிருந்தனர், இவர்களுக்கு நெருப் பைப் பயன்படுத்தத் தெரிந்திருந்தது என்று அனுமானிக்கப் படுகிறது.

60,000—25,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நியான் டர்தால் (Neanderthal) மனிதர்கள், மனிதன் தோன்றிய நிகழ்ச்சிப் போக்கின் உயர்ந்த மட்டத்தில் உள்ளனர்; இவர் கள் ஐரோப்பா, ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்காவில் கிடைத்த பல்வேறு கண்டுபிடிப்புகளால் நன்கு ஆராயப்பட் டுள்ளனர். நியான்டர்தால் மனிதர்களால் நெருப்பை ஏற் படுத்த முடிந்திருந்தது, சமூகக் கருத்துக்களின் தளிர்கள் இவர்களுக்கிருந்தன என்று கருதப்படுகிறது. உடற்கூறு ரீதி யாகப் பார்த்தால் நியான்டர்தால் மனிதர்கள் இவர்களை யடுத்து வந்த நவீன மனிதர்களிடமிருந்து (குரோமான்யான் கள் (Cro-Magnon men) என்றழைக்கப்பட்டவர்கள்) பெரிதும்

மாறுபட்டனர். எனவே எல்லா இடங்களிலும் நியான்டர் தால் மனிதர்கள் நவீன மனிதர்களாக பரிணும வளர்ச்சி யடைந்ததால் பரவலாகப் பரவியிருந்த நியான்டர்தால் மனி தர்கள் மறையவில்லை, மாருக ஏதோ ஒரு பிரதேசத்திலிருந்து நவீன மனிதர்கள் குடிபெயரும் போது இவர்களால் நியான் டர்தால் மனிதர்கள் வெளிதள்ளப்பட்டனர், இங்கு இவர் களின் இறுதி மனித உடற்கூறு வளர்ச்சி நடைபெற்று உட லமைப்பு உருவானது என்று ஒரு சில விஞ்ஞானிகள் கருது கின்றனர். ஆசியா மைனர் இத்தகைய பிரதேசமாக இருந் திருக்கலாம். இங்கே மாறுநிலையிலிருந்த நியான்டர்தால்-குரோமான்யான் இனத்தின் புதைபடிவ மிச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சார்ல்ஸ் டார்வினின் பரிணுமத் தத்துவத்தின்படி உயிர் வாழ்வதற்கான போராட்டத்தின் போக்கில் இயற்கையான பால் தேர்வு முறைதான் மனிதன் தோன்றிய நீண்ட போக் கின், பல நூற்றுயிரமாண்டுகளாக நீடித்த போக்கின் பிர தான உந்துசக்தியாகும். இவ்வளவு நீண்ட நிகழ்ச்சிப் போக் கில் பால் தேர்வு முறையின் முக்கியப் பாத்திரத்தை மறுக் காத அதே நேரத்தில் இது மட்டுமே இந்த நிகழ்ச்சிப் போக் கின் எல்லா முக்கிய அம்சங்களையும் விளக்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக, கைகளின் மணிக்கட் டின் வளர்ச்சியையும் தெளிவான பேச்சு தோன்றியதையும் இது விளக்கவில்லை. எனவே டார்வினின் தத்துவம், மனிதன் தோன்றிய நிகழ்ச்சிப் போக்கைக் குறித்த உழைப்புத் தத் துவம் என்பதால் செழுமைபடுத்தப்பட்டது. இதன் முக்கியக் கருத்து நிலைகளை எங்கெல்ஸ் **மனிதக் குரங்கிலிருந்து மனி தனுக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்** எனும் கட்டுரையில் எடுத்துரைத்தார். இத்தத்துவத்தின்படி மனி தன் தோன்றிய நிகழ்ச்சிப் போக்கில் தீர்மானகரமான பங்கு உயிரியல் காரணிகளுக்கு அல்லாமல் சமூகக் காரணிகளுக்கு, முதலாவதாக, கூட்டில் வளரும் உழைப்பிற்கு அளிக்கப் படுகிறது. ''ஓர் அர்த்தத்தில், உழைப்பு மனிதனையே சிருஷ் டித்தது என்று நாம் கூற வேண்டிய அளவிற்கு அது மானுட வாழ்வு முழுவதற்கும் முதன்மையான அடிப்படை நிபந் தனையாக உள்ளது''* என்கிருர் எங்கெல்ஸ். அனேகமாக,

* பி. எங்கெல்ஸ், **இயற்கையின் இயக்க இயல்**, முன் னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 278.

மனிதனின் முன்னேடிகளாக இருந்த குரங்குகள் சமூக விலங்குகளாக இருந்திருக்கலாம்: அவை ஒன்ருக உணவைத் தேடியலேந்தன, காட்டு மிருகங்களிடமிருந்து கூட்டாகத் தம்மைக் காத்து கொண்டன. செயற்கைக் கருவிகளைத் தயாரித்தது (இதுதான் மனிதன் தோன்றிய நிகழ்ச்சிப் போக்கின் முதல் கட்டமாகும்) உழைப்புப் பழக்கவழக்கங்களில் மட்டுமே நிலேபெற்றிருக்க முடியும், உழைப்புக் கூட்டில் மட்டுமே மேலும் வளர்ச்சியடைந்திருக்க இயலும். மனிதனின் அந்தக் காலத்து முன்னேர்களினுடைய உலகக் கண்ணேட்டத்தை உழைப்பு விரிவுபடுத்தியது, உழைப்புக் கூட்டில் ஆதிகால மனிதர்கள் மேன்மேலும் நெருங்கி வர உதவியது, பேச்சின் அவசியத்தை ஏற்படுத்தியது, மூளே வளர்ச்சிக்கு அடிகோலியது, இத்தியாதி. இவ்வாருக உழைப்பானது மனிதன் தோன்றவும் குரங்குக் கூட்டத்திலிருந்து மனித சமுதாயம் தோன்றவும் வழிகோலியது.

19ம் நூற்ருண்டின் நடுவில் அமெரிக்க விஞ்ஞானி லூ.ஹெ. மார்கஞல் தோற்றுவிக்கப்பட்டு எங்கெல்சால் **குடும்பம், தனிச்சொத்து அரசு, ஆகியவற்றின் தோற்றம்** எனும் **நூ**லில் பயன்படுத்தப்பட்ட ஆதிகால வரலாற்றின் காலப் பிரிவு முறை சமீப காலம் வரை விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்பட்டது. மனிதன் தோன்றியது பற்றிய உழைப்புத் தத்துவத்தினுடைய கோட்பாடுகளின் அடிப்படையிலான இந்த முறையின்படி ஆதிகாலச் சமுதாயத்தின் வரலாறு காட்டுமிராண்டிக் காலகட்டம் என்றும் பண்பாடற்ற காலகட்டம் என்றும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இவற்றில் ஒவ்வொன்றும் மனிதர்களுடைய வாழ்க்கையின் சிறப்பு அம்சங்கள், உழைப்புக் கருவிகள், தட்டுமுட்டுச் சாமான்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ் மட்டம், நடு மட்டம், மேல் மட்டம் என்று மூன்று மட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. உதாரணமாக மார்கன், காட்டுமிராண்டித்தனத்தின் கீழ் மட்டத்திலிருந்து நடு மட்டத்திற்கு மாறியதை உணவில் மீனேப் பயன்படுத்த ஆரம்பித்தது, நெருப்பை உபயோகித்தது ஆகியவற்றுடனும், காட்டுமிராண்டித்தனத்தின் மேல் மட்டத்திற்கு மாறியதை வில், அம்பு கண்டுபிடிப்புடனும், பண்பாடற்ற நிலேக்கு மாறியதை மண்பாண்டக் கலே புகுத்தப்பட்டதுடனும் தொடர்புபடுத்துகிருர். ஆனுல் இந்தப் பாகுபாட்டு முறை ஓரளவு முழுமையற்றதாக இருந்

த்து, தனிப்பட்ட மட்டங்களின் அடிப்படையாக இருந்த குறியீடுகள் அதிக முக்கியமற்றவையாகவும் உலகின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பொதுவானவையாக இல்லாதவையாகவும் இருந்தன.

சமீப பத்தாண்டுகளில் விஞ்ஞானத்தால் சேகரிக்கப்பட்ட பெருமளவு உண்மை விவரங்களின் (தொல்பொருள், மானுடவியல், மனித இன விவரங்கள்) அடிப்படையில் புதிய காலப் பிரிவு முறை நிலைபெற்றுள்ளது. இம்முறையின்படி ஆதிகாலச் சமுதாயத்தின் வரலாறு ஆதிகால மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்த சகாப்தம், குல அமைப்பு, குலவழியான கூட்டுவாழ் குழுமச் சகாப்தம் என்று பிரிக்கப்படுகிறது. கூட்டுவாழ் குழுமச் சகாப்தம் தாய்வழி குல அமைப்புக் கட்டம் என்றும் தந்தைவழி குல அமைப்புக் கட்டம் என்றும் பிரிக்கப்படுகிறது. ஆதிகால மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்த சகாப்தத்திற்கும் குலவழிச் சகாப்தத்திற்கும் இடையிலான காலகட்டம் இன்றைய மனிதன் உருவான காலத்துடன் பொருந்தி வந்தது.

இது தவிர பிரதான உழைப்புக் கருவிகள் எவற்றால் ஆனவையாக இருந்தன, எப்படி உருவாக்கப்பட்டிருந்தன என்பதற்கேற்ப காலத்தைப் பிரிக்கும் தொல்பொருள் முறையும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இம்முறையில் கற்காலம், வெங்கலக் காலம், இரும்புக் காலம் ஆகியவை உள்ளன. கிட்டத்தட்ட ஆதிகாலச் சகாப்தத்துடன் காலத்தில் பொருந்தி வரும் கல் யுகமானது தொன்மைக் கல் யுகம் (palaeolithic epoch) என்றும் புதுக் கற்காலம் (neolithic epoch) என்றும் பிரிக்கப்படுகிறது. முதலாவது காலகட்டத்தில் செதுக்கி உடைக்கப்பட்ட கருவிகள் பயன்படுத்தப்பட்டன, மண்பாண்டங்கள் இருக்கவில்லை. இரண்டாவது கட்டத்தில் மனிதனுக்கு கற்களை அறுக்கவும் குடையவும் அவற்றில் ஓட்டையிடவும் தெரிந்திருந்தது, மண்பாண்டக் கலை பரவியிருந்தது.

வெப்ப மண்டலத்தில் வாழ்ந்த குரங்குகள்தான் மனிதனின் தொலைதூர முன்னோர்களாக இருந்தன. பல நூற்றுயிரம் ஆண்டுகளாக முதல் வகையான குரங்கு மனிதர்கள் உலகின் வெதுவெதுப்பான, முக்கியமாக வெப்ப மண்டல, மிதவெப்ப மண்டலப் பிரதேசங்களில் மட்டுமே பரவியிருந்தனர். அந்தக் காலத்தில் வெப்பநிலை இப்போதிருந்ததை

விட வெதுவெதுப்பானதாக இருந்ததால் அனேகமாக குரங்கு மனிதர்கள் இன்றைய மிதசீதோஷ்ண மண்டலத்தின் கணிசமான பகுதியில் கூட பரவியிருந்திருக்கலாம். நெருப்பைப் பயன்படுத்திய ஆனால் அதை உண்டாக்கத் தெரியாத சினன்த்ரோபஸ்கள் கூட அனேகமாக நீண்ட காலம் உறைபனி வெப்பநிலையுடைய பிரதேசங்களில் உயிர்வாழ்ந்திருக்க முடியாது. இந்தக் குரங்கு மனிதர்கள் அனைவரும் சிறு குழுக்களாக அல்லது கூட்டங்களாக (திரள்களாக) வாழ்ந்தனர். சாதாரணமாக இவை ஒவ்வொன்றிலும் வயது வந்தவர்கள் 20—30 பேர்களும் கிட்டத்தட்ட இதே அளவு குழந்தைகளும் இருந்ததாகக் கருதப்படுகிறது. உற்பத்திச் சக்திகளின் குறைந்த அளவு வளர்ச்சியும் உணவைத் தேடுவதில் மேன்மேலும் அதிகரித்து வந்த இடர்ப்பாடுகளும் இத்திரள்களின் பெரிய அளவை அனுமதிக்கவில்லை; திரள்களின் அளவு சிறிதான போது அவற்றின் வாழும் திறன் பெரிதும் குறைந்தது, அவை சிக்கலான சூழ்நிலைகளில் வாழுவதும் வளருவதும் மிகக் கடினமாகின்றன.

உணவாகப் பயன்படுத்தத் தக்க தாவரங்களையும் பூச்சிகளையும் சேகரிப்பதும் விலங்குகளை வேட்டையாடுவதும் தான் இந்த ஆதிகாலக் கூட்டுகளுடைய வாழ்க்கையின் அடிப்படையாக இருந்தன. வாழ்விற்கான புதிய சாதனங்களைத் தேடி அலையும் போது ஆதிகால மக்கள் கூட்டங்கள் நாடோடி வாழ்க்கையை நடத்தின. எனினும் அனுகூலமான சூழ்நிலைகளில் இவை ஓரளவு நீடித்த காலம் நிலைத்து வாழ்ந்திருப்பது சாத்தியமே. இவ்வாறு ஓரிடத்தில் தங்கிய போது சாதாரணமாக ஏதாவதொரு இயற்கையான மறைவிடம் (பெரும்பாலும் குகைகள்) தங்குமிடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. வெவ்வேறான இயற்கைச் சூழ்நிலைகளில் வேட்டையாடுதலுக்கும் சேகரிப்பிற்கும் இடையிலான விகிதம் வெவ்வேறானதாக இருந்தது. ஆனால் அதிக சுறுசுறுப்பான உழைப்பு நடவடிக்கை என்ற வகையில் வேட்டையாடுதல் தான் கருவிகளை மேம்படுத்தவும் கூட்டு மனப்பாங்கை வளர்க்கவும் இறுதியாக மனிதச் சமுதாயம் உருவெடுக்கவும் உதவியது. இந்த விஷயத்தில் மான்கள், யானைகள் போன்ற பெரிய மிருகங்களை வேட்டையாடியதற்குக் குறிப்பாக பெரும் முக்கியத்துவம் இருந்தது. இவ்வாறு வேட்டையாடுவதைத் தனியாகச் செய்வது என்பது பொருளற்றது;

குறைந்த பட்சம் எளிய முறையிலான உழைப்புக் கூட்டுறவாவது நிலவினுல்தான் இது வெற்றிகரமானதாக முடியும். ஆதிகால மனிதக் குழுக்களின் உள்ளே சமூக உறவுகள் வளர்ச்சியடைந்ததானது இக்காலகட்டத்தில் சக்திக்கேற்ற இயற்கையான உழைப்புப் பிரிவினையின் துளிர்கள் முளைவிட வழிகோலியது. ஆனுல் இது வயது மற்றும் பால் பிரிவுகளுக்கேற்ற உழைப்புப் பிரிவினையை ஒத்திருக்கவில்லை.

பெரிய மிருகங்களை வேட்டையாடியதானது ஆதிகால மனிதனின் உணவுப் பழக்கங்களில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. இறைச்சி உணவானது ''மனிதக் குரங்கிலிருந்து மனிதனுக மாறிய இடைநிலை மாற்றப் போக்கில்... மற்ருெரு முக்கியமான படியாகும்''* என்ருர் எங்கெல்ஸ். மனிதனுக்குத் தேவையான கிட்டத்தட்ட எல்லாப் பொருட்களுமே இறைச்சியில் அடங்கியிருந்தன. எனவே இறைச்சி உணவு பொதுவாக மனித உடலின், குறிப்பாக மூளையின் வளர்ச்சிக்கு வழிகோலியது. சிக்கிமுக்கி முறையில் நெருப்பை உண்டாக்கும் முறையைக் கற்றுக் கொண்டதானது ஆதிகாலக் கண்டுபிடிப்புகளிலேயே முக்கியமான ஒன்ருக அல்லது அனேகமாக மிக முக்கியமானதாக இருந்தது. நெருப்பு பெரும் ஊனுண்ணும் மிருகங்களுக்கு எதிரான நம்பகரமான பாதுகாப்பாயும் அவற்றிற்கு எதிரான போராட்டக் கருவியாகவும் இருந்தது; இறைச்சி உணவின், குறிப்பாக மீனின் ஜீரணிப்புத் தன்மையை அதிகப்படுத்தியது. நெருப்பைக் கண்டுபிடித்ததுதான் நியான்டர்தால் மனிதர்கள் மிதசீதோஷ்ண மண்டலத்திற்குப் பரவவும் பின் பனிகாலம் வந்த போது குளிரைத் தாங்கவும் உதவியது.

ஆதிகாலச் சூழலில் உள் உறவுகள் இன்னமும் பெரிதும் உயிரியல் சடத்துவச் சக்திகளுடைய தாக்கத்தின் கீழிருந்தன. குரங்கு மனிதன், அல்லது லெனின் கூறியபடி ''இயல்புணர்வு மனிதன்''** மிக கஷ்டப்பட்டுதான் கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டான், இவனுடைய ''விலங்கியல் சுயநலம்'' கூட்டு வாழ்க்கை முறையில் நிலைபெற்ற விதிமுறைகளைத் தொடர்ந்து எதிர்த்து போரிட்டது. இறந்து போனவர்

---

* பி. எங்கெல்ஸ், இயற்கையின் இயக்க இயல், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 288.

** வி. இ. லெனின் முழு நூல் திரட்டு, தொகுதி 29, பக்கம் 85 (ருஷ்யப் பதிப்பு).

களின் மீது ஓரளவு அக்கறை காட்ட ஆரம்பித்த, ஒப்பீட்டளவில் வளர்ச்சியடைந்த நியான்டர்தால் மனிதர்கள் கூட (இவர்கள் விட்டுச் சென்ற சமாதிகளிலிருந்து இது தெரிகிறது) அனேகமாக பரஸ்பரம் ஒருவருடன் மற்றொருவருக்கு உள்ள உறவு முறைகளில் கூட்டு வாழ்வின் வரையளவுகளைக் கடைப்பிடிக்காமல் அடிக்கடி தனிப்பட்ட உடல் பலத்தை ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டனர். இந்த உடல் பலம் நவீன மனிதனின் பலத்தைக் கணிசமான அளவு விஞ்சியிருந்தது.

சந்தேகத்திற்கிடமின்றி ஆதிகாலத் திரள்களின் உள்ளே பால் உறவுகளின் விஷயத்தில் உயிரியல் இயல்புணர்ச்சிகள் குறிப்பாக நன்கு வெளிப்பட்டன. எனவே இந்தத் துறையில் தான் உயிரியல் துவக்கத்திற்கும் சமூக வாழ்வின் வளர்ந்து வந்த அம்சங்களுக்கும் இடையிலான முக்கியப் போராட்டம் அனேகமாக நடந்திருக்க வேண்டும். நியான்டர்தால் மனிதர்களின் மத்தியில் இந்த உறவுகள் எப்படிப்பட்ட வடிவத்தில் நிலவின என்பது சம்பந்தமாக பல கருத்துக்கள் உள்ளன. வளர்ச்சியடைந்து வந்த கூட்டு உணர்வு இந்தக் கட்டத்திலேயே வயதுவந்த ஆண்களின் பரஸ்பர பொறுமைக்கு (இதற்கு முன் ஒழுங்குபடுத்தப்படாத பாலுறவுகள்தான் நிலவின) இட்டுச் சென்றிருக்க வேண்டுமென பெரும்பாலான சோவியத் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அதே சமயம், அந்தப்புரக் குடும்பம் என்றழைக்கப்படுவது (அதாவது ஒரு சில பெண்களும் ஒரு பெரிய ஆணும்) ஒரு மங்கிய வடிவத்திலாவது ஆதிகால மக்கள் கூட்டத்தில் இருந்தது என்று எண்ண அடிப்படைகள் உள்ளன. இக்குடும்ப அமைப்பு பம்போன், சிம்பான்சே, கொரில்லா போன்ற பெரும்பாலான நவீன குரங்குகளுக்கு உரித்தானது. இளம் ஆண்களை பால் உறவுகளிலிருந்து நீக்கிய இத்தகைய குடும்பங்கள் சந்தேகத்திற்கிடமின்றி கூட்டத்தின் கூட்டு முறையைக் குலைத்தன. உடற்கூறு ரீதியாக அதிகப் பலமற்ற ஆனால் சமூக ரீதியாக அதிக ஒற்றுமையான குரோமான்யான்களால் நியான்டர்தால் மனிதர்கள் அகற்றப்பட்டதில் அனேகமாக இந்த விஷயம்தான் முக்கியப் பங்காற்றியிருக்கக் கூடும்.

நவீன மனிதர்களாகிய குரோமான்யான்கள் உருவாவது, உண்மையான மனிதச் சமுதாயத்தின் வரலாறு துவங்கியதைக் குறித்த குல அமைப்பின் தோற்றத்தோடு (தொல்

பொருள் ரீதியான காலப் பிரிவு முறைப்படி பிந்தைய தொன்மை கல் யுகத்துடன்) கிட்டத்தட்ட பொருந்தி வந்தது. தாய்வழியில் அல்லது தந்தைவழியில் உள்ள இரத்த உறவுகளின் அடிப்படையில் மக்கள் குழுக்களாக ஒன்றுபட்டு வாழ்வது குலவழி அமைப்பின் அடிப்படையாக இருந்தது. குலங்கள் என்றழைக்கப்பட்ட இக்குழுக்களில் ஒரு குலத்திற்கு வெளியேதான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற மரபு இருந்தது. ஒரே குலத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கிடையே திருமண-பாலுறவுகள் கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருந்தன. இந்த மரபு எப்படி தோன்றியது என்பது இன்னமும் தெளிவுபடுத்தப்படவில்லை. அனேகமாக கூட்டுகளின் உழைப்பு ஒற்றுமையைக் குலைக்கும் இயல் புணர்ச்சிகளை அடக்கும் உள்ளுணர்வு பூர்வமான நாட்டத்தால்தான் ஆதிகால மக்கள் கூட்டத்தினுள் திருமண-பாலுணர்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையிலான திருமணங்களைத் தடை செய்வதிலிருந்து இது துவங்கியிருக்கும். குலவழி அமைப்பு உருவாகிய காலகட்டத்தில் திருமண உறவுகளின் நிலையற்ற தன்மையும் பாலுறவிற்கும் குழந்தை பிறப்பிற்கும் இடையிலான தொடர்பைப் பற்றி ஆதிகால மனிதர்களுக்குத் தெளிவான கருத்து இல்லாமலிருந்ததும் ஆரம்பத்தில் உறவு முறையானது தாய்வழியில் மட்டுமே நம்பகரமாக வெளிப்படுவதற்கு இட்டுச் சென்றன. எனவேதான் தாய்வழிக் குலம் வரலாற்று ரீதியாக முன்னதாக நிலவியதே தவிர தந்தைவழிக் குலமல்ல. கலப்பு மண மரபு நிலவியதால் வேறொரு குலத்துடன் (அல்லது குலங்களுடன்) நிரந்தரமான திருமணப் பரிவர்த்தனை உறவைக் கொண்டுதான் ஒரு குலத்தால் நீண்ட காலம் நிலைத்திருக்க முடிந்தது. இவ்வாறான பரஸ்பரம் தொடர்புள்ள குலங்களின் இணைப்பானது ஆதிகாலச் சகாப்தத்தினுடைய சமூக கூட்டமைப்பின் முக்கிய வடிவமாகிய குலமரபுக் குழுவை ஏற்படுத்தியது.

அக்கால மனிதனின் வாழ்வில் இயற்கை-குல மற்றும் குடும்ப-திருமண உறவுகளின் பாத்திரத்தை விளக்கும் முகமாக தம்முடைய **ஜெர்மன் சித்தாந்தம்** எனும் நூலில் மார்க்சும் எங்கெல்சும் பின்வருமாறு எழுதினார்கள்: '' 'வரலாற்றைப் படைக்க இயலும்' பொருட்டு மனிதர்கள் உயிர் வாழக் கூடிய நிலையில் இருத்தல் வேண்டும். ஆனால் வாழ்க்

கையில் பிற எல்லாவற்றுக்கும் முன்பு உண்ணுதல், குடித்தல், வசிப்பிடம், உடை மற்றும் பல காரியங்கள் அடங்கியுள்ளன. இவ்வாறுக, முதல் வரலாற்றுச் செயல், இந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கான சாதனங்களை உற்பத்தி செய்வதும் பொருள்வகை வாழ்க்கையை உருவாக்குவதும் ஆகும்....

இரண்டாவது அம்சம் என்னவெனில் முதல் தேவையின் நிறைவேற்றம் (நிறைவேற்றும் செயலும் பெறப்பட்டுள்ள நிறைவேற்ற சாதனங்களும்) புதிய தேவைகளுக்கு இட்டுச் செல்லுவதாகும்....

துவக்கம் முதலே வரலாற்று வளர்ச்சியில் பிரவேசிக்கும் மூன்ருவது புறநிகழ்வு, தமது சொந்த வாழ்க்கையை அன்ருடம் மறு உருவாக்கம் செய்து வரும் மனிதர்கள் இதர மனிதர்களை உருவாக்கத் தொடங்குகிருர்கள், தமது வகையினரை இனப்பெருக்கம் செய்கிருர்கள் என்பதே; ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு, பெற்ருேர்-குழந்தைகள் உறவு, குடும்பம்...

...வாழ்க்கையின் உருவாக்கம், ஒருவரது சொந்த உழைப்பினுலான வாழ்க்கை மற்றும் இனப்பெருக்கலான புதிய வாழ்க்கை ஆக இரண்டும் ஒருங்கே நிற்க, இப்போது இரட்டை உறவாகத் தோற்றமளிக்கிறது: ஒரு புறத்தில் ஒரு இயற்கையான உறவாகவும் மறு புறத்தில் ஒரு சமுதாய உறவாகவும் தோற்றமளிக்கிறது.''*

திருமண-பாலுறவுகளைச் சாதாரண உயிரியல் புலப்பாட்டிலிருந்து சமூக உறவு முறையாக மாற்றியதானது உழைப்பு நடவடிக்கையில் கூட்டு உணர்வை வலுப்படுத்தவும் ''ஆதிகால பொதுவுடைமைச் சமூகம்'' தோன்றவும் வழிகோலியது. இத்தகைய சமூகத்தில் முக்கிய உழைப்புப் பொருளின் (அதாவது குலமரபுக் குழுவின் பிரதேசத்திலுள்ள இயற்கை மூல ஊற்றுகளின்) மீதும் பெரிய உற்பத்திக் கருவிகளின் (கால்நடைப் பட்டிகள், படகுகள் போன்றவை) மீதும் இதன் உறுப்பினர்களின் கூட்டுச் சொத்துடைமை நிலவியது, கூட்டாக உற்பத்தி நடந்தது, அதாவது உழைப்பில் பரஸ்பர உதவி பழக்கங்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கங்கள் 40—43.

கள் இருந்தன, உழைப்பின் விளைபொருட்கள் கூட்டாகப் பயன்படுத்தப்பட்டன. ''காட்டுமிராண்டி நிலை'', ''பண்பாடற்ற நிலை'' ஆகிய காலகட்டங்களைப் பற்றிய பொதுமைப்படுத்திய கருத்தை வெளியிடுங்கால எங்கெல்ஸ், உற்பத்தியானது ''இங்கே கூட்டு முறையில் இருந்தது; அதே போல் சிறிய அல்லது பெரிய பொதுவுடைமைச் சமூகங்களுக்குள் செய்பொருட்களை நேரடியாக வினியோகிப்பதன் மூலம் நுகர்வு நடந்தது''* என்று குறிப்பிட்டார்.

சுமாராக 50,000 ஆண்டுகளுக்கு முன் பூமியின் ஒரு பிரதேசத்தில் அல்லது ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒரு சில பிரதேசங்களில் உருவான நவீன மனிதன் மற்ற பிரதேசங்களுக்குப் பரவத் துவங்கினன். ஆதிகால மனிதர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்த போது அப்போதிருந்த பொருளாதார முறையில் மேன்மேலும் புதிய பரப்புகளின் இயற்கை மூல ஊற்றுகள் தேவைப்பட்டன. இதுதான் இவர்கள் இடம் மாறிச் சென்று குடியமரத் தூண்டிய முக்கியக் காரணமாகும். பல சமயங்களில் இயற்கைச் சீற்றங்களும் அதிக வலிமையான குலமரபுக் குழுவின் நிர்ப்பந்தமும் பிற காரணங்களும் இவ்வாறு குடிபெயரத் தூண்டின. கிட்டத்தட்ட 30,000—35,000 ஆண்டுகளுக்கு முன்னரே மனிதர்கள் பழைய உலகத்திலிருந்த, வாழ்க்கைக்கு ஓரளவு வசதியான எல்லா பகுதிகளுக்கும், குறிப்பாக வடகிழக்கு ஆசியாவிற்கு வந்தனர். இங்கிருந்து சிறு குழுக்கள் அலாஸ்காவிற்குச் சென்றன. அங்கே இவற்றின் எண்ணிக்கை பெருகியதும் தெற்கு நோக்கிச் சென்று படிப்படியாக அமெரிக்கக் கண்டத்தில் குடியேறின. கணிசமான அளவு காலங்கழித்து, கிட்டத்தட்ட நம் சகாப்தத்திற்கு 20,000 ஆண்டுகளுக்கு முன் ஆஸ்திரேலியாவில் குடியேற்றம் ஆரம்பித்தது. மனிதர்கள் அனேகமாக தென்கிழக்கு ஆசியாவிலிருந்து மலேயாத் தீவுக் கூட்டங்களின் வழியாக, நியூ கினி வழியாக இங்கு வந்திருக்க வேண்டும். ஆதிகால மனிதர்கள் இவ்வாறு பரவலாகக் குடியேறியதும் (இதன் விளைவாக அவர்களின் தனிப்பட்ட குழுக்கள் முற்றிலும் வெவ்வேறன இயற்கைச் சூழல்களில் வாழ நேர்ந்தது, இவை

---

* பி. எங்கெல்ஸ், **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, பக்கம் 270.

பூகோளச் சூழ்நிலையின் தாக்கத்திற்கு உள்ளாயின) மற்றும் இத்தகைய குழுக்கள் ஒன்றிலிருந்து ஒன்று நீண்ட காலம் தனிமைபடுத்தப்பட்டதும் Homo sapiens வகையினத்தின் உள்ளே இனப் பிரிவுகள் தோன்றுவதில் தீர்மானகரமான பங்காற்றியிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

கீழான வளர்ச்சி கட்டத்திலுள்ள பல்வேறு குலமரபுக் குழுக்களின் வாழ்க்கையை ஆராயும் இனப் பரப்பு விளக்கவியல் வல்லுனர்களின் ஆராய்ச்சிப் பொருளை வைத்து ஆதிகாலச் சமுதாயத்தில் குடிமக்களின் புனருற்பத்திப் போக்கைப் பற்றியும் ஆதிகால மனிதர்களுடைய வாழ்க்கையின் பிற அம்சங்களைப் பற்றியும் அறியலாம். அக்கால மனிதர்களுடைய எலும்புகளின் புதைபடிவ மிச்சங்கள், அவர்களுடைய கற்கருவிகள், சித்திரங்கள் போன்றவற்றின் அடிப்படையிலான மானிடவியல் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சிகள் இதற்கான மதிப்பு மிக்க ஆராய்ச்சிப் பொருட்களைத் தருகின்றன.

ஆதிகால மனிதர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் மிகக் கடினமானவையாக இருந்தன. உணவாகப் பயன்படுத்தத் தக்க தாவரங்கள், பூச்சிகள் போன்றவற்றைச் சேகரித்தல், மீன்பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவை முன்போன்றே இவர்களுடைய வாழ்க்கையின் அடிப்படையாக இருந்தன; இவற்றைப் போன்ற இயற்கைச் சூழலைப் பயன்படுத்தும் முறைகள் விலங்குலகிற்கும் உரித்தானவை என்றாலும் மனிதர்கள் படிப்படியாக மேம்படுத்தி வந்த கருவிகளைக் கொண்டும் சாதாரணமாக கூட்டிலும் இவற்றில் ஈடுபட்டனர். ஆனால் ஆதிகால மனிதர்களுடைய உழைப்பின் செயல் வன்மை குறைவானதாக இருந்தது, பல நேரங்களில் இது உபரிப் பொருளைத் தரவில்லை. குழந்தைப் பருவத்திலிருந்தே ஆதிகால மனிதனின் வாழ்க்கை முழுவதும் அடிப்படைத் தேவைகளை, முக்கியமாக உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான போராட்டமாக இருந்தது. வேட்டையாடுதலானது ஒப்பீட்டளவில் அதிகப் பயன்களைத் தந்திருக்கும், ஆனால் வேட்டை மிருகங்கள் அனேகமாக முறையாகக் கிடைக்கவில்லை; அதுவும் இறைச்சியை (குறிப்பாக வெப்ப மண்டலத்திலும் வெட்கை மிகுந்த பருவங்களிலும்) நீண்ட நாட்களுக்குப் பாதுகாத்து வைக்க முடியவில்லை. எனவே சாதாரணமாக ஒரு வெற்றிகரமான வேட்டைக்குப் பின்

சிறிது காலத்திற்கு முழு வயிறு நிரம்பியது, அதற்குப் பின் நீண்ட நாட்களுக்கு அரைப்பட்டினியில் வாழ்ந்தனர்.

பூமியின் பரவலான பிரதேசங்களுக்கு ஆதிகால மனிதர்கள் குடிபெயர்ந்ததே இவர்களுடைய முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்குப் பதில் அதன் வேகத்தைக் குறைத்திருக்க வேண்டும். ஏனெனில் தொலைதூர இடப்பெயர்ச்சிகளின் விளைவாய் அறிமுகமில்லாத இயற்கைச் சூழலுக்கு வரும் போது புதிய வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்குப் பழகிக் கொள்வதற்காக மனிதர்கள் தம் நேரத்தையும் சக்தியையும் செலவிட வேண்டி வந்தது. இது தவிர வெவ்வேறான பூகோளச் சூழ்நிலைகள், குலமரபுக் குழுக் கூட்டுகளுடைய வாழ்க்கையின் மிகக் கடுமையான பிரிவு, ஒதுக்கம் முதலியன உலகின் பல்வேறு பிரதேசங்களில் இவற்றின் பொருளாதார வளர்ச்சி பல்வேறு பாதைகளில் செல்ல வழிகோலின: உயிரியல் சக்திகள் பெரிதும் கடுமையாக மனிதனை நிர்ப்பந்தித்த வெப்ப மண்டலக் காடுகளிலும் வறிய அரைப் பாலைவனப் பிரதேசங்களிலும் வாழ்க்கை முறையில் சேகரிப்பின் முக்கியப் பங்கு நீண்ட காலம் நிலைத்திருந்தது; புல்பூண்டுகளை உண்ணும் மிருகங்கள் பரவியிருந்த வெப்ப மண்டலச் சமவெளிகள், ஸ்டெப்பி நிலங்கள், காடுகளும் ஸ்டெப்பி புல்வெளிகளும் கலந்த இடங்கள் ஆகியவற்றில் வேட்டையாடுதலின் பங்கு விரைவாக அதிகரிக்கிறது.

ஆதிகாலச் சகாப்தத்தில் மரண விகிதம் மொத்தத்தில் அதிகமாயிருந்தது என்று கருத எல்லா அடிப்படைகளும் உண்டு. பட்டினியாலும் நோய்நொடிகளாலும், காட்டு மிருகங்கள் தாக்கிய போதும் பகைமை குலமரபுக் குழுக்களுடன் மோதிய போதும், இயற்கைச் சீற்றங்களாலும் ஆதிகால மனிதர்கள் மாண்டனர். மிதசீதோஷ்ண மற்றும் கடுங்குளிர் மண்டலங்களில் மனித வாழ்க்கை மிகக் கடினமானதாக இருந்தது. இங்கே அனேகமாக குளிர்காலத்தில் பட்டினியின் விளைவாக ஆண்டுதோறும் ஏராளமானோர் உயிரிழந்தனர். குறிப்பாக குழந்தைகள், முதியோர் மத்தியில் இறப்பு விகிதம் அதிகமானதாயிருந்தது: கூட்டுகளில் இருந்தவர்களில் மிகப் பலவீனமானவர்கள் என்ற வகையில் முதியவர்களும் குழந்தைகளும்தான் வாழ்க்கைச் சூழல் மோசமடைந்த போது முதலில் பாதிக்கப்பட்டனர்; எதிர்பாரா ஆபத்துகள் வந்த போது குலமரபுக் குழுக்கள் அனேகமாக

பல நேரங்களில் தம் முதியவர்களையும் குழந்தைகளையும் அப்படியே விட்டுவிட்டு ஓடியிருக்கலாம். ஒரு சில குலமரபுக் குழுச் சமூகங்களிடையே (ஆஸ்திரேலியர்கள், எஸ்கிமோக் கள் போன்ருேர்) கண்டுபிடிக்கப்பட்ட சில பழக்கங்கள் (குழந்தைகளைக் கொல்லுவது, பட்டினி கிடக்க நேரிடும் போது முதியோரைக் கொல்லுவது) அனேகமாக ஆதிகாலச் சகாப்தத்திலும் பரவியிருந்திருக்க வேண்டும். ஒருவேளை அப்போது நரமாமிசம் உண்ணுவதும் பரவலாக பரவி யிருந்திருக்கலாம். ஆதிகால மனிதர்களின் கடுமையான வாழ்க்கைச் சூழ்நிலைகள், கண்டுபிடிக்கப்பட்ட எலும்பு களின் மிச்சங்கள், இனப்பரப்பு விளக்கவியலின் ஒப்பீட்டு ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தொன்மை கல் யுகத்தின் பின் பகுதியிலும் புதுக் கற்காலத் தின் ஆரம்பத்திலும் ஆதிகால மனிதர்கள் சுமாராக 20 வயது வரை மட்டுமே வாழ்ந்தனர், மிகச் சிலர் மட்டுமே அக்காலத்தில் 50 வயது வரை வாழ்ந்தனர் என்று கருதப் படுகிறது. அக்காலத்தில் குடிமக்களின் எண்ணிக்கை கிட் டத்தட்ட நிலையானதாக இருந்தது என்பதை கணக்கில் கொண்டால் சராசரி இறப்பு விகிதம் கிட்டத்தட்ட 5 சத விகிதத்துக்கும் மேலாக இருந்தது; இன்று உலக மக்களிடை யே ஓரிடத்திலும் இந்த இறப்பு விகிதம் கிடையாது.

ஆதிகாலச் சகாப்தத்தில் பிறப்பு விகிதமும் உயர்வான தாக (மேலே கூறிய இறப்பு விகிதத்தை விட சராசரியாக சிறிதளவு கூடுதலானதாக) இருந்திருக்க வேண்டும், ஏனெ னில் குறைவான பிறப்பு விகிதம் இருந்திருந்தால் ஆதிகால மனிதர்கள் அழிந்து போயிருப்பார்கள். இனப்பெருக்க வளத்தின் உயிரியல் அளவுகோல்களை (பால் முதிர்ச்சி அடை யும் வயது, மாதாந்திர மாதவிடாய் சுழற்சி, கருத்தரித் திருக்கும் காலம் போன்றவை) மனிதர்கள் குரங்குகளை யொத்த தம் முன்னேர்களிடமிருந்து பெற்றனர்; இவற் றில் பெரும்பாலானவை மனித வரலாற்றில் மாறவில்லை. எனவே அனேகமாக அக்காலத்தில் உயர்வான பிறப்பு விகி தமானது பெரும்பாலும் இள வயதில், கிட்டத்தட்ட எல் லாப் பெண்களையும் திருமண-பாலுறவுகளில் ஈடுபடச் செய் ததன் மூலம் தக்க வைக்கப்பட்டது. அதே சமயம் இனப் பெருக்க வளம் அனேகமாக அதிக பட்ச மட்டத்தை அடை யவில்லை. பெண்கள் இள வயதிலேயே, சாதாரணமாக பால்

முதிர்ச்சி அடைந்ததுமே (சில சமயங்களில் இதற்கும் முன்னராக கூட பாலுறவுகள் கொள்ளப்பட்டன) திருமண-பாலுறவுகளில் ஈடுபட்டது, அடிக்கடி கர்ப்பமடைந்து, குழந்தைகளைப் பெற்றது ஆகியவை கடுமையான, துன்பங்கள் நிறைந்த வாழ்க்கைச் சூழலோடு சேர்ந்து பெண்களை விரைவாக வாட்டமுறச் செய்தன, பல சமயங்களில் பெண்கள் சிறு வயதிலேயே மாண்டனர், இதனால் இவர்கள் குழந்தைகளைப் பெற்றுத் தரும் காலகட்டம் பெரிதும் குறைவானதாயிருந்தது.

ஆதிகாலச் சகாப்தத்தில் குடிமக்களுடைய புனருற்பத்திப் போக்கின் மிக முக்கிய சிறப்பு அம்சங்களில் ஒன்று என்னவெனில் கால ரீதியாகவும் தனிப்பட்ட குலமரபுக் குழுக்களிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் இது மிகவும் சமமற்று இருந்ததாகும். வாழ்க்கைக்கு அனுகூலமான சூழ்நிலைகள் நிலவிய போது இறப்பு விகிதம் அனேகமாக குறைந்திருக்கும்; இதன் பயனாய் ஆதிகாலக் குலமரபுக் குழுக்கள் எண்ணிக்கையில் பெருகி, சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்து புதிய குலமரபுக் குழுக்களின் ஆரம்பத்திற்கு வழிகோலின. அனுகூலமற்ற சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிட்ட போதோ, அதாவது அதிக வலிமையான குலமரபுக் குழுவின் தாக்குதலுக்கு உள்ளாகும் போது அல்லது இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் போது இக்குலமரபுக் குழுக்களின் எண்ணிக்கை குறைந்தது, சில சமயங்களில் முற்றிலுமாக இவை அழிந்தன அல்லது மாண்டு போயின. சராசரியாக ஆதிகாலக் குலமரபுக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் 100—150க்குக் குறைவானவர்களே இருந்தனர். ஒப்பீட்டளவில் சிறிதான, ஒதுக்கமான இத்தகைய கூட்டுகளில் அடிக்கடி அசாதாரணமான பால் விகிதம் தோன்றியது, பரம்பரை நோய்கள் எளிதாக வளர்ந்தன. இது தவிர எழுத்துக்கள் இல்லாத போது, சிறிது சிறிதாகச் சேர்ந்த ஞானம் உயிருள்ள மனிதர்களிடம் மட்டுமே இருந்த போது (இவர்கள் இந்த ஞானங்களை மற்ற குலமரபுக் குழுவினருக்கும் அடுத்த தலைமுறையினருக்கும் தந்தனர்) இத்தகைய ஞானத்தைப் பெற்றிருந்தவர்களில் ஒரு சிலர் அகால மரணம் அடைந்தாலும் கூட சிறு குலமரபுக் குழுக்கள் அடிக்கடி பின்னடையும் அபாயத்திற்கு உள்ளாக்கப்பட்டன. அக்காலத்தில் சமுதாயத்தின் பொதுவான, ஒப்பீட்டளவில் குறைவான சமூக-

பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சி வேகங்களையும் மேற்கூறிய காரணத்தால் விளக்கலாம்.

ஆரம்பக்கால பொருளாதார வகையமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் குடிமக்களுடைய ஒரு குறிப்பிட்ட அடர்த்தி உண்டு; இயற்கைச் சூழ்நிலைகளுக்கேற்ப இது ஒரு சில வரம்புகளுக்குள் இருக்கும். உதாரணமாக, சேகரிப்பிலும் வேட்டையாடுவதிலும் ஈடுபட்டிருந்த சமுதாயத்தில் 10—100 சதுரக் கிலோமீட்டர்களுக்கு 1 மனிதன் என்ற விகிதத்திலும் மீன்பிடிப்புச் சமுதாயத்தில் 5—10 சதுரக் கிலோமீட்டர்களுக்கு 1 மனிதன் என்ற வகையிலும் மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது. இத்தகையப் புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டும் மனிதன் வாழ்ந்த பிரதேசங்களின் பரப்பைக் கணக்கில் கொண்டும் நமது சகாப்தத்திற்கு முன் 10வது ஆயிரமாண்டில் உலக மக்கள் தொகை சுமாராக 50 லட்சமாக இருந்தது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். சராசரியாக எண்ணிக்கை அதிகரிப்பு வேகங்கள் குறைவானவையாக இருந்தன, பத்தாண்டுகளுக்கு இவை 1 சதவிகிதத்திற்கும் கீழாகவே இருந்தன. மக்களில் பெரும் பகுதியினர் தென்மேற்கு மற்றும் கிழக்கு ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் தெற்கு ஐரோப்பாவிலும் இருந்தனர்; யுரேஷியாவின் வடப் பாதியிலிருந்த பெரும் நிலப்பரப்பில் மிகக் குறைவான மக்களே வாழ்ந்தனர். மற்ற கண்டங்களிலும் மிகக் குறைவான மனிதர்கள் மட்டுமே வாழ்ந்தனர்: ஆஸ்திரேலியாவிலிருந்த மக்களின் எண்ணிக்கை (உலகின் மற்றப் பகுதிகளில் மக்கள் குடியேறி நெடுங்காலம் கழித்துதான் இங்கு மக்கள் குடியேறினர்கள்) 5,000—10,000க்குக் குறைவாகவே இருந்திருக்கலாம்; அமெரிக்கா பூராவுமிருந்த குடிமக்களின் எண்ணிக்கையோ அனேகமாக சுமார் 1,00,000 ஆக இருந்தது.

மனிதச் சமுதாய வரலாற்றின் அடுத்த ஆயிரமாண்டுகளில் மிக முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வாழ்க்கைச் சாதனங்களை உணர்வு பூர்வமாக உற்பத்தி செய்யும் பயிர்த் தொழிலும் கால்நடை வளர்ப்பும் புதிய வகையான பொருளாதார நடவடிக்கைகளாகத் தோன்றின. இந்த வகையான விவசாய நடவடிக்கைகள் முதன்முதலாக நமது சகாப்தத்திற்கு 7,000 ஆண்டுகளுக்கு முன் ஆசியா மைனரில் தோன்றின என்றும் பின் அங்கிருந்து உலகின் பிற பிரதேசங்களுக்குப்

பரவின அல்லது பின்னல் தாமாகவே இங்கே தோன்றின என்றும் கருதப்படுகிறது. உதாரணமாக, யுரேஷியாவை விட ஆப்பிரிக்காவில் பயிர்த்தொழிலும் கால்நடை வளர்ப்பும் சிறிது தாமதமாக வளர்ச்சியடைந்தன; அமெரிக்காவிலோ ஒருசில ஆயிரமாண்டுகள் தாமதமாகத்தான் பயிர்த்தொழில் தோன்றி, ஒரு சில பிரதேசங்களுக்கு மட்டுமே பரவியது, வீட்டு மிருகங்களாக ஆக்குவதற்கான மிருகங்கள் இல்லாததால் கால்நடை வளர்ப்பு பரவுவது இங்கே இன்னமும் மெதுவாக நடைபெற்றது. ஆஸ்திரேலியாவைப் பொறுத்தமட்டில் இங்கிருந்த ஆதிக் குடிமக்கள் வேட்டையாடுதல்-சேகரித்தல் நிலையிலேயே தங்கி விட்டனர். பயிர்த்தொழிலும் கால்நடை வளர்ப்பும் பரவியதானது மனிதன் இயற்கையைப் பெரிதும், சில சமயங்களில் முழுமையாகச் சார்ந்திருப்பதிலிருந்து அவனை விடுவிக்கும் பாதையில் மிக முக்கியமான ஒரு அம்சமாக இருந்தது. பயிர்த்தொழிலும் கால்நடை வளர்ப்பும் அவனுடைய நிலையான உணவிற்கு வகை செய்தன, குடிமக்களின் வளர்ச்சிக்கான பொருளாயத அடிப்படையை ஏற்படுத்தின. 100 வேடுவர்களும் சேகரிப்பாளர்களும் அடங்கிய ஒரு குலமரபுக் குழு முன்பு மிகக் கஷ்டப்பட்டு வாழ்ந்த ஒரு பிரதேசத்தில் இப்போது பத்து மடங்கு அதிகமானோர் வாழ முடிந்தது. குலமரபுக் குழுக்களின் அளவுகள் பெரிதாகத் துவங்கின. புதிய வகையான பொருளாதார நடவடிக்கைகள், இவற்றின் ஆரம்பக் கால எளிய வடிவத்திலும் கூட, பட்டினிச் சாவைக் குறைக்க நேரடியாக உதவியதோடு வாழ்க்கையின் பல அம்சங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. உதாரணமாக, பயிர்த்தொழில் நிலையான வாழ்க்கைக்கு இறுதியாக மாற உதவியது, இதன் மூலம் நாடோடி வாழ்க்கையின் இன்னல்களால் அவதியுற்ற முதியோர், சிறு வயதுக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோரின் வாழ்வு எளிதாக்கப்பட்டது. குலமரபுக் குழுக்களுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்ததானது இதனுள்ளிருந்த திருமண ஜோடிகளின் பால், வயது ரீதியான தேர்வை எளிதாக்கியது, திருமண உறவுகள் நிலைபடுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டதுடன் சேர்ந்து இது இனப்பெருக்க வளத்தை ஓரளவு உயர்த்தியது. இவையெல்லாம் சேர்ந்து ஒரு நூற்றாண்டில் இயற்கையான ஜனத்தொகைப் பெருக்கத்தைச் சராசரியாக 3—5 சதவிகிதம்

வரை உயர்த்தின. இப்பொழுதுள்ள மதிப்பீடுகளின்படி நம் சகாப்தத்திற்கு 5,000 ஆண்டுகளுக்கு முன் பூமியில் 25—30 மில்லியன் மக்கள் வாழ்ந்தனர்.

சமூக உறவுகளிலும் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன. ஆதிகாலச் சமுதாய அமைப்பின் முதல் கட்டத்தில் தோன்றிய தாய்வழி முறையும், அக்காலத்தின் பிரதான பொருளாதார அலகு என்ற வகையில் இதன் அடிப்படையில் உருவாகிய தாய்வழி குலப்பொதுவாழ் குழுமமும் தாய்வழியிலான இரத்த உறவுகளால் மட்டுமின்றி வாழ்க்கையில் பெண்களுக்கிருந்த முக்கியமான பாத்திரத்தாலும் தக்க வைக்கப்பட்டிருந்தன. முக்கியமாக சேகரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த பெண்கள் வேட்டையில் ஈடுபட்டிருந்த ஆண்களுக்கு மாருக ஆதிகால மனிதர்களின் உணவில் நிலையான பங்கிற்கு வழிகோலினர். ஒருவேளை பெண்கள்தான் தாம் சேகரித்த தானியங்கள் முளைப்பதைக் கண்டு பயிர்த்தொழிலையும் கொல்லப்பட்ட மிருகங்களின் குட்டிகளை வளர்த்ததன் மூலம் கால்நடை வளர்ப்பையும் ''கண்டுபிடித்திருக்கலாம்''. இவையனைத்தும் நீண்ட காலத்திற்குச் சமுதாய வாழ்வின் பல துறைகளில் பெண்களின் தலைமைக்கு, அதாவது தாய்வழி முறைக்கு வழிகோலின. இத்தகைய முறைக்கு ஏற்ற உலகக் கண்ணோட்டமும் இருந்தது; கண்டுபிடிக்கப்பட்டுள்ள, தொன்மை கல் யுகத்தின் பிந்தைய காலத்தைச் சேர்ந்த ஏராளமான பெண் சிலைகள் (இவற்றில் பெண்களுக்குரிய அம்சங்களுக்கு அழுத்தம் தரப்பட்டுள்ளது) மூதாதையர்கள் என்ற வகையிலும் வீட்டைப் பராமரிப்பவள் என்ற வகையிலும் தாய்வழிபாட்டின் அம்சங்களாகும் என்று கருதப்படுகிறது.

ஆனல் பெண்களின் பொருளாதாரப் பாத்திரம் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. பயிர்த்தொழில் தீவிரமடைந்தது (இதற்கு கணிசமான உடல் பலம் தேவைப்பட்டது), குறிப்பாக கால்நடை வளர்ப்பின் வளர்ச்சி ஆண்களின் உழைப்பை முன்னுக்கு வைத்தது. தாய்வழியில் சொந்த உறவுகளைக் கணக்கிடுவதற்குப் பதில் தந்தைவழியில் கணக்கிடுவது வருகிறது, தாய்வழி குலக் குடும்பத்திற்குப் பதில் பொதுக் குடிவாழ்-தந்தைவழிக் குடும்பமும் தாய்வழி முறைக்குப் பதில் தந்தைவழி முறையும் வருகின்றன. பிந்தைய காலத்தில் உலக மக்களினங்களில் பெரும்பான்மை

யினரிடம் தாய்வழி முறையானது ஓரளவு எஞ்சிய மிச்சங்களின் வடிவத்தில் மட்டுமே உள்ளது. ''தாயுரிமை தூக்கி யெறியப்பட்டது பெண்ணினம் உலக வரலாற்று ரீதியில் பெற்ற தோல்வியாகும். வீட்டிலேயே ஆட்சிச் சூத்திரத்தை ஆண் கைப்பற்றினான்; பெண் இழி நிலைக்குத் தள்ளப்பட்டாள்; பணிமகளாக்கப்பட்டாள்; ஆணின் காம இச்சைக்கு அடிமையானாள்; கேவலம் குழந்தைகளைப் பெறும் சாதனமாகி விட்டாள்''* என்று எங்கெல்ஸ் எழுதினார். தாய்வழி முறையில் எங்கும் பரவியிருந்த இணைக் குடும்பம் என்றழைக்கப்பட்ட வடிவத்தில் இருந்த, எளிதில் பிரிக்கப் படத்தக்க திருமணம் அதிக உறுதியான திருமணக் கூட்டுகளுக்கு வழிவிட்டது, இவை படிப்படியாக, வர்க்கச் சமுதாயத்திற்குரிய ஒருதார மணக் குடும்பமாக (சில மக்களினங்களிடையே பன்மனை மணமாக) மாறின. ஆனால் ஒரு சில மக்களினங்களிடையே, உதாரணமாக ஸஹலீன் தீவைச் சேர்ந்த நீவ்ஹ் மக்களிடையே கூட்டு திருமணத்தின் மிச்சங்கள் நீண்ட காலம் எஞ்சியிருந்தன.

தந்தைவழி முறை நிலைபெற்றதும் மனைவியை வாங்குவதற்காக பணம் தரும் பழக்கங்கள் தோன்றுகின்றன. இதன் விளைவாய் மனைவி கணவனின் சொத்தாக மாறுகிறாள்; இதில் குலத்திலுள்ள செல்வம் மிக்க உறுப்பினர்களால்தான் பல மனைவிகளை வைத்துக் கொள்ள இயலும். பல கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர்த்தொழில் குலமரபுக் குழுக்களில் குலப் பொதுக் குடிவாழ் குழுமத்திற்குப் பதில் ஒரு சில தனிப்பட்ட குடும்பங்கள் அல்லது திருமண ஜோடிகளை இணைத்துள்ள பெரிய தந்தைவழிக் குடும்பம் முக்கியப் பொருளாதாரக் கூறாக மாறுகிறது. இத்தகைய குடும்பங்களில் சாதாரணமாக குடும்பத் தலைவன், அவனுடைய மனைவி (மனைவிகள்), குழந்தைகள், அவனுடைய வயது வந்த மகன்களின் மனைவிமார்கள், குழந்தைகள், சில சந்தர்ப்பங்களில் கணவன் வழியில் உள்ள உறவினர்கள், உதாரணமாக, குடும்பத் தலைவனுடைய இளைய சகோதரர்கள், அவர்களுடைய மனைவிகள், குழந்தைகள் ஆகியோர் அடங்கியிருந்தனர். இதன் பயனாய் ஏராளமான சுதந்திரமான நபர்களும்

* பி. எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, பக்கம் 91.

சிறைபிடிக்கப்பட்ட அடிமைகளும் குடும்பத் தலைவனின் பொது அதிகாரத்தின் கீழ் வந்தனர். தெற்கு மற்றும் கிழக்கு ஸ்லாவியர்கள், ஒரு சில ஜெர்மானிய மற்றும் கேல்த் மக்களினங்களின் மத்தியிலும் வட இந்தியாவிலும் (பஞ்சாப்) இத்தகைய குடும்பங்கள் இருந்தன. மற்ற மக்களினங்களுக்கு குலப் பொதுக் குடிவாழ் குழுமத்திற்குப் பதிலாக ஆணின் தலைமையிலான சிறிய, தனிப்பட்ட குடும்பம் பிரதானப் பொருளாதாரக் கூறுக மாறியது.

குலமரபுக் குழுக்களின் தொடர்புகள் பலவீனமடைந்தது, பெரிய, சிறிய தந்தைவழிக் குடும்பங்கள் தோன்றியது, வெவ்வேறு குலங்களைச் சேர்ந்த குடும்பங்களின் பிரதேசக் கலப்பு முதலியன குலத் தொடர்புகளைப் பிரதேச அல்லது அண்டைத் தொடர்புகளால் படிப்படியாக மாற்றீடு செய்தன. வாழ்க்கைக்கு குலத் தொடர்பை விட குடியேறிய இடத்திற்குரிய அண்டைத் தொடர்பு அதிக முக்கியமானதாகிறது. இத்தகைய தொடர்புகள் விவசாயப் பொதுக் குடிவாழ் குழுமம் தோன்றியதில் வெளிப்பட்டன.

பெரும்பாலான மக்களினங்களிடையே விவசாயப் பொதுக் குடிவாழ் குழுமத்தின் தோற்றமானது உழுது பயிரிடும் பயிர்த்தொழிலுக்கு (இதனுடன் தோட்டங்களும் சேர்ந்திருந்தன) மாறியதுடன் தொடர்பு கொண்டிருந்தது. இதன் விளைவாய் உழைப்புப் பிரிவினையும் மேலும் உயர்ந்த மட்டத்திற்கு மாறியது. முன்பு குலப் பொதுக் குடிவாழ் குழுமம் பூராவும் நிலத்தை உழுது பயிரிட்டது என்றால் இப்போது சிறிய உற்பத்திக் கூறுகளாகப் பிரிப்பதன் அடிப்படையில் நிலத்தை உழுவதை நோக்கிய மாற்றம் துவங்கியது. குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுடன் கூடிய, சுயமாக வாழ்க்கையை நடத்திய சிறிய குடும்பம் இப்படிப்பட்ட கூறுக ஆகியது. இந்தக் குடும்பங்கள் எந்த நிலத்தில் வேலை செய்தனவோ அந்த நிலமும் வீடும் மற்ற கட்டிடங்களும் குடும்பச் சொத்தாக மாறின. இவற்றோடு கூட கால்நடைகள், உழைப்புக் கருவிகள் மற்றும் எல்லா அசையும் சொத்துக்கள் ஆகிய உற்பத்திக் கருவிகளும் குடும்பச் சொத்தாகின்றன. விவசாயப் பொதுக் குடிவாழ் குழுமமும் இதனுள் வளர்ச்சியடைந்திருந்த தனிச் சொத்துடைமையும் வர்க்கங்களற்ற சமுதாயத்திலிருந்து வர்க்கச் சமுதாயத்தை நோக்கிய மாற்றத்தின் வடிவங்களில் ஒன்றாகும்.

சமுதாயத்தின் சமூக-பொருளாதாரப் பரிணும வளர்ச்சி சமூக உழைப்பின் முதல் பெரும் பிரிவினைக்கு, அதாவது வளர்ச்சியடைந்திருந்த கால்நடை வளர்ப்பை சுயமான பொருளாதாரப் பிரிவாக ஆக்கவும் கால்நடை வளர்ப்பு மக்களினங்கள் தோன்றவும் இட்டுச் சென்றது. பயிர்த்தொழி லும் கால்நடை வளர்ப்பும் மேம்பட்டதானது, தம்முடைய வாழ்க்கைக்கு நேரடியாகத் தேவைப்பட்டதை விட அதிக மான அளவு பொருட்களை மனிதனுல் அல்லது முக்கிய சமூக கூருகிய குடும்பத்தால் முறையாக உற்பத்தி செய்ய முடிந் தது என்பதில் வெளிப்பட்டது. இவ்வாறு உருவாகிய அமிதப் பொருள் — உபரிப் பொருள்—உற்பத்தியை விரிவாக்க வும் சேமிப்பிற்கும் பயன்பட்டது, மதச் சடங்குகளைச் செய் பவர்கள், போர்வீரர்கள் போன்ற விவசாயத் துறையில் ஈடு படாத மற்ற மக்களின் வாழ்க்கைக்கு வழிகோலியது. அதே நேரத்தில் உபரிப் பொருள் அடிமை முறை தோன்ற வழி கோலியது: முன்பு போர்க் கைதிகளைக் கொன்ருர்கள் என் ருல் இப்போதோ அவர்களுடைய உழைப்பைப் பயன்படுத்து வது ஆதாயமானதாக ஆகியது.

குடிமக்களுடைய இடம் பெயரும் தன்மையின் மேற் கொண்ட வளர்ச்சி முதலாவது மாபெரும் சமூக உழைப்புப் பிரிவினையுடன்—குலமரபுக் குழுக்களின் எஞ்சிய மக் களிலிருந்து இடையர் குழுக்களைத் தனியாகப் பிரித்ததுடன் —தொடர்புடையது; ஏனெனில் புல்வெளிகள் வற்றியது, இவை போதாமலிருந்தது மற்றும் கால்நடைகளின் எண் ணிக்கை அதிகரித்தது ஆகியன இயற்கை மேய்ச்சலிடங்களின் தேவையை அதிகப்படுத்தின; இதன் காரணமாக ஆரம்பக் கால வர்க்கச் சமுதாயத்திலும் இடப்பெயர்ச்சிகள் வளர்ச்சியடைந்தன. ''...பண்டையக் கால மற்றும் நவீன ஐரோப்பாவின் மக்களினங்கள் தோன்றக் காரணமாயிருந்த, ஆபத்துகள் நிறைந்த மாபெரும் குடிபெயர்ப்புகளை மேற் கொள்ளுமாறு அமித எண்ணிக்கையிலிருந்த மக்கள் நிர்ப் பந்திக்கப்பட்டனர்''* என்று மார்க்ஸ் எழுதிஞர்.

ஆதிகாலச் சமுதாயத்தின் இறுதி கட்டத்தில் உலோகங் கள் (முதலில் தாமிரமும் பின் வெண்கலமும்) கண்டுபிடிக் கப்பட்டன. பல்வேறுவிதமான கைத்தொழில் உற்பத்தி,

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 8, பக்கம் 568.

உதாரணமாக உலோகத் துறையும் நெய்தலும் மேற்கொண்டு வளர்ச்சியடைந்ததும் தாமிரம் மற்றும் இரும்பைப் பயன்படுத்தும் முறையில் ஏற்பட்ட முன்னேற்றமும் இரண்டாவது மாபெரும் சமூக உழைப்புப் பிரிவினையை ஏற்படுத்தின—கைத்தொழில் பயிர்த்தொழிலிலிருந்து பிரிக்கப்பட்டது. இது வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கும் வர்க்கச் சமுதாயத்திற்கும் நடுவிலிருந்த இடைவெளியில் நடைபெற்றது, பரிமாற்றத்தையும் சமுதாயத்தில் சொத்துப் பிரிவினையையும் இது ஊக்குவித்தது. அதே பொழுது கைத்தொழில் பயிர்த்தொழிலிலிருந்து பிரிந்ததானது நகரங்களை விவசாயக் குடியிருப்புகளிலிருந்து பிரிக்கவும் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையே முரண்பாடு தோன்றவும் வழிகோலியது. நைல், டைக்ரிஸ் மற்றும் எப்ராட்டு, சிந்து, ஹுவான்ஹே போன்ற பெரும் ஆற்றுச் சமவெளிகளில், நல்ல விளைச்சலைத் தரக் கூடிய, ஆற்றுப் பாசன வசதியுள்ள பயிர்த்தொழிலின் அடிப்படையில் கணிசமான அளவு குடிமக்கள் தோன்றினர், வர்க்கப் பிரிவினை ஆரம்பமாகியது, முதல் அரசுகள் (தொன்மை நாகரிகங்களின் மையங்கள்) உருவாயின.

இவ்வாறாக கால வரையளவுகளில் மிகப் பெரிய ஆதிகாலச் சகாப்தம் இரண்டு முக்கியக் காலகட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது; விவசாயத்தின் தோற்றம்தான் இந்த இரு கட்டங்களுக்கும் இடையிலான எல்லையாகும். இக்கட்டங்கள் ஒவ்வொன்றின் மக்கள்தொகை வளர்ச்சிக்கும் தனிப்பட்ட சிறப்பியல்புகள் உண்டு. முதல் கட்டத்தில் உயர்வான (ஆனால் அதிக பட்ச மட்டத்தை எட்டாத) பிறப்பு விகிதமும் மிக உயர்வான இறப்பு விகிதமும் நிலவின, இதன் விளைவாய் ஜனப்பெருக்கம் மிகக் குறைவானதாயும் முறையற்றதுமாயிருந்தது. வாழுவதற்காகவும் உழைப்பின் மூலம் சொந்த வாழ்க்கையின் உற்பத்திக்காகவும் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் புதிய வாழ்க்கையை உற்பத்தி செய்வதற்காகவும் உழைக்கும் திறனுள்ள எல்லோரும் நடத்திய நிரந்தரமான, மிகக் கடுமையான கூட்டுப் போராட்டம் இந்த முதல் கட்டத்தின் முக்கிய நியதியாக இருந்தது. வாழ்க்கைச் சாதனங்களைத் தேடும் முறையும் உற்பத்தி முறையும் (இதற்கு ஒவ்வொரு குலமரபுக் குழுவிற்கும் பெரிய பிரதேசம் தேவைப்பட்டது) அக்காலத்தில் குறை

வான மக்கள் எண்ணிக்கைக்கான காரணங்களாகும். சராசரியாக குறைவான உயிர்வாழ்க்கைக்கு வாழ்க்கைச் சாதனங்களைக் கண்டுபிடிப்பதில் இருந்த பெரும் இடர்ப்பாடுகளும், பல சமயங்களில் இருந்த ஆபத்துகளும்தான் முக்கியக் காரணம் ஆகும். மக்கள் நாடோடி வாழ்க்கையை நடத்தினர், இடப்பெயர்ச்சிகளின் திசைகள் அந்தந்தப் பிரதேசத்தின் இயற்கை மூல ஊற்றுகளாலும் பருவநிலைச் சூழ்நிலைகளாலும் நிர்ணயிக்கப்பட்டன.

இரண்டாவது கட்டத்தில் வாழ்க்கைச் சூழ்நிலைகள் ஓரளவு சீரடைந்தன, மக்களில் பெரும்பாலோர் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டனர், இறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்தது (இதற்கு முக்கியக் காரணம் பட்டினிச் சாவுகள் குறைந்ததாகும்), திருமண உறவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டதால் இனப்பெருக்க வளம் ஓரளவு அதிகரித்தது, இதற்கேற்ப, சிறிதளவே என்றாலும், இயற்கையான ஜனப்பெருக்கம் இருந்தது. மற்ற சமூக-பொருளாதார அமைப்புகளைப் போன்றே ஆதிகாலச் சமூக-பொருளாதார அமைப்பிலும் மக்கள்தொகை நியதிகள் வெளிப்பட்டதும் இவற்றின் தன்மையும் மொத்தத்தில் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி மட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டன. உழைப்புக் கருவிகள் வளர வளர, குடிமக்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இயற்கையின் மீதான மனிதனின் ஆளுகை பலமடைந்தது. குடிமக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு தன் பங்கிற்கு மனிதனின் உணவு, உடை, இருப்பிடத் தேவைகளை அதிகப்படுத்தியது. உற்பத்தி அளவுகளை விரிவுபடுத்துவதன் மூலமும் ஆதிகால மனிதனின் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதன் மூலமும் மட்டுமே (ஆரம்பத்தில் இது உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலம் அடையப்பட்டது) இவ்வாறு அதிகரித்த தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடிந்தது. இயற்கையான, பால், வயது அடிப்படையிலான உழைப்புப் பிரிவினை, ஓரளவு காலங்கழித்து சமூக உழைப்புப் பிரிவினை போன்ற உற்பத்தித் திறனை வளர்ப்பதற்கான புதிய மூல ஊற்றுகள் பின்னால் தோன்றின. இவ்வாறாக ஆதிகாலச் சமுதாயத்தில் பின்வரும் நியதி நிலவியது: மக்களின் எண்ணிக்கை வளர்ச்சியானது தேவைகளை அதிகப்படுத்தியது, தேவைகள் அதிகரித்த

தானது உழைப்பின் உற்பத்தித் திறனை வளர்ப்பதை அவசியமாக்கியது. குலமரபுக் குழு அமைப்பில் உற்பத்திச் சக்திகளும் தனிச் சொத்துடைமையும் வளர்ச்சியடைந்த தானது இது சிதைவடைய வழிகோலியது. வர்க்கங்களற்ற ஆதிகாலச் சமுதாயத்திற்குப் பதிலாக வர்க்கச் சமூக-பொருளாதார அமைப்புகள் வந்தன. ஆனால் இந்த மாற்றம் எல்லா இடங்களிலும் நடைபெறவில்லை, உலகின் பல்வேறு பிரதேசங்களில் இது வெவ்வேறு காலங்களில் துவங்கியது, இங்கே தோன்றிய ஆரம்பக் கால வர்க்கச் சமூகங்கள் அடிக்கடி கணிசமான அளவு ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டன.

*அத்தியாயம் மூன்று*

## அடிமையுடைமைச் சமூக அமைப்பில் மக்கள்தொகை

குலமரபுக் குழு அமைப்பு சிதறிய போது கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் அடிமையுடைமையானது ஆரம்பத்தில் குடும்ப அல்லது தந்தைவழி அடிமை முறை வடிவத்தில் தோன்றியது. ஆனால் இத்தகைய அடிமை முறையிலும் அடிமையுடைமைச் சமுதாயத்தின் எல்லா முரண்பாடுகளும் முளை வடிவில் இருந்தன. பிந்தைய காலகட்டங்களில் எகிப்து, சிரியா, ஃபினீஷியா, பண்டைய பாலஸ்தீனம், அஸீரியா, உரார்த்து, புதிய பாபிலோன் சாம்ராஜ்யம், ஈரான், கிரீஸ், ரோம் ஆகிய இடங்களில் அடிமையுடைமை பரவியிருந்தது. ஆனால் பல்வேறு பிரதேசங்களில் அடிமையுடைமை உறவுகள் உருவாகிய காலம் வெவ்வேறானதாக இருந்தது, அக்கால அரசின் பொருளாதாரத்திலும் சமூக-வர்க்கக் கட்டமைவிலும் அடிமையுடைமையானது எல்லா இடங்களிலும் ஒரேவிதமான பங்கை ஆற்றவில்லை. பண்டைய கிரேக்க அரசுகள் மற்றும் தொன்மைக் கால ரோமில்தான் அடிமையுடைமை மிகப் பெரும் பங்காற்றியது. இவைதான் சாதாரணமாக அடிமையுடைமைச் சமூக-பொருளாதார அமைப்பின் சாஸ்திரீய உதாரணங்களாகக் கருதப்படுகின்றன. ஒரு சில பண்டைய கிரேக்க அரசுகளில், உதாரணமாக ஏதன்சில் அடிமைகள்தான் குடிமக்களில் கணிசமான பகுதியாக இருந்தனர்*, விவசாய உற்பத்தியிலும் கைத்தொழிலிலும் மற்ற துறைகளிலும் முக்கிய உற்பத்திச் சக்தியாகத் திகழ்ந்தனர்; பண்டைய ரோமிலும் அடிமைகளின் எண்ணிக்கையும் இவர்களின் பொருளாதார முக்கி

* ஒரு சில வரலாற்று அறிஞர்கள் ஏதன்சில் 75,000—1,00,000 அடிமைகள் இருந்ததாகக் கூறுகின்றனர். மற்ற ஆராய்ச்சியாளர்கள், 1,00,000—1,50,000 அல்லது 2,00,000 அடிமைகளுக்கு ஏதன்சில் இதே அளவு சுதந்திரமான மக்கள் இருந்ததாகக் கூறுகின்றனர்.

யத்துவமும் மிகப் பெரியதாக இருந்தன. இந்த அரசுகளில் அடிமைச் சொந்தக்காரர்கள் எனும் ஒரு விசேஷ சுரண்டும் வர்க்கம் உருவாகியது.

பாபிலோனிலும் கிட்டத்தட்ட பண்டைய உலகின் மற்ற எல்லா அரசுகளிலும் மிகப் பெரும்பான்மையான மக்கள் சட்ட ரீதியாகச் ''சுதந்திரமான'' விவசாயப் பொதுக் குடிவாழ் குழுமத்தவர்களாக இருந்தனர்; இவர்கள் வரிகளைச் செலுத்தி, பல்வேறு உழைப்பு பொறுப்புகளை ஏற்று தம் வாழ்க்கையை நடத்தினர். இந்நாடுகளில் அடிமைகளின் விகிதம் ஒப்பீட்டளவில் உயர்வானதாயிருந்தது, சாதாரணமாக இவர்களில் பெரும்பகுதியினர் உயர்மட்ட அதிபதிக்கு (ஃபரவோ, பேரரசன் போன்றவர்கள்) சொந்தமானவர்களாயிருந்தனர். அவன் இவர்களைச் சொந்த சேவகத்திற்கும் நீர்ப்பாசனக் கால்வாய்கள், சாலைகள், அரண்மனைகள், பிரமீடுகளைக் கட்டுவதைப் போன்ற மிகக் கடினமான வேலைகளுக்கும் பயன்படுத்தினன். அதே சமயம் எல்லா நாடுகளிலும் அடிமைகளின் நிலையும் கிட்டத்தட்டச் சமமானதாயிருந்தது. எனவேதான் அடிமைகளின் உழைப்பு, வாழ்க்கைச் சூழ்நிலைகள், சமூக நிலை, இவர்களின் புனருற்பத்தி ஆகியவற்றில் உள்ள ஒரேவிதமான அம்சங்களைப் பற்றிக் கூறலாம்.

பண்டைய அடிமையுடைமை அரசுகளில் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சிக்குப் பல சிறப்பியல்புகள் இருந்தன. ஆனல் அடிமையுடைமை உற்பத்தி முறையின் உற்பத்தி உறவுகளைச் சித்தரிக்கும் பொது நியதிகள், அக்காலத்தில் முக்கிய உற்பத்திச் சக்தியாகிய அடிமையின் உழைப்பு மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள், சமூக நிலை, இயற்கையான புனருற்பத்தி மற்றும் கிராமத்திலும் நகரத்திலும் உழைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுதந்திர நபர்களின் உழைப்பு மற்றும் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அம்சங்களைச் சுட்டிக்காட்ட உதவுகின்றன. சந்தேகத்திற்கிடமின்றி இந்தக் குறிப்பிடத்தக்க அம்சங்கள், அடிமைகளின் நிலையையும் கணிசமான அளவிற்குச் சுதந்திரமான நபர்களின் நிலையையும் நிர்ணயித்த அடிமையுடைமையால் வரையறுக்கப்பட்டன. அடிமையுடைமைச் சகாப்தத்தில் மக்கள்தொகையின் கிட்டத்தட்ட எல்லா முக்கிய பிரச்சினைகளும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அடிமை முறையால் உண்டாக்கப்பட்டன, இதனுல் நிர்ணயிக்கப்பட்டன;

முதலில் அடிமைகளுடைய புனருற்பத்தியின் சிறப்பு அம்சங்களைப் பார்ப்போம். உபரிப் பொருள் கிடைக்கும் அளவிற்கு உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்ததால்தான் சமூக மற்றும் உற்பத்தி உறவுகளின் ஒரு வடிவமாக அடிமையுடைமையே (இதில் சுரண்டப்படும் அடிமைகளின் உழைப்பு மட்டுமின்றி இவர்களுடைய வாழ்க்கை முழுவதுமே அடிமைச் சொந்தக்காரனின் கரங்களில் இருந்தன) தோன்றியது. அடிமையின் உழைப்பைப் பயன்படுத்தியதால் கிடைத்த பயன் மொத்தமாக அடிமையைப் பராமரிப்பதற்காக ஆன செலவுகளை விட அதிகமாக இருந்தது. அதே சமயம் அக்காலத்தில் ஒப்பீட்டளவில் உற்பத்திச் சக்திகளின் குறைவான வளர்ச்சித் தரமும் தன்னுடைய உழைப்பில் அக்கறையில்லாத அடிமையின் விசேஷ நிலையும் உபரிப் பொருளைப் பெறுவதற்காக மிகக் கொடுமையான சுரண்டல் முறைகளைப் பயன்படுத்தும் ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்தன.

அடிமைகளை ஈவிரக்கமின்றிச் சுரண்டியதால் மட்டுமின்றி இவர்களுடைய வாழ்க்கைச் சாதனங்களைக் குறைந்த பட்சத்திற்குக் குறைத்ததன் மூலமாகவும் அடிமைச் சொந்தக்காரர்கள் உபரிப் பொருளைப் பெற்றனர். மிகவும் வறிய உணவு (பல நேரங்களில் இது மிச்சம் மீதியிலிருந்து தயாரிக்கப்படும்) அடிமைகள் பட்டினியால் இறக்கக் கூடாதென்பதற்காக மட்டுமே தரப்பட்டது; அடிமைகளின் உடைகள் கிழிந்து போன முழத் துண்டுகளாக மட்டுமே இருந்தன, மூடப்படாத பொந்துகளில், தனியாகக் கட்டப்பட்ட இடுக்கலான இடங்களில் இவர்கள் வாழ்ந்தனர். திறமை மிகு கைத்தொழில் விினஞர்களாக அல்லது வீட்டு வேலைக்காரர்களாக இருந்த ஒரு சில அடிமைகள் மட்டுமே ஓரளவு நல்ல சூழ்நிலையில் வாழ்ந்தனர்.

அடிமை உழைப்புச் சூழ்நிலைகளில் உற்பத்தி தேக்கமடைந்திருந்தது. தொழில்நுட்பம் மிக எளிமையானதாக இருந்தது, மெதுவாகத்தான் இது வளர்ச்சியடைந்தது. உதாரணமாக, கிரீசிலும் ரோமிலும் அடிமைகளின் உழைப்பைப் பயன்படுத்தி, கைகளால் இயக்குவிக்கப்படும் அரவை இயந்திரங்களில் தானியம் உடைக்கப்பட்டது. கிழக்கே தண்ணீரால் இயங்கும் அரவை மில்கள் பயன்படுத்தப்பட்டன, ஆனல் இவற்றுக்கும் அடிமைகளின் உழைப்பு தேவைப்பட்டது. நெசவு, சுரங்கத் தொழில், உலோகத்

துறை ஆகியவற்றிலும் தொழில்நுட்பத்தின் மட்டம் மிகக் குறைவானதாக இருந்தது. பயிர்த்தொழிலிலும் நிலைமை இதே மாதிரிதான் இருந்தது. மிக எளிமையான கலப்பை பூமியில் அழுந்துவதே கடினமாக இருந்தது. கைகளால் விதைத்தார்கள், காளைமாடுகளைக் கொண்டு களத்து மேட்டில் கதிரடித்தனர், காற்றில் புடைத்தனர். ரோமில் அடிமை உழைப்பு கைத்தொழிலை விட விவசாயத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது; அதுவும் இவ்வாறு பரவிய பின் விவசாய உற்பத்தியில் ஏதாவது தொழில்நுட்ப நவீனங்களைப் பயன்படுத்தும் சகலவித முயற்சிகளும் கைத்தொழிலுக்கு மாறாகக் கைவிடப்பட்டன. மொத்தத்தில், இப்போதுள்ள மதிப்பீடுகளின்படி பண்டைய காலத்தில் சுதந்திரமானவர்களின் உழைப்போடு ஒப்பிடுகையில் அடிமை உழைப்பானது பாதியளவு குறைவான உற்பத்தித் திறனை உடையதாக இருந்தது. அடிமைகளின் புனருற்பத்தியைப் பார்க்கும் போது, முதலாவதாக, இவர்களுடைய உயர்வான இறப்பு விகிதத்தைக் குறிப்பிட வேண்டும்; இது சுதந்திரமானவர்களின் இறப்பு விகிதத்தை விட பன்மடங்கு அதிகமானதாக இருந்தது. அயர்ச்சி தரும் உழைப்பு, வறிய உணவு, கடுமையான தண்டனைகள் முதலியன அடிமைகளை விரைவாகவே தளர்வுறச் செய்து இறக்க வைத்தன; இந்த இழப்பு புதிய அடிமைகளைக் கொண்டு விரைவாக ஈடு செய்யப்பட்டது. அண்டையில் உள்ளவர்களுடனான யுத்தங்களில் சிறைபிடிப்பதுதான் எல்லா நாடுகளிலும் அடிமைகளைப் பெறுவதற்கான முக்கிய வழியாக இருந்தது; ''உயிருள்ள பிணம்'', அதாவது உயிருடன் விடப்பட்ட போர்க் கைதி எனும் வார்த்தை அடிமைகளைக் குறிப்பிடுவதற்காகப் பண்டைய ரோமில் பயன்படுத்தப்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும்; ''நடுநிலையான'' அடிமைச் சந்தைகளில் அடிமைகளை வாங்குவதும் பரவலாகப் பழக்கத்தில் இருந்தது. இரண்டாவது பாதை(அதாவது கடன்களைக் கட்டாததற்காக அல்லது மற்ற குற்றங்களுக்காக சொந்த குடிமக்களை அடிமைகளாக விற்பது) ஒரு சில நாடுகளில் மட்டுமே, இதுவும் பெரும்பாலும் அடிமையுடைமைச் சமுதாய வளர்ச்சியின் பிந்திய கட்டத்தில்தான் பரவியிருந்தது.

அடிமைகளுக்கு இடையேயான திருமணங்களின் மூலமான அடிமைகளின் இயற்கையான புனருற்பத்தியில்

அடிமைச்சொந்தக்காரர்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. ஏனெனில் இதனுல் ஆகும் செலவுகளை உடனடியாக ஈடு செய்ய முடியாது, இது தவிர பல சமயங்களில் சந்தையில் புதிய அடிமையின் மதிப்பை விட இச்செலவுகள் அதிகமான வையாக இருந்தன. அடிமைப் பெண்கள் அவர்களுடைய எஜமானர்களின் ஆசைநாயகிகளாக இருந்தனர், அல்லது இப்படியிருக்கக் கூடியவர்களாகக் கருதப்பட்டனர் எனும் அம்சத்திற்கும் அனேகமாக சற்றும் குறையா முக்கியத்துவம் இருந்திருக்க வேண்டும். ஆண் அடிமைகளும் பெண் அடிமை களும் அடிக்கடி தனித்தனியாக வைக்கப்பட்டிருந்ததும் இவர்களுக்கிடையிலான உறவுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந் ததும் இதிலிருந்துதான் வந்தன. என்ருலும் அடிமைகளின் ''வளர்ப்பு''விவேகமானதா, இல்லையா என்பது பற்றி அடிமை யுடைமை மேல்மட்டத்தினர் மற்றும் இவர்களின் சித்தாந்த வாதிகள் மத்தியில் அடிக்கடி விவாதம் வந்தது. பசுமாட் டைப் போன்றே அடிமைகளையும் தங்கள் வீட்டில் வளர்க்க வில்லை, மாருக அடிமைச் சந்தையில் இவர்களை வாங்கினுர் கள் என்கிருர் மாம்ஸென். அடிமைகளை வளர்க்க வேண் டாமென்றும் 22 வயதுக்கு மேல் இவர்களை வாங்கலாம் என்றும் மகோன் ஆலோசனை கூறினுர்.

அதே ரோமிலிருந்த அடிமைச் சொந்தக்காரர்களில் இன் ஞெரு பகுதியினர் அடிமை''வளர்ப்பை'' ஆதாயமான ஒரு காரியமாக, ''அடிமைக் கூட்டத்தைப்'' பெருக்குவதற்கான ஒரு காரணியாகக் கருதினர்.

குலவழிச் சமூக உறவுகள் சிதறிப் போய் மனித வரலாற் றிலேயே முதல் சுரண்டல் சமூக-பொருளாதார அமைப்பு உருவாகிய போது ஏற்பட்ட கடுமையான சொத்து ரீதியான பிரிவானது சமுதாயம் அடிமைச் சொந்தக்காரர்கள், அடிமை கள் எனும் பகைமை வர்க்கங்களாகப் பிரிய வழிகோலிய தோடன்றி சுதந்திரமான மக்களின் இடையில் ஏழைகள் என்றும் பணக்காரர்கள் என்றும் பிளவுகளை ஏற்படுத்தவும் செய்தது. கிரீஸ், ரோம், அஸீரியா, ஈரான், இந்தியா, சீஞ ஆகிய நாடுகளில், பண்டைய உலகின் எல்லா இடங்களிலும் மிகவும் அதிக எண்ணிக்கையிலான சிறு விவசாய உற்பத்தி யாளர்களின், ஏழை விவசாயிகளின் வர்க்கம் இருந்தது. நகரக் கைத்தொழிலாளர்கள் சமுதாயத்தில் தம்முடைய நிலையால் இவர்களுக்கு நெருக்கமாக இருந்தனர்.

பெரும் அடிமையுடைமை பண்ணைகளுடனான போட்டியைத் தாங்காமல், கடுவட்டி மூலதனத்தைப் பெரிதும் சார்ந்திருக்கும் ஒரு நிலை ஏற்பட்ட போது சிறு நிலச் சொந்தக்காரர்களாகிய விவசாயிகள் உற்பத்திச் சாதனங்களை இழந்து பண்ணையாட்களாக அல்லது அடிமைகளாக அல்லது லும்பன்-பாட்டாளிகளாக மாறினர். நகரக் கைத்தொழிலாளர்கள் மத்தியிலும் இதே போன்ற பிளவுப் போக்கு காணப்பட்டது.

பண்டைய உலகின் சுதந்திரமான உழைப்பாளி மக்களின் இன்னல்கள் இடையறா, தாங்க இயலா அரசு வரிகளாலும் கட்டாய இராணுவ சேவை என்ற கடமையாலும் ஆழமாயின. அடிமையுடைமைச் சமுதாயத்தின் உழைப்பாளி மக்கள் பண்டைய உலக வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் ஆதிக்கம் செலுத்திய, சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராகப் போராடி வந்துள்ளனர். அடிமையுடைமைச் சமுதாயத்தின் பிரதான முரண்பாடு அடிமைகள் தம்மை ஒடுக்கியவர்களை எதிர்த்து நடத்திய வெளிப்படையான கடும் போராட்டத்தில் வெளிப்பட்டது. ஆனால் புதிய உற்பத்தி முறையைக் கொண்டிராத அடிமைகள் அடிமைச் சொந்தக்காரர்களை அவ்வப்போது தான்தோன்றித்தனமாகப் பழிவாங்கியதற்கு அப்பால் செல்லவில்லை. அடிமைகளின் எழுச்சிகள் அடிமையுடைமை அமைப்பை ஒழித்துக் கட்டியதில் முக்கியப் பங்காற்றின. மிக ஆழமான உள் முரண்பாடுகளால் இறுதியாகப் பலவீனமடைந்த அடிமையுடைமை ரோம், காட்டுமிராண்டித்தனமான அண்டை குலமரபுக் குழுக்களின் தாக்குதல்களின் விளைவாய் (அடிமைகளின் எழுச்சிகள் இவற்றுடன் சேர்ந்து கொண்டன, சுதந்திரமான விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும் பல நேரங்களில் இவர்களுக்கு ஆதரவளித்தனர்) வீழ்ச்சியடைந்தது. ஆனால் அடிமையுடைமைச் சகாப்தத்தின் முக்கிய சமூகப் பிரச்சினைகள் அடிமை முறை நிலவியதாலும் அடிமை உழைப்பு பயன்படுத்தப்பட்டதாலும் நிர்ணயிக்கப்பட்டன என்றால் இச்சகாப்தத்தில் மக்களின் புனருற்பத்தியும் இயக்கப் போக்கின் மிக முக்கிய அம்சங்களும் சட்ட ரீதியாகச் சுதந்திரமான மக்களின் இயற்கையான, இயந்திரகதியான இயக்கத்தால் நிர்ணயிக்கப்பட்டன.

இந்தப் புனருற்பத்தி ஆதிகாலச் சகாப்தத்தின் பல அம்சங்களை அப்படியே வைத்திருந்தது. முதலாவதாக, இங்கே உயர்வான பிறப்பு விகிதம் இருந்தது; இள வயதுத் திருமணங்களும் கிட்டத்தட்ட எல்லாப் பெண்களும் திருமண-பாலுறவுகளில் ஈடுபடுத்தப்பட்டதும் இதற்குக் காரணமாகும். மிக உயர்ந்த இறப்பு விகிதத்திற்கான நியதியான பதிலாக ஆதிகாலச் சமுதாயத்தில் கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் தோன்றிய இனப்பெருக்க வளம் சம்பந்தமான பாரம்பரியங்கள் ஆரம்பக் கால வர்க்கச் சமுதாயங்களில் தோன்றிய கிட்டத்தட்ட எல்லா மதங்களிலும் நிலைபெற்று உறுதியடைந்தன. திருமண-பாலுறவுகளை மேற்கொண்டு ஒழுங்குபடுத்தியது, குறிப்பாக ஒருதார மணத்திற்கு (சில நாடுகளில் பன்மனை மணமும் கூட இருந்தது) மாறியது மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள் ஓரளவு சீர்பட்டது—இவையெல்லாம் ஆதிகாலச் சகாப்தத்தோடு ஒப்பிடுகையில் இனப்பெருக்க வளம் ஓரளவாவது அதிகரிக்க அனேகமாக உதவியிருக்க வேண்டும்.

இதே சமயத்தில் பிறப்பு விகிதத்தைக் குறைக்கும் சில காரணிகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. ஒரு சில மதங்கள் (உதாரணமாக புத்த மதம்) திருமணம் செய்து கொள்ளாதிருப்பதையும் திருமணங்களை மட்டுப்படுத்துவதையும் அனுமதித்தல், விதவைகளின் மறுமணத்தை சில மதங்கள் கண்டித்தல், பெரிய நிரந்தர இராணுவங்களை அமைத்து இதன் மூலம் ஆண்களில் கணிசமான பகுதியினரை நீண்ட காலத்திற்கு குடும்பத்திலிருந்து பிரித்து இராணுவ சேவையில் ஈடுபடச் செய்தது போன்றவை இந்தக் காரணிகளில் சிலவாகும். கர்ப்பத் தடுப்புச் சாதனங்கள் பரவ ஆரம்பித்தன. ரோமானியப் பேரரசின் கடைசி நூற்றுண்டுகளில் வசதிபடைத்த ரோமானியர்களின் மத்தியில் பிறப்பு விகிதம் பெரிதும் குறைந்ததைப் பற்றி வரலாற்றுப் படைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது; ஜனத்தொகை குறைவதை அனுமதிக்காமலிருப்பதற்காக வரலாற்றிலேயே முதல் முறையாக மக்களின் இயற்கையான புனருற்பத்தியைச் சீர்படுத்தும் சில நடவடிக்கைகளை எடுக்கும்படி ரோமானிய ஆட்சி நிர்ப்பந்திக்கப்பட்டது; உதாரணமாக, பிரம்மச்சாரிகளுக்காக விசேஷ வரி விதிக்கப்பட்டது, குழந்தையில்லாதவர்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டன, இத்தியாதி.

முன்பு மிக அதிகமானதாயிருந்த இறப்பு விகிதம் அடிமையுடைமைச் சகாப்தத்தில் சிறிதளவு குறைவது தொடர்ந்தது. முக்கியமாகப் பட்டினிச் சாவைக் குறைப்பதன் மூலம் இது அடையப்பட்டது. கால்நடை வளர்ப்பும் பயிர்த்தொழிலும் (உயர் விளைச்சலைத் தர வல்ல நீர்ப்பாசன வசதி பெறும் பயிர்த்தொழிலும்) பரவியதானது உணவு வசதிகளை அதிகப்படுத்தியது, ஒரு சில அரசுகளால் தானியச் சேமிப்பைக் கூட ஏற்படுத்த முடிந்தது. வறட்சி அல்லது மற்ற காரணங்களால் ஏற்பட்ட நாசகரமான பட்டினிகள் இன்னமும் ஏற்பட்டாலும் இந்தக் காரணி இரண்டாம் பட்சமானதாக மாறியது. நோய்களும் யுத்தங்களும் மரணத்திற்கான முக்கியக் காரணங்களாயின. மக்கள் நெருக்கம் பெருகியதாலும் (குறிப்பாக நகரங்களில்) நாட்டின் உள்ளேயும் அண்டை நாடுகள், மக்களினங்களுக்கு இடையிலும் தொடர்புகள் அதிகமானதாலும் பிளேக், காலரா போன்ற மிக நாசகரமான தொற்று நோய்களால் உண்டாகும் இழப்புகள் கூடின. யுத்தங்களினால் ஏற்படும் இழப்புகளும் அதிகமாயின. குலமரபுக் குழு அமைப்பு சிதறி போன பின் இந்த யுத்தங்களின் அளவுகள் பெருகின, கொடூரம் அதிகமாகியது, கிட்டத்தட்ட இடையறாமல் யுத்தங்கள் நடந்தன. புதிய பிரதேசங்களைக் கைப்பற்றுவது, அங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடிப்பது, குடிமக்களின் மீது கப்பம் விதிப்பது, அடிமைகளைக் கைப்பற்றுவது என்பவைதான் இந்த யுத்தங்களில் பெரும்பாலானவற்றின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. யுத்தங்களினால் ஏற்படும் நேரடியான ஜனத்தொகை இழப்புகளுடன் மறைமுக இழப்புகளும் சேர்ந்து கொண்டன. இவை ஏராளமான ஆண்கள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் தொடர்புடையவை; இதன் விளைவாக குடும்பத் தொடர்புகள் குலைக்கப்பட்டு பிறப்பு விகிதம் குறைந்தது. தோல்வியடைந்த நாட்டைப் பொறுத்தமட்டில் ஏராளமான நபர்கள் சிறைபிடிக்கப்பட்டது நிலைமையை இன்னமும் மோசமாக்கியது; இவர்கள் அடிமைகளாக மாற்றப்பட்டதால் குடிமக்களின் புனருற்பத்திப் போக்கிலிருந்து கிட்டத்தட்ட வெளியேறினர்.

மொத்தத்தில் அச்சகாப்தத்தில் சராசரி உயிர் வாழும் வயது வரம்பு ஒப்பீட்டளவில் இன்னமும் குறைவானதாக

இருந்தது; பண்டைய கிரீசிலும் ரோமிலும் இது சுமார் 25 வயதாக இருந்தது என தொல்பொருள் ஆராய்ச்சிகள், கல்லறைகளின் மீதான எழுத்துக்கள் போன்றவற்றிலிருந்து தெரிகிறது. குடிமக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு வேகங்கள் ஆதிகாலச் சகாப்தத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரித்தாலும் குறைவானவையாகவே இருந்தன. ஆண்டிற்கு இவை ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருந்தன. தனிப்பட்ட நாடுகளிலும் மக்களினங்களின் மத்தியிலும் குடிமக்களுடைய எண்ணிக்கையின் வளர்ச்சிப் போக்கு பெரிதும் சமமற்றதாக இருந்தது. எங்கெல்லாம் நீண்ட காலத்திற்கு நாசகரமான யுத்தங்களும் தொற்று நோய்களும் இயற்கைச் சீற்றங்களும் இருக்கவில்லையோ, குடிமக்களின் புனருற்பத்தியில் பங்கேற்காத பெருமளவு அடிமைகளும் போர்வீரர்களும் மதகுருமார்களும் எங்கெல்லாம் இருக்கவில்லையோ அங்கெல்லாம் ஏதாவது ஒரு அதிர்ச்சி வளர்ச்சியைக் குலைக்கும் வரை குடிமக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

ஆரம்ப கால வர்க்கச் சமுதாய அமைப்புகளில் இருந்த பல்வேறு நாடுகளில் மக்களின் எண்ணிக்கை வளர்ச்சியை நிர்ணயிக்கப் புதிய ஆதாரங்கள் (மக்கள் கணக்கெடுப்பு விவரங்கள்) பயன்படுத்தப்படலாம். அக்காலத்தில் தன் நாட்டு மக்களின் எண்ணிக்கையைத் தெரிந்து வைத்திருக்கும் அவசியம் அரசிற்கு முன் தோன்றியது. வரி செலுத்துபவர்கள் மற்றும் சாத்தியமான போர்வீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதற்காக, அதாவது நாட்டு வருமான, யுத்த நோக்கங்களுக்காக இது அவசியமானதாக இருந்தது. சீனுவில் நம் சகாப்தத்திற்கு முன் 12ஆம் நூற்றுண்டிலிருந்து முறையாக மக்கள்தொகை கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டதாக விவரங்கள் உள்ளன. பண்டைய கிரீசில் நம் சகாப்தத்திற்கு முன் 4ஆம் நூற்றுண்டிலேயே வயது வந்த ஆண்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. காலின் வரலாற்றில் ஜூலியன், காலியர்கள் மக்கள் கணக்கெடுப்பிற்குப் பெரும் முக்கியத்துவம் அளித்ததாயும் இதை மதத்தின் கோரிக்கைகளுடன் தொடர்புபடுத்தியதாகவும் கூறுகிருர். சாதாரண மக்கள் மற்றும் போர்வீரர்களின் பரிபூரணமான கணக்கெடுப்பு அங்கே ஆண்டுதோறும் நடத்தப்பட்டது. இவர்களின் கடவுளர்கள் தமது ''குடிமக்களின்'' அப்போதைய

சரியான எண்ணிக்கையைத் தெரிந்து கொள்வதற்காக இப்படிச் செய்யப்பட்டது.

நம் சகாப்தத்திற்கு முன் 5ஆம் நூற்றுண்டிலிருந்து நம் சகாப்தத்தின் இரண்டாம் நூற்றுண்டின் துவக்கம் வரை பண்டைய ரோமிலும் ரோமானிய எகிப்து, ரோமானிய கிரீஸ், ரோமானிய சிரியா, ரோமானிய ஸ்பெயின் ஆகிய இதன் மாகாணங்களிலும் முறையான மக்களின் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. குடிமக்களின் எண்ணிக்கையையும் இவர்களின் செல்வங்களையும் கணக்கெடுப்பதுதான் இவற்றின் முக்கிய நோக்கமாகும். வரிகளை விதிக்க இது அவசியமானதாக இருந்தது; இது தவிர இதற்கு இராணுவ, அரசியல் முக்கியத்துவமும் இருந்தது, ஏனெனில் இது சட்டமியற்றும் உறுப்புகளுக்கான தேர்தல்களுடன் தொடர்புடையதாயிருந்தது. குடியரசு சகாப்தத்தில் பண்டைய ரோமில் முதலில் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் பின் ஒவ்வொரு 20 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் நடத்தப்பட்ட கணக்கெடுப்புகளுக்கு அரசு மிகப் பெரும் முக்கியத்துவம் அளித்தது. விசேஷமாக நியமிக்கப்பட்ட கணக்கெடுப்பாளர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

நமது சகாப்தத்தின் துவக்கத்தில் உலகிலிருந்த மக்கள் தொகையின் மொத்த எண்ணிக்கை சுமாராக 230 மில்லியன் என்று மதிப்பிடப்படுகிறது. இதில், முக்கியமாக மத்திய தரைக் கடல் நாடுகளை உள்ளடக்கிய ரோமானியப் பேரரசில் சுமார் 60 மில்லியன் பேர்கள் இருந்தனர், அதிலும் இத்தாலியிலும் எகிப்திலும் இருந்த தலா 8 மில்லியன் பேர்கள், இபேரியாவிலும் காலிலும் இருந்த தலா 5 மில்லியன் பேர்கள் ஆகியோரும் இதில் அடங்குவர். இந்தியா, சீனு போன்ற பெரிய ஆசிய நாடுகளிலிருந்த மக்களின் எண்ணிக்கை ஏற்கெனவே 50 மில்லியனைத் தாண்டியிருந்தது. அனேகமாக அக்காலத்தில் ஆசியாவில் 150 மில்லியனுக்கும் கூடுதலானேரும் ஐரோப்பாவில் சுமார் 35 மில்லியன் பேர்களும் ஆப்பிரிக்காவில் (இதன் பெரும் பகுதியில் பயிர்த்தொழில் வளர்ச்சி பெறவில்லை) சுமாராக 30 மில்லியன் பேர்களும் அமெரிக்காவில் கிட்டத்தட்ட 10 மில்லியன் பேர்களும் வாழ்ந்தனர். உற்பத்தி கை உழைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்த போதே மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததானது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி

யைக் குறித்தது. இது தவிர இச்சூழ்நிலைகளில் உழைப்புப் பிரிவினை போக்கும் வேலைகளை வேறுபடுத்தும் போக்கும் இலகுவாக நடைபெற்றன. இது, அப்போது எண்ணிக்கையில் குறைவான, ஆனால் மனிதகுலத்தின் பிந்தைய வளர்ச்சி முழுவதற்கும் மிக முக்கியமான, மூளையுழைப்பில் ஈடுபட்ட மக்கள் பிரிவுகளை, இன்றைய விஞ்ஞானத்தின் அடிப்படை களை வைத்திருந்த பண்டைய கால விஞ்ஞானிகளை உருவாக்க வழிகோலியது. அளவுநிலைக் காரணிகள் (மக்கள்தொகை வளர்ச்சி) மற்றும் பண்புநிலை காரணிகளின் (சமூக-பொரு ளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றம்) பரஸ்பரச் செய லாக்கம் இயக்கவியல் ரீதியானதாக இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். இங்கே காரணமும் விளைவும் பன்முறை இடம் மாறின: குடிமக்களின் எண்ணிக்கை பெருகியதானது உற்பத்தியின் துரித வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்தியது; தன் பங்கிற்கு உற்பத்தி வளர்ச்சியில் ஏற் பட்ட ஒவ்வொரு பாய்ச்சலும் குடிமக்களின் எண்ணிக்கை பெருகுவதற்கான பொருளாயத நிலைமைகளை ஏற்படுத்தி யது. சாதாரணமாக பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சி முதன்மையானதாயும் குடிமக்களின் எண்ணிக்கைப் பெருக் கம் இரண்டாவதாயும் இருந்தாலும், ஒரு சில சந்தர்ப்பங் களில், உதாரணமாக, நீர்ப்பாசன வசதியுள்ள பயிர்த்தொழி லின் தோற்றம், நீர்ப்பாசன அமைப்புகளின் கட்டுமானம் போன்றவை குடிமக்களின் எண்ணிக்கை அதிகமான போது தான், அதாவது கணிசமான அளவு உழைப்புச் சக்தி இருக் கும் போதுதான் சாத்தியமாயின.

அதே பொழுது சமுதாய வளர்ச்சியின் மீது மக்கள் எண் ணிக்கை அதிகரிப்பின் செல்வாக்கு குறைய ஆரம்பிக்கிறது; உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள உற்பத்தி முறை வளர்ச்சியின் சமமற்ற தன்மையுடனும் இதனுடன் தொடர் புள்ள மேல்கட்டுமான வடிவங்களுடனும் இணைந்த காரணி கள் மேன்மேலும் தெளிவாக முன்னுக்கு வருகின்றன. ஒப் பீட்டளவில் குறைவான மக்கள்தொகையை உடைய பண் டைய கிரேக்க அரசுகள் தமது சமூக-பொருளாதார மற் றும் கலாச்சார வாழ்க்கைத் தரத்தில் மக்கள்தொகை அதி கமாயிருந்த பாரசீக சாம்ராஜியத்தை விட உயர்ந்து நின் றன; இராணுவத் துறையிலும் சிறிய கிரேக்க இராணுவங் கள் மிகப் பெரும் பாரசீக இராணுவத்தைப் பன்முறை உறுதி

யோடு எதிர்த்து நின்றன. மக்கள்தொகை அதிகரிப்பிற்கும் உற்பத்தி வளர்ச்சிக்கும் இடையில் தோன்றிய முரண்பாடுகள் அமிதமான ஜனத்தொகைப் பெருக்கம் என்ற பிரதேச புலப்பாடுகளில் அடிக்கடி வெளிப்பட்டன. இத்தகைய புலப்பாடுகள் ஆதிகாலச் சகாப்தத்திற்கு, குறிப்பாக இதன் வளர்ச்சியின் கடைசிக் கட்டத்திற்கு உரியவையாக இருந்தன. ''உற்பத்திச் சக்திகளின் மீதான அமித குடிமக்களின் நிர்ப்பந்தம்தான் காட்டுமிராண்டிகள் ஆசியப் பீடபூமியிலிருந்து பண்டைய உலகின் அரசுகளினுள் நுழையும்படி கட்டாயப்படுத்தியது.''* அடிமையுடைமைச் சகாப்தத்திலும் இவை வெளிப்பட்டன.

பண்டைய கிரீசிலும் ரோமிலும், உருவாகிய வாழ்க்கை முறையையும் நாகரிகத்தையும் தக்கவைப்பதற்கான குடிமக்களின் எண்ணிக்கை குறைவானதாக இருக்க வேண்டியிருந்தது.''இந்த அரசுகளின் அமைப்பு முழுவதும் குடிமக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்ட அளவில் மட்டுப்படுத்துவதை ஆதாரமாகக் கொண்டிருந்தது; தொன்மை நாகரிகம் நிலவுவதன் சூழ்நிலைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தாமல் இதன் வரம்புகளை மீற முடியாது.''** இவ்வாறு தோன்றிய நிலையிலிருந்து விடுபடக் கட்டாய நாடுபெயர்தல்தான் வழியாக இருந்தது. இதன் விளைவாய் மத்திய தரைக் கடல் மற்றும் கருங் கடலின் பல்வேறு பகுதிகளில் கிரேக்க, ஃபினீஷிய, ரோமானியக் காலனிகள் தோன்றின, ரோமானிய மாகாணங்களில் ஆக்கிரமிப்பு யுத்தங்களின் முதுவர்கள் குடியேறினர்.

நகரங்களின் பங்கு அதிகரித்தது, இவற்றின் பணிகள் விரிவடைந்தது, கிராமப்புற கூட்டுவாழ் குழுமங்களின் நிர்வாக மற்றும் மத மையங்களிலிருந்து வர்த்தக-கைத்தொழில் மையங்களாக மாறியது ஆகியவற்றிற்குப் புதிய நிலங்கள் காலனிகளாக்கப்பட்டதும் ஒரு குறிப்பிட்ட அளவு காரணமாகும். அடிமையுடைமை அமைப்பின் வளர்ச்சி, அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்ட சுதந்திரமான மக்கள், நகரங்களில் தோன்றியது, சமூகப் போராட்டம் வலுவடைந்தது ஆகியவற்றோடு கூட காலனிமய

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 8, பக்கம் 568 (ருஷ்யப் பதிப்பு).

** அதே நூல், பக்கம் 567.

மாக்கல் விரிவடைந்தது. பல சமயங்களில் நகரங்களில் நடைபெற்ற வர்க்கப் போராட்டம் தோல்வியடைந்தவர்களைக் காலனிகளுக்கு நாடுபெயருமாறு நிர்ப்பந்தித்தது. கிரீஸ் மற்றும் ரோம் ஆகிய பண்டைய அரசுகளில் கட்டாய நாடு பெயர்ச்சி (இது காலனிகளை முறையாக ஆட்கொள்ளும் வடிவத்தைப் பெற்றது) சமூக வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக இருந்தது.

அடிமையுடைமைச் சகாப்தத்தில் குடிமக்களின் இயற்கையான மற்றும் இயந்திரகதியான வளர்ச்சி பிரச்சினைகளில் பிரதிபலித்த சமூக வளர்ச்சியின் இந்த முரண்பாடுகள் அனைத்தும் பண்டைய உலகின் தத்துவஞானிகள், வரலாற்று நிபுணர்கள், சமூக மற்றும் அரசுப் பிரமுகர்கள் ஆகியோரின் கண்ணோட்டங்களிலும் தத்துவங்களிலும் வெளிப்பட்டன. பிளாட்டோ தன்னுடைய தத்துவஞான, அரசியல் கண்ணோட்டங்களில் பிற்போக்கான ஏதன்ஸ் மேற்குடியினரின் நலன்களை ஆதரித்தார். ''சாலச்சிறந்த அரசு'' பற்றிய தன்னுடைய போதனையில் இவர் குடிமக்களின் மிகத் திட்டவட்டமான எண்ணிக்கையை (5,040க்கு மேற்படாமல்) மிக முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக வைத்தார். இக்கருத்தைத் தொடர்ந்து வளர்த்த அவர் ஆட்சியாளர்களின் கட்டளைப்படிதான் திருமணங்கள் நடைபெற வேண்டுமென முன்மொழிந்தார், ஆண்கள் 30 முதல் 55 வயதிற்குள்தான் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனக் கோரினார்.

அரிஸ்டாட்டில் அடிமையுடைமை உறவுகளின் சித்தாந்தவாதியாகத் திகழ்ந்தார். பிளாட்டோவைப் போன்றே அரிஸ்டாட்டிலும் குடிமக்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துவது அவசியம் என்றும் இதன் அசாதாரணப் பெருக்கத்தை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்றும் கருதினார். எல்லாக் குடிமக்களும் ஒருவரை ஒருவர் அறிந்து, நிறைய உழைக்காமல் தாம் உள்ள பிரதேசத்தின் இயற்கை வளத்தைக் கொண்டு வாழுமாறு ஒவ்வொரு அரசிலும் குடிமக்களின் எண்ணிக்கை இருக்க வேண்டுமென அரிஸ்டாட்டில் கருதினார். பிளாட்டோவிற்கு மாறாக அரிஸ்டாட்டில் ஆண்களுக்கு இன்னமும் உயர்வான திருமண வயதை (37) குறிப்பிடுகிறார். அனேகமாக பண்டைய உலகின் அரசுப் பிரமுகர்கள் இதைப் போன்ற சிபாரிசுகளை ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் பல நாடு

களில் வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் திருமண வயது சட்ட ரீதியாக நிலைநாட்டப்பட்டது. உதாரணமாக ஸ்பார்ட்டாவில் இது ஆண்களுக்கு 30 வயதாயும் பெண்களுக்கு 20 வயதாயுமிருந்தது. பிளாட்டோவைப் போன்றே அரிஸ்டாட்டிலும் குடிமக்களின் எண்ணிக்கையை ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் வைத்திருப்பதற்காக மிகப் பயங்கரமான நடவடிக்கைகளை (புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் பெற்றோர்கள் கொல்வது வரை) முன்மொழிந்தார். எந்தக் காரணங்களினால் குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்த வேண்டுமென அரிஸ்டாட்டில் கருதுகின்றாரோ அவை அவருடைய அரசியல் என்ற நூலின் இரண்டாம் பகுதியில் முற்றிலுமாகத் தரப்பட்டுள்ளன. கட்டுப்பாடற்ற குழந்தைப் பிறப்பின் விளைவாய் பிறக்கும் குடிமக்களுக்கு நிலங்கள் கிடைக்காது என்றும் இதனால் இவர்கள் ஏழைகளாவார்கள் என்றும் அரிஸ்டாட்டில் சந்தேகப்பட்டார். குடிமக்களின் அதிகரிப்பைப் பற்றிய பிரச்சினையைக் கவனிக்காதுவிட்டால் இது கண்டிப்பாக குடிமக்கள் ஏழைகளாக வழிகோலும், அவருடைய கருத்துப்படி ஏழ்மைதான் ஆத்திரம் மற்றும் குற்றங்களின் மூல ஊற்றாகும். அனேகமாக கடைசியாகக் கூறியது பண்டைய மேற்குடியினருக்கு மிக முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும். காலனிகளை ஏற்படுத்துவதன் மூலம் குடிமக்களின் அசாதாரண அதிகரிப்புப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியுமென பிளாட்டோ கருதினார் என்றால், அரிஸ்டாட்டிலோ குடிமக்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதன் மூலம் இவர்களின் நல்வாழ்விற்கு வழிகோல முடியுமெனக் கருதினார். பிளாட்டோ, அரிஸ்டாட்டில், பண்டைய அரசுகளின் (குறிப்பாக கிரேக்க குடியரசுகள் மற்றும் ரோமின்) மற்ற தத்துவஞானிகளும் அரசுப் பிரமுகர்களும் குடிமக்களின் எண்ணிக்கை அதிகமாவதற்கு எதிராகப் போராட வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கூறிய போது அவர்கள் சுதந்திரமான சிவில் மக்களைத்தான் குறிப்பிட்டார்களே தவிர அடிமைகளையல்ல.

பண்டைய அரசுகளின் சட்டமியற்றுபவர்களும் அரசுப் பிரமுகர்களும் குறிப்பிட்ட காலகட்டங்களில் குடிமக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை எதிர்த்து செயலாற்ற வேண்டும் என்று பிரகடனப்படுத்தியதோடு கூட இதற்காக தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். கட்டாய நாடு

பெயர்ச்சி (மத்திய தரைக் கடலின் பல்வேறு பகுதிகளில் கிரேக்க, ரோமானியக் காலனிகள் இதன் விளைவாகத்தான் தோன்றின) கிரீசிலும் ரோமிலும் சுதந்திரமான மக்களின் எண்ணிக்கைக்கும் உற்பத்தி மட்டத்திற்கும் இடையிலான ஓரளவு அளவு விகிதத்தைத் தக்கவைப்பதற்காக தலைநாடுகளிலிருந்து ஒரு பகுதி மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஒன்ருகும். ''பண்டைய உலகின் காலனிகள் அமித மக்களால் ஆனவையாக இருந்தன, அதாவது அதே இடத்தில், அதே பொருளாயத, சொத்து அடிப்படையில், அதாவது அதே உற்பத்திச் சூழ்நிலைகளில் வாழ முடியாத மக்களால் ஆனவையாக இருந்தன''* என்று மார்க்ஸ் எழுதினுர்.

கிரேக்க அரசுகளுடைய குடிமக்களின் எண்ணிக்கையை ஸ்திரப்படுத்துவதன் அவசியம் பற்றி பிளாட்டோவும் அரிஸ்டாட்டிலும் கூறிய மேலே சொன்ன கருத்துக்களோடு கூட குழந்தை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்க வேண்டியது எவ்வளவு விவேகமானது என்பதைப் பற்றிய கருத்துக்களும் பரவலாக நிலவின. பெலொபொனேஸ் யுத்தத்திற்குப் பின்னும் (இதில் ஆட்டிக்காவிற்குப் பெரும் ஆட்சேதம் ஏற்பட்டது) யுத்தத்தையடுத்து பரவிய பிளேக் நோய்க்குப் பின்னும் பிளாட்டோ கூட தன் கருத்துக்களை மாற்றிக் கொண்டு இளைஞர்கள் 25 வயதிலிருந்து திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், இது மட்டுமல்லாது 35 வயது வரை இளைஞர்கள் திருமணம் செய்து கொள்ளாவிடில் தன் வருமானத்திற்கு ஏற்ப விசேஷ வரியைச் செலுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தத் துவங்கினுர். இது தவிர 2,040 போர்டிங் விடுதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் அதில் குழந்தைகள் இல்லாதோர் மற்ற குடும்பங்களின் குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்றும் முன்மொழிந்தார். பிளாட்டோவின் இந்த ஆலோசனைகள் சமூக வாழ்வின் தேவையையும் குறைந்து போன சிவில் மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் அரசிற்கு இருந்த அக்கறைகளையும் பிரதிபலித்தன.

பண்டைய உலகின் வரலாற்றில் அரசியல் நிலவரம் மாறியதன் விளைவாய் அரசு சிறு சொத்துடைமையாளர்

---

* கம்யூனிஸ்ட், 1958, இதழ் 7, பக்கம் 20 (ருஷ்ய மொழியில்).

கள், விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் மத்தியில் (இவர்கள்தான் முக்கியமாக வரி செலுத்துபவர்களாகவும் போர் வீரர்களாகவும் இருந்தனர்) சுதந்திரமான மக்கள் பெருக்கத்தின் பாலான தன் உறவை அடிக்கடி மாற்றியது. கி.மு. 215—146ம் ஆண்டுகளில் நடந்த யுத்தத்திற்குப் பின் கிரீசின் கணிசமான பரப்பு மிகக் கடுமையான நிலையிலிருந்தது. பொருளாதார அழிவானது பெரும் வரிகளை செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட கைத்தொழிலாளர்கள், சிறு சொத்துடைமையாளர்கள் மற்றும் விவசாயிகளைப் பாதித்தது. வரிச் சுமையைத் தாங்க முடியாத விவசாயிகள் பல சந்தர்ப்பங்களில் நிலத்தை இழந்தனர். இதன் விளைவாய் மக்கள் தொகை குறைந்தது, பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைந்தது. நீண்ட யுத்தங்களோ தொற்று நோய்களோ இல்லாவிடினும் தாழ்வான பிறப்பு விகிதத்தாலும் பொதுவான ஜனத்தொகை குறைவாலும் நகரங்கள் கைவிடப்பட்டன என்று அக்காலத்து கிரீசின் வரலாற்று நிபுணர்களில் ஒருவராகிய பொலீபியுஸ் எழுதினார். மக்கள் கஞ்சர்களாயும் போலியானவர்களாயும் மாறியதால் அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை, திருமணம் செய்து கொண்டாலும் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளை மட்டுமே பெற்றுக் கொண்டனர். இப்படிப்பட்ட காலகட்டங்களில்தான் சுதந்திரமான மக்களிடையே குழந்தை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, பண்டைய கிரீசில் மூன்று மகன்களையுடைய குடிமக்கள் இரவு நேரக் காவல் பணியிலிருந்தும் நான்கு மகன்களையுடைய தந்தையர்கள் சகலவித சமூக சேவையிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். பண்டைய ரோமில் அகஸ்டஸ், திரயானஸ் ஆகியோருடைய சட்டங்களும் திருமணங்களையும் பல குழந்தைகளையுடைய குடும்பங்களையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன; இத்தகைய குடும்பங்களுக்குக் குறிப்பிட்ட சலுகைகள் வழங்கப்பட்டன.

அடிமையுடைமைச் சமூக அமைப்பிற்குரிய சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகளும் சமூக உறவுகளும் இதில் மக்கள் தொகை வளர்ச்சியின் முக்கிய நியதிகளை நிர்ணயித்தன. ஒவ்வொரு அடிமைச்சொந்தக்காரனுக்கும் அவசியமான அளவில் ''உயிருள்ள கருவியாக'' அடிமைகளின் உழைப்பையும் ஆதிக்க வர்க்கம் முழுவதற்கும் தேவையான அளவில் சட்ட

ரீதியாக சுதந்திரமான உழைப்பாளிகளின் உழைப்பையும் பரவலாகப் பயன்படுத்துவதுதான் அடிமையுடைமைச் சமுதாயத்தில் மக்கள்தொகையின் பொருளாதார விதியாக இருந்தது. அடிமைகளின் குறுகிய புனருற்பத்திதான் அடிமையுடைமை அமைப்பிற்கு உரித்தான ஜனத்தொகை நியதியாக இருந்தது. இவர்களின் எண்ணிக்கை முக்கியமாக போர்க் கைதிகளிலிருந்தும் கடன்பட்டிருந்த சக குலத்தவர்களிடமிருந்தும் வந்தவர்களின் மூலமாகத்தான் அதிகரிக்க முடிந்ததே தவிர அடிமைகளின் இனப்பெருக்கத்தால் அல்ல. சுதந்திரமான மக்களின் புனருற்பத்தி உயர்வான பிறப்பு விகிதத்தாலும் உயர்வான இறப்பு விகிதத்தாலும் நிர்ணயிக்கப்பட்டது. இவற்றிற்கு இடையிலான வேறுபாடு குடிமக்களின் அதிகரிப்பை (ஆதிகாலச் சகாப்தத்துடன் ஒப்பிடுகையில் இது சிறிதளவு அதிகம்) தந்தது.

## அத்தியாயம் நான்கு

# நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் மக்கள்தொகை

ஒரு தனியான சமூக-பொருளாதார அமைப்பாக நிலப் பிரபுத்துவம் தனது சாஸ்திரீய வடிவத்தில் மேற்கு ஐரோப் பிய நாடுகளில் உருவாகியது. மற்ற ஐரோப்பிய நாடுகளி லும் ஆசியாவிலும் நிலப்பிரபுத்துவ அமைப்புக்குப் பல பண்பு ரீதியான சிறப்பியல்புகள் உள்ளன. உற்பத்தி வளர்ச்சி மற்றும் சில காரணங்களினுல் அடிமை முறையா னது ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ-பண்ணையடிமை சார்பு முறைக்கு இடம் விட்டு மறைந்தது என்ருல் பல ஆசிய நாடு களில் இது முக்கிய சமூக மற்றும் உற்பத்திப் பங்கை ஆற்ரு விட்டாலும் தொடர்ந்து நிலவியது. ஆப்பிரிக்காவில் நிலப் பிரபுத்துவ உறவு முறைகள் ஓரளவு காலந்தாழ்த்திதான் உருவாயின, அதுவும் மத்திய தரைக் கடல் நாடுகளில் மட் டுமே இவை நிலவின, அமெரிக்காவிலோ அங்கே ஐரோப் பியர்கள் வரும் வரை ஒரு செவ்விந்திய இனம் கூட நிலப் பிரபுத்துவ வளர்ச்சிக் கட்டத்தை அடையவில்லே.

நிலப்பிரபுத்துவச் சகாப்தத்தில் மக்களின் புனருற்பத்திப் போக்கில் உயர்வான பிறப்பு விகிதம் நிலவியது. அடிமை யுடைமைக் காலகட்டத்தோடு (இக்காலகட்டத்தில் மக்க ளில் கணிசமான பகுதியினர், அதாவது அடிமைகள் புனருற் பத்திப் போக்கிலிருந்து வெளியே தள்ளப்பட்டிருந்தனர்) ஒப்பிடுகையில் இந்த விகிதம் அனேகமாக சிறிது அதிகரித் திருந்தது. தம்முடைய பண்ணையடிமை விவசாயிகளினுடைய உழைப்பில் கணிசமான பகுதியின் மீதான உரிமையையும் இவர்களே இன்னெரு சொத்துடைமையாளனுக்கு விற்கும் உரிமையையும் பெற்றிருந்த நிலப்பிரபுக்கள் இயற்கையான ஜனப்பெருக்கத்தின் மூலம் இந்த விவசாயிகளின் எண்ணிக் கையைப் பெருக்குவதன் மீது அக்கறை கொண்டிருந்தனர். தம்முடைய பண்ணையடிமைகள் வெகு சீக்கிரத்திலேயே திரு மணம் செய்து கொள்வதை நிலப்பிரபுக்கள் சாதாரண

மாக ஆதரித்தனர் என்பதில் எல்லாவற்றிற்கும் மேலாக இது வெளிப்படுகிறது. பல சமயங்களில் இவர்கள் பெண்கள் திருமண வயதை அடைந்ததுமே வலுக்கட்டாயமாக அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். அடிமைகளுக்கு மாருக இந்தப் பண்ணையடிமை விவசாயிகளுக்குத் தனிப்பட்ட சிறு துண்டு நிலம் வைத்துக் கொள்ளும் உரிமையிருந்தது, மிகவும் கட்டுபடுத்தப்பட்ட குறிப்பிட்ட சுதந்திரமிருந்தது. வேலையாள் வாடகை முறையிலிருந்து விளைபொருள் மற்றும் பண வாடகை முறைக்கு மாறியதையடுத்து இவர்களின் பொருளாதார-தனிநபர் சுதந்திரம் கணிசமாக அதிகரித்தது. இது விவசாயிகளின் சொத்து ரீதியான பிரிவிற்கு வழிகோலியது. வசதிபடைத்த விவசாயிகளிடம் குழந்தை பெறுவதற்கான ஊக்கங்கள் தோன்றியிருக்கலாம்; குழந்தைகள் வளர்ந்ததும் அவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி தனது பொருளாதார நிலையை இன்னமும் பலப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை இது அவனுக்கு அளித்தது. என்ருலும் மொத்தத்தில், குழந்தைகள் பெறும் விரிவான போக்கில் பண்ணையடிமைத் திருமண ஜோடிகளின் பொருளாதார அக்கறையை மிகைப்படுத்தக் கூடாது. இக்காலகட்டத்திற்குரிய உயர்வான பிறப்பு விகிதத்திற்கு இளவயது திருமணங்களும் ஏராளமான பெண்கள் திருமணம் செய்து கொண்டதும் கருத்தடுப்பு முறைகளும் கருக்கலைப்பும் அதிகம் பரவாமலிருந்ததும்தான் முன்போன்றே முக்கியக் காரணங்களாகும்.

நிலப்பிரபுத்துவச் சகாப்தத்தில் இறப்பு விகிதம் பெரிதும் ஏறியிறங்கினுலும் மொத்தத்தில் இது மிக உயர்வானதாயிருந்தது. மத்தியக் காலத்தின் ஆரம்பக் கட்டம் பூராவும், அதாவது நிலப்பிரபுத்துவ உறவு முறைகள் உருவாகிய காலகட்டத்தில் மக்கள்தொகை அதிகரிப்பு மிகவும் ஸ்திரமற்றதாக இருந்தது, ஒரு சில நாடுகளில் இது குறையக் கூடச் செய்தது. கடைசியாகக் கூறியதோ முன்னர் மேற்கத்திய ரோமானியப் பேரரசில் இருந்த பிரதேசங்களை முதலாவதாகச் சாரும். ''மக்களினங்களின் மாபெரும் குடிபெயர்ப்பு'' என்ற சகாப்தத்தில் (கி. பி. 3—6ஆம் நூற்ருண்டுகள்) கிழக்கிலிருந்து போர்க்குணம் மிக்க நாடோடி மக்கள் கூட்டங்கள் இப்பிரதேசங்களினுள் ஒன்றன் பின் ஒன்ருக நுழைந்து அழிவையும் மரணத்தையும் கொண்டு வந்தன;

இந்த விஷயத்தில் ''தெய்வீகச் சாட்டை'' எனும் பட்டப் பெயரைப் பெற்றிருந்த ஹன்களின் அரசராகிய அதீல்லா வின் படையெடுப்புகள் பெரிதும் குறிப்பிடத்தக்கவை: இவனுடைய நூறுயிரம் பேரடங்கிய, போர்க்குணம் மிக்க மக்கள் கூட்டங்கள் சென்ற இடங்களில் உயிருள்ள எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. முன்னர் ஒழுங்கமைக்கப்பட்ட பொரு ளாதார, வர்த்தக முறை முழுவதும் தகர்ந்து வீழ்ந்தது, மத்திய தரைக் கடலின் முந்தைய தானியக் களஞ்சியங் களாகிய மத்திய கிழக்கு நாடுகளிலிருந்த பல சிக்கலான, சக்தி வாய்ந்த நீர்ப்பாசன அமைப்புகள் அழிந்தன; ஒரு சில இடங்களில், உதாரணமாக, வட ஆப்பிரிக்காவில் பருவ நிலைச் சீர்கேடுகளால் இது இன்னமும் மோசமாகியது. யுத் தங்கள், பட்டினியோடு கூட நோய் நொடிகளும் பரவு கின்றன; 4ஆம் நூற்றுண்டில் கடுமையான பிளேக் தொற்று நோய் கிட்டத்தட்ட மத்திய தரைக் கடல் நாடுகள் எல்லா வற்றிலும் பரவியது. இத்தகைய கடுமையான தருணங்களில் நகர மக்கள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பல நகரங் கள் முழுமையாக வீழ்ச்சியடைந்தன; ரோமானியப் பேர ரசின் மலர்ச்சிக் காலத்தில் ரோமின் மக்கள்தொகை 1 மில் லியனை எட்டியதென்றுல் கி. பி. முதலாம் நூற்றுண்டின் நடுவில் இந்த ''அழிவற்ற நகரின்'' இடிபாடுகளில் ஒரு சில ஆயிரம் பேர்கள் மட்டுமே வாழ்ந்தனர்.

இதற்குப் பின் வந்த நூற்றுண்டுகளும் கொந்தளிப்பான வையாக இருந்தன. 7ஆம் நூற்றுண்டிலிருந்து அராபியர் களின் படையெடுப்புகள் துவங்கின. இவர்கள் ஒரு பரவ லான பிரதேசத்தில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். இது மேற்கே பிரினேயத் தீபகற்பத்தையும் கிழக்கில் மத்திய ஆசியாவையும் வட இந்தியாவையும் உள்ளடக்கியிருந் தது. இந்தப் படையெடுப்புகளின் எதிர்மறையான ஜனத் தொகைப் போக்கின் விளைவுகள் அராபியர்கள் பரப்பிய, அக் காலத்திற்கு ஒப்பீட்டளவில் உயர்வான கலாச்சாரத்தாலும் பொருளாதார முறையாலும் ஓரளவிற்கு மட்டுமே ஈடு செய்யப்பட்டன. மங்கோலியர்கள் (13ஆம் நூற்றுண்டு) மற் றும் துருக்கியர்களின் (14—15ஆம் நூற்றுண்டு) நாசகரப் படையெடுப்புகள் இன்னமும் அதிக அழிவுகளை ஏற்படுத்தின. இவர்கள் தாம் வெற்றி கொண்ட நாடுகளின் வளர்ச்சியை, குறிப்பாக மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பை நீண்ட

காலத்திற்குத் தடுத்தனர். முன்போன்றே உயர்வான பிறப்பு விகிதம் மிகக் கடினமாகத்தான் உயர்வான இறப்பு விகிதத்தை ஈடு செய்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குடிமக்களின் ஒப்பீட்டளவில் நிலேயான அதிகரிப்பு முதல் ஆயிரம் வருடங்களின் கடைசி நூற்ருண்டுகளில்தான் துவங்கியது. ஆனல் இது இன்னமும் அடிக்கடி ஏற்பட்ட பட்டினி, தொற்று நோய்கள், நிலப்பிரபுத்துவ யுத்தங்களால் பாதிக்கப்பட்டது. சிலுவைப் போர்கள் பேரிழப்பை ஏற்படுத்தின, இவற்ருல் ஏற்பட்ட பொதுச் சேதங்கள் ஒரு சில மில்லியனே எட்டின. 14ஆம் நூற்ருண்டின் நடுவில் நெறிக்கட்டு பிளேக் (''கறுப்பு மரணம்'') எனும் ஒரு பயங்கரத் தொற்று நோய் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் பரவி இங்கிருந்த மக்களில் நான்கில் ஒரு பகுதியினரின் உயிரைக் குடித்தது.

15ஆம் நூற்ருண்டின் நடுவிலிருந்து மேற்கு ஐரோப்பாவில் மறுமலர்ச்சிச் சகாப்தம் என்றழைக்கப்படுவது ஆரம்பமாகியது. இக்காலத்தில் தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் கலாச்சாரமும் முனேப்போடு முன்னேறின. நவீன பயிர்த் தொழில் முறைகள், குறிப்பாக மூன்று வயல் முறையும் பின்னர் பல வயல் முறையும் எல்லா இடங்களிலும் பரவுகின்றன, கால்நடை வளர்ப்பு மேம்பாடடைகிறது. கைத்தொழில் உற்பத்திக்குப் பதிலாக முதல் பட்டறை உற்பத்தி முறைகள் வருகின்றன. இங்கே மனிதர்கள் அல்லது விலங்குகளின் தசைச் சக்தியைப் பயன்படுத்தும் உழைப்புக் கருவிகளுக்குப் பதிலாக இயற்கைச் சக்திகளால் இயக்கப்பட்ட கருவிகள் (தண்ணீர் சக்கரம் போன்றவை) பயன்படுத்தப்படுகின்றன. பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சி மக்கள்தொகை வளர்ச்சி வேகங்களே அதிகரிப்பதற்கான அடித்தளத்தைத் தோற்றுவித்தது, தொற்று நோய்களுக்கு எதிராகத் துவங்கிய போராட்டமும் (சதுப்பு நிலங்களேக் காயவைத்தல், பிளேக் நோய்க்கு எதிரான குவாரன்டைன்களே அமல்படுத்தியது முதலியவை) இதற்குத் துணே புரிந்தது.

நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக மையங்கள் என்ற வகையில் நகரங்களின் வளர்ச்சிப் போக்கு, உற்பத்திச் சக்திகளின் பொதுவான வளர்ச்சியுடனும் சமூக உழைப்புப் பிரிவினேயுடனும் (கைத்தொழிலே பயிர்த்தொழிலிலிருந்து பிரித்தது) தொடர்பு கொண்டிருந்தது. விவசாயிகள்-கைத்தொழிலாளர்களின்

குடிபெயர்ப்பின் விளைவாக நகர்ப்புறக் குடியிருப்புகள் உருவாயின. இக்குடிபெயர்ப்புகள்தான் இச்சகாப்தத்தில் மிக முக்கிய இடப்பெயர்ச்சி வடிவமாக இருந்தன. மத்தியக் கால நூற்றுண்டுகளின் பண்ணையடிமை விவசாயிகளிலிருந்து முதல் நகரங்களின் சுதந்திரமான மக்கள் வந்தனர். நிலப்பிரபுத்துவச் சகாப்தத்தில் நகரங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவானதாக இருந்தது. இவை முக்கியமாக வர்த்தக மையங்களாக இருந்தன, முறைகேடாகப் பரவியிருந்தன. நகர மக்களின் தீவிர வளர்ச்சியானது மக்களின் பிரதேச இடமாற்றம் வலுவடைந்ததுடன் தொடர்புடையதாயிருந்தது.

நிலப்பிரபுத்துவத்திற்கு உரித்தான ஜனத்தொகைப் போக்குகளின் நியதிகளில் உயர்வான பிறப்பு மற்றும் இறப்பு விகிதங்களைப் பற்றிக் கூற வேண்டும்; மக்களின் இயற்கையான அதிகரிப்பு குறைவாக இருந்ததற்கு இந்த இறப்பு விகிதம் காரணமாகும். பொருளாதார, சட்ட, மதக் காரணங்களினல் பெரும்பாலான நாடுகளில் பொருளாயத நிலைக்கும் பிறப்பு விகிதத்திற்கும் இடையே நேரடியான தொடர்பு காணப்படவில்லை: சமுதாயத்தின் உடைமைப் பிரிவினருக்கும் சொத்தற்றவர்களுக்கும் இது ஒரே மாதிரியானதாக இருந்தது. ஒரு சில நாடுகளுக்கு, உதாரணமாக ருஷ்யாவிற்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டங்களில் தீவிர இடப்பெயர்ச்சி உரித்தானதாயிருந்தது. நிலப்பிரபுக்கள் இதைக் குறைந்த பட்சமாகக் குறைத்து தம் நலன்களுக்கேற்றவாறு செய்ய முயன்றனர்.

நிலப்பிரபுத்துவத்திற்கே உரித்தான மக்கள்தொகை விதிகள் நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்தியாகிய பண்ணையடிமை விவசாயிகளின் நிலையிலும் பண்ணையடிமை மக்களின் புனருற்பத்தியிலும் வெளிப்படுகின்றன. நிலத்தின் மீதான நிலப்பிரபுவின் சொத்துடைமை, கடுமையாகச் சுரண்டப்படும் பண்ணையடிமை விவசாயிகளின் மீதான அரை சொத்துடைமை ஆகியவற்றின் அடிப்படையிலான உற்பத்தி முறை உழைக்கும் மக்கள் திரளினரை அரைப் பட்டினி, இருட்டு, அறியாமை ஆகியவற்றை நோக்கித் தள்ளியது.

நிலப்பிரபுத்துவ அமைப்பின் ஜனத்தொகை வளர்ச்சிக்கு பின்வரும் முக்கியச் சிறப்பியல்புகள் உரித்தானவையாக

இருந்தன. 1. குழந்தை பெறும் வயதிலுள்ள கிட்டத்தட்ட எல்லாப் பெண்களையும் கவரும் இள வயது திருமணங்களின் காரணமாக உயர்வான பிறப்பு விகிதம்; கருத்தடுப்பு மற்றும் கருக்கலைப்புச் சாதனங்கள் இல்லாமலிருந்தன அல்லது மிகக் குறைவாகவே பரவியிருந்தன; எங்கும் பரவியிருந்த இனப்பெருக்க வளப் பாரம்பரியங்கள்; சில இடங்களில் மக்கள்தொகைக் கொள்கை இவற்றிற்கு ஆதரவாயிருந்தது. பெண்கள் மத்தியில் திருமணமாவது ஓரளவு குறைந்தாலும் இது சராசரி வாழும் வயதும் குழந்தை பெறும் காலகட்டமும் படிப்படியாக அதிகரிக்கப்படுவதால் ஈடு கட்டப்படுகிறது. 2. உயர்வான இறப்பு விகிதம், குறிப்பாக பண்ணையடிமை மக்களிடையேயான உயர்வான இறப்பு விகிதம். உற்பத்திச் சக்திகளின் தாழ்வான மட்டம், கடினமான வாழ்க்கைச் சூழ்நிலைகள், பட்டினி, யுத்தங்கள், தொற்று நோய்கள் ஆகியவையே இதற்குக் காரணம். உற்பத்திச் சக்திகள், குறிப்பாக விவசாய உற்பத்தி வளர்ச்சியடையும் போது இறப்பு விகிதம் படிப்படியாகக் குறைகிறது. உயர்வான பிறப்பு விகிதம் இருக்கும் போது இது இயற்கையான ஜனப்பெருக்கத்திற்கு இட்டுச் செல்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்துவம் ஆதிக்கம் செலுத்திய சகாப்தத்தில் ஜனத்தொகை குறைவு எங்கெல்லாம் தென்பட்டதோ அங்கெல்லாம் இதை எப்படியாவது தடுத்து நிறுத்த முயன்ற அரசாட்சி மக்கள்தொகை அதிகரிப்பிற்கு எல்லா வகையிலும் வழிகோலியது. மத்தியக் கால நூற்றாண்டுகளின் அரசுப் பிரமுகர்கள் தம் அரசியல், நிதி மற்றும் இராணுவப் பலத்தை (இது அக்காலத்தில் நாட்டின் பெருந்திரளான மக்கள்தொகையிலும், போர்வீரர்களின் எண்ணிக்கையிலும் குடிமக்களிடமிருந்து வசூலிக்கத்தக்க வரிகளின் அளவிலும் அடங்கியிருந்தது) தக்கவைத்து பெருக்குவதில் கொண்டிருந்த நாட்டம் இதற்குத் துணை புரிந்தது. அக்காலச் சித்தாந்தவாதிகளின் கண்ணோட்டங்களிலும் இவையெல்லாம் பிரதிபலித்தன. மத்தியக் கால ஐரோப்பாவின் கத்தோலிக்க சித்தாந்தவாதிகளில் ஒருவராகிய ஃபொமா அக்வீன்ஸ்கி பண்டையக் கால ஆசிரியர்களில் பெரும்பாலோருக்கு மாறாக உழைப்பு மனிதனுக்கு ஏற்றதல்ல என்று கருதவில்லை. உடலுழைப்பை அவர் கீழான உழைப்பாக (மூளையுழைப்பை இவர் நல்ல உழைப்பாகக்

கருதினர்), ஆனல் சமுதாயத்திற்கு மிக அவசியமான உழைப் பாக கருதினர். அடிமைகளின் உழைப்பை அதிகப்படுத்து வதன் மூலம் சமுதாயத்தின் செல்வம் பெருகுகிறது. இந்த அடிமைகளின் சட்ட நிலை பண்டைய கால அடிமை யுடைமை அரசுகளில் இருந்ததிலிருந்து மாறுபட்டது.

நிக்கோலொ மக்கியவேலி ஒரு குறிப்பிட்ட எல்லை வரை மக்கள்தொகை அதிகரிப்பதன் அனுகூலங்களைக் கோடிட்டுக் காட்டினர். இதில் பண்டைய கால விஞ்ஞானிகளின் செல்வாக்கு அனேகமாகத் தெரிகிறது எனலாம். அரசின் பலம் அதன் குடிமக்களின் எண்ணிக்கையைப் பொறுத்துள் ளது என்று ஸ்பினோசா எழுதினர்.

மக்கள்தொகைப் பிரச்சினைகள் வர்க்கப் போராட்டத் துடனும் இது கூர்மையடைவதுடனும் நெருக்கமாக தொடர் புடையவை. நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் வர்க்கப் போராட்டமானது நீண்ட காலத்திற்கு மத வடிவத்தில் வெளிப்பட்டது, பல்வேறு இறையியல் ஆய்வு நூல்களில் பிரதிபலித்தது. ஆனலும் மத்தியக் கால சித்தாந்த வாழ் வின் மேற்போக்கான மத வடிவம் வழியே இந்தச் சகாப் தத்தின் தீவிர வர்க்க முரண்பாடுகள் மேன்மேலும் அடிக்கடி தென்பட்டன. நிலப்பிரபுத்துவ உறவு முறைகள் சிதறிய போது தாமஸ் மோரின் **கற்பனையுலகம்** என்ற நூல் வெளி வந்தது. இதில் மக்கள்தொகைப் பிரச்சினைகளைப் பற்றி ஆழமாக கூறப்பட்டிருந்தது. இரண்டாவது நூலில் (''பரஸ் பரப் பழக்கத்தைப் பற்றி'' எனும் அத்தியாயத்தில்) இப் பிரச்சினைகளைப் பற்றிய அவரது கருத்துக்கள் முழுமையாகக் கூறப்பட்டுள்ளன. இச்சகாப்தத்தின் மற்ற சிந்தனையாளர் களைப் போன்றே மோரும் மக்கள்தொகையின் விரை வான அதிகரிப்பில் எவ்வித ஆபத்தையும் பார்க்கவில்லை, ஏனெனில் மக்கள் எதைப் பயன்படுத்துகிறர்களோ அவை யெல்லாம் உழைப்பால் தோற்றுவிக்கப்படுகின்றன. மக் கள் அதிகரிப்பிற்குச் சகலவிதங்களிலும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினர் தாமஸ் மோர். நகரங்களில் மிகக் குறைவான மக்கள் இருப்பதைத் தவிர்ப் பதற்காகவும் (''கற்பனையுலகத்தின்'' மக்கள் வரிசைக்கிரம மாக நகரங்களில் வாழ்ந்தனர் என்பது தெரிந்ததே) அல்லது இவர்களின் அசாதாரண எண்ணிக்கையைத் தவிர்ப்பதற்காகவும் ஒவ்வொரு குடும்பத்திலும் (''கற்பனை

யுலகத்தின்'' நகரம் ஒவ்வொன்றிலும் 6,000 இத்தகைய குடும்பங்கள் இருக்க வேண்டும்) 10—16 வயதுவந்தவர்கள் இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டினார் மோர். நகரங்களில் குடிமக்களின் எண்ணிக்கை அதிகமானால், அதாவது குடும்பங்களின் எண்ணிக்கை 6,000ஐ தாண்டினால் மக்கள் குறைவாயுள்ள நகரங்களுக்கு ''கற்பனையுலகத்தினர்'' குடியேற்றப்படுவார்கள். வளரும் தலைமுறையினருக்குக் குறிப்பிட்ட வரம்புகளில் நகரங்களினால் இடமளிக்க முடியாமல் போனால் அமித மக்கள் தாமாகவே முன் வந்து அண்டையிலுள்ள கண்டங்களுக்கு இடம்பெயர்வதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்படும். தீவிலிருந்து குடியேற்றப்பட்ட ''கற்பனையுலகத்தினர்'' புதிய இடத்திலும் ''கற்பனையுலகத்தில்'' உள்ள அதே வாழ்க்கை முறையுடன் கூடிய காலனிகளை உருவாக்குவார்கள். ''கற்பனையுலகத்தின்'' குடிமக்கள் அரசின் பொருளாயத நலன்கள் எல்லாவற்றையும் நுகருபவர்கள் மட்டுமல்ல இவற்றை தோற்றுவிப்பவர்களுமாவார்கள் என்பதை மோர் அடிப்படையாகக் கொண்டார். மனித உழைப்பை விவேகமாகப் பயன்படுத்துவதில் அவர் உழைப்பாளிகளின் சுமைகளை எளிதாக்கும் பாதையைக் காணுகிறார்: அமித உற்பத்தியானது விலைகளைக் குறைக்கும், போதுமான ஏன் அமித பொருட்களை உற்பத்தி செய்ய உழைப்பாளிகளுக்குத் தேவையான நேரத்தைக் குறைக்கும், இதற்குப் பின் ஓய்வு மற்றும் பொழுதுபோக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமான நேரமிருக்கும். வேலை செய்யும் திறனுள்ள ஆண், பெண் இரு பாலாரின் உழைப்பையும் உற்பத்தி நோக்கோடு பயன்படுத்த வேண்டுமென மோர் கோருகிறார். ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்கள், இவர்களுடைய ஏராளமான எடுபிடியாட்களின் ஊதாரித்தனம், ஆடம்பரம், சோம்பேறித்தனம் ஆகியவற்றை மோர் சாடுகிறார். அனேகமாக பண்டைய உலகின் தத்துவஞானிகளைப் பின்பற்றி மோர் குறிப்பிட்ட திருமண வயதை நிர்ணயிக்கிறார். ஆனால் இவ்வயது பிளாட்டோவும் அரிஸ்டாட்டிலும் கூறியதை விடக் குறைவானது. பெண்கள் 18 வயதிலும் ஆண்கள் 22 வயதிலும் திருமணம் செய்து கொள்ளலாம் என்கிறார் இவர். மோர் ஏராளமான ஆட்களுள்ள, உற்பத்தித் திறன் மிக்க கைத்தொழில் மற்றும் விவசாய உழைப்பில் தன் காலத்திய சமூக அமைப்பின் சமூக முரண்பாடு

களை அகற்றுவதற்கான பாதையைக் காணுகிறார். சமூக சமமின்மையும் ஏழ்மையும் இல்லாத ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் வாய்ப்பை அவர் இதனுடன் தொடர்பு படுத்துகிறார்.

விஞ்ஞானக் கம்யூனிசத்தின் இன்னொரு பெரும் முன்னேடி ஃபொமா கம்பனேல்லா ஆவார். பொருளாதார ரீதியாக இத்தாலி ஐரோப்பாவின் மற்ற நாடுகளை விஞ்சி நின்ற சகாப்தத்திற்குப் பின் இத்தாலி நீண்ட, ஆழமான பொருளாதார வீழ்ச்சியை அடைந்த காலகட்டத்தில் சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வை இவர் சூரிய நகரம் எனும் தனது படைப்பில் தேடுகிறார். முதன்முதலாக இந்த நூல் 1623இல், அதாவது கற்பனையுலகம் வெளிவந்து 100 ஆண்டு களுக்குப் பின் வெளியிடப்பட்டது. உழைக்கும் மக்கள் திரளினர் பெரிதும் கடினமான நிலையிலிருந்தனர். முந்தைய காலகட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட கணிசமான அளவு பட்டறைத் தொழிலாளர்களும் நகர மற்றும் கிராம அரைப் பாட்டாளிகளும் முறையான ஊதியத்தை இழந்து இப் போது வாழ்க்கைச் சாதனங்களைத் திருட்டு, கொள்ளையினால் தேடும்படி மேன்மேலும் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

நகர மற்றும் கிராமப்புற ஏழைகளாகிய இந்த வறுமை யடைந்தோரின் நலன்களைத்தான் கம்பனேல்லா தன் சூரிய நகரத்தில் வெளிப்படுத்துகிறார். பரந்த அளவிலான உழைக்கும் மக்கள் சந்திக்க நேரிட்ட இந்த மிகக் கடினமான நிலையிலிருந்து அவர்களை வெளியேற்றும் வழியை கம்ப னேல்லா தனது மகத்தான படைப்பில் தேடுகிறார். தனிச் சொத்துடைமையும் சொந்த சொத்தும் இல்லாத ஒரு அரசை, சர்வபொது உழைப்பு (கம்பனேல்லா இதை ஒரு நல்ல காரியமாகக் கருதினார்) ஆதிக்கம் செலுத்தும் ஒரு அரசைத் தோற்றுவிக்க வேண்டுமென கம்பனேல்லா கருது கிறார். இந்த அரசில் உற்பத்தியும் வினியோகமும் பொது வுடைமையாக்கப்பட்டிருக்க வேண்டும். இறுதியாக, இந்தச் சமுதாய அடித்தளங்களுக்கான உத்திரவாதமாக ''சாலச் சிறந்த அரசில்'' வளரும் தலைமுறையினருக்கு உழைப்புக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

சுதந்திரமான சமுதாயத்தின் சமமான உறுப்பினர்களு டைய பொருளாயத நலன்களை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாக தாமஸ் மோரைப் போன்றே கம்பனேல்லாவும் மக்

கள்தொகையைக் கருதுகிருர் என்ற முடிவிற்கு வர கம்பனேல்லாவின் மேற்கூறிய கருத்து நிலைகள் உதவுகின்றன. பெண்கள் 18 வயதிலோ, அதற்குப் பின்னரோ, ஆண்கள் 21 வயதிலும் அதற்குப் பின்னரும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இவர் திருமண வயது வரம்பை நிலைநாட்டுகிருர். ஆனல் இந்த வயதில் கட்டாயம் திருணம் செய்து கொள்ள வேண்டுமென இவர் கூறவில்லை. ஆண்கள் சற்று வயதானதும், உதாரணமாக 27 வயதில் திருமணம் செய்து கொள்வதை இவர் வரவேற்கக் கூடச் செய்கிருர். இதை அனேகமாக இரண்டு காரணங்களினுல் விளக்கலாம்: முதலாவதாக, பிளாட்டோவின் கருத்துக்கள் (அரசு திருமண வயதை நிர்ணயிக்க வேண்டுமென இவர் கோரினுர்) இவருடைய கண்ணேட்டங்களின் மீது செலுத்திய செல்வாக்கு; இரண்டாவதாக, எண்ணிக்கையில் அதிகரிக்கும் எல்லா மக்களுக்கும் சமுதாயத்தால் ஏதோ வேலை தர முடியாது என்றும் எனவேதான் பல உழைப்பாளிகள் ஏழைகளாயுள்ளனர் என்றும் அக்கால சமூகக் கருத்துக்களின் புலம்பல்கள்.

மோருக்கு மாருக கம்பனேல்லா, மிகச் சிறந்த மனிதத் தலைமுறையை ''உருவாக்குவதன்'' மீது மிக அதிகக் கவனம் செலுத்தி திருமணம் பற்றிய பிரச்சினையை வேறு விதமாகத் தீர்க்கிருர். இவர் பின்வருமாறு கூறுகிருர்: அவர்கள் (அதாவது ''சூரிய நகர''வாசிகள்) நாய்கள், குதிரைகளின் தலைமுறைகளை மேம்படுத்துவதன் மீது அக்கறை காட்டும் நாம் அதே நேரத்தில் மனித இயற்கையை அலட்சியப்படுத்துவதைக் கண்டு எள்ளி நகையாடுகின்றனர். வடிவான, அழகான பெண்கள் வடிவான, அழகான ஆண்களோடு மட்டுமே இணைகின்றனர்; ஒருவரையொருவர் நன்கு ஈடு செய்தால் மட்டுமே போதுமென்று பருமனுனவர்கள் மெலிந்தவர்களுடனும் மெலிந்தவர்கள் தடிமனுனவர்களுடனும் சேருகின்றனர். கம்பனேல்லா மனைவிகள் பொதுவானவர்களாக ஆக்கப்பட வேண்டுமென்கிருர், ஏனெனில் அவர்களிடம் (''சூரிய நகர''வாசிகளிடம்) ''எல்லாமே பொதுவானது''.

மோர் மற்றும் கம்பனேல்லாவின் படைப்புகள் சமூக சிந்தனையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றின. ஆரம்பக் கால கற்பனுவாத சோஷலிஸ்டுகள் சமூகப் பிரச்சினைகளின் தீர்வையும் மக்களுடைய ஏழ்மையை அகற்றுவதையும் சமு

தாயச் சொத்தின் புனருற்பத்தி மற்றும் உற்பத்தித் திற னுள்ள உழைப்பின் சர்வபொதுத் தன்மையை அடிப்படை யாகக் கொண்ட வர்க்கங்களற்ற சமுதாயத்தில் கண்டனர் என்ருல், உருவாகி வந்த முதலாளித்துவ உறவு முறைகளின் ஆதரவாளர்கள் இப்பிரச்சினையை வேறு விதமாகத் ''தீர்த் தனர்''. மக்கள் திரளினரின் எல்லாத் துன்பங்களுக்கும் வர்க்கச் சமுதாயத்தின் சுரண்டும் சாராம்சம் காரணமல்ல என்றும் ஏதோ பூமியின் அமித ஜனத்தொகையும் மக்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரிப்பதுமே காரணம் என்றும் அவர்கள் கருதினர்.

தம் காலத்தின் சமூக முரண்பாடுகளை மறைக்கவும் ஒடுக் கப்பட்ட வர்க்கங்களின் எல்லாத் தவிப்புகளுக்குமான குற் றத்தை இயற்கையின் மீதோ சுரண்டப்படுபவர்கள் மீதோ திணிக்கவும் முயலும் சித்தாந்தவாதிகளின் மீது சுரண்டும் வர்க்கங்கள் அக்கறை கொண்டிருந்தன. நிலப்பிரபுத்துவ உறவு முறைகள் சிதறுண்ட காலகட்டத்தில் வாழ்ந்த பல எழுத்தாளர்களிடம் மக்களுடைய ஏழ்மைக்கான இத்தகைய வியாக்கியானங்களைக் காணலாம். உதாரணமாக, 1577ஆம் ஆண்டைச் சேர்ந்த படைப்பு ஒன்றில் ஹோலின்ஷேட், பிரிட் டனில் நிறைய மக்கள் உள்ளனர் என்றும் திருமணம் செய்து கொள்ளும் ஆண்கள் நாட்டிற்கு நலம் தேடித்தராமல் மாருக அதன் வாழ்க்கையைச் சிக்கலாக்கி அரசிற்கு இழப்பை ஏற் படுத்துகின்றனர் என்றும் கூறும் ஒரு சிலரைப் பற்றி எழுது கிருர். நிக்கோலொ மக்கியவேலி (அரசியல், பொருளாதார வாழ்வில் ஜனத்தொகையின் முக்கியத்துவத்தைப் பற்றிய இவரது கருத்துக்கள் பெரிதும் முரண்பாடானவையாக இருந்தன) பெரும் ஜனத்தொகையின் மேம்பாட்டைக் கோடிட்டுக் காட்டும் அதே சமயம் அரசின் வாழ்வில் அமித ஜனத்தொகை பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு காரணி என் பதைப் பற்றியும் கூறுகிருர். சாதாரண முறைகளால் அமித ஜனத்தொகை அபாயத்தை நீக்க முடியாது போனுல் பிளேக் நோயும் பட்டினியும் மனிதகுலம் மிதமிஞ்சிப் போவதி லிருந்து காப்பாற்றுமென அவர் கருதினுர்.

இவர்கள்தான் மக்கள்தொகைப் பிரச்சினை மீதான புதிய கருத்துக்களின் முன்னேடிகளாவார்கள். இத்தகைய கருத் துக்கள் மேற்கு ஐரோப்பாவில் மேன்மேலும் அடிக்கடி ஒலிக்கலாயின. நிலவுடைமை வர்க்கத்தின் ஆதரவாளர்கள்,

உழைப்பாளிகளின் நிலை மோசமாக மோசமாக இவர்களின் கொந்தளிப்புகள் அதிகரிப்பதைக் கண்டு, நிலவும் முறையைத் தக்கவைப்பதற்காக மக்களைச் சாந்தப்படுத்தும் வழிகளை, இவர்களுடைய ஏழ்மை நிலை இயற்கையினாலேயே, ஜனத்தொகைப் பெருக்கத்தாலேயே, இயற்கையான, திரும்ப மாற்ற முடியாதவாறு விஷயங்கள் நடப்பதாலேயே ஏற்பட்டது என்று நிரூபிப்பதன் மூலம் ஏழ்மை மற்றும் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்திலிருந்து இவர்களுடைய கவனங்களைத் திருப்பும் வழிகளைத் தேடினர். தாமஸ் மால்தஸ் இப்பாதையில்தான் பின்னால் சென்றார் என்பது தெரிந்ததே.

## அத்தியாயம் ஐந்து

# மக்கள்தொகை பற்றிய பூர்ஷ்வாக் கருத்தமைப்பின் தோற்றம்

முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் உருவான காலத்தில் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் மீது பேரார்வம் நிலவியது. 18ஆம் நூற்றாண்டில் எர்.வோல்லெஸ், ஜே.தாவுன்சென்ட், பெ.பிரான்க்ளின், ஜே.ஸ்டுவர்ட், வி.கோட்வின் முதலியோர் இப்பிரச்சினைகளை ஒவ்வொரு விதமாக ஆராய்ந்தனர். இந்த நூற்றாண்டின் சமூக சிந்தனை மக்கள் தொகைப் பிரச்சினைகளைப் பல சமயங்களில் சமுதாய முறைகளை மாற்றும் அவசியத்துடன் தொடர்புபடுத்தியது. இது நிலப்பிரபுத்துவத்தின் மீதான இறுதி அரசியல் வெற்றிக்காக (இவ்வெற்றி மாபெரும் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சிக்குப் பின்தான் (1789—1794) அடையப்பட்டது) முதலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தின் பிரதிபலிப்பாக இருந்தது. அதே சமயத்தில் மக்கள்தொகைப் பிரச்சினைகளை, நிலைபெற்று வரும் முதலாளித்துவ ஆதரவு நிலைகளிலிருந்து படிப்படியாக ஆராயத் துவங்குகின்றனர்; இதன் முரண்பாடுகளையும் மக்களின் அதிகரித்து வரும் ஏழ்மையையும் ஏதோ உயிரியல் காரணங்களால் நிர்ணயிக்கப்பட்ட மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஏற்பட்டதாகக் கூறி விளக்க முற்பட்டனர். 18ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே பி. ராலெய்ஹ் இத்தகைய அணுகுமுறையைப் பின்பற்றினர். பட்டினி, பிளேக் நோய், குற்றங்கள், யுத்தங்கள் மற்றும் கருத்தடுப்பு, செயற்கை குடும்பக் கட்டுப்பாடு முதலியன இல்லாமலிருந்தால் பூமியில் அமித மக்கள் பெருக்கம் ஏற்பட்டிருக்கும் என்றுர் இவர்.

சில காலங்கழித்து வோல்லெஸ் இதே போன்ற கருத்தை வெளியிட்டார். பாதகமான சூழ்நிலைகள் இடையூருக இல்லாமலிருந்தால், முக்கியமாக வாழ்க்கைச் சாதனங்களின் பற்ருக்குறை இல்லாதிருந்தால் மனித இனம் மிக விரைவாக

வளரும் என்று நிரூபிக்க இவர் முயன்றார். எந்த ஒரு நாட்டிலும் மற்ற எல்லா சூழ்நிலைகளும் சமமாக இருக்கையில் அந்த நாடு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உணவை உற்பத்தி செய்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அங்கு மக்கள் தொகை அதிகமாயிருக்கும், அமித உணவு மக்கள் திரளினருக்குத் திருமணத்திற்கான ஊக்குவிப்பாகும் என்று இவர் எழுதினார். மக்கள்தொகை அதிகரிப்பிற்குப் ''பெருக்கல் விருத்தி'' தன்மை உண்டு என்று கூறிய வோல்லெஸ் இதன் தொடர்பாய் எதிர்காலத்தில் பூமியின் அமித ஜனத்தொகை பற்றிய கருத்தை முன்வைத்தார். மக்கள்தொகையின் விரைவான வளர்ச்சி சமுதாயத்திற்கு அழிவுகரமானது, ஏனெனில் அதிகரித்துள்ள மக்களுக்கு உணவளிக்க பூமியால் இயலாது என்று இவர் கருதினார். ''ஆட்சி''(அரசு அமைப்பு) மாறுவது மக்கள்தொகையின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்ட வோல்லெஸ், புதிய சமுதாய அமைப்பிற்கு மாறிச் செல்வதானது அமித ஜனத்தொகைப் பிரச்சினைகளையோ, வோல்லெஸ் இதனுடன் இணைக்கும் மக்களின் வறுமையையோ அகற்றாது என்று சுட்டிக் காட்டினார். இவருடைய சமகாலத்தவராகிய தாவுன்செண்ட் பின்வருமாறு எழுதினார்: ஜனப்பெருக்கம் மிக்க ஒரு நாட்டில் யாருமே வறுமையை உணரவில்லை என்று கூறுவது முட்டாள்தனமாகும்; ஏழைகளுக்கு கிடைக்காதவற்றை அவர்களுக்கு அளிக்க முடிந்தால் இதன் மூலம் அவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி அவர்களின் மட்டற்ற இனப்பெருக்கத்திற்கு நாம் வழிகோலியிருப்போம், இது நம் முன்னுள்ள நோக்கத்திற்கு முரண்பாடானதாக இருக்கும். பட்டினியை அகற்றி, வேறொன்றின் இழப்பால் இத்தேவையைப் பூர்த்தி செய்யலாம், ஆனால் அப்படி செய்யும் பட்சத்தில் திருமணம் செய்து கொள்பவர்களின் ஒப்பீட்டு எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டும், ஏனெனில் குடிமக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேறு வழியில்லை. எந்த முயற்சியும் இந்த இடர்ப்பாட்டிலிருந்து வெளியேற்றாது, ஒரு தேவைக்கு வழிகோலி மற்றதை மட்டுப்படுத்துவதை விட அதிக இயற்கையான, எல்லா அம்சங்களிலும் சிறந்த ஒரு வழியை மக்கள் எப்போதுமே கண்டுபிடிக்க மாட்டார்கள். இங்கே தாவுன்செண்ட் தெட்டத்தெளிவாகக் கூறுகிறார்— இயற்கை விதிகளின் தாக்கத்தால் ஏற்படும் வறுமை

யிலிருந்து எப்படி தப்புவது என்று ஏழைகள் தாமாகவே சிந்திக்க வேண்டும்.

மக்கள்தொகைப் பிரச்சினைகளின் மீதான தாவுன்சென்டின் கருத்துக்கள் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்த சுரண்டல் வர்க்கங்களின் ஆதரவாளர்களுக்கு உரித்தானவை. சமுதாய அமைப்பின் குற்றங்களைப் பூசிமெழுகி, பரவலான உழைப்பாளி மக்கள் திரளினரை ஏழ்மையாக்கியதற்கான பொறுப்பை உடைமை வர்க்கங்களிடமிருந்து அகற்றி, ஆதிக்கம் செலுத்தும் சமூக முறைகளுக்கெதிரான போராட்டம் பொருளற்றது, இதனால் உழைப்பாளிகளின் நிலையை மேம்படுத்த இயலாது என்றெல்லாம் கூறி இப்போராட்டத்திலிருந்து உழைப்பாளிகளின் கவனத்தைத் திசை திருப்ப வல்ல வியாக்கியானங்களைத் தேடுவதுதான் இவர்களின் முக்கிய லட்சியமாகும். தாவுன்சென்டின் படைப்புகள் மாபெரும் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சிக்கு முன் எழுதப்பட்டவை. ஆனால் பிரிட்டனில் நடைபெற்ற ஆதி மூலதனத் திரட்சி, விவசாயிகள் பெருமளவில் நிலங்களிலிருந்து விரட்டப்பட்டது, ஏழ்மையடைந்தது, நாடோடிகளாக அலைந்து திரிந்தது ஆகியன சமுதாயத்திலிருந்த உடைமைகளற்ற வர்க்கங்களின் மத்தியில் பெரும் அமைதியின்மையையும் மேற்குடியினர் மற்றும் இவர்களுடைய ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் கவலையையும் ஏற்படுத்தின. தாவுன்சென்ட் மக்களை, நவீன சொற்றொடரைப் பயன்படுத்திச் சொன்னால், ஏதோ ஓர் ஒதுக்கமான, சுயமாக ஒழுங்கமைத்துக் கொள்ளும் அமைப்பாகப் பார்த்தார். இயற்கையான, ஏதோ மனித வரலாற்றிற்கு உரித்தான இனப்பெருக்க விதியின் மூலமாக மட்டுமே இதைத் தவிர்த்து செல்ல முயன்றார்.

பிரான்க்ளினும் ஜனத்தொகைப் பெருக்கத்தை சமுதாய வாழ்வில் ஒரு மிக முக்கிய அம்சமாக ஒப்புக் கொண்டு, தாவரங்களைப் போன்றே விலங்கினங்களும் (மனிதன் உட்பட) வியத்தகு வேகத்தில் இனப்பெருக்கத்தில் ஈடுபட வல்லவை என்று கூறினார். முட்டாள்தனமான நிர்வாகம், யுத்தங்கள், குறிப்பாக வாழ்க்கைச் சாதனங்களின் பற்றாக்குறை போன்ற பல தடைகளால் மனிதகுலத்தின் இனப்பெருக்கம் தடைப்படுகிறது என்று இவர் கருதினார். ஆனால் விரைவான ஜனத்தொகைப் பெருக்கம் இவரை அச்சுறுத்தவில்லை.

மக்களுக்குத் தேவையான வாழ்க்கைச் சாதனங்களை அளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும், ஏனெனில் விரைவான ஜனத்தொகைப் பெருக்கம் தேசிய வல்லமை மற்றும் செல்வத்தின் விரைவான வளர்ச்சியைக் குறிக்கும் என்று இவர் கருதினர். பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்குச் சகலவிதங்களில் ஊக்கமளிக்க வேண்டும் என்பதை இவர் ஆதரித்தார், இள வயது திருமணங்களை ஊக்குவித்தார், பல குழந்தைகளையுடைய குடும்பங்களை எடுத்துக்காட்டாக வைத்தார், அவருடைய காலத்தில் மக்கள் நெருக்கமற்று வாழ்ந்த வட அமெரிக்காவிற்குக் குடிபெயருமாறு அறைகூவல் விடுத்தார். புதிய உற்பத்திச் சக்திகளால் தோற்றுவிக்கப்படும் வாய்ப்புகள் அனைத்தையும் எண்ணிப் பார்க்காத இவர் (இதை அக்காலத்தில் இயற்கையான ஒன்ருகக் கருதலாம்) நீண்ட காலங்கழித்து, விரைவாக அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு உணவுப் பொருட்கள் போதாத ஒரு நிலை தோன்றக் கூடும் என்ருர். ஆனல் அவர் இதைப் பற்றி போகிற போக்கில் மட்டுமே கூறி, இந்த முரண்பாட்டை அகற்றக் குடிபெயர்ச்சிதான் நல்ல வழி என்று சுட்டிக் காட்டுகிருர்.

ஸ்டுவர்ட், நாட்டின் பொருளாதாரத்திற்கும் இதன் மக்கள்தொகைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதையும் நுகர்வு மட்டம், மக்கள் எண்ணிக்கை ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் பொருளாதார வளர்ச்சியைக் கவனிக்க முடியாது என்பதையும் புரிந்து கொண்டு மக்கள்தொகை பற்றிய அதிக ஆழமான கருத்தைத் தெரிவிக்கின்ருர். சுதந்திரமான மக்களின் மத்தியில் (முதலாளித்துவ உற்பத்திச் சூழ்நிலைகளில் வாழும் மக்களை ஸ்டுவர்ட் குறிப்பிடுகிருர்—ஆசிரியர்.) ஏழைகள் தம் உழைப்பால் தம் உணவை வாங்க எந்த அளவிற்கு வாய்ப்பைப் பெறுகின்ருர்களோ அந்த அளவிற்கு மட்டுமே பயிர்த்தொழில் மக்கள் எண்ணிக்கையை அதிகரிக்கிறது. ஸ்டுவர்ட் இயற்கைத் தேர்விலிருந்து (இதைப் பற்றிதான் பின்னல் டார்வின் கூறினர்) கணிசமாக வேறுபட்ட ஏதோ ஒரு பொருளாதாரத் தேர்வைப் பற்றிக் கூட கூறுகிருர்.

ஸ்விட்சர்லாந்து விஞ்ஞானியாகிய ஜே. ஹேரென்ஷ்வான்ட் ஸ்டுவர்ட்டின் சிந்தனைகளை மேற்கொண்டு வளர்த்தார். பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு மக்களி

னங்கள் தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வெவ்வேறு முறைகளைப் பின்பற்றுகின்றனர், அதாவது வெவ்வேறு உற்பத்தி முறைகளைப் பின்பற்றுகின்றனர், வெவ்வேறு மக்கள்தொகை விதிகளுக்கு கட்டுப்பட்டுள்ளனர் என்று இவர் கருதுகிறார். பிரிட்டனில் ஏராளமான ஏழைகளுக்கும் நாடோடிகளுக்கும் வேலையில்லாததைக் கண்டு ஹேரென்ஷ்வான்ட் வியப்படைகிறார். பிரிட்டிஷ் மக்களின் சோம்பேறித்தனத்தாலோ, ஏழைகளைப் பற்றிய கண்மூடித்தனமான விதிகளின் செயற்பாட்டாலோ, அமித இனப்பெருக்கத்தாலோ ஏழைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை விளக்க முடியாது, ஏனெனில் தன்னால் உணவளிக்க வல்ல ஜனத்தொகையின் அளவை பிரிட்டன் எட்டவில்லை என்று இவர் கூறுகிறார். பிரிட்டனில் உள்ள வறுமைக்கு இயந்திர உற்பத்தி முறையின் வளர்ச்சிதான் காரணம் என்றுகூட இவர் கருத்து தெரிவித்தார்.

விரைவிலேயே மக்கள்தொகைப் பிரச்சினைகள் அரசியல் கொந்தளிப்புக்களைத் தூண்டி விட்டன. பரவலான உழைப்பாளி மக்கள் திரளினரின் மிகக் கடுமையான நிலை, முதலாளித்துவத்தைக் கண்டனம் செய்த, அக்காலத்தில் முன்னணியிலிருந்தவர்களின் கவனத்தைக் கவர்ந்தது.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்த மிகப் பெரும் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவராகிய கோட்வின் இவர்களில் ஒருவராவார். விவேகம் எனும் நீதிமன்றத்தின் முன் முதலாளித்துவச் சமுதாயத்தால் தன்னுடைய வாழ்க்கையை நியாயப்படுத்த முடியாது என்ற கருத்தை இவர் ஆதரித்தார். தனிச் சொத்துடைமையை ஒழிக்க வேண்டுமென்றும் தேவைக்கேற்ற வினியோகம் என்ற கோட்பாட்டை நிலைநாட்ட வேண்டுமென்றும் கோட்வின் கோரினார். முடியாட்சி முறையை இயற்கைக்கு மாறான அமைப்பாயும் மன்னர்களை மனிதகுலத்தின் விரோதிகளாயும் கருதி இவர் இன்னமும் கடுமையாக இதைச் சாடினார். **அரசியல் நியாயத்தைப் பற்றிய ஆராய்ச்சி** (1793) என்பதுதான் இவருடைய முக்கியப் படைப்பாகும். இதில்தான் இவர் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்தால் உண்டான தனது பொருளாதார, அரசியல் கருத்துக்களை முழுமையான வடிவில் தருகிறார். இப்படைப்பில் கோட்வின், பரவலான மக்கள் திரளினரின் ஏழ்மை முதலாளித்துவ

முறைகளால் ஏற்படுகிறது என்று நிரூபித்தார். மக்களின் ஏழ்மை மாயையான இயற்கையின் ''ஏழ்மையைச்'' சார்ந் துள்ளது என்று வோல்லெஸ், தாவுன்சென்ட் மற்றும் சிலர் கூறிய கருத்துக்களை இவர் மறுத்தார். நாம் வாழும் பூமியில் முக்கால் பகுதி உழுது பண்படுத்தப்படவில்லையென்றும் ஏற் கெனவே உழப்பட்ட நிலங்களையும் இன்னமும் மேம்படுத் தலாம் என்றும் கோட்வின் கோடிட்டுக் காட்டினர்.

18ஆம் நூற்றுண்டின் எழுத்தாளர்கள் சமுதாய வாழ்வை மிகவும் தனித்துப் பார்த்தாலும் அவர்களும் கூட மக்கள் தொகைப் பிரச்சினைகள் சாராம்சத்தில் சமூக, வரலாற்றுப் பிரச்சினைகள் என்பதை ஓரளவு தெளிவாகப் புரிந்து கொண் டனர். மக்கள் திரளினரின் ஏழ்மைக்குச் சமூக அமைப்பு தான் காரணம் என்று கூறிய கோட்வினையும் மற்றவர்களை யும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்கள் சகலவிதங்களிலும் களங்கப்படுத்த முயன்றன, தொழிலாளி வர்க்கத்தின் இன் னல்களுக்குக் காரணம் இயற்கையே என்று நிரூபிக்கப் பாடு பட்டன.

பரவலான மக்கள் திரளினரின் வறுமைக்கும் பட்டினிக் குமான பொறுப்பு முழுவதையும் உழைப்பாளிகளின் மீதே போடும் முயற்சிகள் 18ஆம் நூற்றுண்டின் இரண்டாம் பாதி யில் சிதறிப் போன நிலப்பிரபுத்துவ உறவு முறைகளின் ஆதர வாளர்கள் மத்தியிலும் உதித்தெழுந்து கொண்டிருந்த புதிய முதலாளித்துவ உறவு முறைகளின் ஆதரவாளர்கள் மத்தி யிலும் பரவலாகப் பரவியிருந்தன. இதைப் போன்ற கருத் துக்கள் பின்னுல் தாமஸ் மால்தசின் பெயரால் மால்தஸ்வா தம் என்றழைக்கப்பட்டன. இவர்தான் **மக்கள்தொகை விதியைப் பற்றிய ஆராய்ச்சி, இது** சமுதாயத்தின் **எதிர்கால அமைப்பை எப்படிப் பாதிக்கிறது, கனவான்கள் கோட்வின், கொன்டொர்ஸே, மற்ற எழுத்தாளர்களின் கருத்துக்களைப் பற்றிய குறிப்புகள்** எனும் படைப்பின் ஆசிரியராவார்.

தாமஸ்-ராபர்ட் மால்தஸ் (1766—1834) **மக்கள்தொகை விதியைப் பற்றிய ஆராய்ச்சி...** எனும் தன் படைப்பை முதன் முதலாக 1798இல் வெளியிட்டார். இதைத் தவிர அவர் **அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்** எனும் படைப் பையும் இன்னும் சிலவற்றையும் எழுதினர்.

மால்தசின் **மக்கள்தொகை விதியைப் பற்றிய ஆராய்ச்சி...** என்ற நூலைச் சித்தரிக்கும் மார்க்ஸ், இது ''தனது ஆரம்ப

வடிவில் டிஃபோ, ஸர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட், தாவுன்செண்ட், பிரான்க்ளின், வோல்லெஸ் முதலியோரிடமிருந்து எடுக்கப்பட்ட சிறுபிள்ளைத்தன-மேற்போக்கான, மத அகந்தையுள்ள ஒரு இலக்கியத் திருட்டைத் தவிர வேறில்லை. இதில் சுயமான ஒரு கருத்து கூட இல்லை''* என்றார். **மக்கள்தொகை விதியைப் பற்றிய ஆராய்ச்சி...** என்ற நூலை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்தால் இது தெளிவாகிறது. இதில்தான் மால்தஸ் மக்கள்தொகை பற்றிய ''தனது'' பிற்போக்குத் தத்துவத்தை முன்வைக்கிறார்.

**மக்கள்தொகை விதியைப் பற்றிய ஆராய்ச்சி...** என்ற மால்தசின் இப்படைப்பு, பிரிட்டனில் பெரும் நிலவுடைமையாளர்கள் மற்றும் முதலாளி வர்க்கத்தினர் பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துக்களுக்கு எதிராக மேற்கொண்ட சூழ்ச்சிகளால் அக்காலத்தில் ''பரபரப்பான பிரசுரமாகியது''. பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் அமித ஜனத்தொகை பற்றிய மால்தசின் கோட்பாட்டைப் பிடித்து கொண்டது, ஏனெனில் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான சகலவித நாட்டங்களையும் கிள்ளியெறியும் ஒரு பெரும் அம்சத்தை இது இந்தக் கோட்பாட்டில் கண்டது.

மால்தஸ், மக்கள்தொகை பற்றிய இயற்கை விதியை (அதாவது சாராம்சத்தில் உயிரியல் விதியை) மனிதன் மற்றும் சமுதாயத்தை மேம்படுத்துவது சம்பந்தமான ஒரு சில தத்துவங்களை விளக்குவதற்குப் பயன்படுத்த முயன்றார். இத்தத்துவங்களின் மீதுதான் அக்காலத்தில் சமுதாயக் கருத்து ஒருமுனைப்படுத்தப்பட்டிருந்தது. மக்கள்தொகைக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையிலுள்ள இயற்கையான உறவுகளை ஆராயும் போது மால்தஸ், இவற்றின் இடையிலான முரண்பாடுகள் அகற்றப்பட்ட ஒரு சமுதாய அமைப்பைப் பற்றிய கனவுகள் நிறைவேறாதவை என்று காட்ட முற்பட்டார்.

மால்தஸ் மிகத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார்: மோசமாக ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயத்தில் கூட மனித அமைப்புகளால் ஏற்படுத்தப்படும் துன்பங்கள் இயற்கையாலேயே ஏற்படுத்தப்படும் இன்னல்களுடன் ஒப்பிடுகையில்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **நூல் திரட்டு**, தொகுதி 23, பக்கம் 630 (ருஷ்யப் பதிப்பு).

ஒன்றுமே இல்லாதவையாகும். முடிவு தானுகவே வருகிறது: ஏற்றுக் கொள்ள முடியாத மனித அமைப்புகளுக்கு எதிராக எவ்வளவு போராடினுலும் இருக்கின்ற நிலைமையையும் மனித குலத்தால் வெல்ல முடியாத, திருப்பியமைக்க முடியாத இயற்கை விதிகளின் செயற்பாட்டையும் மாற்ற முடியாது. சீர்படுத்தும் திட்டங்களை முன்மொழிவதை விட இயற்கை வழங்கும் சீர்பாட்டு முறைகளில் திருப்தி கொள்வதைச் சுட்டிக் காட்டுவதில்தான் மால்தசின் லட்சியம் அடங்கியிருந்தது. மால்தசின் வார்த்தைகளின்படி மக்கள்தொகை விதியின் சாரம் ''தம்மிடம் உள்ள உணவின் அளவு அனுமதிப்பதை விட விரைவாக இனப்பெருக்கத்தில் ஈடுபட எல்லா உயிரினங்களுக்கும் உள்ள நிரந்தர நாட்டத்தில்'' அடங்கியுள்ளது. இந்த விதி ''எல்லா காலங்களிலும் மனிதன் வாழும் அல்லது வாழப் போகும் எல்லாச் சூழ்நிலைகளிலும்'' செயல்படும். மால்தசின் கருத்துப்படி, பொருளாதார வசதியற்ற பெற்ருேர்களுக்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவன், இருக்கும் வாழ்க்கைச் சாதனங்களைப் பொறுத்த மட்டில் தேவையற்றவனுகிருன். ''மாபெரும் உலகில் அவனுக்கு இடமில்லை. அவனை வெளியேறுமாறு இயற்கை கட்டளையிடுகிறது, தன் கட்டளையை நிறைவேற்றுவதில் சிறிதும் காலதாமதம் செய்வதில்லை''.

மால்தஸ், உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிச் சொத்துடைமையைக் குறிப்பிட்டு இந்தச் சொத்துடைமையை முழுமையாக அப்படியே தக்கவைக்க வேண்டும் என்கிருர். சமுதாய அமைப்பை முற்றிலுமாக உடைப்பதால் மக்களுக்கு ஏழ்மையிலிருந்தும் பட்டினியிலிருந்தும் விடுதலை கிடைக்காது என்று இவர் அறிவிக்கிருர். கலகங்களில் பங்கேற்கும் கும்பல்கள் அமித ஜனத்தொகையிலிருந்துதான் வருகின்றன என்று அவர் மக்களைக் கண்டு அஞ்சுகிருர். ஆக, மால்தசின் கருத்துப்படி பரவலான உழைப்பாளி மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் பட்டினிக்கும் இயற்கையும் மனிதனுமே காரணம். ஏழ்மையின் முக்கியமான, நிரந்தரமான காரணங்கள் ஆட்சி முறையையோ, சொத்து முறைகேடாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதையோ சிறிது மட்டுமே சார்ந்திருக்கின்றன அல்லது முற்றிலும் சார்ந்திருக்கவில்லை; செல்வந்தர்களால் ஏழைகளுக்கு வேலையையும் உணவையும் அளிக்க முடியாது, எனவே செல்வந்தர்களிட

மிருந்து வேலையையும் உணவையும் கோர ஏழைகளுக்கு சாரத்திலேயே உரிமையில்லை. மேற்கொண்டு இவர் சொல்லுகிறார்: தமது வேதனைகளுக்கு மக்கள் முக்கியமாகத் தம்மைத் தாமே குற்றஞ்சாட்டிக் கொள்ள வேண்டும்.

மால்தசுடைய''தத்துவத்தின்'' வாதம் தெட்டந்தெளிவு. **மக்கள்தொகை விதியைப் பற்றிய ஆராய்ச்சி...** என்ற இவருடைய படைப்பைப் பகுப்பாய்வு செய்யும் போது, லுட்டைடுகளும் சார்ட்டிசமும் குரலெழுப்பிய ஆண்டுகளில், ஐரோப்பிய மக்களை ஒரு கலக்கு கலக்கிய முதலாளித்துவப் புரட்சி பிரான்சில் வெற்றி பெற்ற சமயத்தில் பிரிட்டிஷ் ஆதிக்க வர்க்கமாகிய நிலவுடைமையாளர்களும் தொழிலதிபர்களும் வங்கியதிபர்களும் மால்தசின் ''மக்கள்தொகைத் தத்துவத்தை'' ஏன் பற்றிக் கொண்டு தொங்கினர் என்பது விளங்குகிறது. இவர்கள் மால்தசின் ''போதனையை'' மக்கள் மத்தியில் பரப்ப முயன்றனர். இதை மால்தசே சிபாரிசு செய்கிறார், ஏனெனில் இவர் பின்வருமாறு கருதுகிறார்: மக்கள் திரளினரின் எல்லா வேதனைகளும் இவர்களுடைய சொந்தக் குற்றத்தால்தான் உண்டாகின்றன என்று நம்ப வைக்க முயன்றால் இவர்கள் சாந்தமானவர்களாக, சொன்ன சொல் கேட்பவர்களாக மாறுவார்கள்; உணவு போதாமல் போகும் போது இவ்வளவு எளிதாக ஆத்திரமடைய மாட்டார்கள்; ஆசை காட்டும், ஆத்திரமூட்டும் நூல்களால் இவர்களைக் கிளர்ந்தெழச் செய்வது கடினமானதாக ஆகும், ஏனெனில் ஊதியமும் குடும்பத்தைப் பராமரிப்பதற்கான சாதனங்களும் புரட்சியை எவ்வளவு குறைவாகச் சார்ந்துள்ளன என்பது அவர்களுக்குப் புரிந்திருக்கும்.

தன் வாழ்நாள் பூராவும் மால்தஸ் ஆதிக்க வர்க்கங்களுடைய நலன்களின் விசுவாசம் மிக்க பாதுகாவலராக இருந்தார். இவர் சமுதாயத்தின் சமூக அமைப்பில் எவ்வித மாற்றங்களையும் செய்யக் கூடாதென திட்டவட்டமாக எதிர்த்தார். நல்லறிவுப் பழக்கங்கள் மக்களிடையே பரவ முதல் நிபந்தனை சொத்துடைமையை முழுமையாகத் தக்கவைப்பதாகும் என்று இவர் இடையறாது கூறி வந்தார். ''வழிகாட்டிகளுக்கு'' மக்களைக் கிளர்ச்சிக்குள்ளாக்கி, மக்கள் தாமே தம் தலை மீது சுமத்திய வேதனைகளுக்கு அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்ட வேண்டும் என்று நம்ப வைக்க அனுமதியளிக்கப்பட்டுள்ள வரை அனேகமாக அதிருப்தியைத்

தூண்டி விட்டு சச்சரவு விதைகளை விதைக்கலாம் என்று மால்தஸ் கூறினர். இவர் மேற்கொண்டு கூறினர்: ஆட்சியிலுள்ள அரசாங்கத்தைத் தூக்கியெறிந்த பின் மக்கள் அதே ஏழ்மைச் சுமையின் கீழ் தம் வெறுப்பை, முந்தைய ஆட்சியாளர்களின் இடத்திற்கு வந்தவர்களின் மீது செலுத்துகின்றனர்... அதே காரணத்தால் ஏற்படும் கலகங்களுக்கு முடிவே இருக்காது.

ஊதிய அளவு சமூக உறவுகளைப் பொறுத்ததல்ல, மாருக மக்கள் எண்ணிக்கையைப் பொறுத்துள்ளது என்ருர் மால்தஸ். பிறப்பு விகிதம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமானதோ அவ்வளவுக்கவ்வளவு ஊதியம் குறைவானது. வேலையாட்கள் நிறைந்து வழியும் சந்தை, ஒவ்வொரு வேலையாளுக்கும் உயர்வான ஊதியம், இவையிரண்டும் முற்றிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகாத இரண்டு விஷயங்களாகும். ஊதிய அளவு மற்றும் இதன் மாற்றங்களை ''இயற்கைக்'' காரணியால், தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கைக்கும் நிரந்தர தொழிலாளர் ஊதிய நிதிக்கும் உள்ள விகிதத்தால் மால்தஸ் நிர்ணயிக்கிருர். மால்தசின் கருத்துப்படி, மக்கள் எண்ணிக்கை அதிகரிக்கையில் தனிநபர் ஊதியம் குறைவது மக்களின் இனப்பெருக்கத்தைத் தடுத்து நிறுத்துகிறது. மக்களில் கீழ்மட்டத்தினரின் நிலை சகலவிதங்களிலும் மோசமடைய மால்தஸ் இடையருது ஆதரவளித்தார். ஏழைகளைப் பற்றிய சட்டங்களை அகற்ற வேண்டுமென இவர் உறுதியாகக் கோரினர். சட்டங்களை இயற்றி ஒரு வருடம் கழித்து நடந்த திருமணங்களினல் பிறக்கும் குழந்தைகளுக்குத் திருச்சபை உதவித் தொகைகளை மறுக்கும் சட்டங்களை இயற்ற வேண்டுமென இவர் சுட்டிக் காட்டினர். சட்ட விரோதமாகப் பிறந்த குழந்தைகளைத் திருச்சபையின் பொறுப்பில் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்றும் இறுதியாக, ஏழைகளுக்குக் கண்டிப்பாக உதவி மறுக்கப்பட வேண்டுமென்றும் இவர் கூறினர்.

மால்தசின் இந்த ஆலோசனைகளைப் பயன்படுத்திக் கொள்ள பூர்ஷ்வாச் சட்ட முறை சிறிதும் காலந்தாழ்த்தவில்லை. 1800ஆம் ஆண்டில் பிரிட்டனில் ஏழைகளைப் பற்றிய சட்டம் மதிப்பிழந்தது. மால்தசினுடைய தத்துவத்தின் அடிப்படையிலான சட்ட நகல் 1807இல் நாடாளுமன்றத்

தில் கொண்டு வரப்பட்டது. இது தொழிலாளர்களின் ஊதியத்தின் மீதான கண்காணிப்பை வலுப்படுத்துவதை முன்னனுமானித்தது.

மார்க்சும் எங்கெல்சும் கடுங்கோபத்துடன் இந்தப் ''பொய்யான, முகஸ்துதியான பாதிரியின்'' கருத்துக்களைச் சாடினர். மார்க்சின் கருத்துப்படி மால்தசின் சிந்தனைகள் ''பெரிதும் கீழ்மையானவை''. எங்கெல்ஸ் மால்தசின் தத்துவத்தை ''இழிவான, கீழ்மையான கருத்து என்றும் இயற்கை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான வெறுக்கத் தக்க நிந்தை என்றும்''* தூற்றினர். **இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை** எனும் கட்டுரையில் எங்கெல்ஸ், பூமியின் அமித ஜனத்தொகை குறித்தும் வாழ்க்கைக்குப் போதுவான அளவு சாதனங்களை உற்பத்தி செய்ய இயலாமை பற்றியும் முதலாளித்துவச் சமுதாயத்தில் உழைப்பாளிகள் அனுபவிக்கும் வேதனைகளுக்கு அவர்களே காரணம் என்றும் மால்தஸ்வாதிகள் கூறிய கருத்துக்கள் யாவும் முதலாளி வர்க்கத்தின் தரப்பிலிருந்து பாட்டாளி வர்க்கத்தை நோக்கி தெட்டந்தெளிவாக அறிவிக்கப்பட்ட யுத்தமாகும் என்றும் சுட்டிக் காட்டினர்.

மால்தசின் ''மக்கள்தொகைத் தத்துவத்தின்'' அடிப்படைக் குறைகள் எல்லாவற்றிற்கும் மேலாக முறையியல் ரீதியான ஆதாரமின்மையில் வெளிப்படுகின்றன. நிரந்தரமாக, எல்லா இடங்களிலும் இயங்கும், மக்கள்தொகையின் ஏதோவொரு இயற்கையான விதியைக் கண்டுபிடிக்க மால்தஸ் முற்படுகிறர். மால்தஸ், தம் தத்துவத்தின் முன்னேடிகளை உதாரணமாகக் கொண்டு மக்கள்தொகைப் பிரச்சினைகளின் பாலான வரலாற்று ரீதியான அணுகுமுறையை அலட்சியப்படுத்தினர், மக்கள்தொகையின் புனருற்பத்தி மற்றும் நிலை சம்பந்தமான பிரச்சினைகளில் சமூக அமைப்பின் முக்கியத்துவத்தை நிராகரித்தார்.

மனிதகுலத்தின் உற்பத்திச் சக்திகள் இயற்கையில் மிகப் பிரம்மாண்டமானவை, குறிப்பாக உழைப்பையும் விஞ்ஞானத்தையும் பிரயோகித்தால் வயல்வெளிகளின் விளைச்சலை

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **நூல் திரட்டு**, தொகுதி 1, பக்கம் 565 (ருஷ்யப் பதிப்பு).

யும் கால்நடை வளர்ப்பின் உற்பத்தியையும் மிகவும் பெருக்கலாம் எனும் கருத்தை மார்க்சிய-லெனினிய ஆசான்கள் பன்முறை ஆதாரப்படுத்தினர். சார்புநிலே அமித உற்பத்தி நெருக்கடிகளும் மால்தசினுடைய ''தத்துவத்தின்'' நடைமுறை ரீதியான மறுப்பாகும். தொழில்துறை சுழற்சிப் போக்கைப் பற்றிய விவரங்களும் இத்தத்துவத்தை நிராகரிக்கின்றன. வேலேயில்லாத் திண்டாட்டம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் அசாதாரணமான இனப்பெருக்கத்தின் விளேவு என்றும் ஊதியத்தின் அளவு தொழிலாளர்களுடைய முழு எண்ணிக்கையின் மாற்றத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் மால்தஸ் கூறிஞர். ஆஞல் வேலேயில்லாதவர்களின் எண்ணிக்கை தொழில்துறை சுழற்சியில் ஏற்படும் கடுமையான ஊசலாட்டங்களேப் பொறுத்ததேயன்றி மக்கள் எண்ணிக்கையின் மாற்றத்தை இது சிறிதளவே சார்ந்துள்ளது என்பது எப்போதோ நிரூபிக்கப்பட்டு விட்டது. ஊதிய மாற்றமும் தொழில்துறை சுழற்சியில் கடும் ஊசலாட்டங்களுக்கு உட்படுத்தப்படுகிறது, ஆஞல் இது தொழிலாளர்களின் எண்ணிக்கை மாற்றங்களேப் பொறுத்தது அல்ல. மொத்தத்திலும் பொதுவிலும் பார்க்கும் போது ஊதிய அளவின் எல்லா மாற்றங்களும் தொழில்துறை சுழற்சிக் கட்டங்களுடைய மாற்றத்திற்கேற்றபடி தொழில்துறை சேமப் படை பெருகுவதாலும் குறைவதாலும் மட்டுமே நிர்ணயிக்கப்படுகின்றன. ''எனவே இவை தொழிலாளர்களுடைய முழு எண்ணிக்கையின் மாற்றத்தால் நிர்ணயிக்கப்படவில்லே, மாருக, எந்த விகிதத்தில் தொழிலாளி வர்க்கம் இயங்கும் படையாகவும் சேமப் படையாகவும் பிரிகிறதோ அந்த மாறி வரும் விகிதத்தாலும், அமித மக்களின் சார்புநிலேயான அளவுகள் அதிகமாவதாலும் குறைவதாலும், எந்த ஒரு விகிதத்தில் இந்த அமித ஜனத்தொகை கிரகிக்கப்படுகிறதோ, விடுவிக்கப்படுகிறதோ அந்த விகிதத்தாலும் இவை வரையறுக்கப்படுகின்றன''* என்று மார்க்ஸ் எழுதிஞர்.

கோட்வினும் அக்காலத்தின் மற்ற முற்போக்குச் சிந்தனேயாளர்களும் பிரச்சாரம் செய்த ''சமத்துவத்தின்'' கடும் எதிரியாக, சமூகப் புரட்சியின் விரோதியாக, நிலப்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **நூல் திரட்டு**, தொகுதி 23, பக்கம் 651 (ருஷ்யப் பதிப்பு).

பிரபுத்துவ மேற்குடியினரின், பின்னல் முதலாளி வர்க்கத்தினரின் பாதுகாவலனுக மால்தஸ் விளங்கினர்.

மக்கள்தொகை பற்றிய ஆராய்ச்சிகளும் மனிதகுலத்தின் பெருக்கத்திற்கான வாய்ப்புகளும் எனும் படைப்பில் கோட்வின் மால்தசை ஆழ்ந்த, விரிவான விமரிசனத்திற்கு உட்படுத்தினர். முதலில் கோட்வின், பெருக்கல் விருத்தி பற்றிய மால்தசின் கற்பிதக் கொள்கை (இது வரலாற்று மற்றும் புள்ளிவிவர இயல் ஆராய்ச்சிகளுக்கு முரண்பாடானது) முற்றிலுமாக ஆதாரமற்றது என்று காட்டினர். 1807இல், வி. ஹஸ்லிட் எழுதிய மக்கள்தொகை பற்றிய ரெவரெண்ட் மால்தசின் கட்டுரைக்குப் பதில் எனும் படைப்பு வெளிவந்தது. மால்தசை விமரிசனம் செய்த ஹஸ்லிட், குறைகளும் வறுமையும் உணவுப் பற்ருக்குறையினல் மட்டுமின்றி அகற்றப் படத் தக்க மற்ற காரணங்களாலும் ஏற்படலாம் என்பதாலும், உணவுப் பொருளின் உற்பத்தியைப் பெருக்கி இதைச் சமமாக வினியோகிப்பதாலும் பிறப்பு விகிதத்தை விவேகமாகக் கட்டுப்படுத்துவதாலும் உணவுப் பற்ருக்குறையைப் போக்கலாம் என்பதாலும் வறுமை என்பது மனிதச் சமுதாயத்தின் வாழ்க்கையில் தவிர்க்க இயலா கொடுமையல்ல என்று எழுதினர். மால்தஸ் மகத்தான, மதிப்பு மிக்க உண்மைகளேக் கண்டுபிடிக்க மட்டும் விரும்பவில்லே, அவர் ஒழுக்க உண்மைகளுக்கு எதிராகப் போராடவும் விரும்பினர் என்று ஹஸ்லிட் எழுதினர்; விஷயங்களேத் திரித்துக் கூறுவதன் மூலம், நிலவக் கூடிய மூடநம்பிக்கைகள் மற்றும் நலன்களுக்கேற்ப தன் கண்ணேட்டங்களே வெளியிட மால்தஸ் முயன்ருர்.

மால்தஸ் உயிர்வாழ்ந்த போதே மால்தஸ்வாதத்தைப் பற்றி தோன்றிய விமரிசனம் இத்தத்துவத்தின் அடிப்படையை சந்தேகத்திற்குள்ளாக்கியது. இதன் முறையியல் மற்றும் நடைமுறை ஆதாரமின்மை மார்க்சிய-லெனினிய ஆசான்களால் முடிவாக அம்பலப்படுத்தப்பட்டது. மால்தசினுடைய தத்துவத்தின் ஆரம்ப வடிவம் விரைவிலேயே மறக்கப்பட்டது, ஏனெனில் மால்தசே, வளர்ந்து வந்த இளம் முதலாளி வர்க்கத்தின் நாட்டங்களுக்கு எதிராக பெரும் நிலவுடைமையாளர்கள், நிலப்பிரபுக்களின் வர்க்க நிலேகளே ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டார். பின்னல் டே. ரிக்கார்டோ மால்தசின் தத்துவத்தை ஒப்புக்கொண்

டார். ஆனால் இவர் இதைப் பயன்படுத்திய வடிவத்தில் இது பெரும் நிலவுடைமையாளர்களுக்கு எதிரானதாக அமைந்தது.

''மண்வளம் குறைந்து வருவதைப் பற்றிய விதி'' என்றழைக்கப்படுவதுடன் தொடர்புடைய பிரச்சினைகளைச் சுருக்கமாகவாவது நாம் பார்க்காவிடில் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் மீதான நிலப்பிரபுத்துவ மற்றும் பூர்ஷ்வா ஆதரவாளர்களின் கருத்துக்களைப் பற்றிய விமரிசன பகுப்பாய்வு முழுமை பெறாது.

பூமியின் பால் மேன்மேலும் அதிகமான கோரிக்கைகளை எந்த அளவிற்கு வைக்கும்படி மக்கள் கட்டாயப்படுகின்றார்களோ அந்த அளவிற்கு பூமி தன் மண்வளத்தை இழக்கிறது எனும் கருத்து நிலைதான் மக்கள்தொகை பற்றிய மால்தசின் தத்துவத்திற்கு யதார்த்தமான அடிப்படையாக இருந்தது என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். பூமி ஒப்பீட்டளவில் மேன்மேலும் மண்வளம் குறைந்ததாகிறது. இந்தக் கருத்து நிலையில்தான் மால்தசின் சீடர்கள் இன்றுவரை தம் ஆதாரத்தைத் தேடுகின்றனர். ஆனால் பூர்ஷ்வா விஞ்ஞானிகள் உட்பட பல விஞ்ஞானிகள் விஷயங்களை விஞ்ஞான ரீதியாகப் பகுப்பாய்வு செய்ததும் நடைமுறையும் இக்கருத்து நிலை முழுக்க முழுக்க ஆதாரமற்றது என்பதைக் காட்டுகின்றன. ஏதோவொரு இயற்கை விதியின் செயற்பாட்டில் விஷயம் இல்லை, நிலம் பயன்படுத்தப்படும் வடிவத்தில், சமுதாயத்தின் சமூகக் கட்டமைவில்தான் விஷயம் அடங்கியுள்ளது. ''மண்வளம் குறைந்து வருவதைப் பற்றிய விதி'' முதலாளித்துவம் உருவாகிய காலகட்டத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. ஜே. ஆண்டர்சன் என்பவர்தான் இவ்விதியைத் தோற்றுவித்தார்.

ஆண்டர்சன் இந்தத் தத்துவத்தை முதன்முதலாக ஆடம் ஸ்மித்தின் காலத்தில் வெளியிட்டதாயும் பின்னர் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை பல்வேறு படைப்புகளில் திரும்பத் திரும்ப எடுத்துரைத்ததாயும் பின் 1815 இல், ''இலக்கியத் திருட்டில் பொதுவாகக் கைதேர்ந்த மால்தஸ் இதைத் தன் கையிலெடுத்துக் கொண்டதாயும் (இவருடைய மக்கள்தொகைத் தத்துவம் பூராவும் வெட்கங்கெட்ட இலக்கியத் திருட்டாகும்) இதை வெஸ்ட் அப்போதே ஆண்டர்சனைச் சாராது தனியே வளர்த்ததாயும் இதை 1817இல்

ரிக்கார்டோ மதிப்பு பற்றிய பொதுத் தத்துவத்துடன் இணைத்ததாயும் இது அக்காலம் தொட்டு ரிக்கார்டோவின் பெயரில் உலகம் முழுவதும் சுற்றி வந்துள்ளதாயும் இது 1820இல் ஜேம்ஸ் மில்லால் (ஜான் ஸ்டுவர்ட் மில்லின் தந்தை) கொச்சைபடுத்தப்பட்டதாயும் இது இறுதியாக திரு. ஜான் ஸ்டுவர்ட் மில்லாலும் நைந்து போன பள்ளி வறட்டுத் தத்துவமாக திருப்பிச் சொல்லப்பட்டதாயும்''* மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

பெரும் பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணர்கள் (ரிக்கார்டோவின் சமகாலத்தவர்களும் சீடர்களும்) ரிக்கார்டோவின் மால்தஸ்வாதத் தவறுகளைக் கண்டனம் செய்தனர்.

வலதுசாரி சோஷலிஸ்டுகளும் திருத்தல்வாதிகளும் ''மண்வளம் குறைந்து வருவதைப் பற்றிய விதியின்'' ஆசிரியர்களை ஆதரித்தனர். 1881ஆம் ஆண்டிலேயே கார்ல் காவுத்ஸ்கி இந்த ''விதியைப்'' பற்றிய பிரச்சினையில் மால்தசின் பக்கம் நின்றார். இறுதியாக மால்தசின் தத்துவத்தை ஆதரித்த காவுத்ஸ்கி, மால்தசின் விதி பொருளாதாரத்திலும் உயிரியலிலும் ஒரே மாதிரியாக முக்கியமான விதியாகும் என்று அறிவித்தார்.

கற்பனையான, ''மண்வளம் குறைந்து வருவதைப் பற்றிய விதியை'' வி.இ. லெனின் தனது பல படைப்புகளில் கண்டனம் செய்தார். பூமியை உழும் விஷயத்தில் மேன்மேலும் மோசமான நிலங்களுக்கு மாறிச் செல்வதானது சாரமற்ற சூட்சுமமாகும், இது மிக முக்கியமானதை (தொழில் நுட்ப மட்டம், உற்பத்திச் சக்திகளின் நிலை) விலக்கி வைக்கிறது என்பது சிறிதளவு சிந்தித்தால் கூடத் தெளிவாகும் என்று லெனின் எழுதினார்.** இவ்வாறாக ''மண்வளம் குறைந்து வருவதைப் பற்றிய விதி'' மால்தஸ்வாதத்துடன் மிக நெருக்கமான முறையில் தொடர்புடையது. இந்த ''விதி'' மால்தசின் ''மக்கள்தொகை விதியைத்'' தத்துவார்த்த ரீதியாக ஆதாரப்படுத்துவதற்கான முயற்சியாகும். 1851 ஜனவரி 7இல் மார்க்ஸ் எங்கெல்சிற்கு எழுதிய கடிதத்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 515 (ருஷ்யப் பதிப்பு).

** வி.இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 5, பக்கம் 101 (ருஷ்யப் பதிப்பு).

தில் இதைப் பற்றிக் குறிப்பிட்டார். ஒரே நிலத்தில் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்ட ஒரே அளவு மூலதனம் ஏதோ அளவு வெவ்வேறான விளைபொருளைத் தருவதாக ரிக்கார்டோ கூறியதைச் சுட்டிக் காட்டிய மார்க்ஸ், இதுதான் மால்தசின் மக்கள்தொகைத் தத்துவத்திற்கு அடிப் படையாக விளங்கியதாக எழுதினார்.*

மண்வளம் இடையறாது மாறி வருகிறது என்றும் இது இயற்கைச் சூழ்நிலைகளை மட்டுமின்றி சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகளையும் பொறுத்துள்ளது என்றும் இந்தச் சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகள் தம் பங்கிற்கு விஞ்ஞான வளர்ச்சியின் தன்மையையும் விஞ்ஞான சாதனைகளை விவ சாயத்தில் பயன்படுத்துவதையும் நிர்ணயிக்கின்றன என்றும், அதாவது இறுதியில் மண்வளம் உற்பத்தி முறையைப் பொறுத்துள்ளது என்றும் கா. மார்க்சும் வி.இ. லெனினும் காட்டினர். கொச்சையான அரசியல் பொருளாதாரம் மால் தசின் மூலம் பிற்போக்கான, மனிதவிரோத மக்கள் தொகைத் தத்துவத்தை முன்வைத்தது. குறிப்பிட்ட வர லாற்றுச் சூழ்நிலைகளால் தோன்றிய இது, மக்கள்தொகை சம்பந்தமாக, சிதறிக் கொண்டிருந்த நிலப்பிரபுத்துவ உறவு முறைகளின் ஆதரவாளர்களிடையே (இவர்கள் மக்களின் வறுமைக்கான பொறுப்பு முழுவதையும் இயற்கையின் மீது திணிக்க முயன்றனர்) நிலவிய மிகப் பிற்போக்கான எல்லாவற்றையும் தன்னுள் கொண்டிருந்தது.

இன்று நவீன மால்தஸ்வாதம் பூர்ஷ்வா சித்தாந்தவாதி களால் பிரச்சாரம் செய்யப்படுகிறது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிக் காலகட்டத்தில் நவீன மால்தஸ்வாதம் தொடர்ந்து பூர்ஷ்வா உற்பத்தி உறவுகளின் ஆதரவாக இருந்து வருகிறது; முதலாளித்துவ நாடுகளில் உழைப்பாளி மக்கள் திரளினரின் கவனத்தை அடிப்படை சமூகப் பிரச் சினைகளின் தீர்விலிருந்து திருப்பவும் ஏகாதிபத்திய யுத்தங் களை நியாயப்படுத்தவும் சுயமான அரசியல், பொருளாதார வளர்ச்சிப் பாதைக்கு வந்துள்ள நாடுகளில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் பொருளாதார ஆதிக்கத்தைத் தக்கவைக்க வும் இது தொடர்ந்து உதவி வருகிறது.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 24, பக்கம் 149 (ருஷ்யப் பதிப்பு).

# அத்தியாயம் ஆறு

## மக்கள்தொகைப் பிரச்சினைகளைப் பற்றிய ருஷ்ய சமுதாய சிந்தனை

நீண்ட நெடுங்காலமாகவே ருஷ்யாவில் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் பால் ஆர்வம் செலுத்தப்பட்டு வருகிறது. எழுத்துக்கள் தோன்றிய காலந்தொட்டே இது பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டு வருகிறது. மத நூல்கள், தத்துவ ஞானக் கட்டுரைகள், நடைமுறைப் பிரமுகர்களின் பேச்சுகள் முதலியன ருஷ்யாவில் மக்கள்தொகை சம்பந்தமான பொது மற்றும் தனிப் பிரச்சினைகளின் பாலான இந்த ஆர்வத்தைப் பிரதிபலித்தன.

18ஆம் நூற்றுண்டு வாக்கிலேயே தம் கால ருஷ்யாவின் முக்கிய மக்கள்தொகைப் பிரச்சினைகளை ஆராயவும் இவற்றைத் தீர்க்கும் வழிகளை நிர்ணயிக்கவும் பல சமூகப் பிரமுகர்கள் ஆர்வம் காட்டினர். இவர்களில் ஒருவராகிய இ.தி. பொசஷ்கோவ் தன் படைப்புகளில் மக்கள்தொகைப் பிரச்சினைகளைப் பற்றி பன்முறை குறிப்பிட்டார். இவருடைய அடிப்படைக் கருத்தே (அதாவது மக்களின் செல்வம் அரசின் செல்வமாகும் என்ருர் இவர்) அக்காலத்தில் பெரிதும் அசாதாரணமாக இருந்தது. ''எந்த ராஜாங்கத்தில் மக்கள் வளமானவர்களோ அந்த ராஜாங்கமும் வளமையானது, எந்த ராஜாங்கத்தில் மக்கள் ஏழ்மையானவர்களோ அதனுல் வளமையானதாக இருக்க முடியாது'' என்று இச்சிறப்பு மிகு ருஷ்ய சிந்தனையாளர் எழுதினுர். ருஷ்ய அரசின் வறிய தன்மையை அகற்றும் வழிகளைச் சுட்டிக் காட்டிய பொசஷ்கோவ் முதலாவதாக, குடிமக்கள் அனைவரையும் உற்பத்தித் திறனுள்ள உழைப்பிற்குப் பரவலாகக் கவர்ந்திழுக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டினுர். குடிமக்களின் சமூக ரீதியாகப் பயனுள்ள உழைப்புதான் சமுதாய வாழ்க்கை மற்றும் செல்வத்தின் அடிப்படையாகும் எனும் முடிவை அவர் நேரடியாகச் சொல்லாவிட்டாலும் மேற்கூறிய வாதங்களிலிருந்து இது தெளிவாகிறது.

புதிய தொழில்துறை நிறுவனங்களுக்கான உழைப்புச் சக்தியின் மூலாதாரங்களைப் பற்றிய பிரச்சினைகளுக்கு பொசஷ்கோவ் பன்முறை திரும்பி வந்தார். பண்ணையடிமை விவசாயிகளின் உழைப்பை (இவர்கள் குளிர்காலத்தில், வயல் வேலைகள் இல்லாத போது தொழில்துறையில் வேலை செய்யலாம்) தொழில்துறையில் பயன்படுத்தும் வாய்ப்புகளின் மீதும் இவர் பெரும் கவனம் செலுத்தினர். இவர் எல்லா இடங்களிலும் கண்டிப்பான உழைப்புக் கட்டுப்பாடு இருக்க வேண்டுமென எழுதினர், ''தூங்கி வழிபவர்கள்'', ''சோம்பேறிகளை'' எதிர்த்தார், ஆனல் தமது கட்டாய உழைப்பின் விளைவுகள் மீது விவசாயிகள் கவலை கொள்ளாததன் உண்மைக் காரணங்களை இவர் வெளிப்படுத்தவில்லை. இதோடு கூட பொசஷ்கோவ், உழைப்பிற்குப் பொருளாயத ஊக்கம் தர வேண்டுமென்றர், குறிப்பாக அரசுத் தொழில் துறை நிறுவனங்களிலும் ஓரளவிற்கு கிராமத்திலும் இப்படிச் செய்ய வேண்டுமெனக் கோரினர். 18ஆம் நூற்றண்டின் மற்ற சிந்தனையாளர்களை விட பொசஷ்கோவிடம் குடிமக்களின் தொழில் பயிற்சிக்கான ஆர்வம் அதிகமாக வெளிப்பட்டது. இந்த ஆர்வம் உபரிப் பொருளைப் பற்றிய வாதங்களுடன் தர்க்க ரீதியாகத் தொடர்புடையதாக இருந்தது. பயிற்சியளிக்கப்பட்ட வேலையாள் விரைவிலேயே லாபத்தைத் தருவான் என்று கருதிய பொசஷ்கோவ் விவசாய இளைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களைக் கற்றுத் தர வேண்டுமென விடாப்பிடியாகச் சிபாரிசு செய்தார். பொசஷ்கோவின் பொருளாதாரச் செயல்திட்டம் ஓரளவு முரண்பாடானதாக இருந்தாலும் இது தன் அடிப்படையில் முற்போக்கானதாக, ருஷ்ய அரசின், இதன் உற்பத்திச் சக்திகளின் பொருளாதார நிலைகளைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக இருந்தது.

உழைப்பு மூலாதாரங்களின் பிரச்சினைகள் பாலான ஆர்வம் அக்கால ருஷ்ய அரசு மற்றும் சமூகப் பிரமுகர்கள் பலரின் படைப்புகளிலும் பிரதிபலித்தன. உதாரணமாக, வ. நி. ததீஷெவ் இப்பிரச்சினைகளைத் தம் இலக்கியப் படைப்புகளில் ஆராய்ந்ததோடு கூட, தான் ஒரு பெரும் ஜார் அதிகாரியாக இருந்ததால் தன் ஆலோசனைகள் சிலவற்றை இவர் நிறைவேற்றவும் செய்தார். ஆஸ்திரகன் நகர கவர்னராக இருந்த போது இவர் ஆஸ்திரகன் ஸ்டெப்பியில் குடியமர்த்தும் திட்

டத்தைத் தீட்டினர், பின்னுல் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் களைப் பயிற்றுவிப்பதற்கான முதல் சுரங்கத்தொழில் பள்ளி களை உராலில் நிறுவினர். ஆனுல் முதன்முதலாக ருஷ்யாவில் நாட்டின் மக்கள்தொகைப் பிரச்சினைகளுக்கு அர்ப்பணிக்கப் பட்ட ஒரு பெரும் படைப்பு 1761ஆம் ஆண்டில்தான் தோன் றியது. இது மி.வ.லமனேசவால் எழுதப்பட்டதாகும். இது **ருஷ்ய மக்களின் இனப்பெருக்கம் மற்றும் இவர்களைப் பேணிக் காப்பதைப் பற்றி** ஷுவாலவ் பிரபுவிற்கு லமனேசவ் எழு திய கடிதமாகும். லமனேசவ் ''பொதுவான பலனைப் பெருக்கு வதை'' நோக்கமாகக் கொண்ட தன் கண்ணேட்டங்களைப் பரப்பத் திட்டமிட்டார். இவர் இந்தக் கடிதத்தில், மக்கள் தொகைப் பிரச்சினைகள் சம்பந்தமாக தான் சிந்தித்து வைத் துள்ள படைப்பின் முதல் அத்தியாயத்தின் உள்ளடக்கத்தை எடுத்துரைத்தார். ''பின்வருவதுதான் மிக முக்கியமான விஷய மாகும்: ருஷ்ய மக்களைப் பாதுகாத்து, எண்ணிக்கையைப் பெருக்குவதாகும், அரசு முழுவதன் மகத்துவமும் வல்லமை யும் செல்வமும் இதில்தான் உள்ளது, குடிமக்கள் இல்லாத வீணை பரந்த இடத்தில் ஒன்றுமில்லை'' என்று லமனேசவ் எழுதினர். ருஷ்யாவின் பொருளாதார மற்றும் அரசியல் உயர்வு கணிசமான அளவு உழைப்பார்வமுள்ள ருஷ்ய மக் களின் பெரும் எண்ணிக்கையைப் பொறுத்துள்ளது என்று இவர் கருதினர். எனவே மக்கள் எண்ணிக்கையின் வளர்ச்சி யும் இவர்களின் ஆரோக்கியம் மற்றும் தொழில் திறமை பற்றிய பிரச்சினையும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த அரசுப் பிரச்சினைகளாகும் என்று இவர் எண்ணினர். **ருஷ்ய மக்களின் இனப்பெருக்கம் மற்றும் இவர்களைப் பேணிக் காப் பதைப் பற்றி** எனும் படைப்பில் இவர் மக்கள் எண்ணிக் கையைத் தக்கவைத்து பெருக்க வழிகோலும் 13 காரணி களை சுட்டிக் காட்டுகிருர். குழந்தை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் பிரச்சினைகள், இறப்பு விகிதத்தைக் குறைப் பதற்கான போராட்டம், இடப்பெயர்ச்சிப் பிரச்சினைகள் முதலியன இவற்றில் அடங்கும். அக்காலத்தில் ருஷ்யா வில் அதிகமானதாக இருந்த குழந்தை மரண விகிதத்தின் மீது லமனேசவ் அதிக கவனம் செலுத்தினர், இதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டினர், இவற்றை அகற்றும் வழி களைத் தேடினர். மதகுருமார்களின் மூடநம்பிக்கைகள், அறி வின்மையைச் சாடிய இவர் ஏராளமான பச்சிளம் குழந்தை

கள், காட்டுமிராண்டித்தனமான ஞானஸ்நான சடங்குகளின் போது (இவை பல சமயங்களில் பனிக்கட்டி போன்று குளி ரான தண்ணீரின் உதவியால் நடத்தப்படும்) ஜலதோஷம் பிடித்து மாளுகின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டினர். 10 அல்லது 15 குழந்தைகளைப் பெற்றும் ஒரு குழந்தை கூட உயிரோடு எஞ்சாத துரதிர்ஷ்ட பெற்றோர்கள் எவ் வளவு அதிகமாக உள்ளனர் என்று லமனேசவ் எழுதினர்.

ருஷ்யாவில் மருத்துவ ஞானத்தைப் பரப்புவதில் கல்வி யறிவுள்ளவர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட வேண்டு மெனக் கருதிய லமனேசவ் நாட்டில் மருத்துவத்தைப் பரப்பு வதற்குப் பெரும் நடைமுறை முக்கியத்துவத்தை அளித் தார். அன்னிய மருத்துவர்களைப் பயன்படுத்துவதோடு கூட ருஷ்ய மக்களுக்கு மருத்துவ ஞானத்தைக் கற்பிப்பதற்கு இவர் குறிப்பாக பாடுபட்டார். மக்களின் ஆரோக்கியம் மற்றும் இளைய தலைமுறையின் புனருற்பத்தி மீது உணவின் செல்வாக்கைப் பற்றியும் இவர் எழுதினர்.

ருஷ்ய மக்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்புகளைப் பற்றிய ஒரு சில கணக்கீடுகளுடன் லமனேசவ் ஷுவாலவுக்கு எழுதிய தன் கடிதத்தை முடித்திருந்தார். ஓராண்டில் மக் கள் எண்ணிக்கை 5 லட்சம் வரை அதிகரிப்பது சாத்திய மென்றும் ஒரு கணக்கெடுப்பிற்கும் மறு கணக்கெடுப்பிற்கும் இடையே, அதாவது 20 ஆண்டுகளில் இது ஒரு கோடி வரை இருக்கலாமென்றும் இவர் கருதினர். ருஷ்யாவின் மக்கள் எண்ணிக்கையைப் பெருக்குவது சம்பந்தமாக தான் முன் மொழிந்த முறைகள் ''பாதுகாப்பிற்கும் பொது மக்களின் சாந்தத்திற்கும்'' இட்டுச் செல்ல வேண்டுமென இவர் கோடிட்டுக் காட்டினர். அனேகமாக இவர், 18ஆம் நூற்றாண் டின் நடுவிலிருந்து ருஷ்ய கிராமத்தில் பெரிதும் வலுத்திருந்த வர்க்கப் போராட்டத்தின் வேகக் குறைப்பைப் பற்றி கூறி யிருக்கலாம்.

பண்ணையடிமை முறைச் சிதறலின் ஆரம்பமும் முதலா ளித்துவப் பொருளாதார முறையின் தோற்றமும் ருஷ்யா வில் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் பாலான அரசு மற் றும் சமூகப் பிரமுகர்களின் அக்கறையை அதிகப்படுத்தின. ஏனெனில் இப்பிரச்சினைகளின் தீர்வு நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாயிருந்தது. வளர்ந்து வரும் தொழில்துறைக்கும் விவசாயத்திற்கும்

தேவையான உழைப்புச் சக்தியை அளிப்பது, கஜானுவின் வருமானத்தைப் பெருக்குவது, நாட்டின் கிழக்கிலும் சைபீரியாவிலும் தென்கிழக்கிலும் காஸ்பியன் கடலுக்கு அப்பாலும் மத்திய ஆசியாவிலும் உள்ள, கிட்டத்தட்ட முற்றிலுமாக மக்கள் குடியேருத, ஆனுல் பெரும் செல்வங்களைத் தன்னுள் அடக்கியுள்ள நிலங்களை மீட்பது போன்ற பிரச்சினைகள் இதில் அடங்கும். மக்கள்தொகைப் பிரச்சினைகள் அரசின் இராணுவப் பலம் அதிகரிப்பதுடன் மிக நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்தன.

அ.நி. ரதீஷெவ்தான் முதன்முதலாக நிலப்பிரபுத்துவச் சகாப்தத்தின் மக்கள்தொகையின் முக்கியப் பரச்சினையை (பண்ணையடிமை உரிமை பற்றிய பிரச்சினையை) புரட்சிகரமாகத் தீர்க்க முன்மொழிந்தார். தன்னுடைய பல படைப்புகளில் ரதீஷெவ், ருஷ்யாவில் மக்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும் இவர்களின் கலாச்சாரத்தைப் பெருக்குவதற்காகவும் பல்வேறு கைதொழில்களைப் பரப்புவதற்காகவும் தன் குரலை எழுப்பினுர். பரந்த அளவு மக்களை அவர்களுக்கு ஆர்வமுள்ள உழைப்பில் ஈடுபடுத்திஞல் அது உழைப்பாளிகளின் வாழ்க்கை நிலை மேம்பாடு அடையவும் இவர்களின் உணவும் வீட்டு வசதிகளும் சீரடையவும் இட்டுச் செல்லுமென்றும் இவை அனைத்தின் விளைவாய் குழந்தைகள் மரணமடைவது குறையுமென்றும் மக்கள்தொகை அதிகரிக்குமென்றும் இவர் சுட்டிக் காட்டினுர்.

ஜனத்தொகை பற்றிய ருஷ்ய சிந்தனையின் பிரதிநிதிகளும் 19ஆம் நூற்றுண்டின் முன்னணி சமூக சிந்தனையாளர்களும் மக்கள்தொகைப் பிரச்சினைகளை ஆராய்ந்த போது மக்கள்தொகை அதிகரிப்பிற்கும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் உள்ள விகிதம் பற்றிய மால்தஸ்வாதக் கருத்துக்களைக் கண்டனம் செய்தனர்.

19ஆம் நூற்றுண்டின் முதற் பாதியில் ருஷ்யாவில் மக்கள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்த சூழ்நிலைகளில், பண்ணையடிமை முறையின் நெருக்கடி ஆழமாகி வந்ததையடுத்து இவர்களின் நிலை மாறி வந்த போது ருஷ்ய பொருளாதாரச் சிந்தனையின் பிரதிநிதிகள் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் ஆராய்ச்சியைத் தொடர்ந்தனர். மிகப் பெரும் ருஷ்ய பொருளாதார நிபுணர்களில் ஒருவராகிய நி. செ. மர்ட்வீனவ், சமுதாயத்தின் செல்வம் மற்றும் வல்லமையின்

வளர்ச்சி மக்கள் எண்ணிக்கையின் வளர்ச்சியோடு தொடர்புடையது என்று அடிக்கடி சுட்டிக் காட்டினுர். உழைப்புதான் செல்வத்தின் மூல ஊற்று என்ருல் ''அரசின் பலமும் செல்வமும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவையாகும்''. ''அரசின் முதல் செல்வம் மக்களின் எண்ணிக்கையில் அடங்கியிருக்க வேண்டும்...'' எனவே மக்களின் எண்ணிக்கையைப் பெருக்குவது, இவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பது, குழந்தை மரணத்திற்கெதிராகப் போராடுவது போன்றவற்றின் மீதான அக்கறைதான் அரசின் முதல் முக்கியக் கவனமாக இருக்க வேண்டுமென மார்ட்வீனவ் கருதினுர். இவருடைய கருத்துப்படி ருஷ்யாவின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் தொழில்துறை உற்பத்தியின் விரிவாக்கமும் மக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இட்டுச் செல்ல வேண்டும்.

மால்தஸ்வாதத்தைப் பற்றிய விரிவான, ஆழமான விமரிசனத்தையும் மக்கள்தொகை வளர்ச்சிக்கும் உற்பத்தி வளர்ச்சிக்கும் இடையிலான விகிதத்தை ஆதாரப்படுத்தும் முயற்சியையும் முதன்முதலாக 19ஆம் நூற்ருண்டின் முதல் பாதியைச் சேர்ந்த திறமை மிகு ருஷ்யப் பொருளாதார நிபுணராகிய வி. அ. மில்யூத்தினின் **மால்தசும் அவருடைய எதிராளிகளும்** எனும் கட்டுரையில் காணலாம். இது 1874 இல் ''சவ்ரிமேன்னிக்'' (''சமகாலத்தவர்'') எனும் சஞ்சிகையில் வெளியாயிற்று. இவர் அக்காலத்தில் ருஷ்ய சமுதாயத்தின் முன்னணி வட்டங்களுடன் தொடர்புடையவராயிருந்தார்.

மில்யூத்தின் மக்கள்தொகையில் எல்லாப் பொருளாதாரப் புலப்பாடுகளின் பிரதான மையத்தையும் பொருளாதார விஞ்ஞானத்தின் முக்கியக் கருத்தையும் கண்டார். இவருடைய கருத்துப்படி இந்த விஞ்ஞானமானது செல்வங்களின் உற்பத்தி, வினியோகம் மற்றும் நுகர்வை ஆராய்கிறது, ஆனுல் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது குறிப்பிடும் ஆராய்ச்சிப் பொருள் மக்கள்தொகையாகும், இது மட்டுமே செல்வங்களை உற்பத்தி செய்கிறது, வினியோகிக்கிறது, நுகர்கிறது. மக்கள்தொகை பற்றிய பிரச்சினை முற்றிலுமாக பொருளாதாரப் பிரச்சினையல்ல என்ற மில்யூத்தினின் கருத்து மிக முக்கியமானதாகும். இதற்கு ஒழுக்க, அரசியல், சட்ட, மத, தத்துவஞான நலன்களுடன், அதாவது

எல்லா சமூக நலன்களுடனும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு, எனவே பொருளாதார அடிப்படைகளை மட்டும் வைத்து மக்கள்தொகைப் பிரச்சினை தீர்க்கப்பட முடியாது; சமூக விஞ்ஞானங்களின் அடிப்படையில் உள்ள பல்வேறு சுயமான கோட்பாடுகளால் நிலைநாட்டப்படும் எல்லாக் கண்ணோட்டங்களில் இருந்தும் இதை ஆராய்வது அவசியம் என்று மில்யூத்தின் எழுதினார்.

மக்கள்தொகையின் வளர்ச்சிக்கும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சிக்கும் இடையிலுள்ள அல்லது இடையில் நிலவ வேண்டிய விகிதத்தை நிர்ணயிக்க மில்யூத்தின் முயலுகிறார். இவர் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்: தன் தேவைகள் அனைத்திற்கும் வகை செய்து, பூர்த்தி செய்து கொள்ளப் போதுமான குறிப்பிட்ட உற்பத்திச் சக்தியை இயற்கையே ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்கியுள்ளது, ஆக, மக்களின் எண்ணிக்கைக்கும் செய்பொருட்களின் எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள பரஸ்பர உறவுகளினுடைய மாற்றத்தின் மீது சமூக நிறுவனங்கள் எவ்வித செல்வாக்கையும் தாக்கத்தையும் செலுத்தாமலிருந்தால் உற்பத்தித் திறன் மக்கள்தொகை வளர்ச்சியுடன் முற்றிலும் ஒரே விகிதாச்சாரத்தில் வளர்ந்திருந்திருக்கும்.

மாபெரும் ருஷ்யப் புரட்சியாளரும் ஜனநாயகவாதியுமான நி.க. செர்னிஷேவ்ஸ்கி, உதித்தெழுந்து கொண்டிருந்த முதலாளித்துவத்தின் சூழ்நிலைகளில் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் சாரத்தையும் இவற்றைத் தீர்க்கும் வழிகளையும் தெளிவுபடுத்துவதிலும் மிகப் பெரும் பங்காற்றினார். செர்னிஷேவ்ஸ்கி தன் படைப்புகளில் கொச்சைவாத அரசியல் பொருளாதாரத்தின் அகவயவாதம் முழுவதையும் காட்டினார், முதலாளித்துவத்தின் தீர்க்க முடியாத முரண்பாடுகளை மூடி மறைக்க இது செய்யும் முயற்சிகளை அம்பலப்படுத்தினார், மால்தசின் தத்துவத்தின் விஞ்ஞான ஆதாரமின்மை முழுவதையும் இதன் ஆழ்ந்த பிற்போக்குச் சாரத்தையும் வெளிப்படுத்தினார். நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவச் சமுதாயங்களின் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் மீது செர்னிஷேவ்ஸ்கி முற்றிலும் சுயமான தன் கண்ணோட்டத்தை உருவாக்கினார். மக்கள்தொகையின் முக்கியப் பிரச்சினைகள் சம்பந்தமான பல அம்சங்களை இவர் பகுப்பாய்வு செய்தார். பண்ணையடிமை விவசாயிகளின் நிலை, இவர்களை

விடுவிக்கும் வழிகள், பாட்டாளியின் நிலை, கூலியுழைப்புப் பிரச்சினைகள், சமூக செல்வத்தைத் தோற்றுவிப்பதில் உழைப்பாளிகளின் பங்கு ஆகியவற்றின் மீது இவர் அக்கறை செலுத்தினர். மால்தஸ்வாதத் தத்துவத்தின் உண்மையான சமூக அடிப்படையை செர்னிஷேவ்ஸ்கி அற்புதமாகப் படம் பிடித்து காட்டினர். ''மால்தஸ் எழுதிய நூலின் சாரம் இதுதான்: நிலவும் அமைப்புகளை மேம்படுத்துவதைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டுமே தவிர இவற்றை அழிக்கக் கூடாது, வேறு கோட்பாடுகளின் அடிப்படையிலான சமூக அமைப்பை நிறுவ முயலக் கூடாது, ஏனெனில் சமுதாயத்தின் இன்றைய அடிப்படைக் கோட்பாடாகிய தனிச் சொத்துடைமையைக் காட்டிலும் வேறெந்த கோட்பாடுகளினுலும் சமுதாயத்திற்கு அதிக நலனைத் தர முடியாது'' என்று செர்னிஷேவ்ஸ்கி எழுதினர். ''...அதை'', அந்த உண்மையை ''நாமே சென்று அடைய நாம் விரும்புவோம்; அதுவும் தனிமைபடுத்தப்பட்ட ஒரு உண்மையை அடைய விரும்ப மாட்டோம், நலன்களைப் பெறுவதற்கு முன்னணி நாடுகளில் எப்படிப்பட்ட, எவ்வளவு மகத்தான மக்களின் முயற்சிகள் தேவை என்பதை சுமாராக நிர்ணயிக்கும் வரையாவது செல்ல விரும்புவோம்'' என்று இவர் எழுதினர்.

மால்தசின் மக்கள்தொகைத் தத்துவத்தை விமரிசித்ததோடு மட்டும் செர்னிஷேவ்ஸ்கி நின்று விடவில்லை. எந்தவித வெளித் தடைகளாலும் இடையூறுக்கு ஆளாக்கப்படாத ''இனப்பெருக்கச் சக்தியின்'' அதிகத் துல்லியமான குறியீடுகளைக் கண்டுபிடிப்பது அவசியம் என்ருர் இவர். இக்குறியீடுகள் அவசியம், ஏனெனில், உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் குடிமக்களுடன் சமப்படுத்த அவசியமான பயிர்த்தொழில் மேம்பாடுகளின் அளவு இவற்றைப் பொருத்ததாகும். ஒழுக்கக் கேடும் வறுமையும்தான் தன் கால சமுதாயத்தில் மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பிற்கு முக்கியத் தடைகளாகும் என்று செர்னிஷேவ்ஸ்கி கருதினர். தன் காலத்திய ஐரோப்பிய சமுதாயத்தின் ஒரு சில பிரிவுகளில் இனப்பெருக்கத்திற்கு ஒத்துவராத நிலைமைகள் பிறப்பின் எண்ணிக்கையைக் குறைத்தன என்ருல் இந்தச் சமுதாயத்தின் பிற பிரிவுகளில், முதலாவதாக கிராம மக்களின் நடுவில் மற்றும் மற்ற நாடுகளின் (குறிப்பாக கிழக்கு ஐரோப்பாவில்) மக்கள் அனைவரின் மத்தியில் இதே நிலைமைகள்

பிறப்பு எண்ணிக்கையை, பெரும் வசதிகளும் குறைவான ஒழுக்கக் கேடும் இருந்தால் அடையப்பட முடியாத ஒரு மட்டத்திற்கு எடுத்துச் செல்கின்றன என்று செர்னி ஷேவ்ஸ்கி குறிப்பிட்டார்.

தன் காலத்திய சமுதாயத்தைச் சித்தரித்த செர்னி ஷேவ்ஸ்கி மிக உயர்வான குழந்தை மரண விகிதத்தின் மீது பெருங் கவனம் செலுத்தினுர். அக்கால பிரபலப் புள்ளி விவர நிபுணர்களை மேற்கோள் காட்டிய இவர், பிரான்சில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு குழந்தைகளின் மரணத்திற்குக் காரணம் வறுமையே என்று சுட்டிக் காட்டினுர். வீடுகளில் வசதியின்மை, ஈரம், குளிர், ஏழ்மையின் மற்ற கொடிய விளைவுகள் ஆகியவை குழந்தை மரண விகிதத்தை அதிகப் படுத்துவதோடு கூட வயதுவந்தவர்களின் இறப்பு விகிதத் தையும் பெருக்குகின்றன. இவர் தந்த கணக்கீடுகளின் படி அன்றைய விவசாயத்தால் கூட ஐரோப்பாவில் ஜனத் தொகை அதிகமாயிருந்த நாடுகளால் அப்போதிருந்த மக் கள்தொகையை விட 8 மடங்கு அதிகமான மக்கள்தொகை யினருக்கு உணவளித்திருக்க இயலும் என்பது தெளிவா கிறது. பிறப்பு விகிதம் மிக விரைவாகப் பெருகினுல் உணவுப் பொருளின் பற்ருக்குறை ஏற்படும் என்ற கவலைகளும் ஆதார மற்றவை, ஏனெனில் செர்னிஷேவ்ஸ்கியின் காலத்திலிருந்த பயிர்த்தொழில் முறையாலேயே அல்லது ''பயிர்த்தொழி லில் இயந்திர முறைகளைப் பயன்படுத்தும் முயற்சிகள் ஆரம் பிக்கப்படும் முன், அதாவது 20 ஆண்டுகளுக்கு முன் இருந்த முறையாலும் கூட'' மக்களுக்கு உணவளிக்கும் வாய்ப் பிருந்தது.

செர்னிஷேவ்ஸ்கி தன் கால சமுதாயத்தின் வர்க்கத் தன்மையையும் சமூக வளர்ச்சியின் இயக்குச் சக்தியாக வர்க்கப் போராட்டத்தையும் புரிந்து கொள்வதில் பொருள் முதல்வாதக் கண்ணேட்டத்தை நெருங்கி வந்தார். இவர் ருஷ்யாவில் மக்கள்தொகைப் பிரச்சினைகளுக்கும் பண்ணை யடிமை உரிமைக்கும் மற்றும் உதித்தெழும் முதலாளித்துவ உறவு முறைகளுக்கும் இடையிலுள்ள புறவய ரீதியான தொடர்பை உணர்ந்து, தம் அரசியல்-பொருளாதாரக் கட் டுரைகளில் இதைச் சுட்டிக் காட்டியதோடு கூட இத்திசை யில் நடைமுறை ரீதியான புரட்சிகர நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

மாபெரும் ருஷ்ய புரட்சிகர ஜனநாயகவாதியாகிய தி. இ. பீசரெவ் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் ஆராய்ச்சியில் பெரும் பங்காற்றினார். பட்டினி கிடப்பவர்கள், ஆடையற்றவர்கள் சம்பந்தமான தவிர்க்க இயலா பிரச்சினைக்கு என்றென்றைக்குமாக தீர்வு காண்பதுதான் நமது சிந்தனை முழுவதன் இறுதி லட்சியம் என்று இவர் கோடிட்டுக் காட்டினார்.

பூமியில் குடியேற்றம் பற்றிய ரிக்கார்டோவின் கண்ணோட்டங்களை ஆராய்ந்த பீசரெவ், பூமியை உழத் துவங்கும் மனிதன் மிகச் சிறந்த இடங்களிலிருந்துதான் துவங்க வேண்டுமென்பது கட்டாயமில்லை என்று நிரூபிக்கிறார். எனவே இவருடைய கருத்துப்படி, முதன்முதலாக ''நல்ல'' நிலங்கள்தான் சாகுபடிக்கு உட்படுத்தப்பட்டன, பின்னர்தான் எண்ணிக்கையில் அதிகரித்து கொண்டிருந்த சந்ததியினர் சிறிது சிறிதாக ''மோசமான'' நிலங்களில் பயிரிட ஆரம்பித்தனர் எனும் கண்ணோட்டம் உண்மைக்குப் புறம்பானதாகும். இப்படியிருந்திருந்தால் எவ்வளவுக்கெவ்வளவு மனிதர்கள் அதிகமாகப் பிறக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு தொலைவாக விவசாயிகள் வறண்ட மேடுகளுக்குச் சென்றிருக்க வேண்டும்; இடையறாது அதிகரித்த முயற்சிகளை விலையாகத் தந்து இடையறாது குறைந்து வரும் உணவையும் மற்ற மூலப்பொருட்களையும் பெறும்படி நேர்ந்திருக்கும். இப்படிப்பட்ட நிலையில் மக்களின் எந்த ஒரு எண்ணிக்கை பெருக்கமும் தீமையானதாகும், ஏனெனில் இது ஏழ்மையை இடையறாது அதிகப்படுத்தியிருக்கும் என்று பீசரெவ் கருதினார். சமுதாயத்தில் தத்துவ ஞானங்களுக்கும் இவற்றை நடைமுறையில் பயன்படுத்தலுக்கும் இடையே ஒரு ஆழமான, அகன்ற பாதாளம் உள்ளதென்றார் இவர். உதாரணமாக மனித உடலுக்குத் தூய காற்று, வெளிச்சம், வெப்பம், தாராளமான புதிய உணவு முதலியன தேவையென தத்துவார்த்த சுகாதாரம் எப்போதோ நிரூபித்துள்ளது. ''...ஆனால் மிகப் பெரும்பாலோரின் வாழ்க்கைச் சூழ்நிலைகளை சிறிதாவது அறிந்தவர்களுக்கு இந்தச் சுகாதார ஆலோசனைகள் எல்லாம் கசப்பான ஏளனமாகப் படுகின்றன. பெரிய நகரங்கள், அசுத்தமான சந்துகள் மற்றும் முற்றங்கள், இருட்டு, ஈரம், பட்டினி, குளிர், நாற்றமெடுக்கும் உணவு, அசுத்தமான தண்ணீர்—இவையெல்லாம் ஏராள

மாக உள்ளன, சுகாதார விஞ்ஞானத்தின் ஆலோசனைகளால் இவற்றை ஒன்றும் செய்ய முடிவதில்லை.''இந்த அபத்தம் போதாதென்று இதையெல்லாம் தவிர்க்க இயலா, மாற்ற முடியா இயற்கை விதிகளின் செயற்பாட்டால் நியாயப்படுத்த முற்பட்டவர்களின் பால் பீசரெவ் சீற்றம் கொண்டார்.

கற்பிதக் கொள்கைகள் மற்றும் தத்துவார்த்த கணிப்புகளிலிருந்து பீசரெவ் யதார்த்தங்களின் அடிப்படைக்கு மாறி, பிறர் உழைப்பை உறிஞ்சும் அம்சங்களிலிருந்து தோன்றிய சகலவித சமூக முரண்பாடுகளையும் சுட்டிக் காட்டினர்.

கற்பனுவாத சோஷலிஸ்டு, புரட்சிகர ஜனநாயகவாதி என்ற நிலைகளிலிருந்து மால்தஸ்வாதம், சமூக-டார்வின் வாதம் மற்றும் நிறவெறிக்கு எதிராக லி. இ. மேச்னிக்கவ் போராடினர். இவர் மால்தசின் யதார்த்தத்திற்கு மாருன நிலையையும் மால்தஸ் நிலவுடைமையாளர்கள், தொழில் துறை முதலாளிகளை ஆதரித்ததையும் சுட்டிக் காட்டினர். வாழ்க்கைச் சாதனங்களுக்கும் மக்கள்தொகைக்கும் இடையிலான விகிதம், சுற்றுப்புறச் சூழலிலிருந்து தமக்குப் பயன்படும் பொருட்களை எடுத்துக் கொள்ளக் குறிப்பிட்ட ஒரு மனிதக் குழுவிற்கு உள்ள திறமையோடு சேர்ந்து முற்றிலும் இயற்கையாக மாற வேண்டுமென மேச்னிக்கவ் கோடிட்டுக் காட்டினர். இவர் ''முழுமையான அமித ஜனத்தொகை'' எனும் வார்த்தையைப் பொதுவாக எதிர்த்தார், ஏனெனில் முழுமையான அமித ஜனத்தொகை எப்போதும் இருந்ததில்லை, இருக்கவும் முடியாதெனக் கருதினர். மக்கள் எண்ணிக்கைக்கும் வறுமைக்கும் இடையே நடைமுறை ரீதியான சார்புநிலையும் இல்லை, விஷயம் முழுவதும் சமூகச் சூழ்நிலைகளில் அடங்கியுள்ளது.

சென்ற நூற்ருண்டில் ஓரளவு பரவியிருந்த ''ராபின்சன்வாதம்'' மேச்னிக்கவிற்கு அன்னியமானதாயிருந்தது. இதை எப்போதும் எதிர்த்து வந்த இவர், உழைப்பிற்கு எப்போதுமே கூட்டான தன்மை உண்டு என்றும் இப்படிப்பட்ட உழைப்பு மனிதர்களின் சக்திகளைப் பன்மடங்கு அதிகப்படுத்துகிறது என்றும் கோடிட்டுக் காட்டினர். வேடமிட்ட சோஷலிஸ்டாகிய ஜே. மில் என்பவருக்கு எதிராயும் மேச்னிக்கவ் போராடினர். ஜே. மில் மால்தசின் ''விதி''

தவிர்க்க முடியாத ஒன்றுகும் என்று உழைப்பாளிகளை நம்ப வைக்க முயன்ருர், குழந்தைப் பிறப்பைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவும் பெருமளவு குடிபெயர்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதற்காகவும் (இதன் மூலம்தான் தொழிலாளர்களின் ஊதியத்தைப் பெருக்க முடியும் என்ருர் இவர்) பாடுபட்டார். மால்தஸ் மற்றும் இவருடைய சீடர்களின் கருத்துநிலைகளில் இருந்த தர்க்க ரீதியான ஆதாரமின்மையை முற்றிலும் நியாயமாக மேச்னிக்கவ் சுட்டிக் காட்டினுர். மக்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கையால், உதாரணமாக ஒழுங்கமைக்கப்பட்ட வெகுஜன குடிபெயர்ச்சியின் மூலம் இந்த விதியை மீறிச் செல்லலாமெனில் இதன் மாற்ற இயலாத் தன்மை எங்கே என்று மேச்னிக்கவ் எழுதினுர்.

ஏதோ முற்றிலுமாக மண்வளம் குறைந்து வருவதாக மால்தஸ்வாதிகள் கூறிய வாதங்களுக்கு எதிரான மேச்னிக்கவின் கருத்துக்கள் குறிப்பாக சுவாரசியமானவை. இவர் இவற்றைப் பொய்யான வாதங்களெனக் கருதினுர். ஏனெனில் மண்வளத்தை அதிகப்படுத்த விவசாயத் துறையை இயந்திரமயமாக்க வேண்டும், பெரும் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும்,விவசாய மற்றும் இரசாயன விஞ்ஞானங்களின் நவீன சாதனைகளைப் பயன்படுத்த வேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக கூட்டு அடிப்படைகளில் பண்ணைகளைக் கட்டி சமூகக் கட்டமைவை மாற்ற வேண்டும். மேச்னிக்கவ் சமூக-டார்வின்வாதத்தை அம்பலப்படுத்தினுர். டார்வினும் அவருக்கு முன் வோல்லெசும் ஹாப்சின் இந்த ''விதியை'' (எல்லோருக்கும் எதிரான எல்லோரின் போராட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் பயன்படுத்தினர் என்பதை இந்த மாயா மந்திர விஞ்ஞானிகள் ''மறந்து விட்டனர்'' என்று மேச்னிக்கவ் எழுதினுர். உயிர் வாழுவதற்கான போராட்டம் மற்றும் இயற்கைத் தேர்வு பற்றிய டார்வினின் போதனையை மனிதச் சமுதாயத்திற்கும் பயன்படுத்த முயலும் சமூக-டார்வின்வாதிகளின் அடிப்படைக் கருத்துநிலைகள் விமரிசனத்தைத் தாங்காது என்று இவர் கோடிட்டுக் காட்டினுர். அதே போல் இயந்திரவியல் மற்றும் இரசாயன விதிகளைக் கொண்டு உயிர் வாழ்க்கையை விவரிக்கக் கூடாது, ஏனெனில் ஒவ்வொரு துறைக்கும் அந்தந்த விசேஷ நியதிகள் உண்டு என்றும் உயிர் வாழுவதற்கான

போராட்டம் சமூகவியலில் இருப்பதை ஒப்புக்கொள்வதானது மனிதகுலத்தின் சமூக வாழ்வையே மறுப்பதற்கு இட்டுச் சென்றிருக்குமென்றும் மேச்னிக்கவ் கூறினர். இப்படியிருந்திருந்தால் சமூக வாழ்வின் எல்லா சிக்கலான பிரச்சினைகளும் வரலாறு, முன்னேற்றத்தின் உள்ளடக்கம் முழுவதும் விலங்கியலின் இன்னுமொரு கூடுதல் அத்தியாயத்தின் உள்ளடக்கமாகியிருக்கும். அதே சமயம் விலங்குகள் மற்றும் தாவரங்களின் வாழ்க்கையை மிக எளிமையாக அணுகுவதை மேச்னிக்கவ் எதிர்க்கிறார். அங்கக உலகில் போராட்ட விதிகள் மட்டுமின்றி கூட்டுறவும் உயிரினங்களின் பரஸ்பர உதவியும் கூட நிலவுகின்றன என்று இவர் காட்டுகிறார்.

நிறவெறியர்களுக்கு எதிராயும் ''நாகரிக அரசுகளின்'' ஆதிக்க வர்க்கங்கள் கையாண்ட காலனியாதிக்க கொள்கைக்கு எதிராயும் முதலாளித்துவம் நிரந்தரமானது, யுத்தங்கள், பட்டினி, சுரண்டல், காலனியாதிக்க ஒடுக்குமுறை ஆகியவை தவிர்க்க இயலாதவை, இயல்பானவை என்றெல்லாம் நிரூபிக்க முயன்ற மேற்கூறிய வர்க்கங்களின் ஆதரவாளர்களுக்கு எதிராயும் மேச்னிக்கவ் போராடினர்.

நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியை ஆராயும் போது மக்கள்தொகைப் பிரச்சினைகளை ஆராய வேண்டியதன் முக்கியத்துவத்தை மாபெரும் ருஷ்ய விஞ்ஞானியாகிய தி. இ. மெந்திலேயெவ் கோடிட்டுக் காட்டினர். **ருஷ்யாவை அறிவதை நோக்கி, உள்ளார்ந்த சிந்தனைகள்** எனும் இரு படைப்புகளை மக்கள்தொகைப் பிரச்சினைகள் சம்பந்தமான இவரது படைப்புகளில் இரு பெரும் படைப்புகளாகக் குறிப்பிடலாம். இது தவிர சமூக-பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமான எல்லாப் படைப்புகளிலும் இவர் மக்கள் மத்தியில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்தார், ஏனெனில் இவருடைய வார்த்தைகளின்படி ''பொதுமக்களின் நலன் பற்றி எந்த ஒரு விஷயத்தை சிந்தனை நாடினலும் இது மக்கள்தொகைப் பிரச்சினைகளை எப்போதும் சந்திக்கும்''. **ருஷ்யாவை அறிவதை நோக்கி** எனும் படைப்பில் 1897இல் நடந்த முதல் அகில ருஷ்ய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முடிவுகள் குறித்த விரிவான பகுப்பாய்வு அடங்கியுள்ளது. இந்தக் கணக்கெடுப்பு முடிவுகளின் அடிப்படையில் 2,000ஆம் ஆண்டில் ருஷ்யாவில் எவ்

வளவு பேர்கள் இருப்பார்கள் என்று கணிக்கும் முயற்சியில் மெந்திலேயெவ் ஈடுபட்டார். மால்தசிற்கு மாருக இவர் மக்கள்தொகை அதிகரிக்கும் வாய்ப்பை இயற்கையைப் பற்றிய மனிதனின் ஞானம் எல்லையற்று வளர்வதுடன் தொடர்புபடுத்தினர், தொழில்துறை வளரும் போது பிறப்பு விகிதம் குறையக் கூடுமெனக் குறிப்பிட்டார். ருஷ்ய இலக்கியத்திலேயே முதன்முதலாக இவர் உழைப்பில் பங்கேற்பதற்குத் தக்கபடி குடிமக்களை வயதுவாரியாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஆதாரப்படுத்தினர். **உள்ளார்ந்த சிந்தனைகள்** எனும் படைப்பில் மெந்திலேயெவ், தொன்மைக் காலம் முதல் 20ஆம் நூற்ருண்டின் துவக்கம் வரை மக்கள்தொகை வளர்ச்சியை ஆராயவும் மக்களின் வயதுவாரியான கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களையும் இவற்றிற்கான காரணங்களையும் (26 நாடுகளின் உதாரணத்தில்) ஆராயவும் முயற்சி செய்தார். ''மக்கள்தொகை'' எனும் அத்தியாயத்தில் இவர் ''மக்கள் முதுமையடையும்'' நிகழ்ச்சிப் போக்கு மற்றும் இது நடைபெறும் தன்மை பற்றிய பிரச்சினையை முன்வைத்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொதுவான முன்னேற்றம் மீது குடிமக்களுடைய கல்வி வளர்ச்சியின் மிகப் பெரும் செல்வாக்கைப் பற்றி இவர் எழுதினர். மேற்கூறிய பிரச்சினைகளின் பட்டியல் மெந்திலேயெவ் தன் படைப்புகளில் முன்வைத்த பிரச்சினைகளில் சிலவற்றைக் கூட உள்ளடக்கியிருக்கவில்லை. ஆனல் இவை மக்கள்தொகைப் பிரச்சினைகளின் பாலான மாபெரும் விஞ்ஞானியின் அணுகுமுறையின் ஆழத்திற்கும் தனித்துவத்திற்கும் சான்று பகர்கின்றன.

கி. அ. திமிர்யாஸெவ், வ. வ. தகுச்சாயெவ், பா. அ. கோஸ்திச்செவ், அ. அ. இஸ்மாயில்ஸ்கி முதலிய பிரபல ருஷ்ய விஞ்ஞானிகள் மால்தஸ்வாதத்தை விமரிசனம் செய்தனர். இவர்கள் ''மண்வளம் குறைந்து வருவதைப் பற்றிய'' கற்பனையான விதியை மறுத்தனர், விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான உண்மையான வழிகளைக் காட்டினார்கள்.

## அத்தியாயம் ஏழு

## முதலாளித்துவ மக்கள்தொகை விதி

முதலாளித்துவ உற்பத்தி முறையைப் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில் கா. மார்க்ஸ் முதலாளித்துவத்தில் உழைப்புச் சக்தியின் நிலை மற்றும் புனருற்பத்தியின் முக்கிய நியதிகளைத் தெளிவுபடுத்தினர், முதலாளித்துவச் சமுதாயத்தினுடைய மக்கள்தொகையின் பொருளாதார விதியைக் கண்டுபிடித்தார். பூர்ஷ்வாச் சமுதாயத்தில் மூலதனத் திரட்சியின் விளைவாக தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் தவிர்க்க இயலாதவாறு, சார்புநிலையில் தேவைக்கதிகமானவர்களாக ஆகின்றனர், உற்பத்தியிலிருந்து வெளியே தள்ளப்படுகின்றனர் என்று மார்க்ஸ் நிரூபித்தார். மூலதனத் திரட்சியின் நிகழ்ச்சிப் போக்கில் ஒரு துருவத்தில் செல்வம் வளரும் போது மறு துருவத்தில் வறுமையும் உரிமையின்மையும் அதிகரிக்கின்றன என்றும் மூலதனம் சேர்ந்து வருகையில் சமுதாயத்தின் பாட்டாளி வர்க்கப் பிரிவு பெருகுகிறது என்றும் சார்புநிலை அமித ஜனத்தொகை அதிகரிக்கிறது என்றும் தொழிலாளி வர்க்கம் சார்புநிலையிலும் முற்றிலுமாகவும் வறுமையடைந்து வருவது அதிகமாகிறது என்றும் மார்க்ஸ் காட்டினர்.

ஆராய்ச்சியின் முதல் கட்டத்தில் மார்க்ஸ், மூலதனத்தின் அங்கக உள்ளடக்கம் மாருதிருந்த போது மூலதனத் திரட்சியை ஆராய்ந்தார். மூலதனத்தின் அங்கக உள்ளடக்கம் மாருதிருந்தது என்ருல், அடையப்பட்ட தொழில்நுட்ப மட்டம் அப்படியே இருக்க உற்பத்தி அதிகரிப்பதை முன்னனுமானிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதெனில், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்ததைக் கொண்டு இல்லாமல் தொழிலாளிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் அதே அளவு உற்பத்திச் சாதனங்களைப் பெருக்குவதன் மூலமும் உற்பத்தியைப் பெருக்குவது முன்னனுமானிக்கப்படுகிறது. எனவே இச்சந்தர்ப்பத்தில் மூலதனத்

திரட்சியின் போது மூலதனத்தின் இரண்டு பகுதிகளும் ஒரே அளவு அதிகரிக்கின்றன. எனவே மூலதனம் எந்த அளவிற்குத் திரளுகின்றதோ அதே விகிதாச்சாரப்படி உழைப்புச் சக்திக்கான தேவை கூடுகிறது. ஏனெனில் உழைப்புச் சக்தியின் தேவையானது மாறும் மூலதனத்தின் அளவுகளால் நிர்ணயிக்கப்படுகிறது, இந்த மாறும் மூலதனமோ இச்சந்தர்ப்பத்தில் மொத்தமாக மூலதனத்தைப் போன்று அதே விகிதாச்சாரத்தில் அதிகரிக்கிறது. மூலதனத் திரட்சியைப் போன்று அதே அளவு வேகமாக கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருகினுல் ஊதிய உயர்வைக் காணக் கூடிய ஒரு தருணம் வரலாம். ஆனுல் கூலித் தொழிலாளர்களின் ஊதியத்தைப் பெருக்குவதானது உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களுக்கும் இவர்களால் சுரண்டப்படும் தொழிலாளர்களுக்கும் இடையிலுள்ள முதலாளித்துவ உறவு முறைகளை அகற்றுவதில்லை. இச்சந்தர்ப்பத்திலும் மூலதனத் திரட்சியானது சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கத்தினரின் எண்ணிக்கை அதிகரிப்பையும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் புனருற்பத்தியையும் முதலாளிகள் அபகரிக்கும் தொழிலாளர்களின் கூலி தரப்படாத உழைப்பு அளவின் அதிகரிப்பையும் குறிக்கிறது.முதலாளித்துவ உற்பத்தியின் சுழல் வளர்ச்சியின் அந்தந்தக் காலகட்டங்களில் ஊதியம் அதிகரிக்கப்படுவதானது கூலித் தொழிலாளி தன்னைத் தானே கட்டிப் போட்டிருக்கும் தங்கச் சங்கிலியின் இறுக்கத்தைத் தளர்த்தச் செய்கிறதே தவிர முதலாளித்துவ உறவு முறைகள் ஒழித்துக் கட்டப்பட வழிகோலவில்லையென மார்க்ஸ் அடையாளச் சிறப்போடு குறிப்பிட்டார்.

முதலாளித்துவச் சமுதாயத்தில் ஊதிய உயர்விற்கென அதிகபட்ச வரம்புகள் உண்டு. முதலாளிகளின் உபரி மதிப்பு நிலவுவதை அச்சுறுத்தும் அளவிற்கு ஊதியத்தால் உயர முடியாது. பூர்ஷ்வாச் சமுதாயத்தில் உழைப்புச் சக்தியின் தேவை, சுயவளர்ச்சிக்கும் உபரி மதிப்பின் உற்பத்திக்கும் எவ்வளவு மூலதனம் தேவைப்படுகிறதோ அந்த அளவால் நிர்ணயிக்கப்படுகிறது.

முதலாளித்துவ மக்கள்தொகை விதியானது பூர்ஷ்வாச் சமுதாயத்தில் கூலித் தொழிலாளியின் உண்மையான நிலையைப் பிரதிபலிக்கிறது. இங்கே இவன் மூலதனத்தின் பிற்சேர்க்கையாக செயல்படுகிறுன், உற்பத்திப் போக்கிலும்

சரி இதற்கு வெளியேயும் சரி மூலதனத்திற்குச் சொந்தமானவனுயிருக்கிருன், ஏனெனில் தன் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டிருக்கும் போது கூட இதன் மூலம் இவன் உழைப்பிற்கான தன் திறமையை (இது முதலாளிக்குத் தேவைப்படக் கூடும்) புனருற்பத்தி செய்கிருன். கூலித் தொழிலாளி தன் மனித வாழ்க்கை நடவடிக்கை முழுவதன் மூலமாயும் மூலதனத் திரட்சிக்கு உதவுகிருன். பூர்ஷ்வாச் சமுதாயத்தில் தொழில்துறை உழைப்புச் சேமப்படை சார்பு நிலை அமித ஜனத்தொகையாக உள்ளதென்றும் முதலாளிகளுக்கு எந்த அளவிற்கு உழைப்புச் சக்தி தேவையோ அந்த தேவைக்கேற்ப மட்டுமே பூர்ஷ்வாச் சமுதாயத்தில் உழைப்புச் சக்தி அமிதமாக உள்ளதென்றும் மார்க்ஸ் நிருபித்தார்.

சார்புநிலை அமித ஜனத்தொகை, குறிப்பாக தொழில் துறை உழைப்புச் சேமப்படை தோன்றியதற்கான காரணம், மூலதனத்தின் அங்ககக் கட்டமைவின் வளர்ச்சியாகும். இது விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவப் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மூலதனம் திரண்டு வருகையில் இதன் உள்ளடக்கத்தில் ஏற்படும் குணும்ச ரீதியான மாற்றங்களைக் குறிக்கிறது. இந்த அம்சம்தான் ஒரே அம்சமில்லையென்ருலும் முக்கியமான அம்சமாகும். மற்ற சில மிக முக்கியக் காரணிகளின் தாக்கத்தாலும் சார்புநிலை அமித ஜனத்தொகையின் அளவுகள் அதிகரிக்கின்றன. இதன் தொடர்பாக, வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சுரண்டலை அதிகப்படுத்துவதானது உழைப்பைத் தீவிரப்படுத்துவதன் மூலமும் வேலை நாளைக் கூட்டுவதன் மூலமும் வேலை நாளில் மேன்மேலும் அதிகமான அளவு உழைப்பைக் கூலித்தொழிலாளியிடமிருந்து பிழிந்தெடுக்க இட்டுச் செல்கிறது எனும் அம்சத்தை முதலில் குறிப்பிட வேண்டும். இது கண்டிப்பாக, குறைந்த அளவு வேலையாட்களைக் கொண்டு சமாளிக்க முதலாளிகளுக்கு உதவுகிறது, இதன் மூலம் புதிய உழைப்புச் சக்தியின் தேவையைக் குறைக்கிறது, வேலையின்மையை அதிகப்படுத்துகிறது. அச்சந்தர்ப்பத்தில் நிரந்தர மூலதனமும் சிக்கனப்படுத்தப்படுகிறது, ஏனெனில் இங்கே குறைந்த அளவு உபகரணங்களைப் பயன்படுத்தி முந்தைய உற்பத்தி விளைவுகளைப் பெறும் வாய்ப்பை முதலாளி பெறுகிருன்.

ஆலைகளுக்கு வெளியே வேலையில்லாதவர்கள் இருப்பதும் இவர்களின் எண்ணிக்கை பெருகுவதும் வேலையிலிருக்கும்

தொழிலாளர்களின் மீதான நிர்ப்பந்தத்தை அதிகப்படுத்தவும் உழைப்பின் தீவிரத் தன்மையைப் பெருக்கவும் வேலை நாளை நீட்டவும் ஊதியத்தைக் குறைக்கவும் முதலாளிகளுக்கு வாய்ப்பளிக்கின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகளின் உழைப்பைப் பரவலாகப் பயன்படுத்துவதானது வேலையின்மையின் அதிகரிப்பிற்கான முக்கியக் காரணிகளில் ஒன்றாகும். ''இயந்திரங்கள் தசைப் பலத்தைத் தேவையற்றதாக ஆக்குவதால் இவை தசைப் பலமற்ற அல்லது முழு உடல் வளர்ச்சியடையாத ஆனால் நன்கு வளைந்து கொடுக்கும் உறுப்புகளையுடைய தொழிலாளர்களைப் பயன்படுத்தும் சாதனமாகின்றன. எனவே பெண்கள் மற்றும் குழந்தை உழைப்புதான் இயந்திரங்களுடைய முதலாளித்துவ பிரயோகத்தின் முதல் நடவடிக்கையாக இருந்தது''* என்று மார்க்ஸ் பன்முறை சுட்டிக் காட்டினார். பல ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் 19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியிலிருந்தே பெண்கள் மற்றும் குழந்தை உழைப்பானது வயது வந்த ஆண்களின் உழைப்பைப் பெரிதும் வெளித் தள்ளியது.

நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள ஏராளமான சிறு உற்பத்தியாளர்கள் பெரும் முதலாளித்துவ உற்பத்தியுடனான கடுமையான போட்டியின் போது திவாலாகி சேம உழைப்புப் படையை நிரப்புகின்றனர். பெரும் உற்பத்தியால் சிறு உற்பத்தியாளர்கள் திவாலடைவதும் தொழில் துறை உழைப்புச் சேமப்படையை அதிகரிக்கும் காரணியாகும்.

சார்புநிலை அமித ஜனத்தொகை என்பது முதலாளித்துவ உற்பத்தியின் விளைபொருள் மட்டுமல்ல. இது தன் பங்கிற்கு முதலாளித்துவத் திரட்சியின் நெம்புகோலாகும், முதலாளித்துவம் நிலவுவதன் கண்டிப்பான நிபந்தனையாகும். அமித ஜனத்தொகையின்றி முதலாளித்தவ உற்பத்தி முறையால் நிலவவும் முடியாது, வளரவும் முடியாது என்று வி. இ. லெனின் கோடிட்டுக் காட்டினார். மக்கள்தொகை மிகையானது ''முதலாளித்துவத் திரட்சியின் ஒரு தவிர்க்க முடியாத விளைவுதான், அதே நேரத்தில் அது முதலாளித்துவ

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 406 (ருஷ்யப் பதிப்பு).

அமைப்பின் ஓர் இன்றியமையாத இணைக்கூறான பகுதியும் ஆகும்''*.

முதலாளித்துவம் தோன்றிய காலகட்டத்தில் உதித்தெழுந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கம் நிர்ப்பந்த முறைகளாலும் இரத்தக் களறியான சட்டங்களாலும் விவசாயிகளையும் கைத்தொழிலாளர்களையும் திவாலாக்கியது, பட்டறைத் தொழிலுக்கு அவசியமான கூலித் தொழிலாளர்களை அளிக்க வழி செய்தது. முதலாளித்துவ உற்பத்தி முறை வெற்றி பெற்று நிலை பெற்றதும் பாட்டாளி வர்க்கம் மூலதனத்தாலேயே ''உற்பத்தி செய்யப்படலாயிற்று''. தொழிலாளிகள் உற்பத்தியிலிருந்து வெளித் தள்ளப்பட்டு தொழில்துறை சேமப்படை உருவான அதே சமயம் புதுப் புது தொழிலாளர்கள் தொழில்துறையினுள் இடையறாது இழுக்கப்பட்டனர். திரட்சியின் நலன்கள் மேன்மேலும் அதிகமான மக்கள் திரளினர் சுரண்டப்பட வேண்டுமெனக் கோரின. தம் பங்கிழந்த மக்கள் திரளினரை மூலதனம் ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் கப்பல் கட்டும் துறைகளுக்கும் சுரங்கங்களுக்கும் அழைத்தது. சுதந்திரமான போட்டிச் சூழ்நிலைகளில் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் உற்பத்தித் திறனுள்ள உழைப்பில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை முழுவதுமாக உயர்ந்தது. முதலாளித்துவ உற்பத்தி முறையால் திவாலான கைத்தொழிலாளர்கள் பாட்டாளி வர்க்கத்தினரின் வளர்ச்சிக்கான இன்னொரு மூல ஊற்றாகும். உற்பத்திக் கருவிகளும் சாதனங்களும் மறுக்கப்பட்ட இவர்கள் கூலித் தொழிலாளர்களாக மாறினர். இயந்திரமானது பெண்கள் மற்றும் குழந்தை உழைப்பைப் பயன்படுத்துவதற்கான பரவலான வாய்ப்புகளைத் திறந்து விட்டது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடு, இன்னும் பிற நாடுகளில் பெண்களும் குழந்தைகளும் பெருமளவில் தொழில்துறைக்கு வந்தனர். பாட்டாளிகளின் கணிசமான எண்ணிக்கை அதிகரிப்பிற்கும் புதிய தொழிலாளர்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டதற்கும் முக்கியக் காரணம், முதலாளித்துவம் இன்னமும் ஏறுகோட்டில் வளர்ந்து

---

* வி. இ. லெனின், பொருளாதாரத் தன்னுணர்ச்சிவாதம் பற்றிய ஒரு பண்புரை, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 80.

வந்ததும் இதன் உற்பத்திச் சக்திகள் விரைவாக வளர்ச்சி யடைந்ததும் ஆகும். ஆனால் முதலாளித்துவத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு மட்டான வரம்புகள் உண்டு, ஏனெனில் இது தொழிலாளர்களின் கடும் சுரண்டலாலும் இவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறைப்பதாலும் நிறைவேற்றப்படுகிறது, இது முதலாளித்துவத் தொழில்துறைப் பொருட்களுக்கான விற்பனைச் சந்தையைக் கண்டிப்பாகச் சுருக்குகிறது.

ஏகாதிபத்தியத்தில் வேலையின்மையின் எல்லா வடிவங்களும் மேற்கொண்டு வளர்ச்சியடைந்தன. இவற்றில் முதல் வடிவம் நிலையற்ற அமித ஜனத்தொகையாகும். உற்பத்திக் குறைப்பு, தொழிற்சாலை மூடப்பட்டது போன்றவற்றின் விளைவாக குறிப்பிட்ட காலத்திற்கு வேலையை இழந்த தொழிலாளர்கள் இதில் அடங்குவர். இத்தகைய அமித ஜனத்தொகை முதலாவதாக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அராஜகத் தன்மையுடனும் திட்டமின்மையுடனும் தொடர்புடையது. ஏகாதிபத்தியச் சூழ்நிலைகளில் இந்த அராஜகத் தன்மை அதிகரிப்பதால் நிலையற்ற அமித ஜனத்தொகை மேற்கொண்டு வளருகிறது.

விவசாயத் துறையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கில் திவாலாகி (இங்கே வேலையாட்கள் ''விடுவிக்கப் படுவது'' தொழில்துறையை விட விரைவாக நடைபெறுகிறது) விவசாயத் துறைக்கு வெளியே வேலையைக் கண்டு பிடிக்க முடியாத விவசாய மக்கள் பிரிவினர்தான் முக்கியமாக மறைமுக அமித ஜனத்தொகையில் அடங்குவர். ''ஒதுக்கீட்டு நிலத்துடன் கூடிய இந்தப் பாட்டாளியின்'', ஏழை விவசாயியின் அற்ப நிலம் இவன் தொழில்துறை சேமப் படையில் இருப்பதன் பொருளாதார உள்ளடக்கத்தை மட்டுமே மூடி மறைக்கிறது. முதலாளித்துவ நகரில் மலிவான உழைப்புச் சக்திக்கான தேவை தோன்றியதுமே இந்தத் தோற்றம் மறைகிறது. ''சார்புநிலை அமித ஜனத்தொகையின் இந்த மூல ஊற்று இடையறாது செயல்படுகிறது. ஆனால் நகரங்களை நோக்கிய இதன் நிரந்தர ஓட்டம் கிராமத்தில் நிரந்தர மறைமுக அமித ஜனத்தொகையை முன்னனுமானிக்கிறது. வடிகால்கள் எப்போது முற்றிலும் பரவலாகத் திறக்கின்றனவோ அப்போதுதான் இந்த அமித ஜனத்தொகை

யின் அளவு தெரிய ஆரம்பிக்கிறது''* என்று குறிப்பிட்டார் மார்க்ஸ். மறைமுக அல்லது விவசாய அமித ஜனத்தொகை தொழில்துறை மையங்களுக்கு மலிவான உழைப்புச் சக்தியை இடையறுது அளிக்கிறது.

வேலையின்மையின் மறைமுக வடிவம் என்பது விவசாய அமித ஜனத்தொகையை விட அதிகப் பரவலான ஒரு கருத்தாகும். தொழில்துறை மையங்களில் உள்ள உழைப்புச் சக்தியின் மறைமுக சேம இருப்புகளும் தொழில்துறை சேமப் படையின் மறைமுக வடிவத்தைச் சாரும்.

ஏகாதிபத்தியத்தில் உள்ள தொழில்துறை சேமப் படையில் கணிசமான பகுதி வேலையின்மையின் தேங்கல் வடிவத்தைச் சேரும். சாதாரணமாக தேர்ச்சி பெருத அல்லது குறைவான தேர்ச்சியுடைய தொழிலாளர்கள் இதில் இருப்பார்கள், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பயனுய் தம் சக்தியைப் பயன்படுத்தும் வாய்ப்பை இவர்கள் கிட்டத்தட்ட முற்றிலுமாக இழந்தவர்கள். முதலாளித்துவ சுரண்டல் கொடுமையின் கீழ் முன்னதாகவே மூப்படைந்து முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு லாயக்கற்றவர்களாக வெளியே தள்ளப்பட்டவர்களும் மற்றும் உற்பத்தியின் போது உடலுறுப்புகள் பாதிக்கப்பட்டு ஊனமடைந்து இதன் பயனுய் உழைக்கும் திறனே இழந்தவர்களும் இதில் அடங்குவர். ஆலை முதலாளிகளுக்காக தம் வீட்டிலும் சேவைத் துறையிலும் வேலை செய்யும் நகர, கிராம வாசிகளும் இதில் அடங்குவர்.

உற்பத்தியில் ஈடுபடாத இன்னுமொரு வகையினரும் வேலையின்மையின் தேங்கல் அல்லது நாட்பட்ட வடிவத்தில் அடங்குவர்: இவர்கள் வறுமையடைந்தவர்கள்; முதலாளித்துவத் தொழில்துறையில் இவர்களே இனிப் பயன்படுத்த முடியாது, இவர்கள் முதலாளித்துவச் சமுதாயத்தில் நேரடியாகவும் பல நேரங்களில் ஆன்மீக ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்கள். வறுமைக்கு ஆளானவர்களேப் பெரும்பாலும் ஆலைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், போக்குவரத்து போன்றவற்றில் தீவிர உழைப்பிற்குப் பயன்படுத்த முடியாது. எனவே பூர்ஷ்வா புள்ளிவிவர இயல் இவர்களே வேலையற்றவர்களாகக் கருதவில்லே. பகுதி நேரத்திற்கு மட்டுமே உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் வேலையற்ற

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 657 (ருஷ்யப் பதிப்பு).

வர்களாவார்கள். முழு வேலையின்மைக்கான அதே காரணங்கள்தான் பகுதி நேர வேலையின்மைக்கும் உரித்தானவை. அரை குறையாக வேலையில்லாதோர், இவர்கள் முறைப்படி உற்பத்தியில் ஈடுபட்டிருந்தாலும் தொழில்துறை சேமப்படையின் பகுதியாவார்கள். பகுதி நேர வேலையின்மையின் அளவும் தொழில்துறை சுழற்சியினுள் இதன் இயக்கமும் முழு நேர வேலையின்மையின் அளவுகளை ஒத்தவை. அரை குறைவான வேலையின்மை குறிப்பாக நெருக்கடிகள் வெடித்த ஆண்டுகளில் அதிகமாகிறது. உற்பத்தியில் எஞ்சியுள்ள தொழிலாளர்களின் சுரண்டலை அதிகப்படுத்துவதானது நெருக்கடியின் போது பகுதி நேர வேலையின்மை அதிகரிப்பதற்கு இடையூறு செய்வதில்லை.

உலகின் எந்த ஒரு நாட்டிலும் எப்போதுமே வேலையின்மை பற்றிய முழு விவரம் இருந்ததில்லை. தனிப்பட்ட தொழிற்சங்கங்கள் மட்டுமே வேலையில்லாதோர் பற்றிய விவரங்களைச் சேகரித்தன. ஆனால் இந்தப் புள்ளிவிவரமும் குறிப்பிட்ட தொழிற்சங்க உறுப்பினர்களின் மத்தியில் நிலவும் வேலையின்மையின் அளவை மட்டுமே நிர்ணயிக்க உதவுகிறதே தவிர, குறிப்பிட்ட உற்பத்தித் துறையிலோ மொத்தமாக நாடு தழுவிய அளவிலோ இதைப் பற்றிய விவரங்களைத் தருவதில்லை. பூர்ஷ்வாப் புள்ளிவிவர இயல் வேலையின்மையைப் பற்றி வெளியிடும் விவரங்கள் இதைப் பற்றிய உண்மையான அளவுகளைத் தெரியப்படுத்தவில்லை. ஆனால் இருக்கக் கூடிய விவரங்களை அடிப்படையாகக் கொண்டே, வளர்ச்சியடைந்த முதலாளித்துவச் சமுதாயத்தில் வேலையின்மை எப்போதுமே நிலவி வருகிறது என்று முடிவு செய்யலாம்.

முதலாளித்துவச் சமுதாயத்தில் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி உழைப்பாளி மக்கள் திரளினரின் நிலையை மோசமாக்குகிறது, வேலையின்மையை அதிகரிக்கிறது. பூர்ஷ்வாச் சமுதாயத்தில் மிதமிஞ்சிய மூலதனமும் அமித ஜனத்தொகையும் சேர்ந்து முதலாளித்துவ உலகிற்கே உரித்தான ஆழ் முரண்பாடுகளைக் காட்டுகின்றன. ''உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தொழிலாளர்களின் முழு எண்ணிக்கையைக் குறைத்தால், அதாவது உண்மையில் மேலும் குறைவான காலத்தில் தன் உற்பத்தியை நிறைவேற்றும் வாய்ப்பைத் தேசிய இனம் முழுவதற்கும் தந்தால் இது ஒரு புரட்சியை

ஏற்படுத்தியிருக்கும், ஏனெனில் பெரும்பாலான மக்களுக்கு வேலையிருக்காது. முதலாளித்துவ உற்பத்தியின் விசேஷ எல்லை இதில் மீண்டும் வெளிப்படுகிறது...''* என்று கா. மார்க்ஸ் எழுதினார்.

முதலாளித்துவ மக்கள்தொகை விதி தன் வெளிப்பாட்டில், சார்புநிலை அமித ஜனத்தொகையையும் தொழில்துறை உழைப்பு சேமப் படையையும் ஏற்படுத்துவதுடன் மட்டும் நின்று விடவில்லை. இந்த விதியின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்திய கா. மார்க்ஸ் பின்வருமாறு கோடிட்டுக் காட்டினார்:''தொழிலாளியின் கூலி உயர்வானதாகவோ, குறைவானதாகவோ, எப்படியிருந்தாலும் இவனுடைய நிலை மோசமடைய வேண்டும்... ஒரு துருவத்தில் செல்வம் திரளும் அதே நேரத்தில் மறு துருவத்தில், அதாவது எந்த வர்க்கம் தன் சொந்த விளைபொருளை மூலதனமாக உற்பத்தி செய்கிறதோ அந்த வர்க்கத்தின் தரப்பில் வறுமையும் உழைப்பின் சித்திரவதைகளும் அடிமைத்தனமும் அறியாமையும் முரட்டுத்தனமும் ஒழுக்கச் சீர்கேடும் சேருகின்றன.''**

தொழிலாளி வர்க்கத்தின் நிலை மற்றும் போராட்டம் பற்றிய தன்னுடைய படைப்புகளில் வி. இ. லெனின், முதலாளித்துவ உலகின் நவீன முறைகள் எப்போதும் தவிர்க்க இயலாதவாறு தொழிலாளி வர்க்கத்தின் மீது எண்ணற்ற சுமைகளைச் சுமத்துகின்றன என்றார். ''வாழ்க்கை வசதியின்மை, வேலையின்மை, சுரண்டல் கொடுமை, சகலவிதமான அவமரியாதை ஆகியன மேன்மேலும் பரவலான உழைப்பாளிகளின் தலைவிதியாகி வருகின்றன''*** என்று வி. இ. லெனின் சுட்டிக் காட்டினார். அதிகாரபூர்வமான பூர்ஷ்வா புள்ளிவிவரங்களை வைத்தே முதலாளித்துவ நாடுகளில் உழைப்பாளிகளின் சுரண்டல் அதிகரித்துள்ளதைக் காணலாம். முதலாளிகள் சுவீகரிக்கும் உபரி மதிப்பின் அளவும் உபரி மதிப்பின் விகிதமும் அதிகரிக்கின்றன. ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் உழைப்பாளிகளின் நிலை மோசமடைவதானது

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 25, பாகம் I, பக்கம் 289 (ருஷ்யப் பதிப்பு).

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 660 (ருஷ்யப் பதிப்பு).

*** வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 6, பக்கம் 204 (ருஷ்யப் பதிப்பு).

வர்க்கப் போராட்டத்தைக் கூர்மையடையச் செய்கிறது. ஊதிய உயர்விற்காகவும் விலையேற்றம் மற்றும் வேலைநீக்கத் திற்கெதிராயும் தொழிலாளர்கள் நடத்தும் போராட்டம் மேன்மேலும் தெட்டத்தெளிவாக அரசியல் தன்மையைப் பெறுகிறது.

ஏகாதிபத்தியக் காலகட்டத்தில், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் கீழ் வேலையின்மை நாட்பட்ட தன்மையைப் பெற்றது, அளவில் பெருகியது. உற்பத்தி சூடு பிடித்த கட்டங்களிலும் கூட இது கிட்டத்தட்ட பெரியதாகவே இருந்தது. உழைக்கும் சக்தியுள்ள மக்களின் எண்ணிக்கையில் சுமார் 4 சதவிகிதமாக வேலையின்மை இருப்பதை பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் சாதாரண விஷயமாகக் கருதுகின்றனர். அதுவும் இவர்கள் இதைப் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு கூறுகின்றனர். வளர்முக நாடுகளில் சாதாரணமாக வேலையின்மை அதை விட அதிக அளவை எட்டுகிறது.ஆனால் இது இந்நாடுகளில் சரிவர கணக்கெடுக்கப்படுவதில்லை, இதன் அளவு, குறிப்பாக மறைமுக வடிவத்தின் அளவு மிகவும் பெரியதாக இருக்கிறது. இந்நாடுகளிலுள்ளவர்களில் ஏராளமானோர் கல்வியறிவற்றவர்கள், இவர்களுக்குத் தக்க பயிற்சியில்லை, நவீன தீவிர உற்பத்தியில் இவர்களால் வேலை செய்ய முடியாது. ஏகாதிபத்தியத்தின் பரம்பரையாகிய இது உழைப்புச் சந்தையைப் பாதிக்கிறது:கல்வியறிவும் தொழில் ரீதியான பயிற்சியும் இல்லாத ஏராளமான மக்கள் நாள் கணக்கில் வேலையின்றி தவிக்கும் போது வளர்முக நாடுகளின் அரசாங்கங்கள், தாம் வளர்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து வாங்கும் தொழில்நுட்பத்தை இயக்குவிப்பதற்காக தொழில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களைப் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து வருவிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. அந்தந்த நாட்டவருக்கு பெருமளவில் பயிற்சியளித்து ஊழியர்களைப் பயிற்றுவிப்பதில் அக்கறையில்லாத ஏகாதிபத்திய நாடுகள், அயல்நாட்டிலிருந்து வேலையாட்களைத் தருவிப்பதுதான் மலிவானது என்று வளர்முக நாடுகளின் அரசாங்கங்களை நம்ப வைக்க முயலுகின்றன.

*அத்தியாயம் எட்டு*

# முதலாளித்துவத்தின் கீழ் ஜனத்தொகைப் போக்கின் நியதிகள்

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகள் சமுதாய வாழ்க்கையின் பல காரணிகளின் தாக்கத்தால் வளர்ச்சியடைகின்றன. முதலாளித்துவச் சமுதாயத்தில் ஜனத்தொகை வளர்ச்சி, மூலதனத்தால் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பு, கூலியுழைப்பின் சுரண்டல் ஆகியவற்றின் அடிப்படையிலான முதலாளித்துவ உற்பத்தி உறவு முறைகளின் வரம்புகளுக்குள் நடைபெறுகிறது. இயற்கையான, சமூக மற்றும் பரப்பு ரீதியான மக்கள்தொகை இயக்கம் தன் திசையமைவில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வரலாற்றுக் கடமைக்கு (உலகப் பொருளாதார, சமூக உறவு முறைகளினுள் இதைத் தக்க வைப்பது) கட்டுப்பட்டது. மார்க்சிய ஆசான்கள் கோடிட்டுக் காட்டியதைப் போல், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வளர்ச்சிப் போக்கில் ''வட்டாரங்கள், நாடுகள் இவற்றின் பழைய ஒதுக்க நிலைக்கும் தன்னிறைவுக்கும் பதில், எல்லாத் திசைகளிலுமான நெருங்கிய தொடர்பும் உலக அளவில் நாடுகளுக்கிடையிலான சார்புடைமையும் ஏற்படுகின்றன''.* கூலியுழைப்பைச் சுரண்டுவதானது (இதுதான் முதலாளித்துவத்தில் உழைப்புச் சக்தியின் புனருற்பத்தியின் தன்மையை நிர்ணயிக்கிறது) குடிமக்களின் புனருற்பத்தி முறையை மாற்றியது.

குடிமக்களின் புதிய புனருற்பத்தி முறைக்கு மாறிச் செல்வது திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகளைப் பொறுத்து வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாக நடைபெற்றது. உதாரணமாக, பிரிட்டனில் 18ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில், உடல் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் பயனாய் முதலில் மெதுவாகவும் பின்னர் மேன்மேலும் அதிகமாயும் மரண

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கங்கள் 197—198.

விகிதம் குறைந்தது. ஆனால் பிறப்பு விகிதம் இன்னமும் மிக உயர்வானதாயிருந்ததால் இயற்கையான ஜனத்தொகை அதிகரிப்பு கூடி 19ஆம் நூற்றாண்டின் நடுவில் 1.5 சதவிகிதத்தை எட்டியது (18ஆம் நூற்றாண்டின் நடுவில் இது 0.5 சதவிகிதமாக மட்டுமே இருந்தது). 19ஆம் நூற்றாண்டின் கடைசி கால் பாதியில்தான் இந்நாட்டில் பிறப்பு விகிதம் குறைய ஆரம்பித்தது; இது 3.7 சதவிகிதத்திலிருந்து 2.9 சதவிகிதமாகக் குறைந்தது. அதே நேரத்தில் மரண விகிதம் குறையும் வேகம் அவ்வளவு தீவிரமானதாக இருக்கவில்லை. இவையனைத்தின் காரணமாய் இயற்கையான ஜனத்தொகை அதிகரிப்பும் சென்ற நூற்றாண்டின் இறுதியில் 0.5 சதவிகிதமாகக் குறைந்தது. பிரான்சில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் மரண விகிதம் குறைந்ததோடு கூட பிறப்பு விகிதமும் குறைந்தது. என்றாலும் பிரான்ஸ் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மக்கள் எண்ணிக்கையில் மேற்கு ஐரோப்பாவிலேயே மிகப் பெரும் நாடாக இருந்தது.

தொழில்துறை முதலாளித்துவக் காலகட்டத்தில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் மக்கள் எண்ணிக்கையின் வளர்ச்சி வேகங்கள் பெரிதும் உயர்வானவையாக இருந்தன, 19ஆம் நூற்றாண்டில் இக்கண்டத்தின் மக்கள்தொகை இருமடங்கிற்கும் கூடுதலாகப் பெருகியது. ஆனால் இந்த நிகழ்ச்சிப் போக்கு ஒரே சீரானதாக இருக்கவில்லை: இரண்டாவது பத்தாண்டில் கணிசமான வளர்ச்சி வேகங்கள் இருந்தன என்றால் நூற்றாண்டின் நடுவில் இந்த வேகங்கள் பெரிதும் குறைந்தன. மரண விகிதங்களிலிருந்த ஊசலாட்டம்தான் இதன் காரணம். அக்காலத்தில் இது முறையாக அதிகரிக்க அனேகமாக ஸ்தல தொற்று நோய்களும் போதுமான உணவின்மையும் காரணமாக இருந்திருக்க வேண்டும். நூற்றாண்டின் நடுவில் மரண விகிதம் அதிகரித்ததானது 1857இல் முக்கிய முதலாளித்துவ நாடுகளை ஆட்கொண்ட முதல் உலகப் பொருளாதார நெருக்கடியுடனும் ஓரளவு தொடர்புடையதாயிருந்தது. சராசரியாக 19ஆம் நூற்றாண்டு முழுவதற்கும் ஐரோப்பாவில் மக்கள்தொகை வளர்ச்சி ஆண்டிற்கு 0.77 சதவிகிதமாக இருந்தது (தனிப்பட்ட நாடுகளில் இது இதை விட அதிகமாயிருந்தது, பிரிட்டனில் 1.2 சதவிகிதம், ஜெர்மனியில் 0.9 சதவிகிதம்). இது இதற்கு முந்தைய

எல்லா நூற்றாண்டுகளின் வளர்ச்சி வேகங்களை விடக் கூடுதலானது. இது நிலப்பிரபுத்துவ ஐரோப்பாவில் உள்ள வளர்ச்சி வேகங்களை விட 7 மடங்கும் ஆதி மூலதன திரட்சிக் கட்டத்தை விட 3 மடங்கும் அதிகமானது.

இக்குறியீட்டில் பிரிட்டன்தான் ஐரோப்பிய நாடுகளில் முதலிடம் வகித்தது. இதன் மக்கள்தொகை 19ஆம் நூற்றாண்டில் கிட்டத்தட்ட 3.6 மடங்கு அதிகரித்தது. இது தற்செயலானதல்ல—மிக அதிக வளர்ச்சியடைந்த தொழில்துறையை உடைய நாட்டில் குடிமக்களின் எண்ணிக்கை அதிக பட்சம் கூடியது. 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் கிழக்கிலும் வடமேற்கிலும் வடக்கிலும் மக்கள்தொகை கணிசமாகப் பெருகியது. மத்திய மற்றும் தெற்கு ஐரோப்பாவில் இந்த வளர்ச்சி மிக மெதுவாக நடைபெற்றது, குறிப்பாக பிரான்சில் அந்த நூற்றாண்டில் மக்கள்தொகை அரைப் பங்கு கூட அதிகரிக்கவில்லை.* பட்டினி மற்றும் பெருமளவு நாடுபெயர்ச்சியின் விளைவாக அயர்லாந்தின் மக்கள் தொகை குறைந்தது.

எண்ணிக்கை அதிகரிப்பின் குறியீட்டை அறிவது மட்டுமே மக்கள்தொகை இயக்கப் போக்கின் சாரத்தைப் புரிந்து கொள்ளப் போதாது. ஒரே விதமான அதிகரிப்பு வெவ்வேறு ஜனத்தொகை நிலவரங்களின் விளைவாக இருக்கலாம். எதனுல் மக்கள்தொகை அதிகரிக்கிறது என்பதை நிலைநாட்ட முதலாவதாக, குடிமக்களுடைய புனருற்பத்திப் போக்கின் அங்கங்களாகிய பிறப்பு மற்றும் இறப்பின் இயக்கப் போக்கைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டில் பிறப்பு விகிதம் அலை வடிவத்தில் மாறியது, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளின் தாக்கத்திற்கு உள்ளானது.** 1870ஆம்

---

* 19ஆம் நூற்றாண்டின் நடுவில் பிரான்சில் மக்கள் தொகை அதிகரிப்பு வேகம் 0.4 சதவிகிதமாக மட்டுமே இருந்தது, இது நூற்றாண்டின் இறுதியில் ஆண்டிற்கு 0.2 சதவிகிதமாக இன்னும் குறைந்தது. இந்நூற்றாண்டின் நடுவில் இங்கே சராசரி வாழும் வயது 32.3 ஆண்டுகளாக மட்டுமே இருந்தது.

** பிறப்பு விகிதத்தின் உயர்வான சமூக பாகுபாட்டையும் குறிப்பிட வேண்டும். இது தொழில்துறை முதலாளித்துவக் கட்டத்திலேயே திட்டவட்டமாக வெளிப்பட்டது. ''நாகரிகப் பெண்களின் மத்தியில் அடிக்கடிக் காணப்படும்

ஆண்டுகளின் துவக்கத்தில் வெடித்த பொருளாதார நெருக்கடிக்குப் பின் (இதுதான் 19ஆம் நூற்ருண்டிலேயே மிகக் கடினமான நெருக்கடியாகும்) வந்த புத்தூக்க காலகட்டத்தில்தான் மிக உயர்வான பிறப்பு விகிதம் காணப்பட்டது. இந்த அலையின் சிகரமாகிய 1876ஆம் ஆண்டை ஐரோப்பாவில் பிறப்பு விகித வரலாற்றில் திருப்புமுனையாகக் கருதலாம்: உச்சியை அடைந்த பின் இது கீழிறங்க ஆரம்பிக்கிறது. ஐரோப்பாவில் 19ஆம் நூற்ருண்டில் பிறப்பு விகிதம் சராசரியாக 3.7—4.0 சதவிகிதத்தில் ஸ்திரமடைந்தது. 19ஆம் நூற்ருண்டில் ஐரோப்பாவில் பிறப்பு விகிதத்தின் மாடல் குணகம் 3.8 சதவிகிதமாகும்.

பிறப்பு விகிதம் குறைவது ஐரோப்பாவில் மொத்தத்தில் 19ஆம் நூற்ருண்டின் கடைசி கால் பகுதியிலிருந்து துவங்கியது என்ருல் ஒரு சில நாடுகளில் இது கணிசமான அளவு முன்னதாகவே துவங்கி விட்டது. முதலில் இது பிரான்சிற்குப் பொருந்தி வரும். இங்கே 1789—1794ஆம் ஆண்டுகளின் முதலாளித்துவப் புரட்சியின் போது நிறைவேற்றப்பட்ட விவசாயச் சீர்திருத்தம் பிறப்பு விகிதம் குறைவதை நகர மக்கள் மத்தியில் மட்டுமின்றி கிராம மக்கள் மத்தியிலும் பரவச் செய்தது. மற்ற ஐரோப்பிய நாடுகளில் பிறப்பு விகிதம் இன்னமும் உயர்வாக இருந்த போதே, அதாவது 19ஆம் நூற்ருண்டின் முதல் பாதியிலேயே இங்கே பிறப்பு விகிதம் குறைந்து காணப்பட்டது. பிரான்சில்தான் முதன் முதலாக குடும்பங்களில் குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்துவது பரவலாகப் பின்பற்றப்படலாயிற்று. பிறப்பு விகிதம் குறைந்ததன் பயனுய் சென்ற நூற்ருண்டின் 70ஆம் ஆண்டுகளில் பிரான்சில் மட்டுமே 14 வயது வரையிலான குழந்தைகள் குடிமக்களின் எண்ணிக்கையில் 30 சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தனர், முதியோர்களின் பங்கு மிக அதிகமானதாயிருந்தது.

அக்காலத்தில் பிரான்ஸ் ஜனத்தொகை ரீதியாக முதி

---

மலட்டுதனம் சமூகத்தின் கீழ் மட்டத்திலுள்ள பெண்களிடையே மிக அரிதாகத்தான் காணப்படுகிறது'' என்று ஆ. ஸ்மித்தே குறிப்பிட்டார். (ஆ. ஸ்மித், மக்களினங்களுடைய செல்வத்தின் தன்மை மற்றும் காரணங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள், தொகுதி 1, மாஸ்கோ, 1935, பக்கம் 72, ருஷ்ய மொழியில்.)

யோர்களின் துருவமாக இருந்தது என்ருல் ருஷ்யாவும் ஹங்கேரியும் இளைஞர்களின் துருவமாயிருந்தது. இந்த இரு நாடுகளிலும் குழந்தைகளின் பங்கு அதிகமான தாயும் முதியோர் பங்கு மிகக் குறைவானதாயும் இருந்தது.

19ஆம் நூற்ருண்டின் இறுதியில் ஐரோப்பாவில் ஆரம்ப மான பிறப்பு விகிதத்தின் குறைவு 20ஆம் நூற்ருண்டிலும் தொடர்ந்தது. பிறப்பு விகிதம் குறையும் போக்கு பொரு ளாதார ரீதியாக மிக வளர்ச்சியடைந்த நாடுகளில் முதன் முதலாகத் தென்பட்டது. முதலாளித்துவத்தின் முரண்பாடு கள் கூர்மையடைந்ததும் பரவலான மக்கள் திரளினர் ஏழ் மையடைந்ததும் இப்போக்கை இன்னமும் அதிகப்படுத்தின. குடிமக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வேகங்கள் குறை யலாயின. பிரிட்டனில் 1870—1879ஆம் ஆண்டுகளில் பிறப்பு விகிதம் 3.55 சதவிகிதமாயும் மரண விகிதம் 2.16 சதவிகிதமாயும் குடிமக்களின் பொதுவான எண்ணிக்கை அதிகரிப்பு 1.39 சதவிகிதமாயும் இருந்தன என்ருல் 1910—1914ஆம் ஆண்டுகளில் இவை முறையே 2.43 சதவிகித மாயும் 1.39 சதவிகிதமாயும் 1.04 சதவிகிதமாயும் குறைந் தன. 1914—1918ஆம் ஆண்டுகளின் உலக யுத்தம் போரிட்ட ஒரு சில நாடுகளின் மக்கள்தொகையைக் குறைத்தது, குடிமக்களின் வயது, பால் வாரியான கட்டமைவைக் குலைத் தது. மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பு முதலாளித்துவத் தின் பொது நெருக்கடிக் காலகட்டத்தில் இன்னமும் குறைந் தது. உதாரணமாக, 1933—1938ஆம் ஆண்டுகளில் பிரிட் டனில் பிறப்பு விகிதம் 1.49 சதவிகிதம் வரை குறைந்தது, இயற்கையான ஜனத்தொகை அதிகரிப்பு 0.29 சதவிகிதம் வரை வீழ்ந்தது. பிறப்பு விகிதம் குறையும் போக்கு முத லாளித்துவத்தின் பொது நெருக்கடியின் முதல் கட்டத்தில் முதலாளித்துவ உலகம் பூராவிற்கும் பொதுவானதாக மாறி மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் ஆட்கொண்டது.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமான போது (1939) மேற்கு ஐரோப்பாவில் பிறப்பு விகிதத்தின் குணகம் 19ஆம் நூற்ருண்டின் 70ஆம் ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் சரா சரியாக கிட்டத்தட்ட 40 சதவிகிதம் குறைந்தது. இரண் டாவது உலக யுத்தத்தின் முன்னணிப் பொழுதில் பிறப்பு விகிதம் இவ்வாறு குறைய முக்கியக் காரணம் 1929—1932ஆம் ஆண்டுகளின் நெருக்கடியாகும். தொழில்துறை உற்

அட்டவணை 1

**இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையில் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் பிறப்பு விகிதக் குணகங்களின் போக்கு (சதவிகிதத்தில்)**

| நாடுகள் | ஆண்டுகள் | | |
|---|---|---|---|
| | 1925—1929 | 1930—1934 | 1935—1939 |
| பெல்ஜியம் | 1.89 | 1.76 | 1.55 |
| பிரான்ஸ் | 1.85 | 1.72 | 1.51 |
| ஜெர்மனி | 1.91 | 1.63 | 1.94 |
| இங்கிலாந்து | 1.76 | 1.58 | 1.53 |
| நெதர்லாந்து | 2.34 | 2.17 | 2.03 |
| இத்தாலி | 2.72 | 2.45 | 2.32 |

பத்தி அளவின் வீழ்ச்சியிலும் வெகுஜனங்களின் ஏழ்மையிலும் இந்நெருக்கடிதான் முதலாளித்துவத்தின் வரலாற்றிலேயே மிக ஆழமானதாகும். மொத்தத்தில் முதலாளித்துவ உலகம் கிட்டத்தட்ட 1908—1909ஆம் ஆண்டுகளின் எல்லைகளுக்குப் பின்தள்ளப்பட்டது. பிரான்சில் மக்கள் குறைவின் அபாயம் தோன்றும் அளவிற்கு மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பு வேகங்கள் கீழ் மட்டத்திற்கு* வந்தன.

குடிமக்களின் புனருற்பத்திப் போக்கின் இன்ஞெரு அங்கமாகிய மரண விகிதத்தை இப்போது பார்ப்போம். தொழில்துறை முதலாளித்துவ காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் மரண விகிதத்தின் குறைவு கால ரீதியாக பிறப்பு விகிதக் குறைவுடன் ஒத்துப் போகவில்லை. பிறப்பு விகிதக் குறைவு 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் மட்டுமே ஆரம்பமானது என்றுல் மரண விகிதம் குறைந்தது சென்ற நூற்றுண்டு பூராவும் காணப்பட்டது. மொத்தத்தில் 19ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் மரண விகிதக் குணகம் 19 சதவிகிதம் குறைந்தது. இந்நூற்றுண்டின் கடைசி கால் பகுதி

* 1932—1937இல் பிரான்சில் ஆண்டு சராசரி மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பின் வேகங்கள் 0.02 சதவிகிதத்திற்கும் குறைவாயிருந்தன.

யில் குறிப்பாக மரண விகிதம் குறையும் வேகங்கள் அதிகமாயின. ஆனல் இவ்விகிதம் நாட்டிற்கு நாடு வேறுபட்டது. கிழக்கு ஐரோப்பாவில் மரண விகிதக் குணகம் 3.0 சதவிகிதத்தை எட்டியது என்ருல் தொழில்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பாவில் இது 1.7—1.8 சதவிகிதம் வரை குறைந்தது. மிகக் குறைவான மரண விகிதம் நார்வேயிலும் ஸ்வீடனிலும் பதிவு செய்யப்பட்டது. சராசரி வாழும் வயது பற்றிய குறியீடு இதைக் காட்டுகிறது. உதாரணமாக, இது 1821 முதல் 1900 வரை நார்வேயில் 46.5 வயதிலிருந்து 52.3 வயதாக (இரு பாலருக்கும்) உயர்ந்தது. பிரான்சில் இது 1825—1827ஆம் ஆண்டுகளில் 38.4 வயதிலிருந்து 20ஆம் நூற்ருண்டின் துவக்கத்தில் 47.0 வயதாக உயர்ந்தது.

மொத்தத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மரண விகிதக் குறைவு 19ஆம் நூற்ருண்டின் மகத்தான ஜனத்தொகைப் புலப்பாடாக இருந்தது. மக்கள் மூப்படையும் நிகழ்ச்சிப் போக்கு வளர்ந்ததானது மேற்கூறிய குறைவின் வேகத்தைத் தாழ்த்திஞலும் இந்த நூற்ருண்டின் ஆரம்பத்தோடு இந்த குறைவு அதிகமாகியது. இரண்டாவது உலக யுத்தம் துவங்கும் வரை மேற்கு ஐரோப்பாவில் மரண விகிதம் மூன்றில் ஒரு பங்கு குறைந்தது. பிரான்ஸ், இங்கிலாந்து, மற்ற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பொருளாதாரம், சமூக-சுகாதாரச் சூழ்நிலைகள், கலாச்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சியின் பயனுய் மரண விகிதம் இடையருது குறைந்து வந்தது. தொற்று நோய்களுக்கு எதிரான வெற்றிகரமான போராட்டம் சராசரி வாழும் வயதைக் கணிசமாக அதிகப்படுத்தியது.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பிக்கவிருந்த தருணத்தில் மரண விகிதம் குறைவான மட்டத்தில் ஸ்திரமடைந்தது, பிறப்பு விகிதம் சராசரி மட்டத்தைச் சுற்றியிருந்தது, இதன் பயனுய் குடிமக்களின் இயற்கையான எண்ணிக்கை அதிகரிப்பு குறைவானதாயிருந்தது. இந்த நேரத்தில் பல நாடுகளில் குடிமக்களின் முழு புனருற்பத்திக் குறியீடு, சாதாரண புனருற்பத்திக்குத் தேவையானதை விட (அதாவது நிலவும் மக்கள் எண்ணிக்கையைத் தக்க வைப்பதற்கானதை விட) குறைவானதாய் இருந்தது. இத்தாலியைத் தவிர ஐரோப்பாவின் பெரும்பாலான வளர்ச்சியடைந்த முதலா

ளித்துவ நாடுகளிலும் அமெரிக்காவின் வெள்ளை மக்களிடையேயும் இன்னும் சில நாடுகளிலும் இப்படியிருந்தது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி வேகங்கள் சிறிது அதிகமாயின. நிரந்தரமாகச் செயல்படும் காரணிகள் இதற்குக் காரணமில்லை, மாறாக, ஒரு சில அசாதாரண சந்தர்ப்பங்கள்தான், உதாரணமாக யுத்த ஆண்டுகளில் தொழில்துறை உற்பத்தி மிகவும் குறைந்ததால்தான் இது இப்படி நடந்தது. மொத்தத்தில் 1951—1968ஆம் ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இந்த வளர்ச்சியின் ஆண்டு சராசரி வேகங்கள் 5.3 சதவிகிதமாயிருந்தன. முதலாளித்துவ உற்பத்தியின் சுழற்சியானது எழுச்சிகளுக்குப் பின் நெருக்கடியான வீழ்ச்சிகள் வருமென்பதை முன்னனுமானிக்கிறது; இவற்றையடுத்து புத்தூக்கமும் எழுச்சியும் வரும். இவையெல்லாம் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளுடன் குறிப்பிட்ட பரஸ்பரத் தொடர்பைக் கொண்டுள்ளன. நெருக்கடிக் காலகட்டங்களில் திருமணங்களும் பிறப்பு விகிதமும் குறையும், புத்தூக்க, எழுச்சிக் கட்டங்களில் பிறப்பு விகிதம் சிறிது கூடும். ஆனால் ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளுக்கு மொத்தத்தில் பிறப்பு விகித குணகம் சராசரியாக 1.8 முதல் 2.3 சதவிகிதமாக இருந்தது.

பல ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் மக்கள்தொகை வளர்ச்சி வேகங்கள் கூடின. மிக உயர்வான ஆண்டு சராசரி அதிகரிப்பு வேகங்கள் 1963—1968ஆம் ஆண்டுகளில் நிலவின: இது ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலும் பிரான்சிலும் 0.90 சதவிகிதமாயும் நெதர்லாந்தில் 1.31 சதவிகிதமாயும் இங்கிலாந்தில் சற்று குறைவாயும் (0.6 சதவிகிதம்) இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக பிறப்பு விகிதம் மாறியதுதான் இதற்குக் காரணமாகும்.

ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் ஜனத்தொகை நிலவரம் மாறியதில் இரண்டு கட்டங்களைக் குறிப்பிடலாம். முதல் கட்டம் 1945 முதல் 50ஆம் ஆண்டுகளின் துவக்கம் வரை உள்ள கட்டமாகும். யுத்தத்திற்குப் பின் பிறப்பு விகிதத்தை ஈடுகட்டும் முறையாக ஏற்பட்ட வளர்ச்சியே இக்

கட்டத்தில் பிறப்பு விகிதம் அதிகரித்ததற்கான காரணமாகும். ஒரு பெண்ணுக்கு பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை நெதர்லாந்தில் 3.9 ஆகவும் பிரான்சிலும் இத்தாலியிலும் 3,0 ஆகவும் இருந்தது. இக்கட்டம் பிரான்சில்தான் மிக நீண்டதாயிருந்தது. யுத்தத்திற்குப் பிந்தைய பிரான்சில் நிலையாக விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியை நோக்கிய மாற்றத்திற்கு (1935—1937இல் இங்கே நிகர குணகம் 0.87 ஆகவும் 1946—1950இல் 1.32 ஆகவும் இருந்தது) முக்கியமாக பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதத்தின் செல்வாக்குதான் காரணமாகும். கடைசியாகச் சொல்லப் பட்டவை குடிமக்களின் பால், வயது வாரியான கட்டமைப் புடன் பரஸ்பரத் தொடர்புடையவை. உதாரணமாக, அல் ஜீரியாவிலிருந்து பிரெஞ்சு குடியேற்றவாசிகளைப் பெருமள வில் திருப்பியனுப்பியதானது அனுகூலமான ஆண்-பெண் விகிதத்தை ஏற்படுத்த உதவியது. 1936இல் 15-49 வய துள்ள ஒவ்வொரு 100 பெண்களுக்கும் சராசரியாக 95 ஆண்களிருந்தனர் என்ருல் 1961இல் 101 ஆண்கள் இருந்த னர். குழந்தைப் பிறப்பின் வேகம் மாறியதுதான் இனப் பெருக்க வளம் பெருகியதற்கான முக்கியக் காரணியாகும்.

50ஆம் ஆண்டுகளில் ஜனத்தொகை நிலவரத்தின் மாற்றத்தில் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகியது. பெரும் பாலான மேற்கு ஐரோப்பிய அரசுகளில் பிறப்பு விகிதம் குறையும் போக்கு தோன்றுகிறது (அட்டவணை 2). யுத்தத் திற்கு முந்தைய ஆண்டுகளிலும் யுத்த ஆண்டுகளிலும் குறைவான பிறப்பு விகிதம் நிலவியதன் பயனுய் உருவான அனுகூலமற்ற பால், வயது வாரியான கட்டமைப்பு மட்டு மின்றி இனப்பெருக்க வளத்தின் வேகம் குறைந்ததும் இதற்குக் காரணமாகும். குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தப் பெரும்பாலான குடும்பங்கள் கொண்ட நாட்டத்தின் விளைவாய் ஒரு சில நாடுகளில் மக்களின் விரிவு படுத்தப்பட்ட புனருற்பத்திக்கு, சில சமயங்களில் சாதாரண புனருற்பத்திக்கு வழியில்லாமல் போயிற்று (அட்டவணை 3).

50ஆம் ஆண்டுகளிலும் 60 ஆண்டுகளின் நடுப்பகுதி வரையிலும் பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து போன்ற நாடு களில் இனப்பெருக்க வளத்தின் மட்டம் ஸ்திரமடைந்தது. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இங்கிலாந்து, பெல்ஜியம் போன்ற நாடுகளில் இது சிறிதளவு அதிகரித்தது. ஆனல் 1965க்குப்

அட்டவணை 2

மேற்கு ஐரோப்பிய நாடுகளில்
பிறப்பு விகிதக் குணகத்தின்
இயக்கப் போக்கு (சதவிகிதத்தில்)

| நாடுகள் | ஆண்டுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1950 | 1955 | 1960 | 1965 | 1969 | 1970 |
| பெல்ஜியம் | 1.69 | 1.68 | 1.69 | 1.64 | 1.46 | 1.47 |
| பிரான்ஸ் | 2.05 | 1.85 | 1.79 | 1.76 | 1.67 | 1.67 |
| இத்தாலி | 1.96 | 1.80 | 1.83 | 1.92 | 1.76 | 1.68 |
| நெதர்லாந்து | 2.27 | 2.13 | 2.08 | 1.99 | 1.92 | 1.83 |
| ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு | 1.65 | 1.60 | 1.78 | 1.79 | 1.50 | 1.33 |
| இங்கிலாந்து | 1.63 | 1.55 | 1.75 | 1.83 | 1.66 | 1.62 |
| ஸ்வீடன் | 1.64 | 1.48 | 1.37 | 1.59 | 1.35 | 1.37 |

அட்டவணை 3

மேற்கு ஐரோப்பிய நாடுகளில்
இனப்பெருக்க வளக் குணகத்தின்
இயக்கப் போக்கு (சதவிகிதத்தில்)

| நாடுகள் | இனப்பெருக்க வளத்தின் பொதுக் குணகம் (15—49 வயதிலுள்ள 100 பெண்களுக்கு) | |
|---|---|---|
| | 1955 | 1965 |
| பிரான்ஸ் | 7.9 | 7.8 |
| ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு | 6.0 | 7.8 |
| இங்கிலாந்து | 7.0 | 8.1 |
| பெல்ஜியம் | 7.0 | 7.6 |
| நெதர்லாந்து | 8.2 | 8.5 |
| ஸ்வீடன் | 6.2 | 6.8 |

பின் இனப்பெருக்க வளத்தின் மட்டம் விரைவாகக் குறைந் தது, இது ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் நன்கு வெளிப் பட்டது. இப்போது பிறப்பு விகித மாற்றம்தான் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் மக்கள்தொகை அதிகரிப்பின் முக்கியக் காரணியாகும். இது சமூக மற்றும் ஜனத்தொகைக் காரணிகளின் மாற்றத்தால் (மக்கள் மூப்படைவதை யொட்டி வயது வாரியான கட்டமைப்பில் ஏற்படும் மாற்றம், குழந்தை பிறப்பு வேகத்தின் மாற்றம்) நிர்ணயிக்கப் படுகிறது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் 70 சத விகிதத்திற்கும் அதிகமான குழந்தைகளை 30 வயதிற்கும் குறைவான வயதுள்ள பெண்களே பெற்றுக் கொள் கின்றனர்.

வளர்ச்சியடைந்த இன்றைய முதலாளித்துவ நாடுகளில் ஒரு சில முந்தைய போக்குகள் தொடர்ந்து நிலவுகின்றன. உதாரணமாக நகரத்தை விட கிராமத்தில் அதிக உயர்வான பிறப்பு விகிதம் நிலவுகிறது. ஆனால் புதிய போக்குகளும் தோன்றுகின்றன. உதாரணமாக ''வருமானம்-இனப்பெருக்க வளம்'' தொடர்பின் வடிவம் சிறிது மாறுகிறது. கிட்டத் தட்ட எல்லா சமூக-தொழில் பிரிவுகளிலும் மிக அதிக வரு மானமுடைய குடும்பங்களில்தான் மிக உயர்வான பிறப்பு விகிதம் காணப்படுகிறது. பொருளாதார ரீதியாக வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளில் இன்றைய காலகட்டத் தில் பொதுவான பிறப்பு விகிதம் குறைந்துள்ள அதே நேரத்தில் பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங் களின் இனப்பெருக்க வள விகிதங்கள் நெருங்கி வந்துள் ளன. அதுவும் பிறப்பு விகிதம் ஒரு வகைக்கு நெருங்கி வரு வதானது எதிர்மறையான போக்குகளின் தாக்கத்தால் நடைபெறுகிறது. மிகக் குறைவான வசதியுடைய, குறை வான கல்வித் தரமுடைய பிரிவுகளில், முக்கியமாகத் தொழி லாளர்கள் மத்தியில் பெண்களின் இனப்பெருக்க வளம் குறைந்துள்ளது அல்லது ஸ்திரமடைந்துள்ளது. மிக அதிக வசதியுடைய, உயர்வான கல்வித் தரமுடைய பிரிவுகளில் (பெரும் முதலாளிகள், மேற்பார்வை, நிர்வாகத் துறை யினர் போன்றோர்) மாறாக இனப்பெருக்க வளம் சிறிது கூடி யுள்ளது. மிகக் குறைவான வசதியுடைய பிரிவினர் மத்தி யில் பிறப்பு விகிதம் குறைந்ததற்கு அனேகமாக தேவை களின் வளர்ச்சியும் தம் குழந்தைகளுக்கு அதிக அனுகூலமான

வாழ்க்கைச் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் நாட்டமும்தான் காரணங்களாகும். இது குறைவான குழந்தைகளையுடைய குடும்பத்தை நோக்கமாகக் கொண்ட ஜனத்தொகைப் போக்கு உருவாக வழிகோலும்.

முதலாளித்துவச் சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைவும் இதன் சமூக சமமின்மையும் இனப்பெருக்க வளத்தின் பாகுபாட்டைத் தக்க வைக்க எப்போதுமே துணை புரியும். அதே சமயம் இனப்பெருக்க வளத்தின் இன்றைய போக்குகளைத் தக்க வைப்பதானது இனப்பெருக்க வளத்தின் புதிய வகையான சமூகப் பாகுபாட்டிற்கு இட்டுச் செல்லக் கூடும். இதன்படி மிக நன்றாக கல்வி பயின்ற, நல்ல வசதியுடைய பிரிவினரிடையே அதிக உயர்வான இனப்பெருக்க வளமும், குறைவான கல்வி பயின்ற, மிகக் குறைவான வசதியுடைய பிரிவினரிடையே குறைவான இனப்பெருக்க வளமும் நிலவும். 1960இல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடந்த ஜனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் 1962இல் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் நடந்த சிறுவீத கணக்கெடுப்பின்படி மிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் ஒரே வர்க்க-தொழில் பிரிவுகளில் வருமானத்தின் அளவிற்கும் பிறப்பு விகிதத்திற்கும் இடையே நேரடியான தொடர்பு உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. அதே நேரத்தில் பிறப்பு விகிதத்திற்கும் கல்வித் தரத்திற்கும் இடையே எதிர்மறையான தொடர்பு காணப்படுகிறது. உதாரணமாக 1969இல் அமெரிக்காவில் நடத்தப்பட்ட தனி ஆய்வுகளின்படி, குறைவான கல்வியறிவுடைய பெண்களுடன் ஒப்பிடுகையில் அதிகக் கல்வியறிவுடைய பெண்களின் மத்தியில் பிறப்பு விகிதம் கணிசமான அளவு குறைந்தது.

பிறப்பு விகிதம் குறைந்ததும் மரண விகிதம் ஸ்திரமடைந்ததும் (ஒரு சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குடிமக்கள் மூப்படைந்ததன் விளைவாய் இது சிறிதளவு அதிகரித்தது) தொழில்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சியின் சராசரி ஆண்டு வேகங்கள் குறைவதற்கு வழிகோலின. 1974ஆம் ஆண்டில் இந்நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சியின் சராசரி ஆண்டு வேகம் 0.9 சதவிகிதமாய் இருந்தது. வடக்கு மற்றும் மேற்கு ஐரோப்பாவில் மக்கள் எண்ணிக்கை ஆண்டிற்கு 0.4 சதவிகிதம் அதிகரித்தது, ஒரு சில ஐரோப்பிய

நாடுகளில் இயற்கையான எண்ணிக்கை அதிகரிப்பு வேகங்கள் பூஜ்ஜியத்தை எட்டின.

இந்த எண்ணிக்கை குறைப்பு மிகவும் கணிசமானதாகும். 1978இல் இங்கு மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பு 1970இல் இருந்ததை விட 930 பேர்கள் குறைவாக இருந்தது. உதாரணமாக, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலும் ஆஸ்திரியாவிலும் சமீப ஆண்டுகளில் மரண விகிதம் பிறப்பு விகிதத்தை விட அதிகமானதாக இருந்தது, இங்கிலாந்து, ஸ்வீடன், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலோ இந்த இரண்டு குறியீடுகளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தன. பிறப்பு விகிதம் 1.65 சதவிகிதத்திலிருந்து 1.44 சதவிகிதமாகக் குறைந்ததாலும் மரண விகிதம் சிறிது அதிகரித்ததாலும் மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பு குறைந்தது.

திருமணங்களும் விவாக ரத்துகளும் நாட்டின் பொருளாதார நிலைக்குச் சான்று பகரும் மிக முக்கியக் காரணிகளில் அடங்கும். இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின், குறிப்பாக வடக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சிறப்பு அம்சங்களில் ஒன்று திருமணம் செய்து கொள்ளும் வயது அதிகமானதாக இருப்பதாகும். உதாரணமாக, 1900இல் ஸ்வீடனில் 20—24 வயதாகியிருந்தோரில் 8 சதவிகித ஆண்களும் 20 சதவிகித பெண்களும் மட்டுமே திருமணமானவர்களாக இருந்தனர்; இங்கிலாந்தில் 17 சதவிகித ஆண்களும் 27 சதவிகித பெண்களும் மட்டுமே திருமணமானவர்களாயிருந்தனர். இவற்றுடன் ஒப்பிடுகையில், உதாரணமாக, பல்கேரியாவில் அதே நேரத்தில் 42 சதவிகித ஆண்களும் 76 சதவிகித பெண்களும் 24 வயதில் திருமணமானவர்களாயிருந்தனர். இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளில் 24 வயதான பெண்களில் முக்கால் பகுதியினர் இன்னமும் திருமணமாகாதவர்களாயிருந்தனர், ஆனால் கிழக்கு மற்றும் தெற்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்வயதிலிருந்த பெண்களில் முக்கால் பகுதியினருக்குத் திருமணமாகியிருந்தது. 20ஆம் நூற்றுண்டின் இரண்டாவது பாதி வாக்கில் எல்லா ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளிலும் திருமணம் செய்து கொள்ளும் வயது குறைந்தது. அதிலும் வட ஐரோப்பாவில் இவ்வாறு குறைவது தீவிரமாயும் மேற்கு ஐரோப்பாவில் சற்று மெதுவாகவும் நடந்தது. உதாரணமாக

1930 முதல் 1950 வரை திருமணம் செய்து கொள்ளும் சராசரி வயது ஸ்வீடனில் 2.8 வயது குறைந்தது, 1926—1930 முதல் 1956—1960 வரை இங்கிலாந்தில் இது 2.2 வயது குறைந்தது, 1933 முதல் 1947 வரை பெல்ஜியத்தில் இது 0.6 வயது குறைந்தது, 1931 முதல் 1952 வரை இது பிரான்சில் 0.3 வயது குறைந்தது. மொத்தத்தில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் திருமணமாகும் வயது ஆண்களுக்கு சுமார் 25 ஆகவும் பெண்களுக்கு சுமார் 22 ஆகவும் உள்ளது. பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் திருமண குணகம் சமீப ஆண்டுகளில் 1000 பேர்களுக்கு 7 முதல் 9 வரையாக இருந்தது.

சமூக-பொருளாதாரக் காரணிகள், மருத்துவம் மற்றும் சமூக ஆரோக்கியத்தின் முன்னேற்றம் ஆகியவை குடிமக்களின் மரணத்திற்கான காரணங்களின் கட்டமைவில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. 20ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தொற்று நோய்கள்தான் மரணத்திற்கான முக்கியக் காரணமாக (குறிப்பாக இளம் வயதில்) இருந்தன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொற்று நோய்களுக்கு எதிரான போராட்டத்தின் பயனுய் கடுமையான தொற்று நோய்கள் கணிசமாகக் குறைந்தன. ஆனுல் அதே சமயம் இருதய-ரத்தக்குழாய் நோய்கள், புற்று நோய், தொழில் ரீதியான நோய்கள், உற்பத்திப் போக்கில் உண்டாகும் காயங்கள் ஆகியவற்றினுல் ஏற்படும் மரணங்கள் கணிசமாகக் கூடியுள்ளன.

அமெரிக்காவிலும் மற்ற சில வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையிலான காலகட்டத்தில் நடத்தப்பட்ட சில ஆராய்ச்சிகளின் விவரங்களைக் கொண்டு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் மக்களுடைய மரண விகிதத்தின் கட்டமைவு மற்றும் அளவுகள் பற்றி நடத்தப்பட்ட வர்க்க ரீதியான பகுப்பாய்வு, மக்கள் நோய்வாய்படும் அளவுகளில் கணிசமான வர்க்க வேறுபாடுகளைக் காட்டியது. உதாரணமாக வேலை செய்பவர்களை விட வேலையில்லாதவர்களிடம் அதிக அளவு நோய்கள் காணப்பட்டன. நோய்வாய்படுவதில் வர்க்க வேறுபாடுகள் இன்று வரை உள்ளன. வெவ்வேறு ஊதியங்களையுடைய குடும்பங்களில் நோய்களின் அடுக்குநிகழ்வைப் பற்றிய ஆராய்ச்சி (இது 1954இல் அமெரிக்க சமஷ்டி சுகா

தார சேவை நிறுவனத்தால் நடத்தப்பட்டது) குறைவான ஊதியத்தையுடைய குடும்பங்களில் நோய்வாய்படும் குறியீடு அதிகமானதாக உள்ளதைக் காட்டியது. 1957—1958இல் அமெரிக்காவில் குடிமக்களின் மத்தியில் நடத்தப்பட்ட பரவலான தனி ஆராய்ச்சிகளும் இம்முடிவை மெய்ப்பித்தன. 1962இல் அமெரிக்க சுகாதாரப் பிரச்சினைகள் பற்றிய ஜனாதிபதியின் கமிஷனும் அதிக வருமானங்களை உடையவர்களை விட குறைவான வருமானம் உடையவர்களிடையே நோய்வாய்படும் காலமும் இதன் அடுக்குநிகழ்வும் அதிகமானது என்று குறிப்பிட்டது.

மொத்தத்தில் 20ஆம் நூற்றாண்டில் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இருதய-ரத்தக்குழாய் நோய்களால் ஏற்படும் மரணங்கள் இடையறாது அதிகரித்து வந்துள்ளன. வெவ்வேறு வயது-பால் பிரிவினரிடையே இதன் அளவு வெவ்வேறானது. குழந்தைகள் மத்தியில் (14 வயது வரை) இருதய-ரத்தக்குழாய் நோய்களால் உண்டாகும் மரணங்கள் குறைந்தன. 35 வயது வரையுள்ளோரிடையே, குறிப்பாக 25—34 வயது நிரம்பியவர்கள் மத்தியில் இது குறையும் வேகம் கணிசமான அளவு குறைவானதாகும். இதற்கு மேற்பட்ட வயது பிரிவினரிடையே மரண விகிதம் கூடியுள்ளது. சராசரி வேலை வயது வரம்புகளில் மரண விகிதம் கூடியதற்கு முக்கியக் காரணம், தொழில்துறையில் உழைப்பின் தீவிரம் அதிகரித்ததாகும்.

இருதய-ரத்தக்குழாய் சம்பந்தமான நோய்களாலும் புற்று நோயாலும் ஏற்படும் மரணங்களின் அதிகரிப்பு, வீட்டில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் போக்குவரத்திலும் உற்பத்திப் போக்கிலும் ஏற்படும் காயங்களின் அதிகரிப்பு, அதாவது முக்கியமாக குடிமக்களின் உழைப்பு மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகளோடு தொடர்புடைய நோய்களின் அதிகரிப்பு ஆகியவைதான் 20ஆம் நூற்றாண்டில் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு உரித்தானவையாகும். மொத்தத்தில் 1978ஆம் ஆண்டு வாக்கில் இவற்றில் மரண விகிதம் 0.9 சதவிகிதமாயிருந்தது.

பெருமளவில் மக்கள் குடிபெயர்ந்ததும் மீட்கப்படாத நிலங்களில் காலனிகளை உருவாக்கியதும் முதலாளித்துவச் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதிலும் உலக

முதலாளித்துவ பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவதிலும் பெரும் பங்காற்றின. பூர்ஷ்வா தேசிய இனங்களின் மக்கள்தொகையில் குடிபெயர்ந்து வந்தவர்கள்தான் சிறு பங்கினராக இருந்தாலும் முதலாளித்துவக் காலகட்டத்தில் மக்களுடைய குடிபெயர்ச்சி அளவு இதற்கு முந்தைய எல்லாச் சகாப்தங்களிலும் இருந்த அளவுகளை விஞ்சியது. ''முதலாளித்துவம் வேண்டுமென்றே குடிமக்களின் இடப்பெயர்வை ஏற்படுத்துகிறது, முந்தைய சமூக அமைப்புகள் இதைக் கோரவில்லை, அப்போது இது இவ்வளவு பரவலான அளவில் சாத்தியமானதாகவும் இருக்கவில்லை''* என்று வி. இ. லெனின் எழுதினர். இவ்வாறு இடம் விட்டு இடம் செல்வதானது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலேயே (தொழிலாளர்களை உற்பத்திச் சாதனங்களிலிருந்து பிரிப்பதில்) உள்ளது. முதலாளித்துவத்தில் உழைப்புச் சக்தியின் இடப்பெயர்ச்சிதான் குடிமக்களுடைய குடிபெயர்ச்சியின் உண்மையான அடிப்படையாகும்.

உலகச் சந்தையை, எல்லாவற்றிற்கும் மேலாக ''விசேஷ வகையான பண்டமாகிய'' உழைப்புச் சக்திக்கான சந்தையை ஏற்படுத்துவது முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிக்கான மிக முக்கிய முன்தேவைகளில் ஒன்றாகும். மூலதனத்தின் ஆதித்திரட்சிக் கட்டத்திலேயே உழைப்புச் சக்திக்கான தேவை அதிகரித்தது. பெரும் உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில், சிறு உற்பத்தியாளர்கள் திவாலாகி தம் பங்கினை இழந்த போது அடிமை வர்த்தகத்திற்குப் பதிலாக உழைப்பாளிகளின் பெருமளவு இடப்பெயர்ச்சி வந்தது. தொழில்துறை முதலாளித்துவ கட்டத்திற்கும் இதற்குச் சற்றும் குறையாத அளவு நவீன ஏகாதிபத்தியத்திற்கும் அந்நிய உழைப்புச் சக்தியைச் சுரண்டுவது உரித்தானது.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், நிலங்களை இழந்த விவசாய மக்கள் அயர்லாந்திலிருந்து பிரிட்டனுக்குச் சென்றதை நூற்றாண்டின் முதல் பெரும் சர்வதேச இடப்பெயர்ச்சி எனலாம். இந்நூற்றாண்டின் நடுவில் பிரிட்டனிலிருந்து சமுத்திரத்திற்கப்பால் உழைப்பாளிகள் செல்வது கணிசமாக அதிகரித்தது. 1815 முதல் 1859 வரை பிரிட்டனிலிருந்து மொத்தம் 40 லட்சம் பேர்கள் குடிபெயர்ந்

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 3, பக்கம் 600 (ருஷ்யப் பதிப்பு).

தனர். இந்நேரத்தில் நாடு துறந்து வந்தவர்கள் குடியேறிய மிகப்பெரும் நாடாக அமெரிக்கா ஆகியது. 19ஆம் நூற்றூண்டின் இரண்டாம் பாதியில் அமெரிக்காவிற்குக் குடிபெயர்பவர்களை அளித்ததில் பிரிட்டனின் பங்கு கணிசமாகக் குறைந்தது. இக்காலத்தில் ஜெர்மனியிலிருந்துதான் மிக அதிக மக்கள் நாடு துறந்து வெளியேறினர். 1880—1889ஆம் ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 19ஆம் நூற்றூண்டிலேயே மிக அதிகமான குடிபெயர்ந்தோர் பதிவு செய்யப்பட்ட போது ஜெர்மனியிலிருந்து மட்டும் 15 லட்சம் பேர்கள் குடிபெயர்ந்தனர். 19ஆம் நூற்றூண்டின் இறுதியில் ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவிற்குக் குடிபெயர்வது குறைய ஆரம்பிக்கிறது.

1880—1902ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவிற்கு மிகப் பெருமளவிலான குடிபெயர்ச்சி ஸ்காண்டினேவிய நாடுகளிலிருந்து, குறிப்பாக ஸ்வீடனிலிருந்து நடந்தது. 19ஆம் நூற்றூண்டின் இறுதியிலிருந்து, அமெரிக்காவிற்கு குடிபெயர்பவர்களை வழங்குவதில் இத்தாலி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ஜாரிச ருஷ்யா ஆகிய தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலிடத்திற்கு வருகின்றன. ஐரோப்பாவிலிருந்து அதிக பட்ச குடிபெயர்ச்சி 1900—1914ஆம் ஆண்டுகளில் நடந்தது. இந்நேரத்தில் 134 லட்சம் பேர்கள் அமெரிக்காவில் குடியேறினர். இவர்களில் 122 லட்சம் பேர்கள் ஐரோப்பாவிலிருந்து (30 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இத்தாலியிலிருந்து, இதே அளவு ஆஸ்திரிய-ஹங்கேரியிலிருந்து, 22 லட்சம் பேர்கள் ஜாரிச ருஷ்யாவிலிருந்து, 13 லட்சம் பேர்கள் பிரிட்டனிலிருந்து) வந்தனர்.

19ஆம் நூற்றூண்டின் இரண்டாவது பாதியிலிருந்து குடிபெயர்ந்தோர் நாடுகள் வெளிநாடுகளிலிருந்து உழைப்புச் சக்தி வருவதை நிரந்தரமாகச் சார்ந்திருந்தன. உதாரணமாக, அமெரிக்காவில் 40 ஆண்டுகளில் (1870 முதல் 1910 வரை) நாட்டின் மக்கள் எண்ணிக்கை முழுவதன் அதிகரிப்பில் 15 சதவிகிதமும் மொத்த உழைப்புச் சக்தியின் அதிகரிப்பில் 20 சதவிகிதமும் முற்றிலுமாக நாடு பெயர்ந்து குடியேறியவர்களால் ஏற்பட்டன. இரண்டு உலக யுத்தங்கள், 30ஆம் ஆண்டுகளின் பொருளாதார நெருக்கடிகள், அமெரிக்க அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள் மற்றும் பாகுபாட்டு அரசியல் ஆகியவற்றின் விளைவாக நாட்டினுள் குடிபெயர்

வோர் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது. இவர்களில் சிலர் தம் தாய்நாட்டிற்கு—இங்கிலாந்து, அயர்லாந்து, இத்தாலிக்கு—திரும்பினர். ''சுதந்திரமான'' உழைப்புச் சக்தியைப் பரிவர்த்தனை செய்து கொள்வது சம்பந்தமான முதலாளித்துவ நாடுகளின் இந்த உறவு முறைதான் சர்வ தேச ''உழைப்புச் சந்தையைத்'' தோற்றுவிக்கிறது. இது நிலவுவது உழைப்பாளிகளின் சர்வதேச இடப்பெயர்ச்சியில் வெளிப்படுகிறது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு இணையாகவே சர்வதேச உழைப்புச் சக்தியும் வளருகிறது. சர்வதேச ''உழைப்புச் சந்தை'' வளர்ச்சியடைந்த வடிவத்தில் 19ஆம் நூற்றுண்டின் இரண்டாம் பாதியில் உருவாகிறது.

முதலாளித்துவத்தின் கீழ் உழைப்புச் சக்தியின் இடப்பெயர்ச்சி தொழில்துறை சுழற்சியுடன் நேரடியாக பரஸ்பரம் தொடர்புடையது. உழைப்புச் சக்தியின் இடப்பெயர்ச்சிக்கும் தொழில்துறை சுழற்சியின் கட்டங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை முழுமையாக நிலைநாட்ட தேசிய வருமானம், மொத்தமாகவும் தனித்தனியாகவும் பொருட்களின் உற்பத்தி, முதலீட்டின் இயக்கப் போக்கு முதலிய நாட்டு பொருளாதார வளர்ச்சியின் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்த வேண்டும். இடப்பெயர்ச்சிக்கும் சுழற்சியின் கட்டங்களுக்கும் இடையே இருந்த தொடர்பு 19ஆம் நூற்றுண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உதாரணத்தில் நன்கு தெரிகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் குடிபெயருவதிலும் தொழில்துறை சுழற்சிகளின் மற்ற முக்கிய அம்சங்களிலும் சுழற்சியின் கடைக்கோடிக் கட்டங்கள் ஒத்துப் போகின்றன. இதில், குடிபெயர்ச்சியானது தொழில்துறை சுழற்சியின் போக்கையும் உழைப்புச் சக்தியின் தேவையுடைய வளர்ச்சியின் சுழற்சித் தன்மையையும் சார்ந்திருக்கிறது என்ற உண்மை பிரதிபலிக்கிறது. இடப்பெயர்ச்சியின் அளவு முதலாளித்துவத்தின் சுழல் வளர்ச்சியின் பொதுவான போக்கைப் பிரதிபலிக்கிறது.

அமித உற்பத்தி நெருக்கடிகள் உழைப்புச் சக்தியின் இடப்பெயர்ச்சியில் நேரடியாகப் பிரதிபலிக்கின்றன. இவை ஏராளமான மனிதர்களைப் பின்னுக்குத் தள்ளுகின்றன, இது குடிபெயர்ந்தவர்களின் (இவர்கள் உழைப்பாளிகளாவார்கள்) பெரும் வறுமையுடன் தொடர்புடையது. 20ஆம்

நூற்றுண்டில் சுழற்சி நெருக்கடிகள் முன்னை விட அடிக்கடி நடந்ததானது உழைப்புச் சக்தியின் சர்வதேச இடப்பெயர்ச்சியையும் தவிர்க்க இயலாதவாறு பாதித்தது. உதாரணமாக 1904—1908இல் அமெரிக்காவினுள் குடிபெயருவதும் பிரிட்டனிலிருந்து வெளியேறுவதும் சுழல் ரீதியாக குறைந்தது. தொழில்துறை சுழற்சியின் கட்டங்களுக்கும் இடப்பெயர்ச்சியின் தீவிரத்திற்கும் இடையிலுள்ள பரஸ்பரத் தொடர்பை பற்றி குறிப்பிடும் போது குடிபுகும் நாடுகளில் அமித உற்பத்தி நெருக்கடிக் கட்டத்தில் உழைப்புச் சக்தி இறக்குமதி செய்யப்படுவது நிற்கிறது, அயல்நாட்டு தொழிலாளர்கள், சில சமயங்களில் சொந்தத் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குப் பெருமளவில் செல்வது காணப்படுகிறது என்று கூற வேண்டும். புத்தூக்க, எழுச்சிக் கட்டங்களில் அயல்நாட்டு உழைப்புச் சக்தியின் வருகை, வேலையின்மை அகலும் வேகத்தைக் குறைக்கிறது, ஊதிய உயர்வைத் தாமதப்படுத்துகிறது.

ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்கும் மையம் அமெரிக்காவிலிருந்து மேற்கு ஐரோப்பாவிற்கு மாறியது.

முதலாவது உலக யுத்தத்திற்கு சற்று முன்னுல், ஜெர்மானியத் தொழில்துறையின் உயர்வான அனுகூல நிலவரம் கணிசமான அளவு இத்தாலியத் தொழிலாளர்களை நாட்டிற்குக் கவர ஆரம்பித்த போது ஜெர்மனிக்கு ஏராளமானோர் குடியேற ஆரம்பித்தனர். முதலாவது உலக யுத்தத்திற்குப் பின் இந்தப் போக்கு முடிவடைந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஜெர்மனி, தான் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து உழைப்புச் சக்தியைப் பெருமளவில் ''திரட்ட'' ஆரம்பித்தது, இது கட்டாயத் தன்மையை உடையதாக இருந்தது, 1945 வசந்த கால வாக்கில் இந்தக் கட்டாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50 லட்சத்தை எட்டியது. பாசிச ஜெர்மனி முறியடிக்கப்பட்ட பின் இடிபாடுகளில் கிடந்த மேற்கு ஜெர்மானியத் தொழில்துறையால் சொந்த மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதே கடினமானதாக இருந்தது. 1948—1952ஆம் ஆண்டுகளில் ஏராளமான தொழிலாளர்கள் வேலை தேடி மேற்கு ஜெர்மனியிலிருந்து பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஓடினர். 1958இலிருந்து அந்நியத் தொழிலாளர்

கள் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிற்குப் பரவலான அளவில் குடிபெயர்வது ஆரம்பித்தது. இன்றுவரை இது இந்நாட்டினுடைய பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்குகிறது. 1961இல் 7,42,200 அந்நியத் தொழிலாளர்கள் இங்கு வந்தார்கள் என்றால் 1970ஆம் ஆண்டு வாக்கில் இந்த எண்ணிக்கை 10,72,400ஆக அதிகரித்தது. 70ஆம் ஆண்டுகளின் இரண்டாம் பாதியில் இது சுமார் 40 லட்சமாகியது.

1945க்குப் பின் மேற்கு ஐரோப்பாவில் ஸ்விட்சர்லாந்து நாட்டிற்கு மக்கள் குடிபெயர ஆரம்பித்தனர். ஆனால் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்சிற்கு மாறாக இங்கு குடியேறுவது கணிசமான அளவு பருவகாலத் தன்மையை உடையதாக உள்ளது. இங்கே 10 லட்சத்திற்கும் கூடுதலான குடிபெயர்ந்தோர் உள்ளனர்.

பிரான்சில் உழைப்புச் சக்தியின் பற்றாக்குறை முதலாவது உலக யுத்தத்திற்குப் பின் குறிப்பாக கணிசமானதாக இருந்தது. 1920 முதல் 1925 வரை பிரான்சிற்குக் குடிபெயர்ந்தோர் எண்ணிக்கை 5 லட்சத்திலிருந்து 15 லட்சமாக மும்மடங்கு அதிகரிக்கக் காரணம், சுழற்சியின்படி தொழில் துறை புத்தூக்கக் கட்டத்தினுள் நுழைந்தது மட்டுமின்றி யுத்தத்திற்கு பின் பொருளாதாரம் புனர்நாட்டப்பட்டதும் யுத்தத்தின் போது ஏற்பட்ட ஆட்சேதத்தை (15 லட்சம் பேர்கள் கொல்லப்பட்டனர்) ஈடு செய்ததுமாகும். இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையிலான காலகட்டத்தில் உலகப் பொருளாதார நெருக்கடி,குடிபெயர்ச்சியின் அளவுகளைப் பெரிதும் பாதித்தது. இந்நெருக்கடியின் விளைவாய் குடிபெயர்ந்தவர்களில் ஏராளமானோர் தம் தாய்நாடுகளுக்குத் திரும்பினார்கள். 1932இலும் 1935இலும் பிரான்சிற்குக் குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கையை விட இங்கிருந்து தம் நாடுகளுக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் பிரான்சிற்குக் குடிபெயர்வது குறைவானதாகவே இருந்தது, 60ஆம் ஆண்டுகளில் இது கணிசமாக அதிகரிக்கத் துவங்கியது. இப்போது பிரெஞ்சு பொருளாதாரத்தில் அயல்நாட்டு தொழிலாளர்கள் கணிசமான பங்காற்றுகின்றனர். 70ஆம் ஆண்டுகளின் இரண்டாவது பாதியில் 30 லட்சத்திற்கும் கூடுதலான அயல்நாட்டு தொழிலாளர்கள் பிரான்சில் இருந்தனர். இவர்களில்

பெரும்பாலோர் மக்ரிப் நாடுகள்,* போர்த்துகல், ஸ்பெயின் நாடுகளிலிருந்து வந்தவர்கள்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தொழில்துறைப் பலம் கணிசமான அளவு அயல்நாட்டு தொழிலாளர்களின் கடினமான உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டது. பொருளாதார ரீதியாக குறைவான வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய அரசுகள்தான் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அயல்நாட்டு உழைப்புச் சக்திக்கான பாரம்பரிய மூல ஊற்றுகளாக இருந்து வருகின்றன. அதோடு கூட ஆப்பிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளும் மலிவான உழைப்புச் சக்தியைக் கணிசமான அளவில் தருகின்றன. ஐரோப்பிய பொருளாதாரக் கவுன்சில் தோற்றுவிக்கப்பட்டதையடுத்து மேற்கு ஐரோப்பாவிற்கு உழைப்புச் சக்தி இடம்பெயர்வதில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரே துறையில் அல்லது கூட்டமைப்பில் தொழிலாளர்கள் இடம் விட்டு இடம் மாறுவதற்கான சுதந்திரம் என்றழைக்கப்படுவதற்கு வகை செய்யும் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. ரோம் ஒப்பந்தத்தின் விசேஷ ஷரத்துக்களின்படி ஐரோப்பிய பொருளாதாரக் கவுன்சிலின் உறுப்பு நாடுகளிலுள்ள உழைப்பாளிகள் விருப்பம்போல் இடம் மாறலாம். ரோம் ஒப்பந்தம் விரிவாக வகுத்த செயல்திட்டத்தின்படி ஒரு புறம் ''தொழிலாளர்கள் சுதந்திரமாக இடம் விட்டு இடம் மாறலாம்'', மறு புறம் இது அயல்நாட்டு தொழிலாளர்களைப் பயன்படுத்தும் பாதையில் பல்வேறுவிதமான தடைகளை ஏற்படுத்தியது. மலிவான ஆனால் அதே நேரத்தில் தொழிற் பயிற்சி பெற்ற உழைப்புச் சக்தியைக் கொண்டு வருவதில் உழைப்புச் சக்தியை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு இருந்த நாட்டம் ஐரோப்பிய பொருளாதாரக் கவுன்சிலில் அங்கம் வகிக்காத நாடுகளிலிருந்து உழைப்பு மூலாதாரங்களைக் கொண்டு வரும்படி கோரியது. எனவே கிரீஸ், துருக்கி, ஸ்பெயின், யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளிலிருந்து மலிவான உழைப்புச் சக்தியின் வருகை பெரிதும் அதிகரித்தது. சாதாரணமாக அயல்

---

* மக்ரிப்—டியூனிஷியா, அல்ஜீரியா, மொரோக்கோ ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி. லிபியா, மாரிட்டானியா, மேற்கு சகாரா ஆகிய நாடுகள் மக்ரிபுடன் சேர்ந்து பெரிய மக்ரிப் அல்லது அரேபிய மேற்கை உருவாக்குகின்றன.—ப-ர்.

நாட்டு தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள் தேசியத் தொழிலாளர்களுக்கு உள்ள சூழ்நிலைகளை விடப் பன்மடங்கு மோசமானவை. ஊதியம், வேலை நேரம், தொழில்துறை பயிற்சி, வீட்டு வசதி நிலைமைகள் ஆகியவை சம்பந்தமான விஷயங்களில் அயல்நாட்டு தொழிலாளர்கள் பாகுபாட்டுக்கு ஆளாகின்றனர். எல்லா மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் குறைவான ஊதியமுடைய, கடுமையான வேலைகளில் அயல்நாட்டு தொழிலாளர்கள்தான் உள்ளனர். பிரான்சில் உள்ள அயல்நாட்டு தொழிலாளர்களில் 70 சதவிகிதத்திற்கும் அதிகமானோர் பயிற்சியற்ற வேலைகளைச் செய்பவர்கள், குறைவான தேர்ச்சியுடையவர்கள். ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் அந்நியத் தொழிலாளர்களில் 36 சதவிகிதத்தினர் உலோகத் துறையில் கடினமான வேலைகளில் உள்ளனர், 23 சதவிகிதத்தினர் மிகக் குறைவான ஊதியத்திற்கு நூற்பாலைத் துறையில் வேலை செய்கின்றனர், சுமார் 18 சதவிகிதத்தினர் கட்டுமானங்களில் எடுபிடியாட்களாக உள்ளனர். வெளிநாடுகளிலிருந்து வரும் பெண் தொழிலாளர்களின் நிலை இன்னமும் மோசமானது. இவர்கள் பெரும்பாலும் பதப்படுத்தும் துறைகளில், கன்வேயர் உற்பத்தி முறையில் உள்ளனர். சாதாரணமாக இவர்களுடைய வேலைக்கு மிகக் குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது.

20ஆம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே இத்தாலி உழைப்புச் சக்தியை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடுகளில் ஒன்றானது. குடிபெயர்ச்சி எப்படி சுழற்சி காரணிகளின் தாக்கத்தைப் பொறுத்தது என்பதை இந்த உதாரணமும் தெட்டத்தெளிவாகக் காட்டுகிறது. 1921ஆம் ஆண்டு வாக்கில் இத்தாலியிலிருந்து வெளியேறினவர்களின் எண்ணிக்கை 2,05,000ஆக இருந்தது. 1921ஆம் ஆண்டின் உலகப் பொருளாதார நெருக்கடி இத்தாலியிலிருந்து குடிபெயர்வதை 1922ஆம் ஆண்டு வாக்கில் 84,000ஆக குறைத்தது. 1929—1932ஆம் ஆண்டுகளின் உலகப் பொருளாதார நெருக்கடியின் விளைவாய் இத்தாலியிலிருந்து குடிபெயர்வது 1930இல் 2,20,000 வரை அதிகரித்தது. பிந்தைய ஆண்டுகளில் இது இடையறாது குறையக் காரணம் (1936இல் 22,000 பேர்கள் மட்டுமே வெளியேறினர்) குடியிறக்க நாடுகளில் உழைப்புச் சக்திக்கான தேவை சுழற்சி ரீதியாகக் குறைந்ததன் தாக்கமும் இரண்டாவது உலக யுத்தத்தின்

முன்னணிப் பொழுதில் முஸ்ஸோலினியின் பாசிச அரசாங்கம் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடை செய்ததுமாகும். சமீப ஆண்டுகளில் ஆண்டுதோறும் இத்தாலியிலிருந்து 1 லட்சத்திற்கும் அதிகமானோர் வேலை தேடி மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றனர்.

சமீப காலமாக எல்லா ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்திலும் தோன்றியுள்ள நெருக்கடிகளாலும் வேலையின்மை அதிகரித்ததாலும் இந்த இடப்பெயர்ச்சிகள் குறைந்தன, முன்னர் வெளியேறியவர்கள் திரும்ப வருவது அதிகரித்துள்ளது.

*அத்தியாயம் ஒன்பது*

## வளர்முக் நாடுகளின் மக்கள்தொகைப் பிரச்சினைகள்

*உலக காலனியாதிக்க முறை தகர்ந்து வீழ்ந்தது நவீன காலத்தின் மகத்தான சம்பவங்களில் ஒன்றுகும். சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் வெற்றி, உலக சோஷலிச அமைப்பின் வெற்றிகள் ஆகியவற்றின் பலம் மிகு தாக்கத்தால் தேசிய விடுதலை இயக்க அலை காலனியாதிக்க ஆட்சிகளை அடித்து சென்றது: ஆசியாவின் அரசியல் தேசப்படம் மாறியுள்ளது, ஆப்பிரிக்காவிலுள்ள பெரும்பாலான மக்களினங்கள் அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுள்ளன, கியூபப் புரட்சியின் வெற்றியானது முழு தேசிய விடுதலைக்காக லத்தீன் அமெரிக்க மக்கள் நடத்திய போராட்டத்தின் வளர்ச்சியை வெளிப்படுத்தியது. உலக மக்களில் மிகப் பெரும்பாலானோர் வாழும் பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் சர்வதேச அரங்கிற்கு வந்துள்ளன.*

*''தொழில்துறை வளர்ச்சியின் மையத்தை அரசுத் துறைக்கு மாற்றியது, நிலப்பிரபுத்துவ நிலவுடைமையை அகற்றியது, தம் சொந்த இயற்கைச் செல்வங்களின் மீது இளம் அரசுகளின் செயல்வன்மையுள்ள சுய உரிமையை நிலைநாட்டும் நோக்கத்தோடு அயல்நாட்டு தொழில் நிறுவனங்களை தேசவுடைமையாக்கியது, சொந்த ஊழியர்களைப் பயிற்றுவித்தது''—இவைதான் பல விடுதலையடைந்த நாடுகளில் சமீப ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் முக்கிய அம்சங்களாகும். ''சுருங்கக் கூறின் இன்னல்களைப் பொருட்படுத்தாது உலகின் இப்பகுதியில் ஆழ்ந்த முற்போக்கான மாற்றங்கள் நடைபெறுகின்றன. இது நிச்சயமாக வரலாற்று முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிப் போக்காகும்''**

* **சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசின் ஆவணங்கள்,** *பக்கங்கள் 11—12 (ருஷ்ய மொழியில்).*

வளர்முக நாடுகளின் வளர்ச்சிக்கான இடர்ப்பாடுகளுக்கு முக்கியக் காரணம், இந்நாடுகளை ஏகாதிபத்தியம் நீண்ட காலமாக காலனியாட்சிக்கு உட்படுத்தி சுரண்டியதாகும். இது இவற்றின் பொருளாதார, சமூக, கலாச்சார நிலையில் மோசமாக பிரதிபலித்தது. இந்நாடுகள் சுதந்திரமற்று இருந்த போது இவற்றின் பொருளாதாரத்தைத் தன் விவசாய, மூலப்பொருள் பிற்சேர்க்கையாக மாற்றிய சர்வதேச ஏகாதிபத்தியம் இப்போதும் நவீன காலனியாதிக்கத்தைத் திணிக்கிறது, விடுதலையடைந்த மக்களினங்களின் முன்னேக்கிய வளர்ச்சியைத் தடுக்க இயன்ற அனைத்தையும் செய்கிறது. காலனி மற்றும் சார்பு நாடுகளின் நீண்ட, ஒருதலைபட்சமான பொருளாதார வளர்ச்சியின் விளைவாய், விடுதலை கிடைத்த நேரத்தில் இவற்றின் பொருளாதாரத்தில் முதலாளித்துவத்திற்கு முந்தைய பொருளாதார முறைகள், அதுவும் நிலப்பிரபுத்துவ முறைகள் மட்டுமின்றி பொதுக் குடிவாழ் முறைகளும் கணிசமான ஆதிக்கம் செலுத்தின. வளர்முக நாடுகளில் பாட்டாளி வர்க்க ஊழியர்களும் பல நேரங்களில் அந்நிய மூலதனத்துடன் தொடர்புடைய தேசிய முதலாளி வர்க்கமும் உருவானாலும் இவற்றின் பெரும்பாலான மக்கள் விவசாயிகளாகவே இருந்தனர், இவர்கள் பல சமயங்களில் மிகக் குறைவான மட்டத்தில் விவசாயம் செய்தனர்.

இவையனைத்தும் இந்நாடுகளுடைய மக்கள்தொகை வளர்ச்சிப் போக்குகள் உருவாவதன் மீது நேரடியான தாக்கம் செலுத்தின. நீண்ட காலத்திற்கு இது எளிய வடிவத்தில் நடந்தது, அதாவது உயர்வான பிறப்பு விகிதமும் உலகிலேயே மிக அதிகமான மரண விகிதமும் நிலவின. சுதந்திரம் கிடைத்ததும் பிறப்பு விகிதம் வழக்கம்போன்றே உயர்வானதாயிருந்தது, மரண விகிதம் குறைய ஆரம்பித்தது. இதன் பயனாய் வளர்முக நாடுகளின் மக்கள்தொகை இடையறாது வளரத் துவங்கியது (அட்டவணை 4).

இந்த அட்டவணை காட்டியபடி 1950—1978ஆம் ஆண்டுகளில் ஆசியாவின் மக்கள்தொகை, 1,110 மில்லியனும் அமெரிக்காவின் மக்கள்தொகை 258.6 மில்லியனும் ஆப்பிரிக்காவின் மக்கள்தொகை கிட்டத்தட்ட 228 மில்லியனும் அதிகரித்தது. உலக மக்கள்தொகையில் இக்கண்டங்களிலுள்ள மக்களின் பங்கு கணிசமாகக் கூடியது (அட்டவணை 5). சமூக-வரலாற்றுக் காரணங்களினால் நிர்ணயிக்கப்பட்ட மக்கள்

அட்டவணை 4

**20ஆம் நூற்றுண்டில் உலக மற்றும் கண்டங்களின் மக்கள் எண்ணிக்கையின் இயக்கப் போக்கு (மில்லியன்களில்)**

| ஆண்டுகள் | ஐரோப்பா | ஆசியா | அமெரிக்கா | ஆப்பிரிக்கா | பெருங்கடல் பிரதேசம் | உலகம் |
|---|---|---|---|---|---|---|
| 1900 | 401 | 937 | 144 | 120 | 6.0 | 1,608 |
| 1920 | 325 | 1,023 | 206 | 143 | 8.5 | 1,861 |
| 1930 | 355 | 1,120 | 242 | 164 | 10.0 | 2,070 |
| 1940 | 380 | 1,244 | 274 | 191 | 11.1 | 2,295 |
| 1950 | 392 | 1,355 | 328 | 217 | 12.6 | 2,486 |
| 1960 | 425 | 1,645 | 412 | 270 | 15.8 | 2,982 |
| 1970 | 462 | 2,056 | 511 | 344 | 19.4 | 3,632 |
| 1978 | 480.1 | 2,465.1 | 586.6 | 444.6 | 22.2 | 4,260 |

அட்டவணை 5

**உலக மக்கள்தொகையில்
கண்டங்களுடைய மக்கள்தொகைப் பங்கின் மாற்றம்
(உலக மொத்தத்திலிருந்து சதவிகிதம்)**

| கண்டங்கள் | ஆண்டுகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 1920 | 1950 | 1960 | 1970 | 1978 |
| ஐரோப்பா | 17.5 | 15.8 | 14.3 | 12.7 | 11.3 |
| ஆசியா | 55.0 | 54.5 | 55.2 | 56.6 | 57.9 |
| அமெரிக்கா | 11.1 | 13.2 | 13.8 | 14.1 | 13.7 |
| ஆப்பிரிக்கா | 7.7 | 8.7 | 9.1 | 9.5 | 10.4 |

எண்ணிக்கையின் இந்தத் தீவிர வளர்ச்சி வேகங்கள் (''ஜனத்தொகை வெடிப்பு'') வளர்முக நாடுகளின் நிலையைக் கணிசமாகச் சிக்கலாக்குகின்றன.

மக்கள் எண்ணிக்கை தீவிரமாக அதிகரிப்பதன் பயனுய் கூடுதல் மக்களுக்கான உணவு, இருப்பிடம், உடை மற்ற ஜீவாதார தேவைகள், பெருகி வரும் குழந்தைகள், இளை ஞர்களின் வளர்ப்பு, கல்வி, வேலை செய்யும் வயதை அடை யும் மேன்மேலும் புதிய இளைஞர்களுக்கு புதிய வேலையிடங் களை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கான செலவுகள் பெரிதும் அதிகரிக்கின்றன. உதாரணமாக இந்திய அரசாங்கத்தின் மதிப்பீட்டின்படி சராசரியாக ஆண்டுதோறும் 130 லட்சத் திற்கும் கூடுதலாக மக்கள்தொகை பெருகுவதையடுத்து கூடுதலாக ஆண்டுதோறும் 1,26,500 புதிய பள்ளிகளைக் கட்ட வேண்டியிருந்தது, 3,72,500 ஆசிரியர்களை அமர்த்த வேண்டியிருந்தது, 25 லட்சம் புதிய வீடுகளைக் கட்ட வேண்டி யிருந்தது, 13 லட்சம் டன்கள் உணவுப் பொருட்களும் 40 லட்சம் புதிய வேலைகளும் தேவைப்பட்டன.

வளர்முக நாடுகளில் மக்கள் எண்ணிக்கை விரைவாக அதிகரிப்பதால் தேசிய வருமானத்தின் பெரும் பகுதியைச் சமூக உற்பத்தியை விரிவுபடுத்தும் உடனடித் தேவைக்குப் பயன்படுத்தாமல் நுகர்வுத் தேவைகளுக்கு ஒதுக்கும்படி நேரிடுகிறது. இதனுல், அதிகரித்து வரும் மக்களின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்தும் வாய்ப்பு பெரிதும் மட்டுப் படுத்தப்படுகிறது. இன்னமும் வேலையின்மையும் பட்டினி யும் லட்சோபலட்சம் மக்களின் வாழ்க்கையை அச்சுறுத்து கின்றன. உணவுப் பிரச்சினைகள் மட்டுமின்றி இயற்கை மூலாதாரங்கள், மூலப்பொருட்கள், இயற்கைச் சூழல் பாது காப்பு ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகளும் கடினமா னவை. நகரமயமாக்கலுக்கும் பல இடர்ப்பாடுகள் உள்ளன. இத்தகைய சூழ்நிலைகளில் மக்கள் எண்ணிக்கையின் விரை வான வளர்ச்சி உணவுத் தட்டுப்பாட்டையும் வேலை பிரச்சினைகளையும் இன்னமும் கூர்மையாக்குகிறது, முதலீட்டு வாய்ப்புகளை மட்டுப்படுத்துகிறது, மக்களின் கல்வி, கலாச் சாரத் தரத்தை உயர்த்துவது, எழுத்தறிவின்மையை ஒழிப் பது போன்ற கடமைகளைச் சிக்கலாக்குகிறது. பெரும்பா லான வளர்முக நாடுகளில் பெண்கள்தான் மிகவும் பாதிக்கப் பட்டவர்களாயிருந்தனர், இருக்கின்றனர். பெண்களின் சமூக நிலையும் உயர்வான பிறப்பு விகிதமும் (பல சமயங்களில் இது உடற்கூறு ரீதியாக அதிக பட்சத்தை அடைகிறது) இவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பெரிதும் பாதிக்

கின்றன, கலாச்சார வளர்ச்சிக்கு இடையூறுக உள்ளன, குழந்தை வளர்ப்புப் பணியை சரிவர நிறைவேற்றத் துணை புரிவதில்லை.

வளர்முக நாடுகளின் மக்கள்தொகைப் பிரச்சினைகளை ஆராயும் போது இந்நாடுகள் ஒரே மாதிரியானவையல்ல என்பதை அவசியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று பல விடுதலையடைந்த நாடுகளில் வர்க்கச் சக்திகள் பிரியும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுகிறது, வர்க்கப் போராட்டம் வளர்ந்து வருகிறது. இது பல்வேறு விதமாக வெளிப்படுகிறது. சோஷலிசத் திசையமைவுடைய அரேபிய, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் பொருளாதார, அரசியல் வாழ்வில் முற்போக்கு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. சில நாடுகள் முதலாளித்துவப் பாதையில் வளருகின்றன. இந்த அடிப்படை மாற்றம் ஒரு புறமிருக்க வளர்முக நாடுகள் இயற்கை-பூகோளச் சூழ்நிலைகள், வரலாற்று வளர்ச்சி, சமூக-பொருளாதார மட்டம் ஆகியவற்ருலும் வெவ்வேருனவை. இவையனைத்தும் பின்வரும் அவசியத்தை நிர்ணயிக்கின்றன: வளர்முக நாடுகளின் சமூக-ஜனத்தொகைப் போக்குகளை ஆராய்ந்து சித்திரிக்கும் போது எல்லா வளர்முக நாடுகளுக்கும் உரிய பொதுவானதைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும், தனிப்பட்ட பிரதேசங்களுக்கும் ஒரு சில நாடுகளுக்கும் உரித்தான தனி அம்சங்களை ஆய்வு செய்ய வேண்டும், அதே சமயம் ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டிலுமுள்ள விசேஷ (ஒரேயொரு) அம்சங்களையும் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

வளர்முக நாடுகளில் உள்ள மக்கள் எண்ணிக்கை கணிசமாக அதிகரிப்பதற்கான காரணம் இயற்கையான எண்ணிக்கை பெருக்கமாகும், ஏனெனில் இவற்றில் பெரும் பான்மையானவற்றினுள் குடிபெயர்பவர்களின் எண்ணிக்கை இவற்றை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கையை விட குறைவானதே. ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய இரு கண்டங்களில் மக்கள்தொகையின் இயற்கையான போக்கைப் (பிறப்பு மற்றும் இறப்பு) பற்றி பொதுவாகப் பார்ப்போம். இந்த இரு கண்டங்களிலும் மக்கள்தொகை குறிப்பாக அதிகரித்து வருகிறது.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் மக்களின் மரண விகிதம் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில்

கணிசமான மாற்றங்களை அடைந்துள்ளது. இவற்றில் பெரும் பாலானவற்றில் மரண விகிதம் கணிசமாக குறைந்திருந்தா லும் தொழில்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிடுகையில் இது இன்னமும் அதிகமானதாகவே உள்ளது. உதாரணமாக 1955—1959ஆம் ஆண்டுகளில் ஆசியாவில் மரண விகிதத்தின் சராசரி குணகம் 2.3 சதவிகிதமாயும் ஆப்பிரிக்காவில் 2.7 சதவிகிதமாயும் இருந்ததெனில் இது 70ஆம் ஆண்டுகளின் நடுவில் கணிசமாகக் குறைந்து முறையே 1.28 சதவிகிதமாயும் 2.0 சதவிகிதமாயும் இருந் தது. இக்குணகம் ஐரோப்பாவில் 1.0 சதவிகிதமாயிருந்தது.

ஆனல் எங்கெல்லாம் சுகாதாரச் சூழ்நிலைகள் மோசமாக உள்ளனவோ, இதன் காரணமாக மரண விகிதம் மிக அதிக மானதாக உள்ளதோ அந்த நாடுகளில் எல்லாம் மரணங் களின் எண்ணிக்கையையும் இவற்றின் காரணங்களையும் கணக்கெடுப்பது மிகவும் துல்லியமானதாயில்லை, பல நேரங் களில் இது முழு சித்திரத்தைத் தருவதில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக துருக்கி, பர்மா ஆகிய நாடுகளில் மரண விகிதக் குறியீடுகள் நகரங்களில் இறந்தவர் களின் எண்ணிக்கையைக் கொண்டு மட்டுமே நிர்ணயிக்கப் படுகின்றன. ஆனல் கிராமப்புறங்களில் மக்களின் மரண விகிதம், குறிப்பாக குழந்தை மரணம் மிகவும் அதிகமானது. எனவே ஒரு சில நாடுகளில் அதிகாரபூர்வமான மரண விகிதக் குறியீடுகள் அனேகமாக குறைவானவை. ஆனல் இந்தச் சந்தர்ப்பங்களில், யுத்தத்திற்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடுகையில் மரண விகிதம் கணிசமாகக் குறைந்ததானது கண்கூடு. என்றலும் இன்றும் கூட பல வளர்முக நாடுகளில் மரண விகிதம் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளதை விட பன்மடங்கு அதிகமானதாகும்.

வளர்முக நாடுகள் மற்றும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் மரண விகிதக் குணகங்களை ஒப்பிடுகையில், இவை மக்களின் வயது ரீதியான வேறுபாடு களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் முதி யோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். ஐ. நா. நிபுணர் களின் கணக்கீட்டின்படி 1959இல் 65 வயதுக்கு அதிகமானேர் ஸ்வீடனில் 11.5 சதவிகிதமும் ஜப்பானில் 5.9 சதவிகி தமும் சிங்கப்பூரில் (1957) 2.1 சதவிகிதமும் இருந்தனர்;

இந்நாடுகளில் மரண விகிதத்தின் பொதுக் குணகங்கள் முறையே 0.95, 0.74, 0.74, சதவிகிதங்களாக இருந்தன. ஸ்வீடனில் உள்ளதைப் போன்றே ஜப்பானிலும் சிங்கப்பூரிலும் சதவிகித ரீதியாக வயதானவர்கள் இருந்தால் மரண விகிதத்தின் பொதுக் குணகங்கள் ஜப்பானில் 1.31 சதவிகிதமாயும் சிங்கப்பூரில் 1.68 சதவிகிதமாயும் இருந்திருக்கும். ஜனத்தொகைப் புள்ளிவிவர இயலில் இப்படிப்பட்ட முறைக்கு, மக்களின் வயது ரீதியான கட்டமைவைத் தர அளவுப்படுத்துதல் என்று பெயர்.

சராசரி வாழும் வயது மரண விகிதத்தை இன்னமும் அதிகத் துல்லியமாக, ஒட்டுமொத்தமாக சித்தரிக்கிறது. ஆனால் இதைக் கணிக்க, ஏராளமான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சிக்கலான, பூர்வாங்க ஜனத்தொகைக் கணக்கீடுகள் தேவைப்படும். இப்படிப்பட்ட புள்ளிவிவரங்கள் எல்லா வளர்முக நாடுகளிலும் இல்லை. 1967இல் இது ஆண், பெண் இரு பாலருக்கும் சேர்த்து ஸ்ரீலங்காவில் 65—67 ஆண்டுகளாயும் மலேசியாவிற்கு (1966) 63—66 ஆண்டுகளாயுமிருந்தது. 1960—1961இல் காபூனில் சராசரி வாழும் வயது 35 ஆண்டுகளாயும் 1965—1970இல் மொரோக்கோவில் 50.5 ஆண்டுகளாயும் 1968—1969இல் இந்தியாவில் (நகரங்களில் மட்டும்) ஆண்களுக்கு 48.9 ஆண்டுகளாயும் பெண்களுக்கு 46.2 ஆண்டுகளாயும் இருந்தது. ஒப்பிடுவதற்காக பின்வரும் விவரத்தைக் கூறுவோம். சராசரி வாழும் வயது பிரான்சில் 1908—1913இல் 48—52 ஆண்டுகளாயும் 1962இல் இது ஆண்களுக்கு 67.3 ஆண்டுகளாயும் பெண்களுக்கு 74.1 ஆண்டுகளாயுமிருந்தது.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் வயதின் அதிகரிப்பும் எனவே மரண விகிதத்தின் குறைவும் எல்லாவற்றுக்கும் மேலாக தொற்று நோய்களுக்கெதிரான போராட்டத்தின் கூட்டு சுகாதார முறைகளுடன் தொடர்புடையன. உதாரணமாக ஆங்காங்கே உள்ள சதுப்பு நிலங்களிலும் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களிலும் DDT பூச்சி மருந்தைத் தூவியதானது மலேரியா நோயைப் பெரிதும் குறைக்க உதவியது. 1950இல் ஸ்ரீலங்காவில் 6,11,000 பேர்கள் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர் என்றால் 1960ஆம் ஆண்டின் துவக்கத்தில் இந்த எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது. இதே காலகட்டத்தில் மடகாஸ்கரில் இது 4,18,000இலி

ருந்து 50,000 ஆகவும் பிலிப்பைன்சில் 63,000இலிருந்து 30,000 ஆகவும் குறைந்தது. தடுப்பு ஊசிகள் போட்டதும் குவாரன்டைன் நடவடிக்கைகளும் முன்னர் லட்சக்கணக்கான உயிர்களைக் குடித்த மற்ற தொற்று நோய்களையும் இவற்றின் காரணமான மரணத்தையும் கணிசமான அளவு குறைக்க உதவின. வளர்முக நாடுகளில் மரண விகிதத்தின் குறைப்பைப் பற்றி கூறும் போது, மக்களின் ஆரோக்கியத்திற்காகப் பாடுபடும் பெரும் கடமைகள் இந்நாடுகளுக்கு முன் நிற்கின்றன; இவற்றின் தீர்வு, மேற்கொண்ட வளர்ச்சிப் பாதையை இவை தேர்ந்தெடுப்பதை நேரடியாகப் பொறுத் துள்ளது என்பதைக் கோடிட்டுக்காட்ட வேண்டும்.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் பிறப்பு விகிதத்தை எடுத்துக் கொண்டால் இது ஐரோப்பாவில் உள்ளதை விட கிட்டத்தட்ட மும்மடங்கு அதிகமானது. உதாரணமாக 70ஆம் ஆண்டுகளின் இரண்டாம் பாதியில் சராசரியாக பிறப்பு விகிதக் குணகம் ஐரோப்பாவில் 1.4 சதவிகிதமாக இருந்தது என்றால் இது ஆசியாவில்* 3.1 சதவிகிதமாயும் ஆப்பிரிக்கா வில் 4.6 சதவிகிதமாயுமிருந்தது. மரண விகிதத்தைப் போன்றே பிறப்பு விகிதத்தின் பொதுக் குறியீடுகளும் மக் களின் வயதுவாரியான கட்டமைப்பைக் குறிப்பிட்ட அளவு சார்ந்துள்ளன. மக்கள் மத்தியில் இளைஞர்கள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக உள்ளனரோ அவ்வளவுக்கவ்வளவு (மற்ற நிபந்தனைகள் சமமாக இருக்கையில்) பிறப்பு விகிதம் அதிகமானதாக இருக்கும். எனவே பிறப்பு விகிதமானது பிறப்பு விகிதத்தின் வயதுவாரியான குணகங்களால் அதிகத் துல்லியமாகக் கணக்கிடப்படுகிறது; பொதுவான வடிவத் தில் இது இனப்பெருக்க வளக் குணகம்** என்றழைக்கப் படுவதால் கணக்கிடப்படுகிறது. இனப்பெருக்க வயது வரம்பை நிர்ணயிக்கும் போது அந்தந்த நாட்டின் தேசியச் சிறப்பியல்புகளை, குறிப்பாக சராசரி திருமண வயதைக் கணக்கில் கொள்ள வேண்டும். காபூன், மத்திய ஆப்பிரிக்கக்

* சோவியத் யூனியனைச் சேர்க்காது.

** 15 முதல் 49 வயது வரையிலான பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் இந்த வயதுக் குழுவிலுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம். இக்குறியீட்டை சோவியத் ஜனத்தொகை இயலில் பிறப்பு விகிதத்தின் விசேஷக் குணகம் என்றும் அழைக் கின்றனர்.

குடியரசு போன்ற ஆப்பிரிக்க நாடுகளிலும் ஒரு சில ஆசிய நாடுகளிலும் திருமணமாகும் வயது 15 வயதிற்கும் குறைவானதாகும். ஆனால் இந்த நாடுகளுக்குதான் புள்ளிவிவரங்கள், குறிப்பாக வயது ரீதியான இனப்பெருக்க வளம் பற்றிய விவரங்கள் இல்லை அல்லது மிகவும் துல்லியமற்றவை. மக்கள்தொகை கணக்கெடுப்புகள், ஒருசில தனிப்பட்ட ஆராய்ச்சிகள் ஆகியவற்றின் விளைவாகக் கிடைத்த புதிய விவரங்கள் (இவை சமீப ஆண்டுகளில்தான் கிடைத்தன) பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பிறப்பு விகிதக் குணகங்களைத் தோராயமாகக் கணக்கிட மட்டுமே உதவுகின்றன. இந்தக் கணக்கீடுகள் முழுமையானவை அல்ல என்றாலும் இவை, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆப்பிரிக்காவில் சராசரி பிறப்பு விகிதக் குணகம் சுமாராக 4.5—4.6 சதவிகிதம் என்று கருத ஆதாரமளிக்கின்றன; அதே சமயம் மேற்கு ஆப்பிரிக்காவில் இக்குணகம் அனேகமாக 5.0 சதவிகிதத்திற்குச் சற்று அதிகம். இதே மதிப்பீடுகளின்படி ஆசியாவில் (ஜப்பானைச் சேர்க்காது) பிறப்பு விகிதம் 3.5 சதவிகிதத்திற்கும் அதிகம்.

வளர்முக நாடுகளின் மக்கள்தொகைப் பிரச்சினைகள் இந்நாடுகளின் அரசாங்கங்கள், பொதுமக்களின் கவனத்தைக் கவருவதோடு கூட முக்கிய முதலாளித்துவ நாடுகளின் தீவிர வெளிநாட்டு அரசியல் நடவடிக்கை அம்சமாகவும் இருந்து வருகின்றன, பல சர்வதேச ஸ்தாபனங்களும் இவற்றில் அக்கறை கொண்டுள்ளன. ''மக்கள்தொகைப் பெருக்கம் உலக பிரச்சினையாகும், இதை எந்த ஒரு நாட்டாலும் அலட்சியப்படுத்த இயலாது'' என்பதை அதிகாரபூர்வமான கருத்தமைப்பாகக் கொண்டுள்ள அமெரிக்க ஐக்கிய நாடு, மக்கள்தொகைத் துறையில் சர்வதேச நடவடிக்கையின் மீது குறிப்பிட்ட தாக்கம் செலுத்தத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. நவீன காலனியாதிக்க நலன்களுக்காக வளர்முக நாடுகளின் மக்கள்தொகைப் பிரச்சினைகளோடு தொடர்புடைய திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது, மற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல பூர்ஷ்வா ஜனத்தொகை இயலர்கள், சமூகவியலர்கள், பொருளாதார நிபுணர்களும் இந்நடவடிக்கையில் தீவிரமாகப் பங்கேற்கின்றனர். இளம், சுதந்திர நாடுகளின் சுயமான பொருளாதார வளர்ச்சியால் மக்கள் திரளினரின்

நிலையை மேம்படுத்த இயலாதென இவர்கள் கூறுகின்றனர். தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் தொழில்துறை மயமாக்கலும் உருவாகியுள்ள நிலைமையை மாற்ருது என்றும் மாருக இந்நாடுகளில் உள்ள முரண்பாடுகளை ஆழப் படுத்த மட்டுமே செய்யும் என்றும் ஏனெனில் நவீன தொழில் நுட்பத்தைப் புகுத்துவதானது ஏற்கெனவேயுள்ள வேலையின் மையை அதிகப்படுத்த மட்டுமே செய்யுமென்றும் நிரூபிக்க இவர்கள் முயன்றனர். இவர்களுடைய கருத்துப்படி தொழில் துறைமயமாக்கல் இன்னுமொரு எதிர்மறையான விளைவை ஏற்படுத்தக் கூடும்: இது உழைப்புச் சக்திகளை விவசாயத் துறையிலிருந்து கவர்ந்திழுப்பதால், மக்கள் எண்ணிக்கை விரைவாக அதிகரிக்கும் போது, விவசாய உழைப்பு குறை வாக இயந்திரமயமாக்கப்பட்டுள்ள போது, பட்டினியை அதிகப்படுத்தும். இளம் நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைவது எப்படி ''விவேகமற்றது'' என்பதை ''நிரூபித்த'' இவர்கள், விரைவான மக்கள் பெருக்கத்துடன் தொடர்புடைய முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான முக்கிய வழி பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கான போராட்ட மாகும் என்றும் இது அரசுக் கொள்கையில் முக்கிய இடத்தை வகிக்க வேண்டுமென்றும் கூறினர். இத்தகைய கருத்து நிலை தெட்டந்தெளிவான அரசியல் நோக்கமுடையது. வளர்முக நாடுகளுக்கு முன் நிற்கும் சமூக-பொருளாதாரப் பிரச்சினை களின் சிக்கலான தன்மைக்குக் காரணமாக இந்நாடுகளின் ''அசாதாரண'' மக்கள் எண்ணிக்கையையும் இவற்றின் அனு கூலமற்ற வயது ரீதியான கட்டமைப்பையும் வைக்கும் எண் ணம்தான் இந்த நோக்கத்தை நிர்ணயிக்கிறது. இந்த வாதங் களின்படி இன்றைய சுயமான அரசுகள் நீண்ட காலமாக காலனியாதிக்கச் சார்புநிலையிலிருந்ததால் தோன்றிய கடுமை யான சமூக-பொருளாதார விளைவுகள் அல்ல, மாருக இந்நாடுகளின் மட்டான மூலாதாரங்களின் மீதான ''மக்கள் தொகையின் நிர்ப்பந்தம்தான்'' எல்லா இடர்ப்பாடுகளையும் தோற்றுவிக்கிறது. அந்தந்த ஆசிரியரின் அகவயவாத முயற்சி களைப் பொறுத்திராமல் இத்தகைய கருத்து நிலை, இன்று நவீன காலனியாதிக்கத்தை நிலைநாட்ட முயலும் ஏகாதி பத்தியத்தை நியாயப்படுத்துவதுடன் தொடர்புடையது.

பொருளாதார ரீதியாகக் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்கள் எண்ணிக்கை பெரிதும் கூடியுள்ளதானது

நவீன உலகின் மிகத் தீவிர பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆனால் இவற்றைத் தீர்ப்பதற்கான உண்மையான வழிகள் யாவை? சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி, தேசிய பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக சாதனங்களைத் தீவிரமாகச் சேர்ப்பது, தேசிய வருமானத்தின் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சிக்கான மிக துரிதமான வேகங்களுக்கு வகை செய்வது ஆகியனதான் இப்பிரச்சினைகளின் தீர்விற்கான முக்கிய நிபந்தனைகளாகும். இந்நாடுகளிலுள்ள உழைப்பு மற்றும் பொருளாயத மூலாதாரங்களைப் பயன் மிகு முறையில் பயன்படுத்துவதன் அடிப்படையில் மட்டுமே இதை அடைய முடியும். தொழில்துறைமயமாக்கும் பாதையில் சென்றால் மட்டுமே விவசாயத்தை உயர்த்துவதற்கான அவசியமான முன்தேவைகளை இவற்றால் ஏற்படுத்த முடியும், உணவுப் பொருள் பிரச்சினையைத் தீர்க்க முடியும். தொழில்துறை மயமாக்குதல் தன் பங்கிற்கு வேலை வாய்ப்பைக் கணிசமாகப் பெருக்கி, மறைவான அமித ஜனத்தொகையை ஓரளவு அகற்ற உதவும்.

பொருளாதாரத்தை வளர்ப்பதில் பல தேசிய அரசுகளுக்கு உள்ள நாட்டத்தைக் கவனத்தில் கொண்டு சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் இவற்றிற்கு உதவுகின்றன, முதலாவதாக உலோகத் துறை, இயந்திரக் கட்டுமானம், மின்விசைத் துறை ஆகிய துறைகளின் கட்டுமானத்திலும் தேசிய பொருளாதாரத்தின் பாரம்பரியமான துறைகளை வளர்ப்பதிலும் உதவி நல்குகின்றன. தொழில் துறை மற்றும் விவசாயத்திற்கான உயர் தேர்ச்சி பெற்ற ஊழியர்களைப் பயிற்றுவிப்பதிலும் பெரும் உதவி அளிக்கப்படுகிறது.

இன்று பல வளர்முக நாடுகள் ''குடும்பக் கட்டுப்பாடு'' திட்டங்களை ஏதாவது ஒரு வகையில் செயல்படுத்துகின்றன. ஆனால் பிறப்பு விகிதத்தை மட்டுப்படுத்துவதும் மக்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் வேகங்களைக் குறைப்பதும் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியை நேரடியாகச் சார்ந்துள்ளன. சமூக, பொருளாதார, கலாச்சார வளர்ச்சிப் போக்கு முழுவதாலும் ''உணர்வு பூர்வமான பெற்றோர்கள்'' எனும் கருத்தை ஏற்பதற்கு மக்கள் தயார்படுத்தப்பட்டு, ஞானமும் அனுபவமும் தேவைப்படும் வேலையைப் பெறும் வாய்ப்பு பெரும்பாலான குடும்பங்களுக்குக் கிடைத்து, சமு

தாயத்தில் பெண்களின் நிலை மாறினால்தான் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தும் பிரச்சாரத்தின் எந்த ஒரு நடவடிக்கையும் பயன் தரும். இத்தகைய மாற்றங்கள் அடிப்படை சமூக-பொருளாதார மாற்றங்களின் விளைவாகத்தான் ஏற்பட முடியும்.

வளர்முக நாடுகளிலேயே முதலாவதாக இந்தியா 1951ஆம் ஆண்டிலேயே அரசுக் கொள்கையாக ''குடும்பக் கட்டுப்பாடு'' தேசிய செயல்திட்டத்தை நிறைவேற்றத் துவங்கியது. ஆனால் மறுபரிசீலனை செய்யப்பட்டு, விரிவுபடுத்தப்பட்ட ''குடும்பக் கட்டுப்பாடு'' என்ற அதிகாரபூர்வமான செயல்திட்டம் 1963 அக்டோபரில் அமலுக்கு வந்த பின் தான் நாடு தழுவிய அளவில் ஜனத்தொகைக் கொள்கை நடைமுறை ரீதியாக, சுறுசுறுப்பாக செயல்படுத்தப்படலாயிற்று. 1965—1966 வரை 20 ஆண்டு காலத்திற்கு பிறப்பு விகிதத்தின் பொதுக் குணகம் சுமாராக 4.1 சதவிகிதம் என்ற மட்டத்தில் இருந்ததெனில், 1969இல் இது 3.9ஆகவும் 1971இல் 3.7ஆகவும் குறைந்தது. 1971இல் 113 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்டிருந்த கேரளம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களில் பிறப்பு விகிதக் குணகம் 3.2 சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தது. பிறப்பு விகிதம் 1995ஆம் ஆண்டு வாக்கில் 2.0 சதவிகிதம் வரை குறையுமென அரசு திட்டக் கமிஷன் கணித்துள்ளது (1981).

வளர்முக நாடுகளில் தொழில்துறை வளர்ச்சியடையும் போது இளைஞர்களில் கணிசமான பகுதியினர், முக்கியமாக ஆண்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இடம்பெயர்வார்கள், எனவே கிராமத்திலும் மொத்தமாக நாட்டிலும் பிறப்பு விகிதம் குறையும். பெண்கள் உற்பத்தி நடவடிக்கையினுள் இழுக்கப்படுவதால், அதுவும் இவர்களின் பொதுக் கல்வித் தரம் அதிகரிக்கையில் மேன்மேலும் தேர்ச்சியுள்ள வேலைகளினுள் இழுக்கப்படுவதால் குடும்பங்களில் பிறப்பு விகிதம் குறையும். நகரமயமாக்கல் மற்றும் பல காரணிகளும் குடிமக்களின் புனருற்பத்திப் போக்குகளைப் பாதிக்கின்றன. ஆனால் இளம் அரசுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதைக்கு வந்த பின் இவற்றால் குறுகிய கால கட்டத்திலேயே நவீன தொழில்துறையையும் இதற்கேற்ற உயர் பயிற்சி பெற்ற ஊழியர்களையும் உருவாக்க முடியும்,

இது குறைவான பிறப்பு விகிதத்திற்கு ஏற்ற குடிமக்களின் புனருற்பத்திப் போக்கை உருவாக்க உதவும் என்பதை கவனத்தில் கொண்டால் மேற்கூறிய போக்குகள் ஐரோப் பாவை விட விரைவாக நடைபெறக் கூடும். எல்லாவற்றுக் கும் மேலாக சமுதாயத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய் வதன் மூலம் பொருளாதார வளர்ச்சி வேகங்களைப் பெருக் கலாம், சமூக முன்னேற்றத்தை அடையலாம், இது ஏராள மான பொருளாதார மூலாதாரங்களை விடுவிக்க வாய்ப்பளிக் கும். அதே சமயத்தில், இந்தப் பிரதான கடமையின் தீர் வானது, தீவிரமான மக்கள்தொகைக் கொள்கையை (இது வெற்றிகரமான பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடும்) பின்பற்றுவதன் மூலம் மக்கள் எண்ணிக்கையின் இயற்கை யான பெருக்கத்தின் உயர்வான வேகங்கள் மீது தாக்கம் செலுத்த இளம் அரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு முரண்பாடானதாக இருக்கக் கூடாது.

*அத்தியாயம் பத்து*

## சோஷலிசத்தில் மக்கள்தொகையின் பொருளாதார விதி

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் பயனாய், சோவியத் யூனியனில் சோஷலிசம் வெற்றி பெற்றதன் விளை வாய் வரலாற்றிலேயே முதன்முதலாக மக்களில் மிகப் பெரும்பான்மையோர், இவர்களில் மிகப் பெரும்பாலான, சுறுசுறுப்பான பகுதியினராகிய உழைப்பாளிகள் உற்பத்திக் கருவிகள் மற்றும் சாதனங்களின் சொந்தக்காரர்கள் ஆயினர், சகலவித சுரண்டல் முறைகளும் ஒழித்துக் கட்டப்பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையின் கீழ் நிறைவேற்றப் பட்ட ஆழ்ந்த சமூக-பொருளாதார மாற்றங்கள், கலாச் சாரப் புரட்சியின் வெற்றிகள், வளர்ச்சியடைந்த சோஷ லிச சமுதாயம் கட்டப்பட்டது ஆகியவை சோவியத் யூனி யனின் மக்கள்தொகை வளர்ச்சிப் போக்குகள் அனைத்தின் மீதும் தீர்மானகரமான தாக்கம் செலுத்தின.

1.1.1914இல் ருஷ்யாவில்* 159.2 மில்லியன் பேர்கள் இருந்தனர், 1.1.1980இல் மக்கள்தொகை 265 மில்லியனாக இருந்தது, அதாவது அனேகமாக 106 மில்லியன் அதிகரித் திருந்தது. உலக ஏகாதிபத்தியமும் இதன் மிக இருண்ட சக்திகளும் ஆயுதங்களின் உதவி கொண்டு உலகின் முதல் சோஷலிச அரசை ஒழித்துக் கட்ட இரண்டு முறை முயன்றன என்பதை மறக்கக் கூடாது. இவற்றிற்கு எதிரான போராட் டத்தில் பல லட்சக்கணக்கானோர் மாண்டனர், மிகப் பெரும் இழப்புகள் ஏற்பட்டன. சோஷலிசத்தால் மட்டுமே இந்தப் போராட்டத்தில் எதிர்த்து நின்று வெற்றி கொள்ள முடிந் தது, சோஷலிசத்தால் மட்டுமே இந்தக் கடும் நிலைமைகளைச் சமாளித்து மக்கள்தொகையின் பன்முக வளர்ச்சிக்கு வழி கோல முடிந்தது.

நிச்சயமாக, மக்கள்தொகையின் அளவு ரீதியான அதி கரிப்பு, சோஷலிசத்தில் இதன் வளர்ச்சியைக் குறிக்கும் ஒரு

* அதாவது சோவியத் யூனியனின் இன்றைய எல்லை களில்.

அம்சம் மட்டுமே. இதன் சமூகத் தன்மையே அடிப்படையாக மாறியுள்ளது; வர்க்கப் பகைமுரண்பாட்டு சமுதாயத்திற்குப் பதிலாக தனது உறுப்பினர்களின் ஒழுக்க-அரசியல் ஒருமைப்பாட்டாலும் மக்களினங்களின் நட்பாலும் இணைக்கப்பட்ட ஒரு சமுதாயம் வந்துள்ளது. 1922ஆம் ஆண்டில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஐக்கியம் தோன்றியதானது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் லெனினிய தேசியக் கொள்கையின் தெட்டத்தெளிவான வெளிப்பாடாக அமைந்தது. சோஷலிசக் கட்டுமானத்தின் போது புதிய வரலாற்று மக்கள் கூட்டாகிய சோவியத் மக்கள் உருவாகி வளர்ந்தனர். இது தொழிலாளி வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின் புதிய சமூகக் கூட்டாகும், அதே சமயம் இது, சோவியத் நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்கள் மற்றும் மக்களினங்களின் புதிய பல்தேசியக் கூட்டாகும். இவர்கள்தான் இன்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையின் கீழ் ஒன்றுசேர்ந்து கம்யூனிசத்தை நோக்கி வீறுநடை போடுகின்றனர்.

* * *

சோஷலிசச் சமுதாயத்தில் மக்கள்தொகை வளர்ச்சியின் விதிகள் மற்றும் நியதிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன, சோஷலிசத்தின் பொது சமூகவியல் மற்றும் பொருளாதார விதிகளுடன் குறிப்பிட்ட தொடர்புகளைக் கொண்டுள்ளன. சோஷலிச மக்கள்தொகை விதிகளின் முறையில் பொருளாதார விதிகளின் துணைப் பிரிவும் ஜனத்தொகை விதிகளின் துணைப் பிரிவும் அடங்கியுள்ளன. முதல் துணைப் பிரிவில் மக்கள்தொகையின் அரசியல்-பொருளாதார விதியும் (இது அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளாகும்) சோஷலிச மக்கள்தொகையின் இன்னும் சில பொருளாதார விதிகளும் (இவை திட்டவட்டமான பொருளாதார விஞ்ஞானங்களால் ஆராயப்படுகின்றன) அடங்கியுள்ளன.

மக்கள்தொகையின் அரசியல்-பொருளாதார விதி (அல்லது பொருளாதார விதி) பொருளாதார புனருற்பத்திக்கும் மக்கள்தொகை வளர்ச்சிக்கும் இடையில் மற்றும் சமூக உற்பத்தியில் உழைக்கும் திறமையுள்ள மக்களைப் பயன்படுத்தும் அளவுக்கும் தன்மைக்கும் இடையில் உள்ள திட்ட

வட்டமான சமூக-பொருளாதார உறவை வெளிப்படுத்து கிறது. மற்ற பொருளாதார விதிகள் குடியேற்றம், உழைப்பு மூலாதாரங்களைப் பகிர்ந்தளித்தல், உழைப்பு மூலாதாரங்களின் இடப்பெயர்ச்சி ஆகிய நிகழ்ச்சிப் போக்கு களில் மிகக் கணிசமான, அவசியமான தொடர்புகளை வெளிப்படுத்துகின்றன; இவை பொருளாதார ஜனத்தொகை யியல், உழைப்பு மூலாதாரங்களின் பொருளாதாரம், பொருளாதார பூகோளம் ஆகியவற்றின் ஆராய்ச்சிப் பொருளாகும்.

சோஷலிசத்தின் மற்ற விதிகளைப் போன்றே சோஷலிசச் சமுதாயத்தின் மக்கள்தொகை விதிகளைப் பற்றிய ஞானமும் முதலில் சோவியத் யூனியனின் அனுபவத்தின் அடிப்படை யிலும் பின் மற்ற சோஷலிச நாடுகளின் அனுபவத்தின் அடிப் படையிலும் சேர்ந்தது. இதில், கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனினின் முறையியல் கட்டளைகளை ஆழ்ந்து சிந்திப் பதும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆவணங் களிலும் இதன் காங்கிரசுகள், மத்தியக் கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டங்களின் தீர்மானங்களிலும் மற்ற சோஷ லிச நாடுகளின் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சி களுடைய ஆவணங்களிலும் இவற்றின் தலைவர்களின் படைப்புகளிலும் சோஷலிசச் சமுதாயக் கட்டுமானம், வளர்ச்சியைப் பற்றிய அனுபவம் பொதுமைப்படுத்தப் பட்டுள்ளதும் மிக முக்கியமாகும்.

சோஷலிசச் சமுதாயத்தின் மக்கள்தொகை விதிகளை ஆராய்வது என்பது மக்கள்தொகையின் பொது தத்து வார்த்த ஆராய்ச்சிகளின் மையப் பிரச்சினைகளில் ஒன்று கும். மக்கள்தொகைப் பிரச்சினைகளை ஆராயும் எல்லா விஞ் ஞானிகளும் இப்பிரச்சினையை ஓரளவிற்கு ஆராய்கின்றனர். இதில் இப்போது குறிப்பிட்ட முன்னேற்றம் அடையப் பட்டுள்ளது—பொருளாதார மற்றும் ஜனத்தொகை இயல் விதிகள் தனித்தனியே பிரிக்கப்பட்டுள்ளன, சோஷலிசச் சமு தாயத்தில் இந்த விதிகளை ஆராய்வதற்கான ஆராய்ச்சி முறை கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆனால் சோவியத் பொருளா தார விஞ்ஞானிகள், சமூகவியலர்கள், ஜனத்தொகை இயலர்கள், மற்ற விஞ்ஞானிகள் ஆகியோரின் படைப்புகளில் (இந்த வரம்புகளுக்குள்தான் மக்கள்தொகைப் பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன) சோஷலிசச் சமுதாயத்தின் மக்கள்

தொகை விதிகளை ஆராய்வதில் பொதுவில் ஒரே அணுகு முறை இருந்தாலும் ஒரு சில மாறுபாடுகளும் தென்படு கின்றன. சோஷலிசச் சமுதாயத்தின் அரசியல்-பொருளாதார விதியின் சாரம் சம்பந்தமாக இப்போதுள்ள வரையறுப்பு களை வகைப்படுத்தினுல் பொருளாதார-ஜனத்தொகைப் போக்கு, ஜனத்தொகை-பொருளாதாரப் போக்கு, முற்றி லும் பொருளாதாரப் போக்கு என்று மூன்று போக்குகளைச் சுட்டிக் காட்டலாம்.

முதலாவது போக்கைப் பின்பற்றுபவர்கள் ஜனத்தொ கைப் போக்குகளின் சமூக-பொருளாதார அம்சங்களின் மீது கவனம் செலுத்துகின்றனர். இவர்கள் உழைக்கும் திறனுள்ள மக்களின் வேலை வாய்ப்பு பற்றிய பிரச்சினைகளைக் குடிமக் களின் புனருற்பத்தியின்—பிறப்பு விகிதம், மரண விகிதம் முதலியன—பொதுவான பின்னணியில் ஆராய்கின்றனர். ஜனத்தொகை-பொருளாதாரச் சாராம்சத்தின் வரையறுப் பில் இதே பிரச்சினைகள் தலைகீழாக ஆராயப்படுகின்றன: இங்கே வேலை வாய்ப்பு மற்றும் உழைப்பு மூலாதாரங்களின் இயக்கம் பற்றிய இதர பிரச்சினைகளின் பகுப்பாய்விற்கு முன் ஜனத்தொகை பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. இறுதி யாக, மக்கள்தொகை விதியை வரையறுப்பதில் முற்றிலும் பொருளாதார அணுகுமுறையை எடுத்துக் கொண்டால் இது ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை முற்றிலுமாக விலக்கி இவற்றை கிட்டத்தட்ட தள்ளி வைக்கிறது; இவற்றின் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியின் விளைவாக விளக்கப்படுகிறது, ஜனத்தொகைக் குறியீடுகளின் மாற்றமோ வேலை வாய்ப்பு, வாழ்க்கைத் தரம் போன்றவற்றின் மாற்றங் களின் விளைவாகச் சித்தரிக்கப்படுகிறது. இந்த விஷயத் தில், உழைப்பாளிகளின் தலைமுறைகள் நிலவுவதற்கும் இவற்றின் புனருற்பத்திக்கும் தேவையான, இடையறுது மேம்பாடு அடையும், ஆரோக்கியமான (வரலாற்று, சமூகப் பொருளில்) அடிப்படைகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொருளாதார விதியாக மக்கள்தொகை விதியைக் கருதும் கண்ணேட்டம் குறிப்பிடத்தக்கது.

இந்த விதியை வரையறுப்பதில் வேறுபாடுகள் தோன்றக் காரணம், மக்களின் பொருளாதார விதி பற்றிய கருத்தை யும் மக்களின் இயற்கையான வளர்ச்சி விதிகள் பற்றிய கருத்தையும் கலந்ததாகும். மக்களின் இயற்கையான

வளர்ச்சி, பொருளாதாரம், பொருளாதாரத்தோடு சம்பந்தப்படாத காரணிகள் ஆகியவற்றின் இடையே சிக்கலான பரஸ்பர சார்பு நிலை நிலவுவதன் விளைவாகவே மேற்கூறிய கலப்பு நடைபெறுகிறது. பொதுவாக சோஷலிச உற்பத்தியைச் சித்தரிக்கும் அம்சங்கள் (உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தர உயர்வு, கலாச்சார-தொழில்நுட்பத் தர உயர்வு, மக்களைத் திட்டமிட்ட முறையில் குடியமர்த்துவது போன்றவை) பல சமயங்களில் இவ்விதியின் உள்ளடக்கத்தில் சேர்க்கப்படுகின்றன. சோஷலிசச் சமுதாய அமைப்பின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தும் பல முக்கிய கருத்தினங்களின் தொகுப்பாக ஒரு சர்வாம்ச விதி கிடைக்கிறது. இறுதியாக, முதலாளித்துவச் சமுதாயத்திற்கு கா. மார்க்ஸ் உருவாக்கிய இவ்விதியின் சாரத்தைப் போன்றே சோஷலிசச் சமுதாயத்திற்கும் மக்கள்தொகை விதியின் சாரத்தைத் தேட முயற்சி செய்யப்படுகிறது.

உற்பத்தி உறவுகளின் கீழ் வகைகளுக்கு உரித்தான மக்கள்தொகை வளர்ச்சி வடிவங்களில் சோஷலிச மக்கள் தொகை விதியின் பிரச்சினைக்கான தீர்வைத் தேடுவது முறையியல் ரீதியாகச் சரியல்ல. கீழ் வடிவங்களிலிருந்து மேல் வடிவங்களை உருவாக்கக் கூடாது, மாறாக உயர் வடிவங்களைப் பற்றிய ஞானத்தின் அடிப்படையில் கீழ் வடிவங்களைச் சிறப்பாகப் புரிந்து கொள்ளலாம். சோஷலிசச் சமுதாயத்திற்குரிய மக்கள்தொகை விதியைப் பயிலுகையில் உற்பத்தி உறவுகளின் கீழ் வகைகளுக்குரிய மக்கள்தொகை விதிகளைப் பற்றிய ஞானம் செழுமையடைகிறது. குடிமக்களைப் பற்றிய பிரச்சினையை சமூக-வரலாற்று அடித்தளத்தில் வைப்பது என்றால் ''ஒவ்வொரு வரலாற்று பொருளாதார முறைக்கும் உரித்தான மக்கள்தொகை விதியைத் தனித் தனியாக ஆராய்ந்து, இதற்கும் குறிப்பிட்ட முறைக்கும் உள்ள தொடர்பையும் உறவையும் பயிலுவது''* என்று பொருளாகும் என்றார் வி. இ. லெனின்.

சோஷலிசச் சமுதாயத்தில் சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் இடையறாது அதிகரித்து வருகிறது, இது முதலாளித்துவச் சமுதாயத்தில் நடந்ததை விட அதிகமான வேகங்களில் நடைபெறுகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறை

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 2, பக்கம் 169 (ருஷ்யப் பதிப்பு).

யின் உற்பத்தி உறவுகளைப் பற்றிய பகுப்பாய்வு காட்டும்படி, உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பானது உற்பத்திச் சாதனங்களின் அளவோடு ஒப்பிடுகையில் உழைப்பின் அளவு குறைவதில் வெளிப்படுகிறது, அல்லது உழைப்பு நிகழ்ச்சிப் போக்கின் புறவய ரீதியான காரணிகளோடு ஒப்பிடுகையில் அகவய ரீதியான காரணியின் அளவு குறைவதில் வெளிப்படுகிறது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் சூழ்நிலைகளில் இது மூலதனத்தின் அங்கக உட்சேர்க்கையை அதிகரிக்கச் செய்கிறது, சார்புநிலை அமித ஜனத்தொகையை ஏற்படுத்துகிறது. சோஷலிசச் சமுதாயத்தில் அடிப்படை பொருளாதார விதி, மற்ற பொருளாதார விதிகளின் செயற்பாட்டின் விளைவாய் தொழில்நுட்ப முன்னேற்றமும் சமூக உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பும் உழைப்பு நிலைமைகளை இயன்ற அளவு மேம்படுத்தி இலகுவாக்குவதை (கடுமையான உடல் உழைப்பையும் தீங்கேற்படுத்தும் உற்பத்திகளில் உடலுழைப்பையும் அகற்றுவது, வேலை நேரத்தைக் குறைப்பது, பெண்களின் உடல் அமைப்பிற்கு ஏற்ற உற்பத்திகளில் மட்டுமே பெண்களின் உழைப்பைப் பயன்படுத்துவது, உற்பத்தியை அசாதாரணமாகத் தீவிரப்படுத்துவதால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியைக் குறைப்பது முதலியவை) நோக்கமாகக் கொண்டுள்ளன.

தேசிய பொருளாதாரத்தின் திட்டமிட்ட, விகிதப்படியான வளர்ச்சி விதி கம்யூனிச உற்பத்தி முறைக்கு உரித்தானது. சமுதாயம் தழுவிய அளவில் ஒரே திட்டத்தின்படி, சமுதாய உற்பத்தியின் அதிக பட்ச பயன் தன்மையை அடையும் நோக்கத்துடன் நிறைவேற்றப்படும் செயல்முனைப்பான நடவடிக்கையின் மூலம் இது சோஷலிச உற்பத்தியின் லட்சியங்களை அடைவதற்கு அவசியமான சூழ்நிலைகளுக்கு வகை செய்யும்.

சமூக-பொருளாதார அமைப்புடனுன பரஸ்பரத் தொடர்பில் மக்கள்தொகையைப் பகுப்பாய்வு செய்யும் போது, இது சமுதாயத்தின் முக்கிய உற்பத்தி மற்றும் நுகர்வுச் சக்திகளின் ஒற்றுமையாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். குடிமக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் சமுதாயத்தின் பிரதான உற்பத்திச் சக்தியாக செயல்படாவிடில் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது, எனவே சமுதாய வாழ்க்கையே இயலாததாகும்.

குடிமக்கள் அனைவரும் நுகர்வுச் சக்தியாக செயல்படுவது என்பது புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் அவசியமான அம்சமாகும், ஏனெனில் இவர்கள்தான் எல்லா இறுதி உற்பத்திப் பொருட்களையும் நுகருகின்றனர்.

சமுதாயத்தின் உற்பத்திச் சக்தியும் நுகர்வுச் சக்தியும் மக்கள்தொகையின் இரு பக்கங்களாகும், இவை பரஸ்பரம் ஒன்றையொன்று இட்டு நிரப்புகின்றன, ஒன்றையொன்று நிர்ணயிக்கின்றன. சமுதாயத்தினுடைய பிரதான உற்பத்திச் சக்தியின் எல்லா அம்சங்களும் நுகர்வுச் சக்தியின் அம்சங்களாகும். குடிமக்களில் உழைக்கும் திறனற்ற குழந்தைப் பிரிவினரைச் சேர்ந்த மூத்த வயதினர் தம் வயது அதிகமாக அதிகமாக படிப்படியாக உழைக்கும் திறனுள்ள வயதுப் பிரிவிற்கு மாறுகின்றனர். இந்த நிகழ்ச்சிப் போக்கில் அதே சமயத்தில் சமுதாயத்தின் நுகர்வுச் சக்தியை மட்டும் சேர்ந்த அம்சங்கள் சமுதாயத்தின் உற்பத்திச் சக்தியையும் நுகர்வுச் சக்தியையும் சேர்ந்த அம்சங்களாக மாறுவது நடைபெறுகிறது. உழைக்கும் திறனுள்ள பகுதியினர் வயது முதிர்ந்த, உழைக்கும் திறனற்ற பகுதியினராக மாறும் போது இதற்கு எதிர்மறையான நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுகிறது.

சமுதாயத்தின் பிரதான உற்பத்தி மற்றும் நுகர்வுச் சக்திகளுக்கு இடையிலான ஒற்றுமைக்குப் பண்பு ரீதியான அம்சமும் அளவு ரீதியான அம்சமும் உண்டு. அளவு ரீதியான அம்சமானது எல்லாவற்றுக்கும் மேலாக குடிமக்கள் அனைவரின் எண்ணிக்கை, வேலை செய்பவர்களின் எண்ணிக்கை, உழைக்கும் திறனுள்ள வயதில் உள்ளவர்களின் எண்ணிக்கை முதலியவற்றின் குறிப்பிட்ட விகிதத்தில் வெளிப்படுகிறது; தவிர, உற்பத்தி மற்றும் நுகர்வின் அளவுகள், தேசிய வருமானத்தில் சேமிப்பு மற்றும் நுகர்வு போன்றவற்றின் குறிப்பிட்ட விகிதாச்சாரங்களிலும் இது வெளிப்படுகிறது. சோஷலிச புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் இந்த விகிதங்கள் அனைத்தின் அடிப்படையில் என்ன உள்ளது?

உற்பத்தி நிதிகள் அதிகரிப்பதில் முக்கியப் பங்காற்றுவதாகக் குறிப்பிடப்படும் சேமிப்பிலிருந்து துவங்குவோம். உற்பத்தியாளர்களை உற்பத்திச் சாதனங்களுடன் இணைக்கும் வடிவம், அதாவது சொத்துடைமையின் வடிவம்தான் உற்பத்தி உறவுகள் அனைத்தின் அடிப்படையாகும். சோஷலிச

உற்பத்தி முறையில் நிலவும் உற்பத்தி உறவுகளின் அடிப்படை உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமையாகும். இது சோஷலிசச் சமுதாயத்தில் உழைக்கும் திறன் உள்ளவர்கள் அனைவரும் சமூக உழைப்பில் நேரடியாகப் பங்கேற்கும் வாய்ப்பை, அதாவது முழு வேலை வாய்ப்பை முன்னனுமானிக்கிறது. வேலையிடங்களுக்கான புறவய ரீதியான பொதுத் தேவைக்கும் இதற்கு வகை செய்வதற்கும் இடையிலான அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான பொருத்தத்தைதான் இங்கே முழு வேலை வாய்ப்பு என்கிறோம். சமூகப் பொருளாதாரத்தில் உழைப்பு மூலாதாரங்கள் பல்வேறு அளவுகளில் பயன்படுத்தப்படும் போது முழு வேலை வாய்ப்பு இருக்கும். எனவே முழு வேலை வாய்ப்பு ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் நிலையான ஒன்று என்றாலும் இது மாறும் எல்லைகளை உடையது.

சோஷலிச தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் அவசியமான நிபந்தனையாகிய இடையறு தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்புச் சக்திகள் விடுவிக்கப்படுவதையும் கவர்ந்திழுக்கப்படுவதையும் முன்னனுமானிக்கிறது. சோஷலிசப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட தன்மை சேமிப்பை ஒழுங்குபடுத்துவது மற்றும் உற்பத்தியை விரிவுபடுத்துவதன் மூலம் வேலையாட்கள் விடுவிக்கப்படுவதையும் கவர்ந்திழுக்கப்படுவதையும் ஓரளவு ஒழுங்குபடுத்தும் வாய்ப்பையளிக்கிறது. இவை இறுதியில் வேலை செய்யும் திறனுள்ள அனைவருக்கும் முழு வேலை வாய்ப்பை அளிக்கின்றன.

பிரதான உற்பத்திச் சக்திக்கும் பொருளாயத உற்பத்திச் சக்திகளுக்கும் இடையிலான அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான பொருத்தம் முழு வேலை வாய்ப்பின் அடிப்படையில் உள்ளது.

சோஷலிசச் சமுதாயத்தில் முழு வேலை வாய்ப்புப் பிரச்சினை தானகவே தீர்க்கப்படுவதில்லை, மாறாக முக்கியமான தேசியப் பொருளாதாரக் கடமையாகும். தேசியப் பொருளாதாரத்தின் கட்டமைவு இடையறாது மாறி வருகிறது. தனிப்பட்ட துறைகளில் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சி ஒரே சீரானதாயில்லை. இடையறாது புதிய துறைகளும் புதிய வேலைகளும் தோன்றுகின்றன, பழையன மறைகின்றன. இந்த மாற்றங்கள் அனைத்தின் தொடர்பாய் ஒரு சில வேலைகள், தொழில் நிறுவனங்கள், துறைகளில் உழைப்புச்

சக்தி அளவிற்கதிகமாகிறது, மற்றவற்றில் பற்ருக்குறை ஏற்படுகிறது. இந்நிலையின் தவிர்க்க இயலா விளைவாக உழைப்பு மூலாதாரங்கள் மறு பங்கீடு செய்யப்படுகின்றன, வேலையாட்கள் மறு தேர்ச்சி பெறுவது நடைபெறுகிறது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கு இடையே வேலை வாய்ப்பின் விகிதம் மாறும். ஆனுல் ஒரே பிரதேசத்தினுள் நடைபெறும் தொழில் ரீதியான மற்றும் தொழில் துறை ரீதியான உழைப்பு மூலாதாரங்களின் மறு பங்கீட்டை விட பிரதேசங்களுக்கு இடையேயான மறு பங்கீடு பன்மடங்கு சிக்கலான கடமையாகும்.

மொத்த உழைப்புச் சக்தியின் புனருற்பத்தியையும் இதை விவேகமாகப் பயன்படுத்துவதையும் திட்டமிடுவதற்கு ஒரு விசேஷ அம்சம் உண்டு. இத்துறையின் திட்டக் குறியீடுகள், உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடக் கூடிய ஒவ்வொரு வேலையாளுக்கும் கட்டளையிடுபவைகளாக இருக்க முடியாது என்பதில்தான் இந்த விசேஷ அம்சம் அடங்கியுள்ளது. எனவே உழைப்புச் சக்தியைத் திட்டமிடுவதில் மறைமுகமான வழிகள் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன: பொருளாயத மற்றும் ஆன்மீக ஊக்குவிப்பு முறைகள், சித்தாந்தப் பணி ஆகியவற்றின் மூலம் அந்தந்தப் பிரதேசங்களிலும் துறைகளிலும் உள்ள தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் நபர்களின் எண்ணிக்கை மீது தாக்கம் செலுத்தப்படுகிறது. சோவியத் நாட்டில் சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சியின் செயல்திட்டம் நடைமுறைபடுத்தப்படும் போக்கில் இந் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகின்றன.

## அத்தியாயம் பதினொன்று

# சோவியத் யூனியனில் மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய பொது விவரங்கள்

சோவியத் யூனியனின் மக்கள்தொகைப் பிரச்சினைகளின் மத்தியில் மக்களின் புனருற்பத்தியைப் பகுப்பாய்வு செய்வதுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறிப்பிடத்தக்கவை. மக்களின் புனருற்பத்தி என்பது போகும் தலைமுறைகளுக்குப் பதிலாகப் புதிய தலைமுறைகள் வருவதன் மூலம் மக்கள் இடையறாது புதுப்பிக்கப்படும் ஒரு நிகழ்ச்சிப் போக்காகும். மக்களுக்கு உயிரியல் பண்புகளைப் போன்றே சமூக குணநலன்களும் உண்டு. ஆனால் மக்களுடைய புனருற்பத்தியின் தன்மையையும் வேகத்தையும் நிர்ணயிப்பது தனி மனிதர்களின் உயிரியல் குணங்கள் அல்ல, மாறாக சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகள்தான் இவற்றை நிர்ணயிக்கின்றன. ஜனத்தொகைக் காரணிகளும் இன்னும் சில அம்சங்களும் (இவற்றைப் பின்னால் பார்ப்போம்) தாக்கம் செலுத்துகின்றன. அதே நேரத்தில் மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளுக்கு ஓரளவு சுதந்திரமும் உண்டு; இவை காலத்தில் மிகவும் மெதுவாகத்தான் மாற்றமடைகின்றன, இவற்றிற்குக் கணிசமான சடத்துவம் உண்டு.

மக்களின் புனருற்பத்தியைப் பற்றிய கருத்து பிறப்பு மற்றும் இறப்பின் விளைவான மக்களின் சாதாரண எண்ணிக்கை ரீதியான புதுப்பிப்பை விட அதிகப் பரவலானது. பரவலான பொருளில் மக்களின் புனருற்பத்தி என்பது மக்களின் தேசிய, கலாச்சார, தொழில் ரீதியான அமைப்பு, வேலைகள் முதலியவற்றின் மாற்றத்தையும் சமூக அனுபவத்தைத் தருவதையும் உள்ளடக்கியுள்ளது. ஆனால் மக்களின் பண்பு ரீதியான கட்டமைப்பின் புனருற்பத்தி சம்பந்தமான இப்பிரச்சினைகள் மக்களின் இயற்கையான வளர்ச்சி மீது எந்த அளவிற்கு செல்வாக்கு செலுத்துகின்றனவோ அந்த அளவிற்கு மட்டுமே கவனிக்கப்படும்.

சோவியத் யூனியனில் மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளைப் புரிந்து கொள்ள, புரட்சிக்கு முந்தைய

ருஷ்யாவின் ஜனத்தொகை நிலவரம் தெரிந்திருக்கவேண்டும்.

ருஷ்யா ஒரு சில ஐரோப்பிய நாடுகளுக்குப் பின், 1861ஆம் ஆண்டிற்குப் பின்தான் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்கு வந்தது. ருஷ்யாவின் ஐரோப்பியப் பகுதியில் 1917 வரை விவசாயத் துறையில் தீவிர நிலப்பிரபுத் துவ-பண்ணையடிமை மிச்சசொச்சங்கள் இருந்ததால் இவ் வளர்ச்சி சிக்கலானது. மத்திய ஆசியா, கஸாக்ஸ்தான், டிரான்ஸ் காக்கஸஸ் ஆகிய பகுதிகள் உட்பட (19ஆம் நூற்றுண்டில் இவை ருஷ்யப் பேரரசில் சேர்க்கப்பட்டதை யடுத்து பல்தேசிய அரசாக இது உருவாவது முழுமை அடைந்தது) தேசியப் பிரதேசங்களில் இந்த மிச்சசொச்சங் கள் குறிப்பாக அதிகமானவையாக இருந்தன.

இவையெல்லாம் புரட்சிக்கு முந்தைய ருஷ்யாவில் ஜனத் தொகை நிலவரத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தின. சோவி யத் ஜனத்தொகை இயலராகிய அ. ராஷின் செய்த கணக் கீட்டின் படி 1861 முதல் 1913 வரையிலான காலகட்டத்தில், அதாவது ருஷ்ய முதலாளித்துவத்திற்கு வரலாறு தந்திருந்த சுமாராக அரை நூற்றுண்டு காலத்தில் ஐரோப்பிய ருஷ்யா வின் 50 மாவட்டங்களில் சராசரியாக 1,000 பேர்களுக்கு 48.9 பிறப்புகளும் 34.0 இறப்புகளும் இருந்தன, மக்களின் இயற்கையான அதிகரிப்பு 14.9ஆக இருந்தது. ஆனுல் இவை சராசரிக் குறியீடுகள், அதுவும் அரை நூற்றுண்டு காலகட்டத் திற்கானவை. ஆனுல் இவற்றை விரிவாகப் பார்த்தால், 19ஆம் நூற்றுண்டின் இரண்டாவது பாதியில் 5.05 சதவிகி தம் வரை உயர்வானதாக இருந்த பிறப்பு விகிதம் 20ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் கணிசமான அளவு குறை வதைக் (1911—1913ஆம் ஆண்டுகளில் 4.39 சதவிகிதம்) காணலாம். 20ஆம் நூற்றுண்டு வாக்கில் 3.6—3.7 சத விகிதமாயிருந்த மரண விகிதமும் பிந்தைய காலத்தில் குறைய ஆரம்பித்தது (1911—1913ஆம் ஆண்டுகளில் 2.71 சதவிகிதம்). ஆனுல் இப்போக்குகள் முக்கியமாக ஐரோப் பிய ருஷ்யாவின் நகரங்களிலும் தொழில்துறைப் பிரதேசங் களிலும் மட்டுமே வெளிப்பட்டன, கிராமப் புறங்களில் இவை மிகக் குறைவாகவே வெளிப்பட்டன. கிராமப் புறங் களில் பிறப்பு விகிதமும் மரண விகிதமும் (குறிப்பாக குழந்தைகளிடையே) முன்போன்றே அதிகமானவையாக இருந்தன. மொத்தத்தில் 20ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில்

ஐரோப்பிய ருஷ்யாவில் மக்களின் புனருற்பத்தி விரிவு படுத்தப்பட்டதாக இருந்தது; அதே சமயம், தொழில்துறைப் புரட்சியைச் சந்தித்து முதலாளித்துவப் பாதையில் செல்லும் ஐரோப்பிய நாடுகளுக்கு உரித்தானதாயிருந்த புனருற்பத்தியும் இங்கு உருவாகத் துவங்கியது.

மத்திய ஆசியா, கஸாக்ஸ்தான், டிரான்ஸ் காக்கஸசில், குறிப்பாக அஸர்பெய்ஜானில் நிலவரம் வேறு மாதிரியாக இருந்தது. இங்கிருந்த மூல மக்களிடையே பிறப்பு விகிதம் மிக அதிகமானதாயிருந்தது. மரண விகிதமும் மிக அதிகமானதாயிருந்தது. ஐரோப்பிய ருஷ்யாவில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (முதலாவது உலக யுத்தம் வரை, 1914—1918 வரை) கிட்டத்தட்ட தொற்று நோய்களே இருக்கவில்லை என்றால் மத்திய ஆசிய பிரதேசத்தில் இவை பன்முறை தோன்றின. இப்பிரதேசங்களின் மக்கள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ''புராதனமான'' ஜனத்தொகைப் போக்கின் நிலையிலிருந்தனர்: மிகப் பெரும்பாலோர் உணர்வு பூர்வமாக உயர்ந்த பிறப்பு விகிதத்தைத் தக்கவைத்தனர், மனித உடலின் இயற்கைப் பலத்தால் மட்டுமே மரண வேகம் நிர்ணயிக்கப்பட்டது, ஏனெனில் எவ்வித மருத்துவ உதவியும் இருக்கவில்லை. குறிப்பாக ருஷ்யப் பேரரசின் சிறு மக்களினங்களின் நிலை மிகவும் சோகமானதாக இருந்தது, இவர்களை ஏகாதிபத்தியம் குடியழிவு நிலையில் வைத்திருந்தது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி நடைபெறவிருந்த நேரத்தில் நிலவிய ஜனத்தொகை நிலவரத்தின் பொதுவான அம்சங்கள் இவைதான். சோவியத் நாட்டின் மீது சர்வதேச ஏகாதிபத்தியம் படையெடுத்ததாலும் இதையடுத்து மூண்ட உள்நாட்டு யுத்தத்தாலும் இந்நிலவரம் மிகச் சிக்கலாகியது. உலக யுத்தம், உள்நாட்டு யுத்தம், அந்நிய ஆக்கிரமிப்பு (1914—1920) ஆகியவற்றின் விளைவாக சோவியத் நாடு 2 கோடிக்கும் அதிகமான மனித உயிர்களை இழந்தது. உயர்வான மரண விகிதம், பிறப்பு விகிதத்தின் கடும் வீழ்ச்சி, அழிவு, பட்டினி, தொற்று நோய்கள்— இவையெல்லாம் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு எதிர்ப்புரட்சிச் சக்திகள் சோவியத் குடியரசின் மீது தொடுத்த ஆயுதத் தாக்குதலின் நேரடி விளைவுகளாகும்.

மிகக் கடினமான சூழ்நிலைகளில் சோவியத் ஆட்சி,

ஆரம்ப நாள் முதலே சோவியத் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காகவும் தொற்று நோய்கள், பட்டினிக்கு எதிராகவும் உறுதியான, தொடர்ச்சியான போராட்டத்தை ஆரம்பித்தது. சோவியத் ஜனத்தொகை இயலரான அ. யா. பயார்ஸ்கியின் கணக்கீடுகளின்படி மரண விகிதக் குணகம் சோவியத் யூனியனின் இன்றைய ஐரோப்பியப் பகுதியில் 1919இல் மிக உயர்ந்த அளவாகிய 4.67 சதவிகிதத்தை எட்டியிருந்தது; ஆனுல் இது முதல் சமாதான ஆண்டாகிய 1921இலேயே 2.97 சதவிகிதமாகக் குறைந்து, 1923இல் 2.55 சதவிகிதமாயிருந்தது.

உள்நாட்டு யுத்தம் முடிந்து, ஆக்கிரமிப்பாளர்கள் முறியடிக்கப்பட்ட பின் முதல் ஆண்டுகளில் பிறப்பு விகிதத்தை ஈடுகட்டும் முகமாக யுத்தத்திற்குப் பிந்தைய அதிகரிப்பு இருந்தது. ஆனுல் யுத்தத்திற்கு முந்தைய அளவை (1913இல் 4.55 சதவிகிதம்) இது அடையவில்லை, 1925இல்தான் இது 4.47 சதவிகிதத்தை எட்டியது. இக்குறியீடுதான் நம் காலம் வரையில் மிக உயர்வானதாக இருந்துள்ளது; இந்த அளவிலேயே 1928 வரை (4.43 சதவிகிதம்) இருந்த இது பின்னர் தொடர்ந்து குறையத் துவங்கியது. இத்தகைய குறைப்பிற்கு (இப்போக்கு புரட்சிக்கு முந்தைய ஐரோப்பிய ருஷ்யாவிலேயே ஆரம்பமாகியது) பல காரணங்கள் உண்டு.

பழைய சமூக உறவு முறைகள் உடைந்தது (பல சமயங்களில் இது மிகக் கடுமையான வடிவத்தில் நடந்தது), ஆழ்ந்த சமூக-பொருளாதார மாற்றங்கள், நகரங்களின் விரைவான வளர்ச்சி, கிராமங்களின் சோஷலிச மறுசீரமைப்பு—இவையெல்லாம் பிறப்பு விகித அளவைப் பாதித்தன. லட்சோபலட்சம் மக்கள் திரளினர் இயக்கத்திற்கு வந்தனர், இவர்களுடைய வாழ்க்கை முறையும் கலாச்சார மட்டமும் தேவைகளும் மாற்றமடைந்தன. பெண்களின் நிலையில் ஏற்பட்ட அடிப்படை மாற்றத்தைக் கவனிக்காமல் இருக்க முடியாது. இவர்கள் புதிய வாழ்க்கையின் கட்டுமானத்தில் முழு உரிமையுடன் தீவிரப் பங்கேற்கத் துவங்கினுர்கள். சோவியத் பேரவை விஞ்ஞானி ஸ். கூ. ஸ்துருமீலின் இதன் தொடர்பாகப் பின்வருமாறு எழுதினுர்: ''நமது நாட்டில் சோஷலிசத் தொழில்துறைமயமாக்கல் பிரம்மாண்டமான வேகங்களில் நடைபெறுகிறது. இதனுல் கிராமங்களி

லிருந்து வரும் லட்சக்கணக்கானேரை நகரங்களில் குடியமர்த்த வேண்டியுள்ளது, இதனுல் சமீப காலம் வரை வீட்டு வேலேகளே மட்டுமே கவனித்து வந்த பெண்கள் ஆண்களுக்குச் சரிசமமாக தொழில்துறை உழைப்பிற்கு இழுக்கப் படுகின்றனர், இது இறுதியாக உயர் தேர்ச்சி பெற்ற லட்சக் கணக்கான ஊழியர்களுக்கான தேவையை ஏற்படுத்துகிறது. இவையனைத்தின் விளேவாய் சோவியத் பெண்மணிகளின் இனப்பெருக்க வளத்தின் சராசரி குணகங்கள் குறைகின்றன. எனவே இந்தக் குறைவை நாம் காணுவதில் எவ்வித ஆச்சரியமுமில்லே.'' இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன், 1940இல் பிறப்பு விகிதக் குணகம் 3.12 சதவிகிதமாக இருந்தது.

மரண விகிதத்தைப் பொறுத்தமட்டில் 1921—1923ஆம் ஆண்டுகளிலேயே ஆரம்பமான இதன் குறைவு தொடர்ந்தது. 1926இல் மரண விகிதக் குணகம் 2.03 சதவிகிதமாக இருந்தது (1913இல் இது 2.91 சதவிகிதமாயிருந்தது). 20ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் 30ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலும் இது குறைவது நின்று சிறிது அதிகரிக்கக் கூடச் செய்தது (1928இல் 2.33 சதவிகிதம்). தற்காலிகக் காரணிகள்தான், முக்கியமாக தேசியப் பொருளாதாரம் புனரமைக்கப்பட்ட ஆரம்ப ஆண்டுகளின் கடினமான சூழ்நிலேகள்தான் இதற்குக் காரணமாகும். 1939இல் மரண விகிதக் குணகம் இரண்டாம் உலக யுத்தத்திற்கு முந்தைய காலகட்டத்திலேயே மேலும் குறைவான மட்டத்திற்கு (1.73 சதவிகிதம்) இறங்கியது. மரண விகிதம் பெரிதும் குறைந்தது சோஷலிசத்தின் வெற்றி, உழைப்பாளிகளின் வாழ்க்கைச் சூழ்நிலேயில் ஏற்பட்ட மாற்றங்கள், இவர்களின் உடல்நலத்தின் மீது சோஷலிசச் சமுதாயம் காட்டும் இடையரு அக்கறை] ஆகியவற்றின் நேரடி விளேவாகும். புரட்சி வெற்றி பெற்றதுமே நாட்டில் நிலவிய காலரா, பிளேக், அம்மை போன்ற கொள்ளே நோய்கள் ஒழித்துக் கட்டப் பட்டன. 30ஆம் ஆண்டுகளில் தொற்று நோய் தடுப்பு சுகாதார மருத்துவம் பெரிதும் வளர்ச்சியடைந்தது, இது ஜாரிச ருஷ்யாவில் இருக்கவேயில்லே. 1913ஆம் ஆண்டோடு ஒப் பிடுகையில் 1940இல் மருத்துவ மனேகளின் எண்ணிக்கை 2.6 மடங்கும் மருத்துவர்களின் எண்ணிக்கை 5.5 மடங்கும் கூடின. இவையெல்லாம் மரண விகிதம் மேற்கொண்டு

குறைய நிலையான அடித்தளத்தை ஏற்படுத்தின, மாபெரும் தேசபக்த யுத்த ஆண்டுகளில் சோவியத் மக்களின் வாழ்விற்காகவும் உடல்நலத்திற்காகவும் போராட மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின.

கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் மாபெரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் மக்கள் அடைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றிக்குப் பெரும் விலையைத் தர வேண்டியிருந்தது—யுத்தம் 2 கோடி சோவியத் மக்களின் உயிர்களைப் பலி கொண்டது. ஏராளமான ஆண்கள் இறந்ததால் மக்கள்தொகையில் ஆண் பெண் விகிதம் பெரிதும் சீர்குலைந்தது. கடுமையான வாழ்க்கைச் சூழ்நிலைகள், குறிப்பாக எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாயிருந்த பிரதேசங்களில் நிலவிய சூழ்நிலைகள் மக்களின் உடல்நலத்தைச் சீர்குலைத்தன. பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்தது. பிரபல சோவியத் ஜனத்தொகை இயலர் ப. சீ. உர்லானிசின் கணக்கீடுகளின்படி 1938—1942ஆம் ஆண்டுகளில் பிறந்ததை விட இரண்டு மடங்கு குறைவான குழந்தைகள்தான் 1942—1946ஆம் ஆண்டுகளில் பிறந்தனர்.

யுத்தத்திற்குப் பிந்தைய ஈடுகட்டும் காலகட்டத்தில் சோவியத் யூனியனில் பிறப்பு விகிதம் கூடியது; என்றாலும் நாடு தழுவிய அளவில் இது யுத்தத்திற்கு முந்தைய மட்டத்தை அடையவே இல்லை. 50ஆம் ஆண்டுகளில் பிறப்பு விகிதம் கிட்டத்தட்ட ஸ்திரமாக (2.5—2.6 சதவிகிதம்) இருந்தது, ஆனால் 1960இலிருந்து இது 1969 வரை விரைவாகக் குறைந்தது, 1969இல் இது மிகக் குறைவான மட்டத்தை (1.7 சதவிகிதம்) அடைந்தது, இதற்குப் பின் சிறிது அதிகமாகி ஸ்திரமடைந்தது. 1978இல் சோவியத் நாட்டில் பிறப்பு விகிதக் குணகம் 1.8 சதவிகிதமாயிருந்தது.

யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் மரண விகிதம் மேற்கொண்டு குறைவதில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன. 1950ஆம் ஆண்டிலேயே இந்தக் குணகம் 1940இல் இருந்ததைவிட சுமார் ஒன்றரை மடங்கு குறைவானதாயிருந்தது (1.8 சதவிகிதமாக இருந்த இது 0.97 சதவிகிதமாக ஆகியிருந்தது). இத்தகைய கணிசமான குறைப்பு குறிப்பிடத்தக்கதாகும்: ஏனெனில் இக்காலகட்டத்தில்தான் மாபெரும் தேசபக்த யுத்தம் (1941—1945) நடந்தது, மரண விகிதம் பெரிதும் அதிகமானதாயிருந்தது. 1955—

*1980ஆம் ஆண்டுகளில் மரண விகிதக் குணகம் குறைவான மட்டத்தில் ஒப்பீட்டளவில் ஸ்திரமடைந்தது. இது புரட்சிக்கு முன் (1913) இருந்ததை விட 3.4 மடங்கும் யுத்தத்திற்கு முன் (1940) இருந்ததை விட 2 மடங்கும் குறைவானதாகும். இந்தக் குறைவான மரண விகிதம் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் வெற்றிகளுடனும் மக்களின் வாழ்க்கைத் தரம் பெரிதும் அதிகரித்ததுடனும் மக்களின் உடல்நலத்தின் மீது கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் காட்டும் அக்கறையுடனும் பிரிக்க முடியாதபடி தொடர்புடையதாயிருந்தது.*

*1913 முதல் 1978ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சோவியத் யூனியனில் பிறப்பு விகிதம், மரண விகிதம், இயற்கையான மக்கள் பெருக்கம் ஆகியன எப்படி மாறி வந்துள்ளன என்பது அட்டவணை 6இல் காட்டப்பட்டுள்ளது.*

*அட்டவணை 6*

**சோவியத் யூனியனில் பிறப்பு விகிதம், மரண விகிதம் மற்றும் இயற்கையான மக்கள் பெருக்கம் (சதவிகிதத்தில்)**

| ஆண்டுகள் | பிறப்பு விகிதம் | மரண விகிதம் | இயற்கையான பெருக்கம் | ஒரு வயதுக்கு முந்தைய குழந்தைகள் மத்தியில் மரண விகிதம் |
|---|---|---|---|---|
| 1913* | 4.55 | 2.91 | 1.64 | 26.9 |
| 1926 | 4.40 | 2.03 | 2.37 | 17.4 |
| 1928 | 4.43 | 2.33 | 2.10 | 18.2 |
| 1937 | 3.87 | 1.89 | 1.98 | 17.0 |
| 1939 | 3.65 | 1.73 | 1.92 | 16.7 |
| 1940 | 3.12 | 1.80 | 1.32 | 18.2 |
| 1950 | 2.67 | 0.97 | 1.70 | 8.1 |
| 1955 | 2.57 | 0.82 | 1.75 | 6.0 |
| 1956 | 2.52 | 0.76 | 1.76 | 4.7 |
| 1957 | 2.54 | 0.78 | 1.76 | 4.5 |
| 1958 | 2.53 | 0.72 | 1.81 | 4.1 |

* சோவியத் யூனியனின் இன்றைய எல்லைகளுக்குள்.

| ஆண்டுகள் | பிறப்பு விகிதம் | மரண விகிதம் | இயற்கை யான பெருக்கம் | ஒரு வயதுக்கு முந்தைய குழந்தைகள் மத்தியில் மரணவிகிதம் |
|---|---|---|---|---|
| 1959 | 2.50 | 0.76 | 1.74 | 4.1 |
| 1960 | 2.49 | 0.71 | 1.78 | 3.5 |
| 1961 | 2.38 | 0.72 | 1.66 | 3.2 |
| 1962 | 2.24 | 0.75 | 1.49 | 3.2 |
| 1963 | 2.12 | 0.72 | 1.40 | 3.1 |
| 1964 | 1.95 | 0.69 | 1.26 | 2.9 |
| 1965 | 1.84 | 0.73 | 1.11 | 2.7 |
| 1966 | 1.82 | 0.73 | 1.09 | 2.6 |
| 1967 | 1.73 | 0.76 | 0.97 | 2.6 |
| 1968 | 1.72 | 0.77 | 0.95 | 2.6 |
| 1969 | 1.70 | 0.81 | 0.89 | 2.6 |
| 1970 | 1.74 | 0.82 | 0.92 | 2.5 |
| 1971 | 1.78 | 0.82 | 0.96 | 2.3 |
| 1972 | 1.78 | 0.85 | 0.93 | 2.5 |
| 1973 | 1.76 | 0.87 | 0.89 | 2.6 |
| 1974 | 1.80 | 0.87 | 0.93 | 2.8 |
| 1975 | 1.81 | 0.93 | 0.89 | புள்ளிவிவரங் |
| 1976 | 1.84 | 0.95 | 0.89 | கள் இல்லை |
| 1978 | 1.82 | 0.97 | 0.85 | |

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நவீன நாடுகளுக்கே உரித்தான வகையில் குறைவான பிறப்பு மற்றும் மரண விகிதக் குறியீடுகளையுடைய மக்களின் புனருற்பத்தி வகை சோவியத் யூனியனில் மொத்தத்தில் நிலைபெற்றுள்ளது என்பதை இந்த அட்டவணை காட்டுகிறது.

மேலே கோடிட்டுக் காட்டியுள்ளபடி மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகள் புறவய ரீதியான சமூக-பொருளாதார நியதிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. அதே சமயம் பொருளாதார, சமூக, ஜனத்தொகை, கலாச்சார, மற்ற காரணிகள் பிறப்பு மற்றும் இறப்பு விகிதத்தின் மீது பன்முகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; இதுதான் நகரங்கள், கிராமங்கள், யூனியன் குடியரசுகள் மற்றும்

இவற்றின் பல்வேறு பிரதேசங்களில் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் கணிசமான பாகுபாட்டை நிர்ணயிக்கிறது. இதன் தொடர்பாக பிறப்பு விகிதம் பற்றிய ஒரு சில பிரச்சினை களைப் பார்ப்போம். இதன் குறைவு, சோஷலிசப் புரட்சி யின் வெற்றியின் விளைவாக நாட்டில் நடைபெற்ற அடிப்படை மாற்றங்களுடன் பிரிக்க முடியாதபடி தொடர்புடையது. நம் கருத்துப்படி கீழ்க்காணும் காரணிகளை பிறப்பு விகித வேகத்தை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகளாகக் குறிப் பிடலாம்: தொழில்துறைமயமாக்கலும் இதனுடன் தொடர் புடைய அதிகமான இடப்பெயர்ச்சியும், நகர மக்களின் எண்ணிக்கையும் இவர்களின் பங்கும் அதிகரித்தது; பெண் களின் சமூக நிலையும் சமூக உற்பத்தியில் இவர்களுடைய பங்கேற்பும்; மக்களின் பொருளாயத மற்றும் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவு; மக்களின் பொருளா யத, ஆன்மீக தரத்தின் உயர்வு; குழந்தை மரண விகிதம் குறைந்தது; குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் அளவு; குழந்தை பெற்று கொள்வதற்கான பொருளாதார ஊக்கு விப்பு; மக்களின் வயது-பால் வாரியான கட்டமைப்பும் பெண்களிடையில் குழந்தை பெற்றுக் கொள்ளும் வயதி லுள்ள பெண்களின் எண்ணிக்கையும்; ஆண் பெண் விகிதம்; திருமணம் செய்து கொள்ளும் வயது; உள்குடும்ப ஒழுங்க மைப்பு பரவியுள்ள அளவு; குடும்பத்தின் ஜனத்தொகைப் போக்கு முக்கியக் காரணியாகும். இவற்றோடு கூட சட்ட, தேசிய, மத, இயற்கை (இட-பூகோள) மற்றும் உயிரியல் காரணிகளும் உள்ளன. பிறப்பு விகிதத்தை ஆராயும் போது தேசிய வாழ்க்கை முறை பாரம்பரியங்களைப் போன்ற தற் காலிகக் காரணியின் செல்வாக்கையும் (சில சமயம் இது கணிசமானதாக இருக்கலாம்) கவனத்தில் கொள்ள வேண் டும்.

ஆழ்ந்த சமூக-பொருளாதார மாற்றங்கள் சோவியத் யூனியனில் உள்ள எல்லா குடியரசுகளின் வளர்ச்சிக்கும் உரிய அம்சமாகும். இவை மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகள் உட்பட இவற்றின் வாழ்க்கையின் எல்லா அம்சங் களின் மீதும் தீர்மானகரமான தாக்கம் செலுத்தின. அதே நேரத்தில் மேற்கூறிய காரணிகளின் பல்வேறு விதமான இணைப்புகள், இவை பல்வேறு அளவுகளில் தாக்கம் செலுத்தி யது ஆகியவற்றின் காரணமாக வெவ்வேறு குடியரசு

களில் பிறப்பு விகிதக் குணகங்கள் கணிசமான அளவு வேறுபடுகின்றன (அட்டவணை 7).

அட்டவணை 7

**யூனியன் குடியரசுகளில் பிறப்பு விகிதக் குணகங்கள்**
**(சதவிகிதத்தில்)**

| யூனியன் குடியரசுகள் | ஆண்டுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1940 | 1950 | 1960 | 1970 | 1973 | 1975 |
| சோவியத் யூனியன் | 3.12 | 2.67 | 2.49 | 1.74 | 1.76 | 1.81 |
| ருஷ்ய சமஷ்டிக் குடியரசு | 3.30 | 2.69 | 2.32 | 1.46 | 1.51 | 1.57 |
| உக்ரேனியா | 2.73 | 2.28 | 2.05 | 1.52 | 1.49 | 1.51 |
| பைலோருஷ்யா | 2.68 | 2.55 | 2.44 | 1.62 | 1.57 | 1.57 |
| உஸ்பெகிஸ்தான் | 3.36 | 3.09 | 3.99 | 3.36 | 3.37 | 3.45 |
| கஸாக்ஸ்தான் | 4.11 | 3.76 | 3.71 | 2.34 | 2.32 | 2.41 |
| ஜியார்ஜியா | 2.74 | 2.35 | 2.47 | 1.92 | 1.82 | 1.82 |
| அஸர்பெய்ஜான் | 2.94 | 3.12 | 4.26 | 2.92 | 2.54 | 2.51 |
| லிதுவேனியா | 2.30 | 2.36 | 2.25 | 1.76 | 1.60 | 1.57 |
| மல்டேவியா | 2.66 | 3.89 | 2.93 | 1.94 | 2.04 | 2.07 |
| லாத்வியா | 1.93 | 1.70 | 1.67 | 1.45 | 1.39 | 1.40 |
| கிர்கீஸியா | 3.30 | 3.24 | 3.69 | 3.05 | 3.06 | 3.04 |
| தாஜிகிஸ்தான் | 3.06 | 3.04 | 3.35 | 3.48 | 3.56 | 3.71 |
| ஆர்மீனியா | 4.12 | 3.21 | 4.01 | 2.21 | 2.21 | 2.24 |
| துர்க்மேனியா | 3.69 | 3.82 | 4.24 | 3.52 | 3.43 | 3.44 |
| எஸ்தோனியா | 1.61 | 1.84 | 1.66 | 1.58 | 1.50 | 1.49 |

சில யூனியன் குடியரசுகளில் பிறப்பு விகிதக் குணகங்களின் அளவும் போக்கும் அகில யூனியன் குணகங்களிலிருந்து கணிசமாக வேறுபட்டு நிற்பது அட்டவணை 7இலிருந்து தெரிகிறது. அகில யூனியன் குணகங்கள் இடையறாது குறைந்துவந்த போது சில யூனியன் குடியரசுகளின் குணகங்கள் 1950 வாக்கிலும் இதற்குப் பிந்தைய பத்தாண்டிலும் கணிசமாக அதிகரித்தன; சில சந்தர்ப்பங்களில் (தாஜிகிஸ்தான்) இந்த அதிகரிப்பு 70ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதி

வரை அப்படியே இருந்தது. அதே சமயம் யுத்தத்திற்கு முந்தைய (1940) மட்டத்தோடு மட்டுமின்றி 1960ஆம் ஆண்டின் மட்டத்தோடும் ஒப்பிடும் போது சமீப பத்தாண்டில் குடியரசுகளில் பிறப்பு விகிதம் (ஒரு சில தனிப்பட்ட விதி விலக்குகளைத் தவிர) குறைந்து வருகிறது. குடியரசுகளில் பிறப்பு விகிதக் குணகங்களின் அளவுகளில் உள்ள மாறு பாடுகள் கணிசமானவை, இவை 1974இல் 1.42 சதவிகிதம் முதல் (லாத்வியா) 3.70 சதவிகிதம் வரை (தாஜிகிஸ்தான்) இருந்தன.

வெவ்வேறு பிறப்பு விகிதக் குணகங்களை உடைய பிர தேசங்களில் வாழும் மக்கள் நாட்டு மக்களின் பொது எண் ணிக்கையில் எந்த பங்கை வகிக்கின்றூர்கள் என்று பார்ப் போம். இதற்கு உர்லானிஸ் முன்மொழிந்த பிறப்பு விகிதக் குணக அளவுகோலைப் பயன்படுத்தி, யூனியன் குடியரசு களின் மக்களை இக்குணகங்களின் அளவிற்கேற்ப முறைப் படுத்துவோம் (அட்டவணை 8).

அட்டவணையிலிருந்து தெரியும்படி சோவியத் மக்களில் 81.9 சதவிகிதத்தினர் குறைவான, மிகக் குறைவான பிறப்பு விகிதத்தையுடைய பிரதேசங்களில் வாழ்ந்தனர். எல்லா சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகளிலும் பிறப்பு விகிதம் உயர்வானதாக அல்லது சராசரியை விட அதிகமானதாக இருந்தது. இங்கு சோவியத் யூனியன் மக்களில் 9.2 சதவிகி தத்தினர் வாழ்ந்தனர். கஸாக்ஸ்தான், அர்மீனியா, அஸர் பெய்ஜான் ஆகிய குடியரசுகளில் பிறப்பு விகிதம் சராசரி யானதாக (இங்கு சோவியத் மக்களில் 8.9 சதவிகிதத்தினர் வாழ்ந்தனர்) இருந்தது. அனேகமாக இத்தகைய பெரும் பிரதேச மாறுபாடுகள் மக்களினங்களின் வரலாற்று ரீதியான கடந்த காலத்துடன் தொடர்புடையதாய் இருக்கக் கூடும்.

இவ்வாருக யூனியன் குடியரசுகளில் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் பாகுபாட்டைக் கவனத்தில் கொண்டு இவற்றை ஆராயும் போது, இப்போது சோவியத் நாட்டில் சில சமூக-வரலாற்றுக் காரணங்களின் விளைவாக புனருற்பத்தியின் இரண்டு பிரதான வகைகள் நிலவுவது தெரிகிறது. முதலாவது வகை நாட்டின் மிகப் பெரும்பாலான மக்களுக்கு உரித்தானது. மக்களின் சாதாரண புனருற்பத் தியை ஒத்த இது குறைவான பிறப்பு விகிதம் மற்றும் குறை வான, சில ஆண்டுகளில் சிறிதளவே மாறக் கூடிய மரண

அட்டவணை 8

**பிறப்பு விகிதக் குணகத்தின்படி யூனியன் குடியரசுகளின் பிரிப்பீடு (70ஆம் ஆண்டுகளின் இரண்டாம் பகுதி)**

| பிறப்பு விகிதக் குணகம் (சதவிகிதத்தில்) | இக்குணகத்தின் தன்மை | இப்பிரிவில் வரும் யூனியன் குடியரசுகள் | 1.1 1976இல் மக்கள் எண்ணிக்கை (மில்லியனில்) | சோவியத் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பிரிவின் பங்கு (சதவிகிதத்தில்) |
|---|---|---|---|---|
| 1.1—1.59 | மிகக் குறைவான பிறப்பு விகிதம் | ருஷ்ய சமஷ்டிக் குடியரசு, உக்ரேனியா, பைலோருஷ்யா, லாத்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா | 200.198 | 78.4 |
| 1.6—2.09 | குறைவான பிறப்பு விகிதம் | ஜியார்ஜியா, மல்டேவியா | 8.823 | 3.5 |
| 2.1—2.59 | சராசரி பிறப்பு விகிதம் | ஆர்மீனியா, கஸாக்ஸ்தான், அஸர்பெய்ஜான் | 22.948 | 8.9 |
| 2.5—3.09 | சராசரியை விட அதிகமான பிறப்பு விகிதம் | கிர்கீஸியா | 3.371 | 1.3 |
| 3.1—4.09 | உயர்வான பிறப்பு விகிதம் | உஸ்பெகிஸ்தான், துர்க்மேனியா, தாஜிகிஸ்தான் | 20.162 | 7.9 |

விகிதம் ஆகியவற்றின் அடிப்படையிலானது. இரண்டாவது வகை உயர்வான பிறப்பு விகிதம் மற்றும் குறைவான மரண விகிதத்தின் அடிப்படையிலான விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியாகும். மூன்ருவது வகையாக ஒரு இடைப் பிரிவையும் சுட்டிக் காட்டலாம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இப்பிரிவைச் சேர்ந்த குடியரசுகளில் சமீப ஆண்டுகளில் பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைய ஆரம்பித்து அளவில் முதல் வகையை நெருங்கி வருகிறது.

பிறப்பு விகிதக் குறியீடுகளைப் பொருளாதார, சமூக, ஜனத்தொகை இயல், மக்களைப் பற்றிய மற்ற அம்சங்களுடன் நேரடியாக ஒப்பிடுவதானது இவற்றின் இடையேயுள்ள குறிப்பிட்ட சார்புநிலைகளை வெளிப்படுத்திஞலும் பல காரணிகள் பிறப்பு விகிதத்தை எப்படிப் பாதிக்கின்றன என்று விளக்கவில்லை.

ஒவ்வொரு மனிதனின் சுய உணர்வும் கூட்டு அனுபவம், கூட்டு ஞானம், கலாச்சாரம், சித்தாந்தம், தார்மீக மற்றும் நீதிநெறி வரையளவுகளின் தாக்கத்தால் உருவாகிறது. மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் மாறுவதானது குழந்தை பெற்றுக் கொள்வதைப் பற்றி சமுதாயத்தில் ஏற்கெனவே நிலவும் மக்களின் கருத்துக்களை உடனடியாக மாற்ருது. சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகள் பிறப்பு விகிதத்தின் மீது செலுத்தும் தாக்கம் நேரடியாக வெளிப்படுவதில்லை, மாருக இது மனிதர்களின் சுய உணர்வு மூலமாகப் பிரதிபலித்து இவர்களின் விருப்பு வெறுப்புகளின் மூலம் வெளிப்படுகிறது. குடும்பம், திருமணம், குழந்தை பெற்றுக் கொள்ளுதல் ஆகியவை பற்றி ஒரே காலகட்டத்தில் பல்வேறு மக்கள் பிரிவினரிடையே நிலவும் கருத்துக்கள் கணிசமாக மாறுபடுகின்றன. இந்த வேறுபாடுகளைக் கணக்கில் கொள்வதற்குத் தத்துவார்த்த முக்கியத்துவம் மட்டுமின்றி நடைமுறை முக்கியத்துவமும் உண்டு. உதாரணமாக, குடும்பத்தில் எவ்வளவு குழந்தைகள் இருக்க வேண்டுமென விரும்புகின்ருர்கள் என்பதைப்பற்றிய மக்களின் கருத்துக்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பிறப்பு விகிதத்தைத் துல்லியமாகக் கணிப்பதற்கு அவசியம். குடும்பம், திருமணம், குழந்தை பெற்றுக் கொள்வது பற்றிய சமூகக் கருத்து மக்களுடைய வாழ்க்கையின் பொருளாயதச் சூழ்நிலைகளின் தாக்கத்தால் உருவாகிறது. இது உருவாகி நிலைபெற்றதும் பிறப்பு விகிதத்தின்

மீது கணிசமான தாக்கம் செலுத்தும் காரணிகளில் ஒன்று கிறது, வாழ்க்கையின் பொருளாயதச் சூழ்நிலைகளுக்கு மாருக அதிக மாற்றமின்றி இருக்கும்.

பிறப்பு விகித மாற்றத்தின் மீது தாக்கம் செலுத்தும் காரணிகள் தனியாகச் செயல்படுவதில்லை, மாருக நெருக்கமான பரஸ்பரத் தொடர்பில் செயல்படுகின்றன, எனவே ஏதாவது ஒரு காரணியின் செயல்பாட்டைத் தனித்துப் பிரித்து திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டுவது மிகக் கடினம். ஆனால் பிறப்பு விகிதத்தை ஆராயும் படைப்புகளில் உதாரணமாக, நகரமயமாக்கல் பிறப்பு விகிதத்தைக் குறைப்பதாக கூறப்பட்டுள்ளது. சாதாரணமாக கிராமப்புற மக்களை விட நகர மக்களிடையே பிறப்பு விகிதம் கணிசமான அளவு குறைவானது.

மரண விகித மட்டமும் இதன் போக்கும் குடிமக்களின் உடல்நலத்தைக் காட்டும் மிக முக்கியக் குறியீடுகளில் ஒன்ருகும். இம்மட்டத்தை விளக்க மரண விகிதக் குணகம் உள்ளது. ஆனல் இக்குணகத்திற்குப் பெரும் குறை உண்டு— இது மக்களின் வயது-பால்வாரியான கட்டமைப்பைக் கணிசமாகச் சார்ந்துள்ளது. உதாரணமாகப் பின்வருமாறு நடக்கலாம். பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்து, மக்கள் எண்ணிக்கையில் சிறு வயதுள்ள குழந்தைகளின் (இவர்கள் மத்தியில்தான் உயர்வான மரண விகிதம் நிலவுகிறது) முழு எண்ணிக்கையும் சார்புநிலை எண்ணிக்கையும் குறைந்தால் இது, மற்ற எல்லா வயது வரம்புகளிலும் மரண விகிதம் மாருமலிருந்தால் கூட, மரண விகிதக் குணகத்தைக் குறைக்கக் கூடும். அல்லது, மக்கள் எண்ணிக்கையில் 5 வயது வரையிலான குழந்தைகளின் பங்கும் முதியோரின் பங்கும் கூடினுல் இது, மற்ற எல்லா வயது வரம்புகளிலும் மரண விகிதம் மாற்றமின்றி இருந்தாலும் அல்லது சிறிது குறைந்தாலும் கூட, நாடு தழுவிய அளவில் மரண விகிதத்தை அதிகரிக்கும். வயதுவாரியான கட்டமைப்பின் செல்வாக்கை அகற்றத் தரப்படுத்தப்பட்ட மரண விகிதக் குணகங்களைக் கணக்கிடுகின்றனர். நாம் ஒப்பிடும் பல்வேறு மக்கள் பிரிவினரின் வயது கட்டமைப்பு ஒரே மாதிரியானதாக இருந்தால் இப்பிரிவுகளின் மரண விகிதக் குறியீடுகள் எப்படியிருந்திருக்குமென தரப்படுத்தப்பட்ட மரண விகிதக் குணகங்கள் காட்டுகின்றன.

குழந்தைகள் (சரியாகச் சொன்னால் மழலையர்) மரண விகிதக் குணகம்—இதுதான் முதல் வயதில் குழந்தைகளின் மரண விகிதத்தைக் காட்டுகிறது—மக்களின் பொருளாயத நல்வாழ்வையும் நாட்டின் சுகாதார நிலையையும் காட்டும் மிக முக்கியக் குறியீடாகும். மற்ற பல வயது வரம்புகளை விட ஒரு வயது வரையிலான கட்டத்தில் குழந்தைகளின் மரணம் அதிகமாகும்.

சோவியத் யூனியனில் மரண விகிதக் குணகங்கள் பிறப்பு விகிதக் குணகங்களைப் போல் இடத்திற்கிடம் அவ்வளவு அதிகமாக மாறுபடவில்லை. இது பெரும்பாலும் பல்வேறு யூனியன் குடியரசுகளில் உள்ள மக்களின் வயதுவாரியான கட்டமைப்பின் வேறுபாட்டால் நிர்ணயிக்கப்படுகிறது (அட்

அட்டவணை 9

**யூனியன் குடியரசுகளில் மரண விகிதக் குணகங்கள் (சதவிகிதத்தில்)**

| யூனியன் குடியரசுகள் | ஆண்டுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1940 | 1950 | 1960 | 1970 | 1973 | 1975 |
| சோவியத் யூனியன் | 1.80 | 0.97 | 0.71 | 0.82 | 0.87 | 0.93 |
| ருஷ்ய சமஷ்டிக் குடியரசு | 2.06 | 1.01 | 0.74 | 0.87 | 0.92 | 0.98 |
| உக்ரேனியா | 1.43 | 0.85 | 0.69 | 0.89 | 0.93 | 1.00 |
| பைலோருஷ்யா | 1.31 | 0.80 | 0.66 | 0.76 | 0.80 | 0.85 |
| உஸ்பெகிஸ்தான் | 1.32 | 0.88 | 0.60 | 0.55 | 0.64 | 0.72 |
| கஸாக்ஸ்தான் | 2.14 | 1.17 | 0.65 | 0.60 | 0.65 | 0.71 |
| ஜியார்ஜியா | 0.88 | 0.76 | 0.65 | 0.73 | 0.74 | 0.80 |
| அஸர்பெய்ஜான் | 1.47 | 0.96 | 0.67 | 0.67 | 0.64 | 0.70 |
| லிதுவேனியா | 1.30 | 1.20 | 0.78 | 0.89 | 0.90 | 0.95 |
| மல்டேவியா | 1.69 | 1.12 | 0.64 | 0.74 | 0.82 | 0.93 |
| லாத்வியா | 1.57 | 1.24 | 1.00 | 1.12 | 1.15 | 1.20 |
| கிர்கீஸியா | 1.63 | 0.85 | 0.61 | 0.74 | 0.76 | 0.81 |
| தாஜிகிஸ்தான் | 1.41 | 0.82 | 0.51 | 0.64 | 0.72 | 0.81 |
| ஆர்மீனியா | 1.38 | 0.85 | 0.68 | 0.51 | 0.52 | 0.55 |
| துர்க்மேனியா | 1.95 | 1.02 | 0.65 | 0.66 | 0.72 | 0.78 |
| எஸ்தோனியா | 1.70 | 1.44 | 1.05 | 1.11 | 1.10 | 1.16 |

டவணை 9). எந்த யூனியன் குடியரசுகளில் மரண விகிதக் குணகம் நாடு முழுவதன் குணகத்தை விட அதிகமோ அந்தக் குடியரசுகளில் பெரும்பாலானவற்றில் 60 மற்றும் அதிக வயதானோரின் பங்கு (இவர்களிடையே மரண விகிதம் அதிக மானதாகவே இருக்கிறது) குறைவான மரண விகிதக் குணக முடைய குடியரசுகளில் உள்ளதை விட அதிகமாகும். வயது ரீதியான மரண விகிதக் குணகங்களைப் பகுப்பாய்வு செய் வதன் மூலம் மரணங்களின் அளவைப் பற்றியும் இதன் போக்கைப் பற்றியும் விரிவாக அறியலாம் (அட்டவணை 10).

புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் எல்லா வயது வரம்புகளிலும் மரண விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது. 70ஆம் ஆண்டுகளில் 30 வயதுக்கு மேற் பட்ட பிரிவுகளில் மரண விகிதங்கள் கிட்டத்தட்ட ஸ்திர மடைந்தன. 1958—1959 முதல் 1973—1975 வரையிலான காலகட்டத்தில் 5 வயது வரையிலான பிரிவில் மட்டுமே மரண விகிதக் குறியீடுகள் கணிசமாகக் குறைந்தன. ஒரு வயது வரையிலான பிரிவில் குழந்தைகளின் மரணம் குறைந்ததால்தான் இப்பிரிவில் மரண விகிதம் குறைந்தது. உதாரணமாக 1958—1959ஆம் ஆண்டுகளில் ஒரு வயது வரையிலான குழந்தைகளிடையே மரண விகிதம் 4.1 சதவிகிதமாக இருந்தது என்ருல் 1972—1973ஆம் ஆண்டு களில் இது 2.6 சதவிகிதமாக இருந்தது. இவ்வாறு மரண விகிதம் குறைந்த போதிலும் குழந்தைகளிடையே மரண விகிதக் குணகம் 2.5—2.7 சதவிகிதமாக இருப்பது உயர் வானது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். குழந்தைகள் மரண விகிதத்தைக் குறைப்பது, குழந்தைகள் மற்றும் தாய் மார்களின் உடல்நலம் ஆகியவை சோவியத் அரசின், இதன் சுகாதார உறுப்புகளின் விசேஷக் கவனத்தைக் கவரும் அம்சங்களாகும்.

தற்போது மூப்படைந்தோரின் மரணத்திற்கான காரணங் களில் இருதய-ரத்தக்குழாய் நோய்கள், புற்று நோய், மூளை இரத்தக் கசிவுகள் ஆகிய நோய்கள் மேன்மேலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இருதய-ரத்தக்குழாய் நோய்கள் மற்றும் புற்று நோயைத் தீர்ப்பதற்கான பயன்மிகு வழிகளைக் கண்டுபிடிப்பதன் மூலமும் பொருளாதார, சமூக-மனநிலை மற்றும் சுகாதார நடவடிக்கைகளின் மூலமும்தான் மரண விகிதத்தை மேற்கொண்டு குறைக்க முடியும். சோவியத்

அட்டவணை 10

**வயது வரம்பு வாரியாக மரண விகிதம் (சதவிகிதத்தில்)**

| | ஆண்டுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1896—1897 | 1926 | 1938—1939 | 1958—1959 | 1972—1973 | 1974—1975 |
| மொத்த மக்கள் | 3.24 | 2.03 | 1.74 | 0.74 | 0.86 | 0.90 |
| வயது வாரியாக | | | | | | |
| 0—4 ஆண்டுகள் | 13.30 | 7.89 | 7.58 | 1.19 | 0.72 | 0.82 |
| 5—9 | 1.29 | 0.73 | 0.55 | 0.11 | 0.07 | 0.07 |
| 10—14 | 0.54 | 0.31 | 0.26 | 0.08 | 0.05 | 0.05 |
| 15—19 | 0.58 | 0.37 | 0.34 | 0.13 | 0.10 | 0.10 |
| 20—24 | 0.76 | 0.55 | 0.44 | 0.18 | 0.16 | 0.17 |
| 25—29 | 0.82 | 0.61 | 0.47 | 0.22 | 0.21 | 0.21 |
| 30—34 | 0.87 | 0.63 | 0.54 | 0.26 | 0.28 | 0.30 |
| 35—39 | 1.03 | 0.75 | 0.68 | 0.31 | 0.36 | 0.37 |
| 40—44 | 1.18 | 0.90 | 0.81 | 0.40 | 0.48 | 0.52 |
| 45—49 | 1.57 | 1.09 | 1.02 | 0.54 | 0.62 | 0.67 |
| 50—54 | 1.85 | 1.40 | 1.38 | 0.79 | 0.86 | 0.90 |
| 55—59 | 2.95 | 1.81 | 1.71 | 1.12 | 1.25 | 1.30 |
| 60—64 | 3.45 | 2.47 | 2.45 | 1.71 | 1.80 | 1.83 |
| 65—69 | 6.16 | 3.65 | 3.51 | 2.52 | 2.72 | 2.74 |
| 70 அதற்கும் மேலாக | 8.90 | 7.95 | 7.89 | 6.38 | 7.55 | 7.33 |

மக்களின் உடல்நலத்திற்கான மேற்கொண்ட நடவடிக்கைகள் உடல்நலப் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்துதல், மருத்துவ மனைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல், மருத்துவ உபகரணங்கள் மற்றும் உயர்செயல் வன்மை மிக்க மருந்துகளின் உற்பத்தியைப் பெருக்குதல், மருத்துவ விஞ்ஞானத்தைத் தொடர்ந்து வளர்த்தல், மிக ஆபத்தான நோய்களுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையவை.

வயதுவாரியாக மரண விகிதக் குணகங்களில் நிலவும் வேறுபாடுகளைத் தவிர ஒரே வயதுப்பிரிவின் உள்ளேயே ஆண், பெண் மரண விகிதங்களில் வேறுபாடு நிலவுகிறது. எல்லா வயதுப் பிரிவுகளிலும் ஆண்களின் மரண விகிதக் குணகங்கள் பெண்களின் குணகங்களை விட அதிகமாக உள்ளன. உதாரணத்திற்கு 1970ஆம் ஆண்டுகளின் நடுவில் பல்வேறு வயதுப் பிரிவினரிடையே ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய மரண விகிதக் குணகங்களைப் பார்ப்போம் (அட்டவணை 11). 15 வயதிலிருந்து ஆரம்பித்து அதற்கு அதிகமான வயதுப் பிரிவுகளில் ஆண்களின் மரண விகிதக் குணகங்கள் பெண்களின் மரண விகிதக் குணகங்களை விட கணிசமான அளவு அதிகமாக உள்ளன. 25—29 வயதில்

அட்டவணை 11

**1970ஆம் ஆண்டுகளின் நடுபகுதியில்**
**பால், வயது ரீதியாக மக்களின்**
**மரண விகிதக் குணகங்கள் (சதவிகிதத்தில்)**

| | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| மொத்த மக்கள்தொகையில் | 0.93 | 0.82 |
| 0—4 ஆண்டுகள் | 0.85 | 0.68 |
| 5—9 | 0.08 | 0.05 |
| 10—14 | 0.06 | 0.04 |
| 15—19 | 0.14 | 0.06 |
| 20—24 | 0.25 | 0.08 |
| 25—29 | 0.31 | 0.09 |
| 30—34 | 0.44 | 0.14 |
| 35—39 | 0.54 | 0.18 |
| 40—44 | 0.74 | 0.26 |
| 45—49 | 0.97 | 0.37 |
| 50—54 | 1.39 | 0.58 |
| 55—59 | 1.95 | 0.82 |
| 60—64 | 2.87 | 1.26 |
| 65—69 | 4.09 | 2.02 |
| 70 அதற்கும் மேலாக | 9.05 | 6.67 |

இது 3.4 மடங்கு அதிகமானது. இந்தக் குணகங்களில் கணிசமான வேறுபாடு கிட்டத்தட்ட எல்லா வயதுப் பிரிவுகளிலும் உள்ளது.

அனேகமாக பெண்கள் அதிக நாள் உயிர்வாழ்பவர்களாக இருக்க வேண்டும். புதிதாகப் பிறந்த சிறுமிகளைவிடச் சிறுவர்களிடையே மரண விகிதம் அதிகமாயிருப்பது இதை மெய்ப்பிக்கிறது. உயிரியல் நோக்கிலிருந்து பார்க்கையில் இனத்தைப் பேணிக் காக்கப் பெண்களின் உயிர் அதிக முக்கியமானது ஆதலால் பெண்கள் நீடித்து உயிர் வாழும் தன்மை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உருவாகியிருக்கக் கூடும். சமூக ரீதியான காரணிகள் கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

எதிர்கால சராசரி வாழும் வயது அல்லது சராசரி வாழும் வயது மரண விகிதத்தைக் கணக்கிட அதிக வசதியான குறியீடாக இருக்கும்.

அட்டவணை 12

**புரட்சிக்கு முந்தைய ருஷ்யாவிலும் சோவியத் யூனியனிலும் மக்களுடைய எதிர்கால சராசரி வாழும் வயது**

| | குடிமக்கள் அனைவரின் சராசரி வாழும் வயது | ஆண்களின் சராசரி வாழும் வயது | பெண்களின் சராசரி வாழும் வயது |
|---|---|---|---|
| 1896—1897 (ஐரோப்பிய ருஷ்யாவின் 50 மாவட்டங்களில்) | 32 | 31 | 33 |
| 1926—1927 (சோவியத் யூனியனின் ஐரோப்பிய பகுதியில்) | 44 | 42 | 47 |
| 1938—1939 | 47 | 44 | 50 |
| 1958—1959 | 69 | 64 | 72 |
| 1971—1972 | 70 | 64 | 74 |

புரட்சிக்கு முந்தைய ருஷ்யாவில் மக்களின் சராசரி வாழும் வயது மேற்கு ஐரோப்பாவின் வளர்ச்சியடைந்த அரசுகளை விட கணிசமாக குறைவானதாக இருந்தது என்றால் இன்று சோவியத் யூனியனில் இக்குறியீடு மிக உயர்வான சராசரி வாழும் வயதையுடைய நாடுகளின் குறியீடுகளுக்கு எவ்விதத்திலும் குறைவானதாக இல்லை. உதாரணமாக இத்தகைய நாடுகளில் ஒன்றாகிய ஸ்வீடனை எடுத்துக் கொள்வோம். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கே சராசரி வாழும் வயது 52 ஆண்டுகளாக இருந்த போது ருஷ்யாவில் 32 ஆண்டுகளாக இருந்தது. 1966—1970இல் இக்குறியீடு ஸ்வீடனில் 74 ஆண்டுகளாக (உலகிலேயே மிக அதிகமானது) இருந்த போது சோவியத் யூனியனில் இது 70 ஆண்டுகளாக இருந்தது.

## அத்தியாயம் பன்னிரண்டு

# சோஷலிசத்தில் உழைப்பு மூலாதாரங்களின் வளர்ச்சியில் ஜனத்தொகை அம்சங்கள்

உழைப்புச் சக்தி என்ருல் மனிதனின் உழைக்கும் ஆற்றலாகும். ''உழைப்புச் சக்தி அல்லது உழைப்பதற்கான ஆற்றல் என்ருல் உடலுக்கு, தனிமனிதனுக்கு உள்ள உடற்கூறு ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான ஆற்றல்களின் ஒட்டு மொத்தமாகும்; மனிதன் ஏதாவது பயன் மதிப்புகளை உற்பத்தி செய்யும் போதெல்லாம் இவற்றைப் பயன்படுத்துகிருன்''* என்று கா. மார்க்ஸ் எழுதினுர். யாரால் தமது உடற்கூறு ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான ஆற்றல்களின் பயனுய் உழைக்க முடியுமோ அவர்கள் எல்லாம் சமுதாயத்தின் உழைப்பு மூலாதாரங்களாவார்கள்.

உழைப்பு மூலாதாரங்களின் வளர்ச்சிப் பிரச்சினைகளை ஆராயும் போது இவற்றின் பண்பு ரீதியான தன்மை மீது கவனம் செலுத்த வேண்டும். கீழ்காணும் அம்சங்கள் இதில் அடங்கும்: உற்பத்தியின் கோரிக்கைகள், குறிப்பிட்ட வேலைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ற பொதுக் கல்வி மற்றும் விசேஷத் தனித்துறைப் பயிற்சி மட்டம்; சாதாரண, சராசரி அளவு பிராயாசையோடு, சமூக ரீதியாகச் சாதாரணமான தீவிரத் தன்மையோடு உழைப்புச் சக்தியைச் செலவிட அனுமதியளிக்கும் உழைப்பாளியின் உடல்நலம்; குறிப்பிட்ட வேலையில், விசேஷத் துறையில் வேலை செய்த காலம் (இது விசேஷப் பயிற்சியோடு சேர்ந்து குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும் போது சராசரி திறமைக்கு வகை செய்கிறது). உழைப்பு மூலாதாரங்களின் பால், வயது ரீதியான கட்டமைப்பு இவற்றின் தரத்திற்கான அளவுகோலாகும்.

உழைப்பு மூலாதாரங்களை விவேகமாகப் பயன்படுத்துவதுதான் உழைப்பு மூலாதாரங்களின் வளர்ச்சியின் (இது

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 178 (ருஷ்யப் பதிப்பு).

இறுதியில் இவற்றின் தரங்களை மேம்படுத்துவதில் அடங்கியுள்ளது) நோக்கமாகும். இது சமூக உற்பத்தியின் பயன் தன்மையை உயர்த்துவதற்கான மிக முக்கியக் காரணியாகும். அதே சமயம் சமுதாயத்தின் உழைப்பு மூலாதாரங்களை விவேகமாகப் பயன்படுத்துவது என்பது உழைக்கும் ஆற்றல் உள்ள மக்கள் அனைவருக்கும் முழு வேலை வாய்ப்பளிப்பதை முன்னனுமானிக்கிறது; இது கல்வித் தரமும் ஆன்மீகத் தேவைகளும் உயர்ந்ததையடுத்து வேலைக்கான மனிதர்களின் தேவை பெருகியதைப் பிரதிபலிக்கிறது, உற்பத்தியின் அளவுகளைக் கூடுதலாக அதிகரிப்பதற்கான காரணமாகத் திகழ்கிறது.

உழைப்பில் ஈடுபடத்தக்க வயது வரம்புகள் வரலாற்று ரீதியாக உயிரியல் மற்றும் சமூக-பொருளாதாரக் காரணிகளின் தாக்கத்தால் உருவாகின்றன. உற்பத்தியின் கோரிக்கைகள், மக்களின் பொருளாயத வாழ்க்கைத் தரம், வேலையாட்களின் பொதுக் கல்வி மற்றும் விசேஷ பயிற்சிக்கான தேவை ஆகியவை சமூக-பொருளாதாரக் காரணிகளில் முக்கியமானவையாகும். தற்போது சோவியத் யூனியனில் வேலை செய்ய ஆரம்பிக்க குறைந்த பட்ச வயது 16, அதிக பட்ச வயது ஆண்களுக்கு 60 வயதும் பெண்களுக்கு 55 வயதும் ஆகும்.

உழைப்பு மூலாதாரங்களை ஆராயும் போது பல்வேறு உழைப்புப் பிரிவுகளிலும் வேலைகளிலும் மக்களைப் பகிர்ந்து அளிப்பதைப் பற்றிய பகுப்பாய்விற்கு விசேஷ முக்கியத்துவம் உண்டு. இது உழைப்பு மூலாதாரங்களைப் பயன்படுத்துவதன் பயன் தன்மையை மதிப்பிட உதவுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது சோவியத் புள்ளிவிவர இயல் உழைப்புப் பிரிவுகள், வேலைகளுக்கேற்ப அட்டவணைப்படுத்தும் முறையைப் பின்பற்றுகிறது. உழைப்புப் பிரிவு, வேலைகளுக்கேற்ப மக்களைக் குழுக்களாகப் பிரிக்கும் முன் வருவாய் கிடைக்கும் வழிகளுக்கேற்ப இவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். இதுவும் வர்க்கங்களுக்கேற்ப மக்களைக் குழுக்களாகப் பிரிப்பதும் மக்களின் சமூக கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிட உதவுகின்றன.

1970ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி வருவாய் வழிகளுக்கேற்ப மக்களைப் பிரிப்பது பின்வருமாறு இருந்தது: வேலையுள்ளவர்கள்; சொந்த வேலைகளில் ஈடுபட்டுள்ள

குடும்ப உறுப்பினர்கள் (படிப்பவர்கள், படிக்காதவர்கள் என்ற பிரிவோடு); தனிப்பட்ட நபர்களைச் சார்ந்துள்ளவர்கள் (படிப்பவர்கள், படிக்காதவர்கள்); ஓய்வு ஊதியம் பெறுபவர்கள்; உதவிப் பணம் பெறுபவர்கள்; அரசைச் சார்ந்திருக்கும் மற்றவர்கள் (படிப்பவர்கள், படிக்காதவர்கள்); வேறு வருவாய் வழிகளை உள்ளவர்கள்; வருவாய் வரும் வழிகளைக் கூறுதவர்கள். பொருளாயத உற்பத்தித் துறைகளிலும் உற்பத்தியில்லாத துறைகளிலும் ஈடுபட்டுள்ளவர்களை வினியோகிப்பது கணக்கெடுப்பால் நிலைநாட்டப்படுகிறது. தொழில்துறை, கட்டுமானம், போக்குவரத்து, தகவல் தொடர்பு நிறுவனங்கள், வர்த்தகம், உணவு விடுதிகள், பதப்படுத்தும் துறை, பொருளாயத-தொழில்நுட்ப சப்ளை, விற்பனைத் துறை, விவசாயத் துறை, காட்டிலாக்கா ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் உத்தியோகஸ்தர்களும் அரசுப் பண்ணைகள், மற்ற விவசாய தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களும் உத்தியோகஸ்தர்களும் கூட்டுப்பண்ணை விவசாயிகளும் தனிப்பட்ட விவசாயிகளும் பொருளாயத உற்பத்தித் துறைகளில் வேலை செய்பவர்களாவார்கள். கல்வி, விஞ்ஞானம், கலாச்சார நிறுவனங்கள், மருத்துவம், வீட்டு வசதித் துறை, முனிசிபல் சேவை ஆகியவற்றில் பணிபுரிபவர்கள் உற்பத்தியில்லாத துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆவார்கள்.

1959 மற்றும் 1970ஆம் ஆண்டுகளின் மக்கள்தொகை கணக்கெடுப்புகளை ஒப்பிடும் போது இந்த ஆண்டுகளில் பொருளாயத உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பங்கு 84.1 சதவிகிதத்திலிருந்து 78.3 சதவிகிதமாகக் குறைந்துள்ளதும் அதே சமயம் உற்பத்தியில்லாத துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பங்கு 14.7 சதவிகிதத்திலிருந்து 21.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளதும் தெரியவரும்.

1959 மற்றும் 1970ஆம் ஆண்டுகளின் மக்கள்தொகை கணக்கெடுப்புகளின் முடிவுகளைப் பற்றிய பகுப்பாய்வு சோவியத் மக்களின் வயது-பால் ரீதியான கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி குறிப்பிட்ட முடிவுகளைச் செய்ய உதவுகிறது. உழைக்கும் ஆற்றல் உள்ள வயதில் இருப்போரின் எண்ணிக்கை 57.4 சதவிகிதத்திலிருந்து 54 சதவிகிதமாகக் குறைந்துள்ளது, இதற்கு அதிகமான வயதில் உள்ளோரின் எண்ணிக்கை 12.2 சதவிகிதத்திலிருந்து 15.1

சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இளைஞர்களின் பங்கு கிட்டத் தட்ட மாற்றமடையவில்லை. 1959இல் நாட்டு மக்கள் தொகையில் பெண்களின் பங்கு 55.0 சதவிகிதமாக இருந்த தெனில் 1970இல் இது 53.9 சதவிகிதமாயிருந்தது, அதாவது மக்களின் கட்டமைப்பிலும் உழைப்பு மூலாதாரங்களிலும் பால் ரீதியாக நிலைமை படிப்படியாகச் சீரடைந்து வருகிறது. உழைப்பு மூலாதாரங்களின் வயது உள்ளடக்கத்தைப் பொறுத்தமட்டில் பிறப்பு விகிதம் குறைந்ததால் ''உழைப்பு மூலாதாரங்கள் மூப்படைவது'' காணப்படுகிறது.

எதிர்கால தேசியப் பொருளாதாரத்தைத் திட்டமிடும் நடைமுறையில் உழைப்பு மூலாதாரங்களின் வயது ரீதியான கட்டமைப்பைப் பகுப்பாய்வு செய்வது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒவ்வொரு வயதுப் பிரிவிற்கும் விசேஷ அம்சங்கள் உண்டு என்பது தெளிவு. இது தேசியப் பொருளாதாரத் திட்டமிடுதலில் பயன்படுத்தப்படுகிறது. குடிமக்களின் கல்வித் தன்மைகளின் மாற்றங்களைக் கணக் கெடுத்து கொள்வது தேசியப் பொருளாதாரத் திட்டமிடு தலுக்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. சோவியத் ஆட்சிக் காலத்தில் முழுக் கல்வியறிவு நாடு முழுவதும் பரவி யுள்ளது. உயர் கல்வி பயின்ேறோர், பொது செகண்டரிக் கல்வி, விசேஷக் கல்வி, முழுமையடையா செகண்டரிக் கல்வி பயின் ேறோரின் எண்ணிக்கை கூடியுள்ளது. இரண்டு கணக்கெடுப்பு களுக்கு இடையிலான காலத்தில் (1959—1970) வேலை செய்யும் ஒவ்வொரு 1,000 நபர்களிலும் உயர் கல்வி பயின்ேறோரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரண்டு மடங்கும் செகண்டரி விசேஷக் கல்வி பயின்ேறோரின் எண்ணிக்கை 1.6 மடங்கும் முழுமையடையா செகண்டரிக் கல்வி பயின்ேறோ ரின் எண்ணிக்கை 1.2 மடங்கும் அதிகரித்துள்ளது. பொது செகண்டரிக் கல்வி பயின்ேறோரின் எண்ணிக்கையும் 2.5 மடங்கு கூடியுள்ளது.

சமீப ஆண்டுகளில் உற்பத்திக்கு வந்த இளைஞர்கள் பெரும்பாலும் செகண்டரிக் கல்வியை முடித்திருந்தனர். நகர மற்றும் கிராமவாசிகள், தொழிலாளர்கள் மற்றும் கூட்டுப்பண்ணை விவசாயிகளின் கல்வித் தரம் கணிசமாக நெருங்கி வருகிறது. 1939இல் தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு 1,000 பேர்களிலும் உயர் மற்றும் செகண்டரி (முழுமையான, முழுமைபெருத) கல்வி

பயின்ரூேரின் எண்ணிக்கை நகரத்தில் 242 நபர்களாகவும் கிராமப் புறத்தில் 63 நபர்களாகவும் இருந்தது என்ருல் 1970இல் இது முறையே 810 நபர்களாகவும் 609 நபர்களாக வும் இருந்தது. நாட்டு மக்களுடைய கல்வித் தர வளர்ச்சி, குறிப்பாக செகண்டரிப் பொதுக் கல்வியின் வளர்ச்சி பெரும் சமூக-பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இதுதான் மற்ற எல்லா வகைக் கல்விக்கும் அடிப்படையாகும், தனிநபருடைய பன்முக வளர்ச்சிக்கான அவசிய நிபந்தனையாகும்.

சமூக உற்பத்தியின் தேவைகளுக்கேற்ப உழைப்பு மூலாதாரங்களைத் திட்டமிட்ட முறையில் பகிர்ந்தளிப்பதானது சோஷலிச தேசியப் பொருளாதாரத்தின் சிறப்பு அம்சமாகும். இதில் பின்வரும் முக்கிய விகிதங்களுக்கு வகை செய்யப்படுகிறது: நாட்டின் மக்கள் எண்ணிக்கைக்கும் இவர்களில் உழைக்கும் ஆற்றல் உள்ள பகுதியினருக்கும் இடையிலான விகிதம்; மக்களில் உழைக்கும் ஆற்றல் உள்ள பகுதியினரின் எண்ணிக்கைக்கும் சமூக ரீதியாகப் பயனுள்ள உழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள விகிதம்; பொருளாயத உற்பத்தித் துறையில் உள்ள வேலையாட்களின் எண்ணிக்கைக்கும் இதற்குவெளியே சமூக ரீதியாகப் பயனுள்ள உழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதம்; நகரங்களிலும் விவசாய உற்பத்தியிலும் உள்ள உழைப்பு மூலாதாரங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான விகிதம்; பல்வேறு பொருளாதாரப் பிரதேசங்களின் உழைப்பு மூலாதாரங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான விகிதம்.

நகரங்கள், கிராமங்களிலும் நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள உழைப்பு மூலாதாரங்களை முழுமையாகவும் விவேகமாகவும் பயன்படுத்தத் தேவையான எல்லாச் சூழ்நிலைகளையும் சோஷலிசச் சமுதாயம் தோற்றுவிக்கிறது. சோஷலிசத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. சோவியத் யூனியனில் 1930ஆம் ஆண்டிலேயே இச்சமூகக் கேடு ஒழித்துக் கட்டப்பட்டது. வேலை செய்யும் ஆற்றல் உள்ள அனைவருக்கும் நாட்டில் முழு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. உழைக்கும் ஆற்றல் உள்ள மக்கள் அனைவரையும் சமுதாய ரீதியாகப் பயனுள்ள உழைப்பில் முழுமையாக

வும் விவேகமாகவும் பயன்படுத்துவது என்பது இறுதி லட்சிய மல்ல, மாருக இது மக்கள் அனைவரின் பொருளாயத மற்றும் கலாச்சார வாழ்க்கை மட்டத்தை இடையருது உயர்த்த உதவக் கூடிய வகையில் நாட்டின் உற்பத்திச் சக்திகளை துரித கதியில் வளர்ப்பதற்கான சாதனமாகும்.

சமுதாய ரீதியாகப் பயனுள்ள உழைப்பில் உழைக்கும் ஆற்றல் உள்ள மக்கள் அனைவரையும் பயன்படுத்தும் வாய்ப் பானது உற்பத்திச் சாதனங்களின் மீது பொதுச் சொத்து டைமை நிலவும் சூழ்நிலையில் விரிவுபடுத்தப்பட்ட சோஷலிச புனருற்பத்தியின் நியதிகளால் ஆதாரப்படுத்தப்படுகிறது. கம்யூனிசக் கட்டுமானத்தில் தீவிரப் பங்கேற்கும் பெண் களுக்கு உழைப்பிலும் கல்வியிலும் முழு உரிமை அளிக்கப் பட்டுள்ளதானது சோஷலிசச் சமுதாயத்தின் முக்கிய சாதனை களில் ஒன்ருகும். புரட்சிக்கு முன் ருஷ்யாவில் சுயமாக வேலை செய்த நபர்களில் 19 சதவிகிதத்தினர் மட்டுமே பெண்கள் என்ருல் 1970இல் தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ள வர்களில் பெண்களின் பங்கு 51 சதவிகிதமாயிருந்தது. இன்று பெண்கள் வேலை செய்யாத பொருளாதார அல்லது கலாச்சாரத் துறையே சோவியத் நாட்டில் கிடையாது. 1928 முதல் 1973 வரையிலான கட்டத்தில் தேசியப் பொருளா தாரத்தில் பணி புரியும் பெண்களின் எண்ணிக்கை 2.8 மில் லியனிலிருந்து 49.9 மில்லியனுக உயர்ந்துள்ளது; 1970இல் தொழில்துறையில் பணி புரிபவர்களின் மொத்த எண் ணிக்கையில் 49 சதவிகிதத்தினரும் கட்டுமானத்தில் 29 சதவிகிதத்தினரும், போக்குவரத்தில் 24 சதவிகிதத்தினரும், உடல்நலப் பாதுகாப்புத் துறை, விளையாட்டு மற்றும் சமூக சேவைத் துறைகளில் 85 சதவிகிதத்தினரும், கல்வி, கலாச் சாரத் துறையில் 73 சதவிகிதத்தினரும் விஞ்ஞானத் துறை யில் 49 சதவிகிதத்தினரும் பெண்கள் ஆவார்கள்.

பல்வேறு துறைகளிலும் ஆண், பெண் உழைப்பைப் பயன்படுத்துவதில் சம விகிதத்தை அடைவதற்கு பெரும் தேசியப் பொருளாதார முக்கியத்துவம் உண்டு. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வளர்ச்சியும் இதன் சாதனை களைப் பயன்படுத்துவதும் முற்றிலுமாகப் ''பெண்களின்'' துறைகளில் மட்டுமின்றி கனரகத் தொழில்துறைகளிலும் உழைப்பின் தன்மையையும் உழைப்புச் சூழ்நிலைகளையும்

மாற்ற உதவியுள்ளன, இது பால் வாரியாக உழைப்புச் சக்தியைப் பயன்மிகு முறையில் இணைக்க உதவும்.

உற்பத்திச் சக்திகளை விவேகமாக, விஞ்ஞான அடிப்படையில் பகிர்ந்தளிப்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கை நாடு முழுவதும் (குடியரசுகள், பொருளாதாரப் பிரதேசங்கள், மாகாணங்கள், நகரங்கள், கிராமப்புற வட்டங்கள் ஆகியவற்றில்) உழைப்பு மூலாதாரங்களை அதிக பயன் தன்மையோடு பயன்படுத்தவும் தேசியப் பொருளாதாரத் துறைகளிலும் உழைப்புப் பிரிவுகளிலும் உழைப்பு மூலாதாரங்களை விவேகமாகப் பகிர்ந்தளிக்கவும் பாடுபடுகிறது.

உழைப்பு மூலாதாரங்களை பற்றிய கணிப்புகளைக் கூறும் போது ஜனத்தொகை மற்றும் சமூக-பொருளாதார அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதார வளர்ச்சி பற்றிய எதிர்காலத் திட்டங்களில் சமூக-ஜனத்தொகைப் பிரச்சினைகள் மேன் மேலும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. உழைப்பு மூலாதாரங்களின் எண்ணிக்கை இயக்கப் போக்கோடு கூட இவற்றின் ஜனத்தொகை ரீதியான உள்ளடக்கத்தில் ஏற்படும் மாற்றங்களும் (உழைக்கும் ஆற்றல் உள்ள மக்களின் பொருளாதார ரீதியான செயல்வன்மையின் தன்மையும் அளவும்; சமூகப் பொருளாதாரம், கல்வி, சொந்த தோட்ட வேலை, வீட்டு வேலை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோரின் கட்டமைப்பு; உழைப்பு மூலாதாரங்களின் துறை ரீதியான, பிரதேச ரீதியான மற்றும் தொழில்-தேர்ச்சி ரீதியான மாற்றங்கள்) கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

*அத்தியாயம் பதின்மூன்று*

## சோவியத் யூனியனில் குடிமக்களின் இடப்பெயர்ச்சி

குடிமக்களின் இடப்பெயர்ச்சி என்பது தன்மையிலும் வடிவங்களிலும் பின்விளைவுகளிலும் சிக்கலான ஒரு ஜனத் தொகை நிகழ்ச்சிப் போக்காகும். இது பல சமூக-பொருளாதாரப் புலப்பாடுகளுடன் பரஸ்பரத் தொடர்புடையது. உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகள் முறை முழுவதன் வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய இடப்பெயர்ச்சி நிகழ்ச்சிப் போக்குகள் தம் பங்கிற்கு இவற்றின் வளர்ச்சி வேகங்கள் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. இந்தச் செல்வாக்கு மக்கள்தொகை வளர்ச்சியின் மூலம் வெளிப்படுகிறது. ''குடிமக்களின் நகரும் தன்மையை ஏற்படுத்தாவிடில் இவர்களின் வளர்ச்சிக்கு இடமேயில்லை''* என்று கோடிட்டுக் காட்டினார் வி. இ. லெனின். இடப்பெயர்ச்சிப் போக்குகள் எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமாக நடக்கின்றனவோ குடிமக்களின் சமூகக் கட்டமைவின் பல்வேறு அம்சங்களில் அவ்வளவுக்கவ்வளவு கணிசமான மாற்றங்கள் ஏற்படும், குடிமக்களின் பிரதேச ரீதியான பரப்பீடு அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக மாறும். இடப்பெயர்ச்சியானது உழைப்புப் பழக்கங்கள், உற்பத்தி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள உதவுகிறது, தனிநபரின் வளர்ச்சிக்குத் துணை புரிகிறது, குடும்ப உள்ளடக்கம், பால், வயது ரீதியான கட்டமைப்பின் மீது செல்வாக்கு செலுத்துகிறது, ஊழியர்களைப் புதுப்பிக்கிறது; இது குடிமக்களின் சமூக, துறை ரீதியான, தொழில் ரீதியான இடம் பெயர்வாற்றலுடன் நேரடியாகத் தொடர்புடையது.

பரவலான பொருளில் இடப்பெயர்ச்சியில், குடிமக்கள் இடம் விட்டு இடம் மாறுவதன் பல்வேறு வகைகள் அடங்கும். ஒரு சில குடியிருப்புகளிலிருந்து வேறு குடியிருப்பு

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 3, பக்கம் 246 (ருஷ்யப் பதிப்பு).

களுக்கு மாறுவது, குடியிருக்கும் இடங்களின் உள்ளும் இவற்றின் எல்லைகளுக்கு அப்பாலும் வேலை செய்யவும் கல்வி கற்கவும் அன்ருடம் பயணம் செய்தல், பருவக்கால வேலைகள் உட்பட தற்காலிக வேலைகளுக்காக அந்தந்தப் பிரதேசங் களுக்கு வருவது, அலுவல் நிமித்தமான பயணங்கள், விடுமுறை, மற்ற வகையான இடமாற்றங்கள் முதலியன இவற்றிலடங்கும். இப்பயணங்கள் எல்லாம் தம் தன்மையா லும் இவற்றை நிர்ணயிக்கும் காரணிகளினுலும் சமூக, பொருளாதார, ஜனத்தொகை வளர்ச்சியின் மீது செலுத்தப் படும் பின்விளைவுகளினுலும் மாறுபட்டு நிற்கின்றன. எனவே இப்பயணங்களில் ஒவ்வொன்றும் குடிமக்களுடைய இடப்பெயர்ச்சியின் விசேஷ வகையாகக் கருதப்படலாம்.

முறைபடியான, பருவக்கால மற்றும் நிலைமாரு இடப் பெயர்ச்சிகளை முக்கிய இடப்பெயர்ச்சி வகைகளாகக் கூறலாம். இவ்வகைகள் எல்லாம் சோவியத் நாட்டிலும் உள்ளன.

தாம் வசிக்கும் இடத்திலிருந்து வேலை செய்யும் இடம் அல்லது கல்வி கற்கும் இடம் வரையிலான (இவை வெவ்வேறு குடியிருப்பு இடங்களில் இருக்கும்) குடிமக்களின் அன்ருட அல்லது வாராந்திரப் பயணங்கள் முறைபடியான இடப் பெயர்ச்சியாகும். ஒரு புறம் பயணம் செய்வதை அடுத்து அதே முறையில் எதிர் திசைப் பயணங்களும் நடைபெறும். சோவியத் யூனியனில் இந்த முறைபடியான இடப்பெயர்ச்சி யில் லட்சக்கணக்கான நகர, கிராம மக்கள் பங்கேற்கின்ற னர். எந்தப் பல்திரட்டுகளின் மையங்களாகப் பெரிய, மிகப் பெரிய நகரங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் மிகக் கணிசமான அளவுகளில் முறைபடியான இடப்பெயர்ச்சி நடைபெறுகிறது.

**பருவக்கால இடப்பெயர்ச்சி** என்பது பெரும்பாலும் தற் காலிக வேலையிடம் மற்றும் வசிப்பிடத்திற்கு உழைக்கும் ஆற்றல் உள்ள மக்கள் ஒரு சில மாதங்களுக்குச் செல்லுவதா கும்; நிரந்தர வசிப்பிடத்திற்குத் திரும்பி வரும் வாய்ப்பு இதில் அப்படியே உள்ளது. ஒரு சில பிரதேசங்களின் பொருளா தாரத்தில் உற்பத்தியின் நேரத்தை விடக் கணிசமான அளவு குறைந்த நேரத்தையுடைய உழைப்புக் கட்டத்தைக் கொண்ட துறைகள் ஆதிக்கம் செலுத்துவதன் காரண மாகவே இத்தகைய இடப்பெயர்ச்சிகள் தோன்றுகின்றன.

இதன் விளைவாய், மிக அதிகமான வேலைகள் இருக்கையில் (பருவக்கால உச்ச கட்டங்கள்) இத்துறைகளுக்குக் கூடுதல் வேலையாட்கள் பெரிதும் தேவைப்படுகின்றனர். உள்ளூர் உழைப்பு மூலாதாரங்களைக் கொண்டு இத்தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது ஆகையால் கூடுதல் உழைப்புச் சக்தி நாட்டின் பிற பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது. விவசாயத் துறையைத் தவிர (அறுவடை மற்றும் விதைப்பு வேலைகள்) மரமறுக்கும் வேலைகளைப் போன்ற தொழில்களும் விவசாய விளைபொருட்களைப் பதப்படுத்தும் துறையும் பருவக்கால உற்பத்தித் துறைகளில் அடங்கும்.

நிலைமாரு இடப்பெயர்ச்சியை இச்சொல்லின் கண்டிப்பான பொருளில் இடப்பெயர்ச்சி எனலாம். இது குடிமக்களின் ஒருவகையான இடமாற்றமாகும், இது இவர்களின் பிரதேச மறுபங்கீட்டிற்கு இட்டுச் செல்கிறது. இவ்வகையான இடப்பெயர்ச்சி ஒரே சமயத்தில் இரண்டு நிபந்தனைகளுக்கு ஏற்றதாயுள்ளது: முதலாவதாக, மக்கள் ஒரு குடியிருப்பிலிருந்து இன்னொரு குடியிருப்பிற்கு இடம் மாறுகின்றனர், இரண்டாவதாக இதோடு கூட நிரந்தர வசிப்பிடம் மாறுகிறது.

மக்களின் பிரதேச இடப்பெயர்வு ஒரு நாட்டின் உள்ளே நடைபெறுவதைப் போல் நாடுகளுக்கு இடையிலும் நடக்கலாம். எனவே அரசுகளுக்கு இடையிலான இடப்பெயர்ச்சி, ஒரே அரசிற்கு உள்ளேயான இடப்பெயர்ச்சி என்று இரண்டு முக்கிய இடப்பெயர்ச்சி வகைகள் உள்ளன. முதலாவதை வெளி இடப்பெயர்ச்சி என்றும் இரண்டாவதை உள் இடப்பெயர்ச்சி என்றும் குறிப்பிடுவதுண்டு. சோஷலிச நாடுகளில் வெளி இடப்பெயர்ச்சிகள் முதலாளித்துவ நாடுகளுக்கு மாறாக சமயாசமயங்களில் மட்டுமே நிகழுபவை. சோவியத் யூனியன் உட்பட சோஷலிச நாடுகளில் வெளி இடப்பெயர்ச்சி ஒப்பீட்டளவில் அதிகமாக 40ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் 50ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலும் மட்டுமே நடைபெற்றது. யுத்தத்திற்குப் பின் அரசு எல்லைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாய் இந்த ஆண்டுகளில் ஐரோப்பிய சோஷலிச நாடுகளுக்கிடையே மக்கள் பரிமாற்றம் நடந்தது. உதாரணமாக சோவியத் யூனியனும் போலந்தும் 30 லட்சம் பேர்களைப் பரிமாறிக் கொண்டன. இறுதியாக சொந்தத் தாயகத்தைப் பெற்ற 1,20,000 ஆர்

மீனியர்கள் 1946—1958ஆம் ஆண்டுகளில் பல முதலாளித்துவ நாடுகளிலிருந்து சோவியத் யூனியனில் குடியேறினர். தற்போது சோவியத் யூனியனிலும் மற்ற ஐரோப்பிய சோஷலிச நாடுகளிலும் (யூகோஸ்லாவியாவையும் குறைந்த அளவிற்கு போலந்தையும் தவிர்த்து) வெளி இடப்பெயர்ச்சி முற்றிலுமாக இல்லை. சோவியத் யூனியன் உழைப்பு மூலாதாரங்களின் மூடிய சமன்பாட்டை உடைய நாடுகளில் ஒன்ருகும், அதாவது அரசின் மக்கள்தொகை தனது இயற்கையான இயக்கப்போக்கின் காரணமாக மட்டுமே மாறுகிறது, இடப்பெயர்ச்சி உள்நாட்டில் மட்டுமே நடைபெறுகிறது.

ஒரே அரசிற்கு உள்ளேயான இடப்பெயர்ச்சியின் போது இடமாற்றங்கள் அந்த அரசு எல்லையைத் தாண்டிச் செல்வதில்லை. இந்த உள் இடப்பெயர்ச்சிகளில் அந்தந்த அரசின் குடிமக்கள் மட்டுமே பங்கேற்கின்றனர், இவர்கள் தம் குடியுரிமையை மாற்றுவதில்லை. உள் இடப்பெயர்ச்சிகள் மொத்தத்தில் நாட்டின் மக்கள் எண்ணிக்கையைப் பாதிக்காத அதே சமயம் இதன் பிரதேசப் பகிர்வின் மீது தாக்கம் செலுத்துகின்றன.

மக்களின் நிலைமாறு இடப்பெயர்ச்சியில் மூன்று துணைப் பிரிவுகள் உண்டு: **நகர மக்களின் பிரதேச இடமாற்றம், கிராமப்புற மக்களின் பிரதேச இடமாற்றம், நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையே மக்களின் பரிமாற்றம்.** இதைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

| | |
|---|---|
| நகரம்→நகரம் | நகரம்→கிராமம் |
| கிராமம்→கிராமம் | கிராமம்→நகரம் |

1920—1930ஆம் ஆண்டுகளில் நாட்டைத் தொழில்துறைமயமாக்கியது, விவசாயத் துறையைக் கூட்டுறவுமயமாக்கியது, கலாச்சாரப் புரட்சியை நிறைவேற்றியது ஆகியன சோவியத் யூனியனில் மக்களின் இடப்பெயர்ச்சிப் போக்குகளைப் பெருமளவு அதிகரிக்கச் செய்தன. கிழக்கத்திய பிரதேசங்களின் இயற்கைச் செல்வங்களின் மீட்பு உழைப்பாளிகளின் பெருமளவு குடிபெயர்ச்சிகளை ஏற்படுத்தியது. லட்சக் கணக்கான மக்கள் குடிபெயர்ந்து வந்து உற்சாகத்தோடு புது கட்டுமானங்களில் உழைத்தனர், மக்னித்தகோர்ஸ்க், அமூர் நதிக்கரையிலுள்ள கம்சமோல்ஸ்க், நோவகுஸ்னேத்ஸ்க், காரகந்தா போன்ற பல புதிய நகரங்களை உருவாக்

கினர். 1926 முதல் 1939 வரை சுமார் 50 லட்சம் பேர்கள் உரால், சைபீரியா, தொலை கிழக்கு, கஸாக்ஸ்தான் மற்றும் மத்திய ஆசியாவிற்குக் குடியேறினர்கள். சுமார் 20 லட்சம் பேர்கள் உராலில் குடியேறினர்கள், 7,00,000 பேர்கள் வரை குஸ்னேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசத்திலும் 8,00,000 பேர்கள் தொலை கிழக்கிலும் குடியேறினர்கள். தொலை கிழக்கில் மக்களின் எண்ணிக்கை 1940 வாக்கில் 31,55,000 பேர்களை எட்டியது.

மாபெரும் தேசபக்த யுத்தம் மக்களின் குடியேற்றத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்த யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் ஆக்கிரமிப்பிற்குள்ளாகும் ஆபத்திலிருந்த உக்ரேனியா, பைலோருஷ்யா, பால்டிக் குடியரசுகள் மற்றும் மத்திய ருஷ்யாவின் மேற்குப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து சுமார் 25 மில்லியன் பேர்கள் குடிபெயர்ச்சிக்குள்ளாக்கப் பட்டனர். உரால், வோல்கா ஆற்றுக்கு அப்பால் உள்ள பகுதி, மேற்கு சைபீரியா, மத்திய ஆசியா ஆகிய இடங்களுக்கு மக்கள் அனுப்பப்பட்டனர். 1939 மற்றும் 1959ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மக்கள்தொகை கணக்கெடுப்புகளுக்கு இடையிலான கட்டத்தில் சோவியத் மக்களின் இயக்கப் போக்கை வைத்து இந்த இடமாற்றம் அளவில் எவ்வளவு பெரியது என்று முடிவு செய்யலாம். இந்த ஆண்டுகளில் நாடு முழுவதிலும் மக்கள் எண்ணிக்கை 9.5 சதவிகிதம் அதிகரித்தது என்றுல் உராலின் மக்கள் எண்ணிக்கை 28.9 சதவிகிதமும் சைபீரியா மற்றும் தொலை கிழக்கின் மக்கள் எண்ணிக்கை 35.4 சதவிகிதமும் அதிகரித்தது; கஸாக்ஸ்தானில் இது 52.8 சதவிகிதமாயும் மத்திய ஆசியக் குடியரசுகளில் 29.8 சதவிகிதமாயும் இருந்தது. அதே சமயம் சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியிலிருந்த மக்களின் எண்ணிக்கை (உராலையும் டிரான்ஸ் காக்கஸஸையும் தவிர்த்து) கிட்டத்தட்ட மாற்றமடையவில்லை. 1939—1959ஆம் ஆண்டுகளில் நாட்டின் ஐரோப்பியப் பகுதியிலிருந்து மொத்தத்தில் 8—10 மில்லியன் பேர்கள் ஆசியப் பகுதிக்கு (உரால் உட்பட) குடியேறினர் என்று குத்துமதிப்பான கணக்கீடுகள் காட்டுகின்றன. உழைப்பாளிகள் கிழக்கத்திய பிரதேசங்களுக்கு குடியேறியதன் காரணமாய் நாட்டு மக்கள்தொகையில் உரால், சைபீரியா, தொலை கிழக்கின் பங்கு இடையருது அதிகரித்து வந்தது: 1939இல் இது 23.1 சதவிகிதமாயும்

1959இல் 28.6 சதவிகிதமாயும் 1970இல் 30.3 சதவிகிதமாயும் இருந்தது.

இடப்பெயர்ச்சியானது நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலும் பழைய மற்றும் புதிய பிரதேசங்களுக்கும் இடையிலும் மக்களின் மறு குடியமர்விற்கு இட்டுச் செல்கிறது, பல்வேறு வகையான குடியமர்வு வகைகளை நிர்ணயிக்கிறது. நாட்டின் ஒரு சில பிரதேசங்களில இருந்து மற்ற பிரதேசங்களுக்குக் குடியேறுவதோடு கூட கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் இடம்பெயர்ந்து வருவதற்கும் (இது இன்றும் தொடருகிறது) பெரும் முக்கியத்துவம் உண்டு. சோவியத் நாட்டில் நகர மக்களின் பங்கு இடையறுது அதிகரித்து வருகிறது. யுத்தத்திற்கு முன் 1939இல் எடுக்கப்பட்ட கணக்கீட்டின் படி இது 33 சதவிகிதமாக இருந்ததெனில் சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி (1970) இது 56 சதவிகிதமாக இருந்தது. 1980இல் இக்குறியீடு 62 சதவிகிதமாயிருந்தது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் கிராம மக்கள் தொடர்ந்து நதரவாசிகளாகி வருகின்றனர். 60ஆம் ஆண்டுகளில் லட்சம் மக்கள் தொகையுடைய புதிய நகரங்கள் உருவாயின. பிராத்ஸ்க், வோல்ஷிஸ்கி, நஹோத்கா, தல்யாத்தி போன்றவை இவற்றிலடங்கும். ஒரு சில நகரங்களின் மக்கள்தொகை 10 லட்சத்தை விஞ்சியது. இன்று சோவியத் யூனியனில் 10 லட்சத்திற்கு அதிகமான மக்களைக் கொண்ட 20 நகரங்கள் உள்ளன. இந்நகரங்களில் உள்ளவர்களில் கணிசமான பகுதியினர் முந்தைய கிராமவாசிகளாவர். 1959ஆம் ஆண்டின் கணக்கெடுப்பிற்கும் 1970ஆம் ஆண்டின் கணக்கெடுப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் 164 லட்சம் கிராமவாசிகள் நகரங்களுக்கு வந்துள்ளனர். தற்போது மக்களின் பிரதேச ரீதியான இடமாற்றத் தன்மை அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் சோவியத் நாட்டில் கணிசமான அளவு குடிபெயர்ச்சிகள் நடைபெறுகின்றன.

சோவியத் யூனியனில் சமூக-பொருளாதார நிலை மாறியுள்ளதானது உள் இடப்பெயர்ச்சிகளை ஒழுங்கமைப்பதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்துள்ளது. சோஷலிச அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ குடிபெயர்ச்சிகளின் போக்குகளின் மீது தாக்கம் செலுத்துகிறது. நாட்டின் பிரதேசங்களுக்கு இடையே அடிப்படை மூலதனங்களைப் பகிர்ந்

தளிப்பதும் வேலையாட்களுக்குத் தேவையான குறிப்பிட்ட சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதும் திட்ட அளவில் பிரதான இடப்பெயர்ச்சிப் போக்குகளை நிர்ணயிக்கின்றன. உள் இடப் பெயர்ச்சிகளில் சுயமான குடிபெயர்ச்சிகள் பெரும் பங்கு வகித்தாலும் இவை தம் அடிப்படையில் அரசின் திட்ட பூர்வமான தாக்கத்திற்கு உட்படுபவையாகும்.

உள் இடப்பெயர்ச்சியின் வடிவங்கள் மிகப் பல்வேறு னவை. இவற்றில் சில அரசினுல் நேரடியாகத் திட்டமிடப் படுகின்றன, இதற்காக குறிப்பிட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. ஒரு சில குடிபெயர்ச்சிகள் தனிப்பட்ட தொழில் நிறுவனங் களுடன் தொடர்புடையவை, இவை வேலையாட்களைக் கவரு வதற்காக தனியாகச் செலவிடுகின்றன. ஒரு சில இடப் பெயர்ச்சிகள் மக்களால் சுயமாக நடத்தப்படுகின்றன. கடைசியாகக் கூறிய வடிவம் பல சமயங்களில் தேசியப் பொருளாதாரத்திற்கு விவேகமானதல்ல, இது அதே சமயம், உற்பத்திச் சக்திகளின் பங்கீட்டிலும் மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலையில் நிலவும் பிரதேசப் பாகுபாட்டிலும் உள்ள குறைபாடுகளைக் காட்டுகிறது.

உள் இடப்பெயர்ச்சி மக்களின் பால், வயது ரீதியான உள்ளடக்கத்தின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகிறது. இடப்பெயர்ச்சியின் விளைவாய் நீண்ட நாட்களாக மக்கள் வாழ்ந்து வரும் சில பிரதேசங்களில், குறிப்பாக கிராமப் புறத்தில் மக்களின் பால், வயது ரீதியான கட்டமைப்பு கணிசமாக மாற்றமடைகிறது: முதிய வயது அடைந்தோரின் பங்கு அதிகரிக்கிறது, குடியேற்றம் நடைபெறும் இடங்களை விட குறைவான வேகத்தில் ஆண், பெண் விகிதம் சமமடை கிறது. மாருக, புதிதாக உருவான பிரதேசங்களுக்கும் நகரங் களுக்கும் பெண்களை விட ஆண்களும் இள வயதினரும் அதிகமாக வருவதால் குடிமக்களின் சராசரி வயது குறை கிறது, ஆண்களின் பங்கு (பல சமயங்களில் குடும்பங்கள் இல்லாதவர்கள்) அதிகரிக்கிறது.

மக்களின் இடப்பெயர்ச்சி மனித இன நிகழ்ச்சிப் போக்கு களின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகிறது. மக்களின் இடமாற்றத்தின் விளைவாய், எண்ணிக்கை ரீதியில் அதிக மாக உள்ள ஒரு மக்களினத்தினரின் மத்தியில் வேறு மக்களி னத்தவர் கலக்கின்றனர். இதனுல் மொழி, வாழ்க்கைப் பழக் கங்கள், பொருளாயத கலாச்சாரம் முதலியவற்றில் பல்

வேறு விதமான மனிதவின பரஸ்பரத் தாக்கங்கள் ஏற்படு கின்றன. உதாரணமாக, இடப்பெயர்ச்சியின் விளைவாய் எல்லா யூனியன் மற்றும் சுயாட்சிக் குடியரசுகளிலும் ருஷ்யர் கள் குடியேறினர், ருஷ்யர்கள் பெரும்பாலும் வசித்த இடங் களில் மற்ற எல்லா தேசிய இனத்தவரும் குடியேறினர். அளவு ரீதியாகப் பார்த்தால் முதலில் குறிப்பிடப்பட்ட போக்கு இரண்டாவதை விட அதிகம். 1926ஆம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பு விவரங்களை 1959, 1970ஆம் ஆண்டு களின் விவரங்கலோடு ஒப்பிட்டால் மிகப் பெரும்பாலான யூனியன் மற்றும் சுயாட்சிக் குடியரசுகளிலும் பிராந்தியங் களிலும் மாவட்டங்களிலும் மனிதவின ஓரினத் தன்மையின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது தெரிய வரும். இது குடி யேறிய மக்கள், அங்கேயே நிரந்தரமாக வசித்து வரும் மக் கள் ஆகியோரின் மனிதவின வளர்ச்சிக்கான புதிய சூழ்நிலை களைத் தோற்றுவித்தது.

இடப்பெயர்ச்சிக்கும் குடிமக்களின் தேசிய இன உள்ளடக்கத்திற்கும் இடையே எதிர்மறையான தொடர்பும் உண்டு. மனிதவின நிகழ்ச்சிப் போக்குகள் இடப்பெயர்ச்சி யின் வேகத்தின் மீது தாக்கம் செலுத்துகின்றன. இவை குடிபெயர்ச்சிகளைத் தடுத்து நிறுத்தக் கூடும், அல்லது குடி பெயர்ச்சிகளுக்கு உதவக் கூடும். அந்தந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டின் பல பிரதேசங்களுக்குக் குடிபெய ரும் வேகமானது அவர்கள் முதன்முதலில் வசித்த இடத்தில் வாழ்ந்த இந்தத் தேசிய இனத்தவரின் இடப்பெயர்ச்சித் தன்மையை அதிகரிக்க உதவுகிறது. வெவ்வேறு தேசிய இனத்தவரின் இடம்பெயரும் தன்மை வெவ்வேறானது. ருஷ் யர்கள், உக்ரேனியர்கள், எஸ்தோனியர்கள், லிதுவேனியர் கள், லாத்வியர்கள் இடப்பெயர்ச்சிப் பரிமாற்றத்தில் மிகத் தீவிரமாகப் பங்கேற்பவர்கள், அதே சமயத்தில் டிரான்ஸ் காக்கஸஸ் மற்றும் மத்திய ஆசிய மக்களினங்கள் மிகக் குறை வாகத்தான் இடம் பெயருவார்கள்.

உள் இடப்பெயர்ச்சிகளின் முக்கியத்துவம் இந்த விளைவு களுடன் நின்றுவிடவில்லை. குடிபெயர்ச்சிகள் மக்களுடைய வாழ்க்கையின் இன்னும் பல அம்சங்களின் மீது (தொழில்-தேர்ச்சி ரீதியான உள்ளடக்கம், ஊழியர்கள் நிலைத்திருப் பது, இவர்கள் அடிக்கடி இடம் மாறுவது போன்றவை) கணிச மான தாக்கம் செலுத்துகின்றன.

## அத்தியாயம் பதினூன்கு

# சோவியத் யூனியனில் மக்களின் குடியேற்றப் பிரச்சினைகள்

மிகப் பரவலான, சமூகவியல் பொருளில் மக்களின் குடியேற்றம் என்பது சமுதாயத்தின் இட ரீதியான ஒழுங்கமைப்பு வடிவமாகும். பொருளாதார ரீதியான பொருளில் இது உற்பத்திச் சக்திகளின் பிரதேச ரீதியான ஒழுங்கமைப்பு வடிவமாகும். பூகோள மற்றும் ஜனத்தொகை ரீதியில் இது மக்கள் வாழும் ஒரு பிரதேசத்தில் இவர்களின் பங்கீட்டையும் மறு பங்கீட்டையும் குறிக்கிறது. குடியேற்றம் எந்த அமைப்பில் (சமுதாயம், உற்பத்திச் சக்திகள், மக்கள்தொகை) ஆராயப்படுகிறது என்பதைப் பொறுத்துதான் இதை ஆராயும் வாய்ப்புகளும் போக்குகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. மக்களின் குடியேற்றம் பற்றிய விசேஷ ஆராய்ச்சியானது முதலில், எந்தப் பொதுவான மாடல்களின்படி ஒரு பிரதேசத்தில் மக்களின் பங்கீடும் மறு பங்கீடும் நடைபெறுகிறதோ அவற்றை உருவாக்கி, விளக்கமளித்து, கட்டமைப்பதையும் இப்புலப்பாட்டிற்கு உரித்தான நியதிகளை வெளிப்படுத்துவதையும் முன்னனுமானிக்கிறது.

மக்களின் குடியேற்றம் உற்பத்தி முறைக்கு ஏற்றதாக இருப்பதில்தான் மக்களினுடைய குடியேற்றத்தின் அடிப்படை விதி அடங்கியுள்ளது. சமுதாயத்தினுடைய வரலாற்று வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகள், உற்பத்தியையும் மக்களையும் பகிர்ந்தளிப்பதில் அதிகமாகவோ குறைவாகவோ ஒரே சீரான தன்மையை ஏற்படுத்தும், இவர்களைக் குவிக்கும் அல்லது கலைந்து போகச் செய்யும். பல சமயங்களில் எதிர்மறையான நிகழ்ச்சிப் போக்குகள் ஒரே சமயத்தில் நடக்கக் கூடும். உதாரணமாக, புதிதாக மீட்கப்படும் பிரதேசத்தில் குடியேற்ற நிகழ்ச்சிப் போக்கில் மக்கள் அப்பிரதேசத்தில் அதிக அளவு ஒரே சீராக பிரிந்து வாழும் போக்கு வெளிப்படும். ''குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரே சீராகப் பிரிந்து வாழ மக்கள்

கொண்டுள்ள நாட்டம்''* பொது வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் வெளிப்பாடாக வி. இ. லெனினல் குறிப்பிடப் பட்டது. அதே சமயம் தொழில்துறைமயப்படுத்தல், நகர மயமாக்கல் ஆகிய நவீன நிகழ்ச்சிப் போக்குகள் சாதாரண மாக உற்பத்தியையும் மக்களையும் குவிப்பதற்கு இட்டுச் செல்கின்றன, இதனல் பல நேரங்களில் உற்பத்திச் சக்திகளின் முக்கிய அங்கங்களைப் பகிர்ந்தளிப்பதில் சீரின்மை ஏற்படு கிறது. இந்தச் சீரின்மைக்குத் திட்டவட்டமான இயற்கை-பூகோளச் சூழ்நிலைகளும் கணிசமான அளவு காரணமாகும்.

உற்பத்திச் சக்திகளின் பிரதான அங்கங்கள் குவியும் நிகழ்ச்சிப் போக்கு நம் காலத்தின் குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். ஆம், உண்மையில் மொத்தத்தில் குடியிருப்புத் தொடர்கள் அளவில் பெரிதாகி வருகின்றன, பெரும் நகரங்களுக்கு ஆதரவாக மக்கள் மறு பங்கீடு செய்யப்படு கின்றனர். இதனலேயே மக்களின் குடியேற்றத்தில் பெரும் சீரின்மை ஏற்பட்டுள்ளதாகப் பொருளாகாது. சோஷலிசத் தில் தொழில்துறை உற்பத்தியையும் மக்களையும் நாடு முழு வதும் அதிக சீரிசைவோடு பகிர்ந்தளிக்கும் போக்கு செயல் பட ஆரம்பிக்கிறது.

தொழில்துறை உற்பத்தியையும் மக்களையும் ''அதிகச் சீராகப் பகிர்ந்தளித்தல்'' எனும் கருத்தை உற்பத்திச் சக்திகளின் ''சீரான வளர்ச்சி'' எனும் கருத்தோடு கலக்கக் கூடாது. தனிப்பட்ட பொருளாதாரப் பிரதேசங்களின் வெவ் வேமுன வளர்ச்சி வேகங்களின் மூலம், ஒரு சில பிரதேசங் களிலிருந்து மற்ற பிரதேசங்களுக்கு உழைப்புச் சக்தி செல்வ தன் மூலம்தான் நாடு தழுவிய அளவில் தொழில்துறையும் மக்களும் அதிகச் சீராக பகிர்ந்தளிக்கப்படுகின்றனர் என் பதில்தான் சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளினுடைய வளர்ச்சி நியதிகளில் ஒன்று அடங்கியுள்ளது. உற்பத்திச் சக்திகளினுடைய திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சியின் அவசியம் ''சீரான வளர்ச்சி'' எனும் கருத்துடன் பொருந்தி வரவில்லை. உற்பத்தித் துறைகள், நிறுவனங்களின் எண் ணிக்கை (இவற்றை ஏற்படுத்துவது போக்குவரத்தை ஒப் பீட்டளவில் குறைவாகவே சார்ந்துள்ளது) அதிகரித்து வரும்

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 3, பக் கங்கள் 233—234 (ருஷ்யப் பதிப்பு).

சூழ்நிலைகளில் உழைப்புச் சக்தி என்ற காரணி பல பிரதேசங்களில் (குறிப்பாக, மூலப்பொருள் இருப்பிடங்களை நேரடியாகச் சாராத, இவற்றிலிருந்து தள்ளியிருக்கும் உற்பத்திகளின் விஷயத்தில்) முக்கியமானதாக ஆகிறது. எனவேதான் பல சமயங்களில், தொழில்துறை உற்பத்தியையும் மக்களையும் குடியமர்த்துவதில் மக்களின் வாழ்க்கைக்கு, உழைப்புச் சக்தியின் புனருற்பத்திக்குத் தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்துவது தீர்மானகரமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

சோஷலிசச் சமுதாயத்தில் குடியேற்றமானது சமூக உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் பரப்பீட்டின் விதிகளைப் போன்றே மக்கள்தொகையின் விசேஷ விதிகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது. சில சமயங்களில் ''சோஷலிச நகரமயமாக்கல் விதியைப்'' பற்றி எழுதுகின்றனர். ஆனால் இதன் முதலாளித்துவ வகை மற்றும் வளர்முக நாடுகளுக்கு உரித்தான வகைக்கு மாறாக சோஷலிசத்தின் கீழுள்ள நகரமயமாக்கலின் விசேஷ வகையைப் பற்றிச் சொல்லுவதுதான் சரியானதாக இருக்கும். விவசாயத் துறையில் உள்ள மக்களைக் கொண்டு தொழில்துறை மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு பற்றிய விதி, மக்களின் இடமாற்றம் பற்றிய விதி (இவை மார்க்சிய-லெனினிய ஆசான்களால் கண்டுபிடிக்கப்பட்டன) ஆகியவற்றோடு கூட சோஷலிசத்தில் நகரமயமாக்கல் வகைக்கு, நாட்டின் பரப்பில் பிரதான (குவிக்கப்பட்ட) குடியேற்ற வடிவங்கள் அதிகச் சீராக பரவியுள்ளதை போன்ற பொருளாதார-ஜனத்தொகை நியதிகளும் நகரமயமாக்கலின் முன்னேக்கிய போக்கிற்கும் தொழில்துறை வளர்ச்சிப் போக்கிற்கும் இடையிலான விகிதாச்சாரமும் உண்டு.

முதலாளித்துவத்திற்கு மட்டுமே உரித்தான ஒரு சில நியதிகளுக்கு மாறாக தொழில்துறை மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் மக்களின் இடமாற்றத்தின் நியதிகள் (இவை தம் வரலாற்று வளர்ச்சியில் முதலாளித்துவத்தோடு தொடர்பு கொண்டிருந்தாலும்) சோஷலிசத்திலும் செயல்படுகின்றன. ருஷ்யாவில் மக்களை விவசாயத் துறையிலிருந்து பிரிக்கும் நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றியும் பழைய வாழ்க்கை முறைகளோடு ஒப்பிடுகையில் இவற்றிற்கு ஆழ்ந்த முற்போக்குத் தன்மை உண்டு என்பது குறித்தும்

கூறிய வி. இ. லெனின் ''முதலாளித்துவம் தோற்றுவிக்கும் மக்களுடைய இடமாற்றத்தின் முற்போக்குத் தன்மையை''* சுட்டிக் காட்டினர்.

தொழில்துறையில் முதலாளித்துவ வளர்ச்சியின் மூன்று கட்டங்களைப் பற்றிய போதனையில் வி. இ. லெனின் வகுத்தளித்த கருத்து நிலை விஞ்ஞான இலக்கியத்தில் மக்களின் இடமாற்றத் தன்மை பற்றிய விதி என்றழைக்கப்படுகிறது: ''தொழில்துறை வளர்ச்சியின் முதல் இரு கட்டங்களில் மக்கள் நிலையாக வாழ்ந்திருந்தனர்... மாறாக, பெருவீத இயந்திரத் தொழில்துறை மக்களின் இடமாற்றத் தன்மையை அவசியமாக்குகிறது; தனிப்பட்ட பிரதேசங்களுக்கு இடையிலான வர்த்தகத் தொடர்புகள் பிரம்மாண்டமாக விரிவடைகின்றன; இருப்புப் பாதைகள் இடமாற்றத்தை எளிதாக்குகின்றன. பொதுவாகவும் மொத்தத்திலும் தொழிலாளர்களுக்கான தேவை அதிகரிக்கிறது, மிகத் தேவையான சகாப்தங்களில் இது கூடுகிறது, நெருக்கடிக் காலங்களில் இது வீழ்ச்சியடைகிறது, இதனால் ஒரு நிறுவனத்திலிருந்து இன்னொரு நிறுவனத்திற்கு, நாட்டின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குத் தொழிலாளர்கள் மாறிச் செல்லுவது அவசியமாகிறது.''** இடப்பெயர்ச்சி அவசியமானதாக மாறி வருவதை (இது பொருளாதார வளர்ச்சியால் கட்டளையிடப்படுகிறது) மக்களின் இடமாற்றத் தன்மை பற்றிய விதி தெட்டத்தெளிவாகக் காட்டுகிறது.

மக்களின் குடியேற்றத்தில் ஏற்படும் பிரதான மாற்றங்களைப் பற்றிய பொருளாதார ரீதியான பகுப்பாய்வு, பெரும் இயந்திரத் தொழில்துறை வளர்ச்சியடையும் போது மக்கள் விவசாயத் துறையிலிருந்து பிரிக்கப்படுவதைப் பற்றிய தத்துவார்த்தக் கருத்து நிலைகளையும் ''விவசாயத் துறையிலுள்ள மக்களைக் கொண்டு தொழில்துறை மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்''*** விதியின் தத்துவார்த்தக் கருத்து நிலைகளையும் ஊர்ஜிதப்படுத்துகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கின் மிகத் தெட்டத்தெளிவான வெளிப்பாடு நகரங்களின் வளர்ச்சியாகும். அதே நேரத்தில் மிகப் பெரும் தொழில்துறை

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 3, பக்கம் 550 (ருஷ்யப் பதிப்பு).

** அதே நூல், பக்கம் 549.

*** அதே நூல், பக்கம் 558.

மற்றும் வர்த்தக மையங்களில் நகர மக்கள் குவியும் நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுகிறது. சோவியத் யூனியனில் சோஷலிசம் வெற்றியடைந்த பின் மக்கள் பயிர்த்தொழிலி லிருந்து விலகுவதும் தொழில்துறை மக்களின், குறிப்பாக நகர மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் குறிப்பாக இன்னமும் வலுப்பட்டன. 1913இல் நகர மக்களின் பங்கு நாட்டு மக்கள்தொகையில் 18 சதவிகிதமாக இருந்ததெனில் 1959இல் இது 48 சதவிகிதமாயும் 1970இல் 56 சதவிகித மாயும் 1979இல் 62 சதவிகிதத்திற்குக் கூடுதலானதாயும் இருந்தது.

சோஷலிச உற்பத்திச் சக்திகள் மற்றும் சமூக உறவு களின் வளர்ச்சி கம்யூனிச குடியேற்ற முறை உருவாவதற்கு இட்டுச் செல்கிறது. இதன் முக்கிய அம்சங்கள், நகரத்திற் கும் கிராமத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடு அகற்றப் படுவதும் ஒரே குடியேற்ற அமைப்பு உருவாவதுமாகும். இதன் தொடர்பில் ஒரு தனியான ''சோஷலிச குடியேற்ற வகையைப்'' பற்றிக் கூறுவது சரியாகாது. ஏற்கெனவே கூறப்பட்டபடி குடியேற்றமானது உற்பத்தி முறைக்குப் பொருந்தி வருவதில்தான் குடியேற்றத்தின் பிரதான விதி அடங்கியுள்ளது. ஆனால் சோஷலிசக் கட்டத்தில் குடியேற்ற வளர்ச்சியானது சோஷலிச உற்பத்தி அடித்தளத்தின் வளர்ச்சியிலிருந்து பின்தங்கியிருக்கலாம், எனவேதான் கடந்த காலத்திலிருந்து எஞ்சி விட்ட குடியேற்ற அம்சங்கள் அப் படியே உள்ளன. சோஷலிசம் நகரத்திற்கும் கிராமத்திற் கும் இடையிலுள்ள எதிர்மறையை ஒழித்துக் கட்டியுள்ளது. இன்று இவற்றின் இடையேயுள்ள கணிசமான சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார, வீட்டு வசதி மாற்றங்களை அகற்றும் கடமை முன்வைக்கப்படுகிறது. சொத்துடைமையின் ஒரே பொது வடிவத்தை ஏற்படுத்துவது, நகர மற்றும் கிராம உழைப்பாளிகளின் சமூக ஒரினத் தன்மையையும் முழு சமத்துவத்தையும் ஏற்படுத்துவது என்பதுதான் இவற் றின் இடையேயுள்ள கணிசமான மாற்றங்களை அகற்றுவதற் கான சமூக-பொருளாதார முன்தேவைகளின் சாரமாகும். நகர வாழ்க்கை முறையைக் கிராமத்தில் பரப்புவது, உழைப்புப் பிரிவினை வடிவங்களை மாற்றியமைப்பது, ஒரே குடியேற்ற அமைப்பை உருவாக்குவது போன்ற பரஸ்பரம் தொடர்புடைய நிகழ்ச்சிப் போக்குகள் இதே திசையில்

நேரடியாக தாக்கம் செலுத்துகின்றன. வளர்ச்சியடைந்த சோஷலிசச் சமுதாயத்தில் மக்களின் குடியேற்றம், நகரங்களின் வளர்ச்சி ஆகியவை சம்பந்தமான அடிப்படைப் பிரச்சினைகளின் தீர்வு இந்த நிகழ்ச்சிப் போக்குகளுடன் தொடர்புடையது.

நகர வாழ்க்கை முறையைப் பரவச் செய்வதென்பது நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அகற்றும் நிகழ்ச்சிப் போக்கின் மிக முக்கியமான ஒரு அம்சமாகும்; மிகத் துல்லியமான வரையறுப்பில், நகரத்திலும் கிராமத்திலும் ஒரே விதமான வாழ்க்கை முறையை உருவாக்குவதைப் பற்றி பேசப்பட வேண்டும். இந்தத் திசையில் கிராமத்தின் வளர்ச்சி நகர வாழ்க்கை முறையின் செல்வாக்கில் மட்டும் நடைபெறவில்லை, கிராமத்தின் சொந்த பொருளாயத அடித்தளத்தை மேம்படுத்துவது, கிராம மக்களின் கலாச்சார மட்டத்தை உயர்த்துவது ஆகியவற்றிற்கும் பெரும் முக்கியத்துவம் உண்டு. ஒரே மாதிரியான வாழ்க்கை முறை உருவாகும் நிகழ்ச்சிப் போக்கு இரு இணையான போக்குகளில் நடைபெறுகிறது: பெரிய நகரத்திற்கும் சிறிய நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அகற்றுதல், மையத்திற்கும் எல்லைப் புறத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அகற்றுதல்.

சமூக-பிரதேச ரீதியான உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சியும் சற்றும் குறையா முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் விளைவாய் நகரமும் கிராமமும் ஒன்றிணைவதற்கு நேரடியாக இட்டுச் செல்லும் வடிவங்களை இப்போதே காணலாம். வளர்ச்சியடைந்த சோஷலிசச் சூழ்நிலைகளில் வளரும் உற்பத்திச் சக்திகளுடைய பிரதேச ரீதியான ஒழுங்கமைப்பின் இரண்டு எதிர்கால வடிவங்களைப் பற்றி இங்கே பேசப்படுகிறது. இது முதலாவதாக, விஞ்ஞான-தொழில்துறை மற்றும் விஞ்ஞான-கல்வி-தொழில்துறை இணையங்கள் (கூட்டமைப்புகள்) ஆகும்; தொழில்துறை மையங்கள் இத்தகைய இணையங்களாகத் திகழ்கின்றன, இவற்றில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களும் உயர் கல்விக் கூடங்களும் குவிக்கப்படுகின்றன. இரண்டாவதாக, இது விவசாய-தொழில்துறை இணையங்களாகும். இவற்றில் விவசாய மூலப்பொருளை விளைவிக்கும், வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லும், பதப்படுத்தும், செய்பொருளை விற்பனை செய்யும் விசேஷ நிறுவனங்

கள் அடங்கும். இந்த இணையங்கள் விவசாய உற்பத்தியின் பருவக்காலத் தன்மையை அகற்றுகின்றன, பல்வேறு தொழில்களைப் பரவலாக இணைப்பதை ஊக்குவிக்கின்றன, துணை உற்பத்திகள், தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஸ்தல பொருட்கள் அளிக்கப்பட்ட ஸ்தல சந்தைகளை உருவாக்கத் தேவையான முன்தேவைகளை ஏற்படுத்துகின்றன.

சோவியத் யூனியனில் நாடு பூராவும் எல்லா மக்களுக்கும் சமமான வாழ்க்கைச் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் கடமை முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரே குடியேற்ற முறை எனும் விஞ்ஞானக் கருத்தமைப்பின் உட்பொருள் இக்கடமையைத் தீர்ப்பதில் அடங்கியுள்ளது. ஒரே குடியேற்ற முறை என்பது குடியேற்றத்தின் கட்டமைவு-பிரதேச மாடலாகும். இதன்படி கிராமத்தை நகரத்தின் மட்டத்திற்கு இழுப்பதன் அடிப்படையில் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலுள்ள கோட்பாட்டு ரீதியான, கணிசமான மாறுபாடுகள் (உழைப்பின் உற்பத்தித் திறனின் மட்டம், வாழ்க்கைத் தரம், சேவை வசதிகள், வாழ்க்கைச் சூழ்நிலைகள் ஆகியவற்றில் உள்ள மாறுபாடுகள்) எதிர்காலத்தில் அகற்றப்பட வேண்டும்; நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சி மட்டத்தைச் சமப்படுத்துவதன் அடிப்படையில் இவற்றின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் (பிரதேச வரையளவுகளுக்கு ஏற்ப) சமப்படுத்தப்பட வேண்டும்; இடப்பெயர்ச்சிப் போக்குகள் உகந்தவையாக்கப்பட வேண்டும்; இயற்கையை விஞ்ஞான ரீதியாக, விவேகமாகப் பயன்படுத்துவதும் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதும் அமல்படுத்தப்பட வேண்டும்.

## அத்தியாயம் பதினைந்து

# மக்கள்தொகையைப் பற்றிய ஞான முறை. மக்கள்தொகை ஆய்வின் முறையியல் பிரச்சினைகள்

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவம் ஆகிய பொது முறையியல் விஞ்ஞானங்கள்தான் மக்கள்தொகையில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிப் போக்குகளின் நியதிகளை அறிவதன் அடிப்படையாகத் திகழ்கின்றன. அதே பொழுது சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகள் பல்வேறு விதமானவை. இவற்றை நிர்ணயிக்கும் தொடர்புகளும் உறவுகளும் அசாதாரணமான அளவிற்கு விரிந்து பரந்தவை. மக்கள்தொகை வளர்ச்சிப் போக்குகள் மிகப் பல்வேறுன சமூக நிகழ்ச்சிப் போக்குகளின் சிக்கலான வலையில் பின்னிப் பிணைந்துள்ளன, எனவே சமூக அமைப்பு முழுவதற்கும் உரித்தான முழுமையான குணங்களையும் தன்மைகளையும் தம்முள் அடக்கி நிற்கின்றன. சமூக நிகழ்ச்சிப் போக்குகள் மற்றும் உறவுகளின் பன்முக வலையில் இவற்றைச் சேர்ப்பதானது இவற்றிற்குப் பல்வேறு விளக்கங்களை (பொருளாதார, சமூகவியல், சமூக-மனவியல், மனவியல் மற்றும் உயிரியல் விளக்கங்களைத்) தர வழிகோலுகிறது. மக்கள்தொகை வளர்ச்சியில் உள்ள பூகோள, மானுடவியல், சட்ட, மற்ற அம்சங்களைச் சுட்டிக் காட்டி இப்பட்டியலைத் தொடரலாம்.

சமூக-ஜனத்தொகைப் புலப்பாடுகளின், இவற்றிற்கு உரித்தான எல்லா நியதிகளின் பரஸ்பர சார்புநிலை முழுமையான மற்றும் தொகுப்பு முறையிலான ஆராய்ச்சியை அவசியமாக்குகிறது. பரவலான சமூக விஞ்ஞானங்கள் மற்றும் சில இயற்கை விஞ்ஞானங்களின் ஆராய்ச்சிப் பொருட்களாகிய நிகழ்ச்சிப் போக்குகள், உறவுள், புலப்பாடுகள் ஆகியவற்றின் சிக்கலான தொடர்போடு மக்கள்தொகை வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்குகளை இணைக்காவிடில் இவற்றைப் புரிந்து கொள்ளவோ, இவற்றின் நியதிகளை வெளிப்படுத்தவோ முடியாது. மக்கள்தொகை வளர்ச்சிப் போக்கு

களுக்கு உரித்தான சகலவிதத் தொடர்புகளையும் சார்புநிலைகளையும் ஒட்டுமொத்தமாகக் கவரும் வாய்ப்பு கூட்டான ஆராய்ச்சிகளின் போதுதான் தோன்றுகிறது. இவ்வாறாக, மக்கள்தொகைப் பிரச்சினைகளை ஆராயும் சர்வாம்ச அணுகுமுறை, மக்கள்தொகையைப் பற்றி பல்வேறு விஞ்ஞானங்களில் பெறப்படும் ஞானங்களை ஒன்றிணைப்பதன் அவசியத்திலிருந்து தோன்றும் தர்க்க ரீதியான விளைவாகும்.

மக்கள்தொகை வளர்ச்சி நிகழ்ச்சிப் போக்குகளில் எந்த ஒரு போக்கும் (இதன் புனருற்பத்தி, இடப்பெயர்ச்சி போன்றவை) மக்களுடைய முழுமையான வாழ்க்கை நடவடிக்கையின் ஒரு பகுதி மட்டுமே. மக்கள், வர்க்கம், சமூகப் பிரிவு, சமூக-தொழில் குழு, குடும்பம் அல்லது தனிநபரின் ஒரே முழுமையான வாழ்க்கை நடவடிக்கையிலிருந்து இதைப் பிரிப்பது பெரிதும் நிபந்தனைக்குட்பட்டதே. மக்களுடைய வாழ்க்கை நடவடிக்கையின் மற்ற எல்லா வகைகளுடனும் தொடர்புகள் அறுபட்டால் இந்த நிகழ்ச்சிப் போக்குகள் தம் சமூக சாரத்தையும் முழுமையான சமூக அமைப்பில் தாம் நிறைவேற்றிய முக்கியப் பணிகளையும் இழக்கின்றன.

எனவே, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் உட்பட எந்த ஒரு தனிப்பட்ட விஞ்ஞானத்தாலும் மக்கள்தொகையில் நடைபெறும் புலப்பாடுகளை முழுமையாக விளக்க முடியாது, அதுவும் வரலாற்றுப் போக்கில் இவற்றின் பிந்தைய விளைவுகளை வெளிப்படுத்துவது என்பதோ சிறிதும் இயலாதது. சோவியத் யூனியனிலும் மற்ற சில சோஷலிச நாடுகளிலும் மக்கள்தொகைப் பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சியின் அனுபவம், மக்கள்தொகையைப் பற்றிய விஞ்ஞான விவரங்களை தொகுப்பதன் பெரும் அவசியத்தையும் சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய சர்வாம்ச அணுகுமுறையின் முறையியலை உருவாக்குவதன் அவசியத்தையும் ஊர்ஜிதப்படுத்துகிறது. வளர்ச்சியடைந்த சோஷலிசச் சமுதாயத்தில் மக்கள்தொகை தொடர்பாகப் பயன்மிகு கொள்கையை உருவாக்கும் கடமைகளின் தொடர்பில் இந்த அவசியம் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

தத்துவார்த்த தொகுப்புக் கோட்பாடு மக்கள்தொகை ஆராய்ச்சி குறித்த கூட்டு அணுகுமுறையின் அடிப்படையாகத் திகழ்கிறது. இங்கே தொகுப்பு, பகுப்பாய்வுக்

கட்டத்தில் குலைக்கப்பட்ட ஆராய்ச்சிப் பொருளுக்குரிய தொடர்புகளைப் புனர்நாட்டுவதாக, முன்னர் பிரிக்கப்பட்டவற்றை, பிளவுபடுத்தப்பட்டவற்றை ஒன்றிணைப்பதாகத் திகழ்கிறது. முதலில் மக்கள்தொகையானது ஏதோவொரு குழப்பமான முழுமையாகக் காட்சியளித்தது என்றால் இப்போது இதைத் தொகுப்பு ரீதியாக புனர்நாட்டும் போது ஆராய்ச்சியாளனால் இதன் வளர்ச்சியினுடைய பன்முகத் தன்மையின் உள் ஒற்றுமையைக் கண்டுபிடிக்க இயலும். இயற்கையாகவே, பகுப்பாய்வு ஆராய்ச்சிகள் தொடருகின்றன, ஆனால் இவை இப்போது உயர்வான அறிதல் மட்டத்தில், தொகுப்பு முறையைப் பொறுத்தவரை இதற்கு உட்பட்ட அங்கமாக தொடருகின்றன. தொகுப்பானது, அதற்கு முன் இருந்த தொடக்க நிலைப் பொருளின் (மக்கள்தொகை) பகுப்பாய்வு ரீதியான பிரிவின் இயக்கவியல் மறுப்பாகத் தோன்றுகிறது. மக்கள்தொகையில் உள்ள தனிப்பட்ட அம்சங்கள் அல்லது புலப்பாடுகளின் (இவை முன்னர் தனியாக ஆராயப்பட்டவை) பகுப்பாய்வின் விளைவாக குலைக்கப்பட்ட ஆராய்ச்சிப் பொருளின் உள் ஒற்றுமையைப் புனர்நாட்டுவதுதான் இதன் நோக்கமாகும்.

தொகுப்பு எனும் கருத்துடன் முறைப்படுத்துதல் எனும் கருத்து ஓரளவு பொருந்தி வருகிறது. முறைப்படுத்துதலின் முதல் கட்டத்தில் மக்கள்தொகை ஏதோ ஒரு குழப்பமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது, இக்கட்டத்தில் மக்கள் தொகை என்பது ஆராய்ச்சிப் பொருளின் முறையற்ற முழுமையாகத் திகழ்கிறது.இதற்கடுத்தபடியாக சம்பிரதாயமான முறைப்படுத்துதல் வருகிறது; இக்கட்டத்தில் ஆராய்ச்சியாளன் மக்கள்தொகை வளர்ச்சியை உருவாக்கும் எல்லா அங்கங்களின் உள் யதார்த்த ஒற்றுமையை இன்னமும் வெளிப்படுத்துவதில்லை; பிரிக்கப்பட்ட ஆராய்ச்சி அங்கங்கள் ஒரு விதமாக ஒன்றுடன் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இதற்குப் பின்னர்தான் ஆராய்ச்சியாளன் மக்கள்தொகைக்குரிய உள் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கு வருகிறான், இயற்கையான, அதாவது தன் சாரத்தில் இயக்கவியல் ரீதியான முறையை உருவாக்குகிறான்.

மக்கள்தொகையைப் பற்றிய ஞானம் முழுவதன் தொகுப்பும் திட்டவட்டமான, தர்க்க ரீதியான முறைப்படுத்துதலும் விஞ்ஞானத்தின் வரலாற்றில் உடனடியாக உருவா

வதில்லை. மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் புள்ளிவிவர இயலிலிருந்து பிரிந்து வந்து, நீண்ட காலமாக மக்கள்தொகை பற்றிய ஞான முறையில் வருணிப்புத் துறையாக இருந்தது. மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலிலும் மக்கள்தொகையின் பல்வேறு பிரச்சினைகளைப் பயிலும் மற்ற விஞ்ஞானங்களிலும் விவரங்கள் சேர்ந்ததானது இப்பிரச்சினைகளை ஆராய்வதில் சர்வாம்ச அணுகு முறையைக் கடைப்பிடிப்பதை அவசியமாக்கியது. இதன் தொடர்பில் 60ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் மக்கள் தொகை பற்றிய சர்வாம்ச, தொகுப்பு விஞ்ஞானத்தின் வாய்ப்பைப் பற்றிய அனுமானம் முன்வைக்கப்பட்டது. மக்கள் மத்தியில் நடைபெறும் அந்தந்த நிகழ்ச்சிப் போக்குகளை வெளிப்படுத்துவதில் கூட்டாக ஈடுபட்டுள்ள விஞ்ஞானங்களின் வட்டம் விரிவாகுதல், திட்டவட்டமான ஜனத் தொகைப் புலப்பாடுகளின் பகுப்பாய்வில் பயன்படுத்தப்படும் ஆராய்ச்சி முறைகளின் வட்டம் விரிவாகுதல், பல்வேறு விஞ்ஞானங்களின் விசேஷ மொழிகள் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று கலந்தது ஆகியன நடைமுறையில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மக்கள்தொகையை ஆராயும் விஞ்ஞானங்களின் தொகுப்பு தோன்ற வழிகோலின. முதலில் விஞ்ஞான ஜோடிகளுக்கு இடையில் தோன்றிய ஒத்துழைப்பு (உதாரணமாக, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் மற்றும் சமூக சுகாதாரம், உழைப்பு மூலாதாரங்களின் பொருளாதாரம் மற்றும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல், மக்கள்தொகையின் பூகோளம் மற்றும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் போன்றவை) படிப்படியாக விரிவடைந்தது. கதம்பத் திரளான ஞானத்திலிருந்து விஞ்ஞானங்களின் தொகுப்பின் வழியாக **மக்கள்தொகை பற்றிய முழுமையான ஞான முறையை** நோக்கி வந்ததுதான் பரவலான பொருளில் மக்கள்தொகை பற்றிய சர்வாம்ச மற்றும் தொகுப்பு விஞ்ஞானம் உருவான பாதையாகும்.

நிச்சயமாக, மேலே கூறப்பட்டவை மக்கள்தொகையைப் பற்றிய ஞான முறையின் வளர்ச்சி குறித்த மிகப் பொதுவான, மேற்போக்கான கருத்தை மட்டுமே தருகின்றன. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினால் தோற்றுவிக்கப்பட்டு, ஆதாரப்படுத்தப்பட்ட மக்கள்தொகைத் தத்துவ அடிப்படைகள் மக்கள்தொகை பற்றிய சர்வாம்ச, தொகுப்பு

விஞ்ஞானத்திற்குப் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை விசேஷமாகக் கோடிட்டுக் கூற வேண்டும்.


அதே சமயத்தில் இத்தகையதொரு அணுகுமுறை மக்கள்தொகை பற்றிய நவீன ஆராய்ச்சியின் தேவைகளுக்கு உகந்ததாக உள்ளதோடு கூட மொத்தமாக விஞ்ஞான வளர்ச்சியினால் தோற்றுவிக்கப்படுகிறது என்பதையும் கூற வேண்டும். இன்றைய விஞ்ஞானத்தில் ஒன்றையொன்று பரஸ்பரம் இட்டு நிரப்பும் விஞ்ஞானப் பாகுபாட்டு, இணைப்புப் போக்குகள் அடங்கியுள்ளன. விஞ்ஞானப் பாகுபாட்டு முறைக்கு சில அனுகூலமான அம்சங்கள் உண்டு: இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களில் புது விஞ்ஞானப் பிரிவுகளும் திசைகளும் தோன்றியுள்ளன. இது தவிர, ஞானங்களை இணைக்கும் நிகழ்ச்சிப் போக்கானது இதன் எதிர்மறையாகிய பாகுபாடு செய்தலின் மூலமும் நிறைவேற்றப்படுகிறது. கடந்த காலத்தில் விஞ்ஞானங்களைப் பாகுபாடு செய்வது பெரும்பாலும் தனித்துறைப்பாட்டிற்கு இட்டுச் சென்றதெனில் நம் காலத்தில் பாகுபாடு செய்தல் கணிசமான அளவிற்கு இணைப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது, ஏனெனில் தனித்தனிப் பிரிவுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பிற்கு இடையூறு செய்யும் தடைகளை அகற்றும் பிரச்சினைகள் மிக முக்கியமானவை, கணிசமானவை. இயற்கை மற்றும் சமூக நிகழ்ச்சிப் போக்குகளை நிர்வகிப்பதற்கு விஞ்ஞானங்களின் பரஸ்பரச் செயலாக்கமும் இவற்றின் சாதனைகளைத் தொகுப்பதும் இவற்றின் தனிப்பட்ட முறைகளை அதிகப் பொதுவான முறைகளாக இணைப்பதும் தேவைப்படுகின்றன. விஞ்ஞானத்தில் உருவாகியுள்ள நிலவரத்தை சோவியத் பேரவை விஞ்ஞானி நி.பு. ஃபெதரேன்கோ ஓரளவு திட்டவட்டமாக வரையறுத்தார்: ''பெரிய தேசியப் பொருளாதாரப் பிரச்சினைகள் எல்லாம் இன்று கூட்டுப் பிரச்சினைகளாகத் தோன்றுகின்றன, விஞ்ஞானங்களின் தொகுப்பை அவசியமாக்குகின்றன. உதாரணமாக, சுற்றுப்புறச் சூழல் சம்பந்தமான பிரச்சினைகள் உயிரியல், நிலத்தைப் பற்றிய விஞ்ஞானம், மருத்துவம், தொழில்துறை முறைகள், பொருளாதாரம், கணிதம், இயந்திரவியல்,மனோதத்துவம், அழகியல் போன்ற விஞ்ஞானங்களைப் பெரிதும் சார்ந்துள்ளன. சமூக முக்கியத்துவம் வாய்ந்த நவீன விஞ்ஞானப் பிரச்சினைகளின் இடர்ப்பாடு இதில்தான் அடங்கியுள்ளது; ஆனால் அதே சமயத்தில்

மொத்தமாக விஞ்ஞான வளர்ச்சியின் புதிய நியதிகள் இதில் தான் உருவாகின்றன, இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களின் தொகுப்பு நடைபெறுகிறது''. அதே நிகழ்ச்சிப் போக்கைப் பற்றிக் கூறுகையில் இன்னொரு பெரும் சோவியத் பேரவை விஞ்ஞானி யெ. க. ஃபியோதரவ், சுற்றுப் புறச் சூழலின் நவீன பிரச்சினைகளின் ஆராய்ச்சி மக்கள் தொகை, இயற்கை மூலாதாரங்கள் மற்றும் பலவற்றைப் பற்றிய விஞ்ஞான விவரங்களுடன் நெருக்கமாகத் தொடர்புடையது என்று கருதுகிறார்.

விஞ்ஞானம் என்பது எல்லாவற்றுக்கும் மேலாக தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட, கட்டமைப்பு ரீதியாக முறைபடுத்தப்பட்ட ஞானங்களின் முறையாகும். பல்வேறு வகையான ஞானங்களின் தர்க்க ரீதியான கட்டமைப்புப் பிரச்சினைகள் இன்று குறிப்பான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. இது மக்கள்தொகையைப் பற்றிய ஞானங்களுக்கும் முழுமையாகப் பொருந்தி வரும் (இங்கே புதிய விஞ்ஞானப் போக்குகள் உருவாவதும் பிரிவதும் தீவிரமாக நடைபெறுகின்றன). மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலே விஞ்ஞான முறையாக ஆகியுள்ளது.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் உருவாக்கப்பட்ட மக்கள்தொகை பற்றிய போதனையின் அடிப்படைகள், மக்கள்தொகையில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளை ஆராய்வதில் பொதுமுறையியல் விஞ்ஞானங்கள் வகிக்கும் இடம் மற்றும் பங்கு பற்றிய கருத்து நிலைகள், நவீன விஞ்ஞானத்தின் நிலை மற்றும் வளர்ச்சிப் பாதைகள், நவீன விஞ்ஞானத்தை அட்டவணைப்படுத்தும் கோட்பாடுகள் ஆகியன மக்கள்தொகை பற்றிய விஞ்ஞானங்களை வரைபட ரீதியாகச் சித்தரிக்க உதவுகின்றன.

விஞ்ஞானத்தில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய எந்த ஒரு வரைபடமும் எப்படி நிபந்தனைக்குட்பட்டதோ அதே போல் கீழேயுள்ள வரைபடமும் நிபந்தனைக்குட்பட்டது. இது தவிர, மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறை என்பது உருவாகி வரும், இடையறாது வளர்ந்து வரும் விஞ்ஞான முறையாகும், இதன் எல்லைகளைத் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்ட முடியாது. என்றாலும் இந்த வரைபடம் மக்கள்தொகை பற்றிய நவீன ஆராய்ச்சியின் யதார்த்த நிலையை வெளிப்படுத்தும் ஒரு


மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம்
அரசியல் பொருளாதாரம்
விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவம்
மக்கள்தொகை பற்றிய விஞ்ஞான முறை
மக்கள்தொகைத் தத்துவத்தின் அடிப்படைகள்
மக்கள்தொகையின் பொதுத் தத்துவம்
மக்கள் தொகையின் சமூகவியல்
மக்கள் தொகையின் பொருளாதாரம்
மக்கள் தொகையின் பூகோளம்
மக்கள் தொகையின் சுற்றுப்புறச் சுழலியல்
மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல்
(விஞ்ஞானங்களின் முறை)
உழைப்பு மூலாதாரங்களின் பொருளாதாரம்
திட்டவட்டமான சமூக விஞ்ஞானங்கள்
உழைப்பு மற்றும் குடும்ப சட்ட முறை
மானுடவியல்
சமூக மனவியல்
சமூக சுகாதாரம்
மூப்பியல்
மரபுவழிப் பண்பியல்

சில முக்கியப் புலப்பாடுகளைத் தெளிவுபடுத்த உதவுகிறது. முதலாவதாக, மக்கள்தொகைப் பிரச்சினைகளை விளக்குவதில் பொதுத் தத்துவார்த்த விஞ்ஞானங்களுக்கு உள்ள உண்மையான முக்கியத்துவம் இதில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் இப்பிரச்சினைகளுடைய ஆராய்ச்சியின் மையத்தில் உள்ளது. சாராம்சத்தில் இது இன்று மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் விஞ்ஞானங்களின் முறையாகும், மக்கள்தொகை வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களை ஆராயும் மற்ற பல விஞ்ஞானங்களோடு பரஸ்பரம் தொடர்புடையது. வரைபடத்தில் ஒரு சில விஞ்ஞானப் போக்குகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

**மக்கள்தொகையின் பொருளாதாரம்** சமூக வளர்ச்சி மற்றும் மக்கள்தொகை வளர்ச்சியினுடைய நிகழ்ச்சிப் போக்குகளின் பரஸ்பரத் தொடர்புகளை ஆராயும் அதே சமயம் மக்கள்தொகையின் பொருளாதார அம்சங்கள் மீதும் இதன் மீதான பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளின் தாக்கத்தின் மீதும் முக்கிய கவனம் செலுத்துகிறது.

**மக்கள்தொகையின் சமூகவியல்** ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் சமூக அடிப்படைகளை விளக்க சமூகவியல் தத்துவங்களின் வாய்ப்புகளைப் பயன்படுத்துகிறது, மக்களின் புனருற்பத்தியைத் தன் சாராம்சத்தில் தலைமுறைகளைப் புதுப்பிக்கும் சமூக நிகழ்ச்சிப் போக்காகக் கருதுகிறது; மக்களின் ஜனத்தொகை ரீதியான இயங்குமுறையின் மீது சமூக உணர்வின் பல்வேறு வடிவங்கள் செலுத்தும் தாக்கத்தை ஆராயவும் வர்க்கங்கள், பிரிவுகள் மற்றும் மக்களுடைய சமூக-தொழில் குழுக்களின் சமூக-பொருளாதார நிலைக்கேற்ப இத்தகைய இயங்குமுறையின் சிறப்பியல்புகளை ஆராயவும் விசேஷ கவனம் செலுத்துகிறது.

**மக்கள்தொகையின் பூகோளம்** மக்கள்தொகை வளர்ச்சியின் பிரதேச சிறப்பியல்புகளையும் ஜனத்தொகை, பௌதீக-பூகோள, பொருளாதார-பூகோள நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் புலப்பாடுகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகளையும் ஆராய்கிறது.

**மக்கள்தொகையின் சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானம்** ஒரு புதிய விஞ்ஞானப் போக்காகும். இது மனிதனுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையிலுள்ள பரஸ்பர உறவுகளையும் மக்களின்

வாழ்க்கை நடவடிக்கைகள் மீது, குறிப்பாக உடல்நலத்தின் மீது இந்த சுற்றுப்புறச் சூழல் செலுத்தும் தாக்கத்தையும் ஆராய்கிறது.

வரைபடத்தில் கூறப்பட்டுள்ள விஞ்ஞானப் போக்குகள் மற்றும் தனிப்பட்ட விஞ்ஞானங்களின் பட்டியல் முழுமையானதல்ல. ஆனுல் இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறையில் உள்ள ஒரு சில கோட்பாடு வழிப்பட்ட பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். இதிலடங்கியுள்ள விஞ்ஞானப் போக்குகளும் தனிப்பட்ட விஞ்ஞானங்களும் இணையாக மட்டுமின்றி, இடையருத் தொடர்பு கொண்டும் வளர்ந்து பரஸ்பரம் ஒன்றையொன்று செழுமைப்படுத்துகின்றன. மக்கள் தொகை எனும் ஒரே பொருளை ஆராயும் இவை தம்மிடையே நேரடியான மற்றும் தலைகீழான தொடர்பைக் கொண்டுள்ளன. மக்கள்தொகையின் பொருளாதார, சமூகவியல், பூகோள, சுற்றுப்புறச் சூழல், சமூக-சுகாதார, மரபுவழிப் பண்பியல், மற்ற நிகழ்ச்சிப் போக்குகளை ஆராயாமல் மக்கள்தொகை வளர்ச்சியின் நியதிகள் மற்றும் சகலவித ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் ஆழ்ந்த சாரம் ஆகியவற்றை மேற்கொண்டு பூரணமாக அறிவதென்பது இயலாது.

ஒருங்கிணைத்தல் என்பது புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்காகும். இது பல்வேறு விஞ்ஞானப் பிரிவுகளில் விஞ்ஞானிகளுடைய முயற்சிகள் ஒன்றுசேர்க்கப்பட்டதன் விளைவாகக் கிடைத்த ஞானங்களைத் தொகுப்பதைக் குறிக்கிறது. நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் ஞானங்களின் முறை இப்படிப்பட்ட ஒருங்கிணைப்பிற்கு வழிகோலுவதோடு கூட, மக்கள்தொகை பற்றிய போதனையின் மேற்கொண்ட வளர்ச்சிக்கான அடிப்படைகளும் இதில் அடங்கியுள்ளன. மக்கள் தொகைப் பிரச்சினைகளின் மீது வரலாற்றுப் பொருள்முதல்வாதம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவம் ஆகியவற்றின் கவனம் அதிகமாகும் நிகழ்ச்சிப் போக்கில் இப்போதனை வளர்ச்சியடைகிறது. வரலாறு, சட்ட விஞ்ஞானம், சமூகவியல், மற்ற சமூக விஞ்ஞானங்கள், ஒரு சில இயற்கை விஞ்ஞானங்கள் ஆகியவற்றிற்கு மக்கள் தொகைப் பிரச்சினைகளின் மீதான கவனமும் அதிகரித்து வருகிறது. மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறை

துணை விஞ்ஞானங்கள் பரஸ்பரம் செழுமைப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கில் வளர்ந்து வருகிறது.

எந்த ஒரு விஞ்ஞானத்தையும் போன்றே மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறைக்கும் குறிப்பிட்ட கருத்துக் களும் கருத்தினங்களும் விதிகளும் உண்டு. வாழ்நிலையைப் பிரதிபலிக்கும் வடிவங்கள் என்ற வகையிலும் அறிதலின் ''ஆதாரத் தளங்கள்'' என்ற வகையிலும் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் முக்கியக் கருத்தினங்கள் இந்த விஞ்ஞானத்தின் கருதுகோள்களை உருவாக்கும் அடிப்படை யாகத் திகழ்கின்றன. மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறையில் முக்கிய கருதுகோள்களின் அமைப்பு ஏற்கெனவே உருவாகி விட்டது. மக்கள்தொகை, மக்கள்தொகையின் பண்பு, மக்கள்தொகையின் வளர்ச்சி, மக்களின் புனருற் பத்தி போன்ற முக்கிய, ஆரம்பக் கருதுகோள்களும் இவற்றைச் சார்ந்த பல துணைக் கருதுகோள்களும் வரை யறுக்கப்பட்டுள்ளன. மக்கள்தொகை என்பது ஏராளமான அம்சங்கள், உறவுகளின் ஒட்டுமொத்தமாகும், இது உற் பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சிப் போக்குகளுடன் நேரடியாகவும் தலைகீழாகவும் இணைக்கப் பட்டுள்ளது. மக்கள்தொகை என்பது சுயமாக புனருற் பத்தி செய்து கொள்ளும் மனிதர்களின் ஒட்டுமொத்த மாகும், இவர்கள் மிகப் பல்வேறான சமூக உறவுகளை உடைய வர்கள்.மக்கள்தொகையின் பண்பு என்பது மக்கள்தொகை யின் முக்கிய அம்சங்களின் ஒட்டுமொத்தமாகும், இவை மக்கள்தொகையின் தன்மையையும் விசேஷ அம்சங்களையும் வெளிப்படுத்துகின்றன; இந்த விசேஷ அம்சங்கள் உற்பத்திப் போக்கில் தோன்றும் உறவுகளுடன் பிரிக்க முடியாதபடி தொடர்புடையவை. உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் குறிப்பிட்ட வளர்ச்சி மட்டத்திற்கு ஏற்ற குறிப் பிட்ட மக்கள்தொகைப் பண்பு உள்ளது, இது மக்கள்தொகை யின் பல்வேறு கட்டமைப்புகளில் வெளிப்படுகிறது. மக்கள் தொகை மற்றும் இதன் உழைப்புப் பிரிவினரின் வளர்ச்சி தன் அடிப்படையில் சமூக-பொருளாதார உறவு முறை களால் நிர்ணயிக்கப்படுகிறது. மக்களின் வளர்ச்சி என்பது எண்ணிக்கை ரீதியான அதிகரிப்பை மட்டுமின்றி பண்பு ரீதி யான அம்சங்களின் மாற்றத்தையும் குறிக்கிறது. இது இதன் பல்வேறு கட்டமைப்புகளின் (தொழில் ரீதியான, தேர்ச்சி

மற்றும் கல்வி ரீதியான கட்டமைப்புகள், இத்தியாதி) மாற்றத்தில் வெளிப்படுகிறது. மேற்கூறிய கருத்தினங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று குறிப்பிட்ட தொடர்புகளைக் கொண்டுள்ளன.

மக்கள்தொகை வளர்ச்சி விதிகளை அறிவதுதான் மக்கள் தொகை பற்றிய ஞான முறையின் நோக்கமாகும். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினுல் உருவாக்கப்பட்ட மக்கள்தொகைப் போதனையின் அடிப்படைகளில் அவ்விதிகளை அறியும் பிரதானக் கோட்பாடுகள் அடங்கியுள்ளன. மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்பிற்கும் உரித்தான மக்கள்தொகை விதிகளின் முறை அறியப்படுகிறது, மக்கள் தொகையின் சர்வபொது விதிகளும் அறியப்படுகின்றன. சர்வபொது விதிகளில் ஒன்ருகிய மக்கள்தொகை வளர்ச்சி விதி கண்டுபிடிக்கப்பட்டு வரையறுத்து கூறப்பட்டுள்ளது.

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை ஆராயும் போது இவற்றை சமூக-பொருளாதார வளர்ச்சியுடன் இணைக்கும் அவசியம் இடையருது தோன்றுகிறது. ''சமூக-பொருளாதார வளர்ச்சி'' என்பது மிக உயர்ந்த அளவிற்கு பொதுத் தன்மையையும் சூட்சுமத் தன்மையையும் உடைய ஒரு கருத்தினமாகும். எதார்த்தமான சமூக-வரலாற்று நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலிக்கும் கருத்தினங்கள், கருதுகோள்களின் படிவரிசையில் இது ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. ''ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கு'' எனும் கருதுகோள் இந்தக் கருத்தினத்துடன் ஒப்பிடும் போது தனியானதை, விசேஷமானதைப் பிரதிபலிக்கிறது. ''சமூக-பொருளாதார வளர்ச்சியும்'' ''ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கும்'' வெவ்வேறு சிக்கலான தன்மையை உடைய அமைப்புகளைக் காட்டுகின்றன, இவை வெவ்வேருனவை எனவே இவற்றின் இடையே நேரடியான தொடர்பும் நேரடியான மாறுதல்களும் இல்லை. ''மக்களின் புனருற்பத்தி'', ''ஜனத்தொகைக் கட்டமைப்புகளின் புனருற்பத்தி'', ''ஜனத்தொகை நிலவரம்'' போன்ற மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலின் மற்றப் பொதுக் கருதுகோள்களை எடுத்துக் கொண்டால் இவற்றிற்கும் ''சமூக-பொருளாதார வளர்ச்சி'' என்ற கருத்தினத்திற்கும் இடையிலான தொடர்பும் குறிப்பிட்ட இடைநிலை அங்கங்களின் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் புனருற்பத்திக்கும் இடையிலான தொடர்புகளைப் பற்றிய பொதுவான சித்தரிப்பிற்கு, மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலில் பயன்படுத்தப்படும் கருத்தினங்களை விட அதிக அளவு பொதுமையான கருத்தினம் தேவை. ''மக்களின் வளர்ச்சி'' என்பது இத்தகைய கருத்தினமாகும். இதற்குப் பரவலான பொது சமூகவியல் பொருளும் சாரமும் உண்டு. சமூக-வரலாற்று நிகழ்ச்சிப் போக்கானது உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்தது; உற்பத்தி முறை தன் பங்கிற்கு உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளில் ஏற்படும் அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான மாற்றங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதர்கள்தான் உற்பத்திச் சக்திகளின் முக்கிய அங்கம்; மனிதர்கள்தான் உற்பத்தி உறவுகளின் அகவயப் பொருளும் புறவயப் பொருளும் ஆவார்கள் என்பது தெரிந்ததே. எனவே உற்பத்தி முறையின் வளர்ச்சி மக்களின் வளர்ச்சிக்கு வழிகோலுகிறது. இவ்வளர்ச்சி எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள்தொகையின் உழைப்பு நடவடிக்கையின் மாற்றங்களுடன் தொடர்புடையது, இது தன் பங்கிற்கு மக்கள்தொகையின் இனப்பெருக்க நடவடிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதன் தொடர்பான மையக் கடமைகளில் ஒன்று மக்கள் தொகையின் வாழ்க்கை நடவடிக்கையின் இந்த இரண்டு முக்கிய வகைகளுக்கும் இடையில் நிலவும் தொடர்புகளை நிலைநாட்டுவதாகும்.

''மக்களின் வளர்ச்சி'' எனும் கருதுகோள் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் பல கருதுகோள்களைத் தன்னுள் அடக்கியுள்ளது, மக்கள்தொகை ஆராய்ச்சியின் பிரதான தத்துவார்த்த பிரச்சினையைச் சரிவர நிர்ணயிக்கும் வாய்ப்பைத் தருகிறது.

சமுதாய வளர்ச்சியின் மிகப் பொதுவான தத்துவமாக விளங்கும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் தனிப்பட்ட சமூக விஞ்ஞானங்களின் பால் பொதுவான முறையியலாகத் திகழ்கிறது. இது அந்தந்தச் சமூகப் பொருளின் நியதிகள் அனைத்தையும் வெளிப்படுத்துவதைத் தன் கடமையாகக் கொண்டிருக்கவில்லை. இது தனிப்பட்ட சமூக தத்துவத்தின் காரியமாகும்; இது உயர் மட்டப் பொதுமையுடைய வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் கருதுகோள்களைக்

குறிப்பிட்டதொரு விசேஷ சமூக துணை அமைப்பின் கருத்தினங்களாக மாற்றுகிறது எனலாம். ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளைப் பொறுத்தமட்டில் மக்கள்தொகையின் பொதுத் தத்துவம் (இது மக்கள்தொகை வளர்ச்சித் தத்துவமாகக் கருதப்பட வேண்டும்) இப்படிப்பட்ட தனித் தத்துவமாக, ''நடுமட்டத் தத்துவமாக'' விளங்குகிறது.

மக்கள்தொகையின் பொதுத் தத்துவத்தைக் கருதுகோள்களின் தொடர்பு முறையாக வரையறுக்கலாம். இது மக்கள்தொகை மற்றும் இதன் தனிப்பட்ட அம்சங்களின் வளர்ச்சி பற்றிய பகுப்பாய்வின் முடிவுகளின் ஒட்டுமொத்தத்தைப் பொதுமைப்படுத்தப்பட்ட வடிவத்தில் தர வேண்டும், ஆராய்ச்சிப் பொருளின் அம்சங்கள், தனிப்பட்ட உறவுகளின் பகுப்பாய்வில் கிடைத்த முடிவுகளுக்கு இடையிலான தொடர்புகளை விஞ்ஞான விதிகளின் வடிவில் நிலைநாட்ட வேண்டும், சமூக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சிப் போக்கு என்ற வகையில் மக்கள்தொகை வளர்ச்சித் துறையில் புதிய புலப்பாடுகளை முன்னறிவிக்க வேண்டும். இவ்வாறாக, மக்கள்தொகையின் பொதுத் தத்துவம் என்பது மக்கள்தொகையில் நடைபெறும் வளர்ச்சிப் போக்குகளின் சாரத்தையும் மற்ற எல்லா சமூக நிகழ்ச்சிப் போக்குகளுடன் இவற்றிற்கு உள்ள தொடர்புகளையும் விளக்கும் பொதுத் தத்துவார்த்த மற்றும் பொது முறையியல் கருத்துநிலைகள், கருத்தமைப்புகளின் ஒட்டுமொத்தமாகும். இது பொதுத் தத்துவார்த்த விஞ்ஞானங்களின் முறையியல் அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது, மக்கள்தொகை வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்கையில் சமுதாயத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சி பற்றிய மார்க்சிய-லெனினியப் போதனையை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது.

மக்கள்தொகையின் பொதுத் தத்துவம் பின்வரும் பிரச்சினைகளின் ஒட்டுமொத்தத்தைத் தன்னுள் அடக்கியுள்ளது: சமுதாய வளர்ச்சியின் பிரதான விதிகள் மக்களின் வளர்ச்சி மீது செலுத்தும் தாக்கத்தைத் தெளிவுபடுத்துவது; வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி உறவுகளின் முறையில் மக்களின் வளர்ச்சி; மக்கள்தொகை வளர்ச்சிக்கும் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலுள்ள பரஸ்பரத் தொடர்பு; சகலவித ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் ஓட்டத்தையும் நிர்ணயிக்கும் விதிகள்; ஜனத்

தொகை நிகழ்ச்சிப் போக்குகளில் உள்ள உயிரியல் மற்றும் சமூக அம்சங்கள்; மக்கள்தொகை பற்றிய சர்வாம்ச ஆய்வின் முறையியலை மேற்கொண்டு உருவாக்குவது.

மக்கள்தொகையின் பொதுத் தத்துவப் பிரச்சினைகளைத் தீர்க்கும் போது, ''மக்களின் வளர்ச்சி'' என்பதைப் போன்ற கருத்தானது, அடையாளச் சிறப்போடு கூறினால், ''ஒன்றுபடுத்தும் காரணியாகவும்'' மக்கள்தொகை பற்றிய ஞான முறை தொகுப்புக் காரணியாகவும் சர்வாம்ச ஆராய்ச்சி அணுகுமுறையானது மேற்கொண்ட தனித் துறைப்படுத்துதலை முன்னனுமானித்து நிர்ணயிக்கும் காரணியாகவும் உள்ளன எனும் நிலையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும். மக்கள்தொகையின் பொதுத் தத்துவம் மக்கள்தொகையின் எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கான அடிப்படையாகும். இது மக்கள் தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல், மக்கள்தொகையின் பொருளாதாரம், மக்கள்தொகையின் சமூகவியல், மக்கள் தொகையின் பூகோளம், மக்கள்தொகையின் சுற்றுப்புறச் சூழல் இயல் மற்றும் மக்கள்தொகை ஆராய்ச்சியில் ஈடு பட்டுள்ள மற்ற எல்லா விஞ்ஞானப் போக்குகள், விஞ்ஞானங் களின் வளர்ச்சிக்கு மேற்கொண்டு வாய்ப்பை ஏற்படுத்து கிறது.

லட்சியங்கள் மற்றும் சாதனங்களின் பொதுமையில் வெளிப்படும் பொதுக் கருத்துநிலையின் அடிப்படையில் மக்கள் தொகையின் பொதுத் தத்துவம், மக்கள்தொகையைப் பற்றிய கதம்பத் திரளான ஞானங்களிலிருந்து, பல வெவ் வேறான விஞ்ஞானங்களிலிருந்து கண்டிப்பாகத் தர்க்க ரீதி யான தத்துவார்த்தக் கட்டமைப்பிற்கு, அதாவது மக்கள் தொகை பற்றிய விஞ்ஞான முறைக்கு வர வாய்ப்பளிக் கிறது. இது விஞ்ஞான வளர்ச்சியின் இன்றைய கட்டத்தில் மக் கள்தொகையில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளையும் சமுதாயத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சிப் போக்கு களுடன் இவற்றிற்குள்ள பரஸ்பரச் செயலாக்கத்தையும் ஆழமாக அறியவும் மக்கள்தொகை வளர்ச்சியின் பொது விதிகளையும் சமூக, பொருளாதார, தொழில்நுட்ப முன் னேற்றத்தில் இதற்குள்ள முக்கியத்துவத்தையும் வெளிப் படுத்தவும் உதவுகிறது.

மக்கள்தொகையின் பொதுத் தத்துவம் ''நடுமட்டத்

தத்துவம்'' என்ற வகையில் கீழ்மட்டத்திலுள்ள தத்துவார்த்தக் கருத்தமைப்புகளை ஒன்றிணைக்கிறது. பிறப்பு மற்றும் இறப்பு விகிதங்கள், இயற்கையான மக்கள் பெருக்கம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களின் இயக்கப் போக்கை விளக்கி சித்தரிக்கும் பொருளாதார மற்றும் சமூகவியல் தத்துவங்கள்; மக்களின் இடம் மாறும் தன்மையை விளக்கி சித்தரிக்கும் பொருளாதார-சமூகவியல் தத்துவங்கள்; தனிப்பட்ட, குழு ரீதியான மற்றும் பெருந் திரளான ஜனத்தொகை இயங்கு முறைகளைப் பற்றிய சமூகவியல் மற்றும் சமூக-மனவியல் கருத்தமைப்புகள்; திருமணங்கள், விவாகரத்துகள் மற்றும் நவீன குடும்பத்தின் நிலையான தன்மை குறித்த எல்லாப் பிரச்சினைகளையும் சித்தரித்து விளக்கும் சமூகவியல் மற்றும் சமூக-மனவியல் தத்துவங்கள்; பொருளாதார மற்றும் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் பரஸ்பரத் தொடர்பையும் பரஸ்பரச் செயலாக்கத்தையும் சித்தரித்து, விளக்கி, முன்னறிவிக்க வல்ல பொருளாதாரத் தத்துவங்கள், கருத்தமைப்புகள் ஆகியன இவ்வாறு கீழ் மட்டத்திலுள்ளவற்றில் சிலவாகும்.

சமூக-பொருளாதார வளர்ச்சியின் தொடர்பாக மக்களின் மத்தியிலும் இவர்களது வாழ்க்கை, உழைப்புச் சூழ் நிலைகளிலும் ஏற்படும் பண்பு ரீதியான, அளவு ரீதியான மாற்றங்களை ஆராய வல்ல மக்களின் வளர்ச்சி பற்றிய பொருளாதார-சமூகவியல் கருத்தமைப்பை உருவாக்குவது ஆராய்ச்சியின் முக்கியப் போக்காகும். மக்கள்தொகைப் பிரச்சினைகளை ஆராய்வதில் மக்கள்தொகை வளர்ச்சியின் நியதிகளைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி முறைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் பெரும் முக்கியத்துவம் உண்டு. மக்கள் தொகை வளர்ச்சி நியதிகளை அறியும் முறையியல் என்பது மக்களின் மத்தியில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளையும் மக்களுக்கும் சமுதாயத்திற்கும், மக்களுக்கும் பொருளாதாரத்திற்கும், மக்களுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள உறவுகளையும் தொடர்புகளையும் பகுப்பாய்வு செய்யும் திட்டவட்டமான வடிவத்தில் உள்ள இயக்கவியல் முறை ஆகும். மேற்கூறிய உறவுகளும் தொடர்புகளும் புள்ளிவிவர முறையியல், கணித முறையியல் மற்ற ஆராய்ச்சி முறைகளின் உதவியால் தெளிவுபடுத்தப்படுகின்றன. ஆராய்ச்சி முறைகளைப் பற்றிக் கூறும் போது, நவீன மக்கள்தொகை பற்றிய

விஞ்ஞான தத்துவத்தின் முறைப்படியான சாதனம் உட்பொருள் நிரம்பிய கடமைகளின் தீர்விற்காகப் பயன்படுத்தப்படுகிறது. பகுப்பாய்வு முறைகள் என்ற வகையில் புள்ளிவிவர இயலும் கணிதமும் மக்கள்தொகை பற்றிய விஞ்ஞானத்தின் மொழியாக மட்டுமின்றி தர்க்கமாகவும் மாறியுள்ளன.

ஆராய்ச்சிப் பொருளின் பகுப்பாய்வை சர்வாம்சரீதியாக அணுகுவதுதான் மக்கள்தொகை பற்றிய ஞானங்களுடைய முறையின் பொது முறையியல் கோட்பாடாகும் என்று மேலே குறிப்பிடப்பட்டது, இது நவீனமான, மேன்மேலும் மேம்பாடடையும் முறைகளைப் பயன்படுத்தி மக்கள்தொகை வளர்ச்சியின் நியதிகளைப் பற்றிய நம் ஞானத்தையும் இந்த இடையறு நிகழ்ச்சிப் போக்கை நிர்ணயிக்கும் புறவய ரீதியான விதிகளின் முறை முழுவதையும் பற்றிய விவரங்களையும் ஆழமாக்கிக் கொள்ள உதவுகிறது. கா. மார்க்ஸ் மூலதனம் நூலில் பயன்படுத்திய முறை, அதாவது சூட்சுமமானதிலிருந்து திட்டவட்டமானதை நோக்கி முன் செல்லும் முறை மக்கள்தொகை வளர்ச்சியின் நியதிகளை ஆராய்வதில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. சூட்சுமமானதிலிருந்து திட்டவட்டமானதை நோக்கிய இயக்கப் போக்கில் தன்னுடைய ஆராய்ச்சிப் பொருளாகிய மக்கள்தொகையின் முக்கியமான அம்சங்களை எப்போது மக்கள்தொகைத் தத்துவத்தால் புனரமைக்க இயலுமோ அப்போதுதான் இது விஞ்ஞானமாகும்.

மக்கள்தொகைப் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சியானது ஆராய்ச்சிப் பொருளாகக் கொள்ளப்படும் இயல்புகளின் முழுமை அல்லது தொடர்புத் தன்மை எனும் கோட்பாட்டிற்குப் பொருந்தி வர வேண்டும். பிரிக்கப்பட்ட ஒட்டுமொத்தமானது ஒரு முழுமையாக (குடும்பம், இடப்பெயர்ச்சி நிகழ்ச்சிப் போக்கு, பிறப்பு மற்றும் இறப்பு விகிதத்தின் சமூக-உயிரியல் அம்சங்கள், குடியேற்றம்,இத்தியாதி) இருக்க வேண்டும். அதாவது ஆராய்ச்சிப் பொருளின் உள்ளேயுள்ள கட்டமைவுத் தொடர்புகள் உறுதியானவையாக, நிலையானவையாக இருக்க வேண்டும். எனவே ஆராய்ச்சிப் பொருளை ஏதோ ஒரு ''மூடிய'' அமைப்பாகக் கருதக் கூடாது, ஏனெனில் குடும்பமோ, கிராம மக்களின் இடப்பெயர்ச்சியோ எதுவாயிருந்தாலும் இவை சமூக வாழ்வின் பல அம்

சங்களோடும் தொடர்புடையவை, இந்த அம்சங்கள் வேறு விஞ்ஞானங்களால் ஆராயப்படுகின்றன.

மக்கள்தொகை பற்றிய விஞ்ஞானத்தின் வளர்ச்சிப் போக்கு, திரும்பி நடைபெறும் தன்மை அல்லது மறுபடி உண்டாக்கும் தன்மை எனும் ஒரு முக்கியக் கோட்பாட்டைக் கவனத்தில் கொள்வதையும் முன்னனுமானிக்கிறது. இது விஞ்ஞான அணுகுமுறையின் அளவுகோலாகும், மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறை முழுவதன் ஆராய்ச்சிப் பொருளையும் இதிலடங்கியுள்ள விஞ்ஞானப் போக்குகளின் ஆராய்ச்சிப் பொருளையும் தெளிவுபடுத்த இது மிக முக்கியமானது. கண்காணிப்புக் கோட்பாடு மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலர்கள், குடியேற்றப் பிரச்சினைகளை ஆராயும் பூகோள விஞ்ஞானிகள், சமூக-சுகாதாரவியலர்கள், மற்ற விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுகிறது. மக்கள்தொகையின் பொதுத் தத்துவம், மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறையில் உள்ள எல்லா விஞ்ஞானங்கள், விஞ்ஞானப் போக்குகளின் அடிப்படைக் கருத்துநிலைகளை கண்காணிக்கப்படும், முறைப்படுத்தப்படும் பொருட்களில் ஆதாரப்படுத்துவதன் அவசியத்தில்தான் மேற்கூறிய கோட்பாட்டின் விவேகமான சாரம் அடங்கியுள்ளது. அனுபவ பூர்வமான விவரங்களைத் தேர்ந்தெடுக்கும் புதிய சாதனங்களையும் முறைகளையும் இடையறாது தேடுமாறு கண்காணிப்புக் கோட்பாடு கோருகிறது.

மக்கள்தொகையின் பொதுத் தத்துவத்தின் அடிப்படைகளையும் மக்கள்தொகையின் பொருளாதாரம், சமூகவியல், பூகோளம் மற்றும் சுற்றுப்புறச் சூழலியலின் ஆராய்ச்சிப் பொருட்களையும் வரையறுப்பது, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலை ஜனத்தொகை விஞ்ஞானங்களின் முறையாக அணுகி இவற்றின் தத்துவார்த்த வரைபடத்தை உருவாக்குவது, இந்த விஞ்ஞானங்களைப் படிவரிசையில் அமைப்பது, இவற்றின் இடையே தொடர்பை ஏற்படுத்துவது, சமூக-பொருளாதார அமைப்பின் மக்கள்தொகை விதிகளின் விஷயத்தில், பல்வேறு சமூக-பொருளாதார அமைப்புகளில் செயல்படும் விதிகளின் விஷயத்தில் கோட்பாட்டு ரீதியாகப் புதிய அணுகுமுறையை வரையறுப்பது, மக்கள்தொகை வளர்ச்சியின் சர்வபொது விதியை வரையறுத்து மக்கள்தொகை பற்றிய ஞானங்களின்

தத்துவார்த்த முறையில் இதன் இடத்தை நிர்ணயிப்பது— இவைதான் மக்கள்தொகை பற்றிய விஞ்ஞானத்தில் நடைபெறும் முக்கிய அடிப்படை மாற்றங்களாகும், இவைதான் இவ்விஞ்ஞானத்தின் சர்வாம்ச, தொகுப்புத் தன்மையை நிர்ணயிக்கின்றன.

மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறையில் அடங்கியுள்ள கோட்பாடுகள் படைப்பாற்றல் போக்கின் தவிர்க்க இயலா விளைவாகும். அதே சமயம் ஆராய்ச்சிப் பொருள் (மக்கள்தொகை) முடிவற்றதாக இருந்துள்ளது, இருந்து வருகிறது. எனவே மக்கள்தொகை பற்றிய ஞான முறை மற்றும் ஜனத்தொகை விஞ்ஞானங்கள் முறையின் கருத்து நிலைகள் போதுமான அளவு முழுமையற்று இருப்பது விளக்கப் படக் கூடியதே, நியாயமானதே. மக்கள்தொகை பற்றிய விஞ்ஞான வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் நிலவும் குறிப்பிட்ட முழுமையின்மை தவிர்க்க இயலாத ஒரு புலப்பாடு, இது அறிதல் எனும் நிகழ்ச்சிப் போக்கின் முடிவற்ற தன்மையிலிருந்து வருகிறது என்ற விவாதத்திற்கு அப்பாற்பட்ட கருத்து நிலை இதில் வெளிப்படுகிறது. இது உண்மையின் சார்புநிலைத் தன்மை பற்றிய (இதில் முழுமையான உண்மையின் அம்சங்களும் அடங்கியுள்ளன) மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டின் இன்னொரு வெளிப்பாடு மட்டுமே.

மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறையைத் தனியாகப் பிரிக்கப்பட்ட, நடைமுறைக் கடமைகளோடு தொடர்பற்ற தத்துவார்த்த கட்டமைப்பாக ஒருபோதும் கருதக் கூடாது. இது விளக்கம் தரும் பணி, முன்னறிவிக்கும் பணி மற்றும் உற்பத்தி-நடைமுறைப் பணிகளை முழுமையாகக் கொண்டுள்ள (குறிப்பாக, மக்களின் புள்ளிவிவர இயலோடும், முந்தைய குறுகலான பொருளில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலுடனும் ஒப்பிடும் போது) முறைபடுத்தப்பட்ட ஞானத்தின் ஒட்டுமொத்தமாகும். மக்கள் தொகை பற்றிய ஞானங்களின் முறை மக்கள்தொகை வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்குகளை ஆழ்ந்து வெளிப்படுத்தி விளக்கவும் இவற்றின் மாற்றங்களை முன்னறிவிக்கவும் எனவே சமுதாய வளர்ச்சியின் தேவைகளுக்கேற்ப இவற்றைப் பயன்மிகு முறையில் நிர்வகிக்கவும் வாய்ப்பளிக்கிறது.

அத்தியாயம் பதினாறு

## மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்கள்

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் ஆராய்ச்சிப் பொருளை நிர்ணயிப்பது சம்பந்தமாக சோவியத் விஞ்ஞான இலக்கியத்தில் இரண்டு பிரதானக் கண்ணோட்டங்கள் நிலவுகின்றன. ஒரு கண்ணோட்டத்தின்படி இந்த ஆராய்ச்சிப் பொருள் தலைமுறைகள் இயற்கையாக மீண்டும் மீண்டும் தோன்றுவதுடன் தொடர்பு கொண்ட பிரச்சினைகளின் பகுப்பாய்வை மட்டும் உள்ளடக்கியுள்ளது, மறு கண்ணோட்டத்தில் இது மிகவும் விரிவாக்கப்பட்டு, ஏற்கெனவே நிலவும் பல தனியான சமூக விஞ்ஞானங்களை உள்ளடக்கியுள்ளது.

மக்கள்தொகையைப் பற்றிய ஞானங்களின் முறை குறித்து கருத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளதானது (இவை முந்தைய அத்தியாயத்தில் பொதுவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன) மக்கள்தொகையின் சர்வாம்ச ஆராய்ச்சியில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் இடத்தையும் இதன் ஆராய்ச்சிப் பொருளையும் திட்டவட்டமாக நிர்ணயிக்கும் வாய்ப்பைத் தருகிறது. மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல்தான் மக்கள்தொகை பற்றிய விஞ்ஞானங்களின் முறை முழுவதன் உட்கருவாகும். இந்த விஞ்ஞானங்கள் ஒவ்வொன்றுடனும் நெருக்கமான பரஸ்பரத் தொடர்பைக் கொண்டுள்ள இது இவற்றிற்கு மாற்றீடாக இருக்கவில்லை, இவற்றில் கரைந்து போகவுமில்லை, மாறாக இம்முறையில் மையப் பாத்திரத்தை வகிக்கிறது.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் இப்படிப்பட்ட மைய இடத்தை வகிப்பது தற்செயலானதல்ல. மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முழு முறையின் ஆராய்ச்சிப் பொருளாக மக்கள்தொகை வளர்ச்சியின் பரவலான பிரச்சினைகள் உள்ளன என்றால் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் மக்களின் புனருற்பத்தி விதிகளை ஆராய்கிறது. இது தனது உள்ளடக்கத்தில் ''மக்களின்

வளர்ச்சி'' எனும் கருதுகோளை விட குறுகியதாக இருக்கிறது. ஆனல் இது அதே சமயத்தில் உடனேயே, மக்கள்தொகையை ஆராயும் மற்ற விஞ்ஞானங்களின் நடுவில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் மைய இடத்தை வரையறுக்கிறது. சோவியத் பொருளாதார நிபுணராகிய அ. யா. பயார்ஸ்கியின் வார்த்தைகளின்படி மக்களின் புனருற்பத்தியைப் பற்றிய பிரச்சினைகள் பரஸ்பரம் தொடர்புடைய மக்கள்தொகைப் பிரச்சினைகளின் விசேஷ உட்கருவை உருவாக்குகின்றன.

ஆனல் ''மக்களின் புனருற்பத்தி'' எனும் கருதுகோளை இரண்டு விதமாக விளக்கலாம். குறுகிய பொருளில் இது பிறப்பு, இறப்பு விகிதப் போக்குகள் மற்றும் இவற்ருேடு தொடர்புடைய ஜனத்தொகைப் புலப்பாடுகளாகும். பரவலான பொருளில் இது, மக்கள்தொகை இயக்கத்தின் மூன்று வகைகளின் ஒற்றுமையில் (இயற்கையான இயக்கப் போக்கு, சமூக இடம்பெயர்வாற்றல், இடப்பெயர்ச்சித் தன்மை) மக்களின் புனருற்பத்தி நிறைவேற்றப்படுவதைக் குறிக்கிறது. இத்தகைய பரவலான பொருளில் புரிந்து கொள்வதானது ''குறுகிய பொருளில்'' மக்களின் புனருற்பத்திக்கு உள்ள பெரும் முக்கியத்துவத்தை சிறிது கூட மறுக்காது இதை உறுதிப்படுத்துகிறது, ஆனல் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் ஆராய்ச்சிப் பொருள் இதில் மட்டும் அடங்கி விடவில்லை.

ஆக, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் பரவலான பொருளில், எல்லாவற்றுக்கும் மேலாக சமூக-வரலாற்றுச் சூழ்நிலைகளில் மக்களுடைய புனருற்பத்தி நியதிகளை ஆராய்கிறது. மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் தனக்கு உரித்தான முறைகளில் மக்களின் எண்ணிக்கை, பிரதேசப் பரப்பீடு, உள்ளடக்கம், இவற்றில் ஏற்படும் மாற்றங்கள், இம்மாற்றங்களின் காரணங்கள், விளைவுகள், சமூக-பொருளாதாரக் காரணிகளுக்கும் மக்கள் மத்தியில் ஏற்படும் மாற்றங்களுக்கும் இடையிலுள்ள பரஸ்பரத் தொடர்புகள் ஆகியவற்றை ஆராய்கிறது; இது பரவலான பொருளில் மக்களுடைய புனருற்பத்தியின் நியதிகளை வெளிப்படுத்துகிறது. கிடைத்த ஞானங்களைச் சமூக வளர்ச்சிக்குச் சேவை புரிய முன்வைக்கிறது.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் மக்களின் புள்ளிவிவர இயலிலிருந்து பிரிந்தது. சென்ற நூற்றுண்டில் இப்புள்ளிவிவர இயலே மக்களின் நிலை பற்றிய புள்ளிவிவர இயல், மக்களின் இயக்கம் பற்றிய புள்ளிவிவர இயல் என்று இரு பகுதிகளாகப் பிரித்திருந்தனர். முதலாவது பகுதி மக்களின் எண்ணிக்கை, இவர்களின் பிரதேசப் பரப்பீடு, உள்ளடக்கம் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை (மக்கள் கணக்கெடுப்புகள், இவர்களைப் பற்றிய அறிக்கைகள், விவரங்களை ஒன்றுசேர்த்தல்) அளித்தது. இரண்டாவது பகுதி மக்களின் இயற்கையான இயக்கப் போக்கு (பிறப்பு, இறப்பு, திருமணங்கள், விவாகரத்துகள்) மற்றும் மக்களின் இடப் பெயர்ச்சி பற்றிய மெட்ரிக் பதிவுகளின் அடிப்படையில் விவரங்களை இடையருது சேகரித்தது. இவ்வாருக ஜனத் தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் தன்மைக்குப் புள்ளிவிவர இயலின் நடைமுறை துல்லியமாகப் பொருந்தி வந்தது, ஆனுல் இதனுல் இப்புலப்பாடுகளின் பகுப்பாய்வு சம்பந்தமான விஞ்ஞான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை, ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் நியதிகளை நிர்ணயிக்கும் பல காரணிகளுக்கு இடையிலான உள் சார்பு நிலைகளை வெளிப்படுத்த இயலவில்லை. இந்தச் சார்புநிலைகளையும் நியதிகளையும் ஆழமாகவும் துல்லியமாகவும் அறிய உதவும் புதிய மதிப்பீட்டு முறைகளை ஏற்படுத்தும் கடமை முன் நின்றது. விஞ்ஞான கோரிக்கைகளுக்கு ஏற்றபடி மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் பிரிவுகள் உருவாயின, இவை மக்களின் புள்ளிவிவர இயல் கருத்திலிருந்து மேன்மேலும் விலகிச் சென்றன.

தொன்மைக் காலத்திலிருந்து நம் நாட்கள் வரையிலான மக்களின் புனருற்பத்தி பற்றிய சோவியத் விஞ்ஞானி அ. விஷ்னேவ்ஸ்கியின் வரலாற்று-ஜனத்தொகை ஆராய்ச்சியில், வரலாற்று வளர்ச்சி சமூகக் கட்டளையை இட்ட போது தான், இது மக்களின் புனருற்பத்தியில் சமுதாயத்தினுடைய வாழ்க்கை நடவடிக்கையின் விசேஷ, மிக முக்கிய அம்சத்தைக் காணும்படி நிர்ப்பந்தித்து இதன் (மக்களுடைய புனருற்பத்தியின்) விதிகளை அறியும்படி கோரிய போதுதான், அதாவது நம் நூற்றுண்டில்தான் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் ஒரு விசேஷ விஞ்ஞானமாகத் தோன்றியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனத்தொகை

நிகழ்ச்சிப் போக்குகளின் நியதிகளை வெளிப்படுத்தும் தேவையானது இவற்றைப் பற்றிய ஞானங்களைப் பாகுபாடு செய்தது, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் பிரிவுகள் தோன்றச் செய்தது.

ஐ. நா. சபையின் பல்மொழி ஜனத்தொகை அகராதி மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலில் பின்வரும் பிரிவுகளைக் குறிப்பிடுகிறது: வருணிப்பு மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல், இது மக்களைப் பற்றிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மக்களின் கட்டமைப்பு, பரப்பீடு மற்றும் இயக்கத்தைப் பற்றி விவரிக்கிறது; தத்துவார்த்த (''தூய'') மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல், இது ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் அளவு ரீதியான விகிதங்களை ஆராய்கிறது; மக்கள்தொகைப் புள்ளிவிவரப் பகுப்பாய்வு, இது மக்களைப் பற்றிய அளவு ரீதியான தன்மைகளைத் தருகிறது; பொருளாதார மற்றும் சமூக மக்கள் தொகைப் புள்ளிவிவர ஆய்வியல். இது தவிர, மக்களைப் பற்றிய பல்வேறு தத்துவங்கள் அல்லது ஜனத்தொகைப் போதனைகளின் ஆராய்ச்சி மற்றும் ஜனத்தொகைக் கொள்கை, அதாவது ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தமும் மக்கள் தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் கடமைகளில் அடங்கும் என்று இந்த அகராதியில் கூறப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் நவீன வளர்ச்சியிலும் தனித்துறைப்பாடு தெளிவாக வெளிப்படுகிறது. இதை ஒட்டியுள்ள விஞ்ஞானங்களுடனான தொடர்புகள் பலப்பட்டு வரும் அதே நேரத்தில் இது காணப்படுகிறது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னரே பயார்ஸ்கி பின்வருமாறு குறிப்பிட்டார்: ''மக்களின் நிலை, இவர்களிடையே ஏற்படும் மாற்றங்கள், மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகள், இவற்றின் மீதான பல்வேறு காரணிகளின் தாக்கம், இவற்றில் வெளிப்படும் பொதுவான மற்றும் தனிப்பட்ட நியதிகள், இத்துறையின் ஆராய்ச்சி முறைகள் ஆகியவற்றைப் பற்றிய ஞானங்களின் முறைதான் உண்மையிலேயே மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலில் உள்ளது''.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்களின் முறையை நிபந்தனையோடு ஒரு சில கூட்டமைப்பு

களாகப் பிரிக்கலாம். முதல் கூட்டமைப்பில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வின் தத்துவார்த்த விஞ்ஞானங்கள் அடங்கியுள்ளன. இது தத்துவார்த்த ரீதியான மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்விலிருந்து துவங்குகிறது. இதையடுத்து மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் வரலாறு, வருணிப்பு மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல், பொருளாதார ரீதியான மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல், வரலாற்று ரீதியான மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவது கூட்டமைப்பில் ஆராய்ச்சி முறைகளும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வின் தனிப்பட்ட விஞ்ஞானங்களும் அடங்கியுள்ளன. இதில் பின்வரும் துணைப் பிரிவுகள் உள்ளன: மக்களைப் பற்றிய விவரங்களின் தோற்றுவாய்கள், புள்ளிவிவர முறைகள், கணித முறைகள், சமூகவியல் முறைகள், மக்களை வரைபட முறையில் ஆராய்தல், சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை மாடல் செய்தல். இதையடுத்து பிரதேச ரீதியான மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல், செயல்முறை ரீதியான மக்கள்தொகை புள்ளிவிவர ஆய்வியல் ஆராய்ச்சிகள், சமூக-ஜனத்தொகை ரீதியான முன்னறிவிப்பு (சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை சாலச்சிறந்தவையாக ஆக்கும் நோக்கத்தோடு சமூக-ஜனத்தொகைக் கொள்கையின் தத்துவார்த்த அடிப்படைகளைத் தோற்றுவிப்பதற்கு முன்னதாக) முதலியன வருகின்றன.

மேற்கூறிய வரைபடம் நிபந்தனைக்குட்பட்டது என்பதை இன்னுமொரு முறை வலியுறுத்திக் கூறுவோம். இது தவிர இவ்வரைபடத்தை, முந்தைய அத்தியாயத்தில் தரப்பட்ட மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் முறை குறித்த வரைபடத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியது அவசியம். பொது முறையியல் விஞ்ஞானங்களும் இவற்றின் அடிப்படையில் நிலவும் மக்கள்தொகையின் பொதுத் தத்துவமும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதையும் பல்வேறு விஞ்ஞானங்கள், விஞ்ஞானப் போக்குகளுக்கும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்களுக்கும் இடையே உள்ள பரஸ்பரத் தொடர்பையும் சரிவரப் புரிந்து கொள்ள இது அவசியம். சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை முன்னறிவிப்பதும் ஜனத்தொகைக் கொள்கையின் தத்து

வார்த்த அடிப்படைகளும் மக்கள்தொகை பற்றிய புள்ளி விவர ஆய்வியலின் வரம்புகளுக்கு அப்பால் உள்ளன என் பதைக் கவனிக்க வேண்டும். இது விஞ்ஞான-நடைமுறை நடவடிக்கையின் திசையாகும், எதிர்காலத்திற்கான சமூக-பொருளாதாரக் கணிப்புகளை உருவாக்கும் திட்ட உறுப்பு கள் இதில் குறிப்பாக அக்கறை கொண்டுள்ளன. மக்கள் தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலால் மட்டும் தனியாக மக்களைப் பற்றிய கணிப்புகளைத் தர முடியாது, ஜனத்தொ கைக் கொள்கையின் அடிப்படைகளை உருவாக்க முடியாது, குறிப்பாக எதிர்காலத்திற்கான மக்கள்தொகை வளர்ச்சித் திட்டங்களைத் தீட்ட முடியாது என்பதை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும்; இங்கே பல விஞ்ஞானங்கள் ''ஒன்றின் மீது ஒன்ருக'' (''இணைப்பு''அல்ல) உள்ளன. எனவே கடைசி மூன்று கூட்டமைப்புகளில் (முன்னறிவிப்பு, கொள்கை, ஜனத் தொகை நிகழ்ச்சிப் போக்குகளைச் சாலச்சிறந்ததாக்குதல்) வரைபடமானது மக்கள்தொகை பற்றிய ஞான முறையால் கிடைக்கும் முடிவுகளின் வரம்புகளுக்குள் நின்று கொண்டிருக் கிறது.

இதை நினைவில் கொண்டு, மேற்கூறிய வரிசைக் கிரமத் தில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங் களைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

**தத்துவார்த்த மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல்** முற்றி லுமாக மக்கள்தொகையின் பொதுத் தத்துவத்தை அடிப் படையாகக் கொண்டது. சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகள், புலப்பாடுகள், மக்களுடைய புனருற்பத்தி நியதிகள் ஆகியவற்றின் பகுப்பாய்விற்கான பிரதான முறை யியல் கோட்பாடுகளை உருவாக்குவது இதன் கடமையாகும். இந்த விஞ்ஞானம் மொத்தமாக மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு ஞானங்களின் முறையையும் இம்முறை யில் தனிப்பட்ட விஞ்ஞானங்கள் ஒவ்வொன்றின் இடத்தை யும் வரையறுக்கிறது; இந்த விஞ்ஞானங்களின் ஆராய்ச்சிப் பொருளை விவரிக்கவும் சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் பகுப்பாய்வு முறை, குறிப்பிட்ட ஆராய்ச்சி வழிகள், முறைகளின் (இவற்றைத்தான் விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர், இவை நவீன கோரிக்கைகளுக்கு உகந்தவையாகக் கருதப்படுகின்றன) முக்கியத்துவத்தை நிலைநாட்டவும் தனிப்பட்ட விஞ்ஞானங்களின் மீது ஆர்வம்

கொண்டுள்ள விஞ்ஞானிகளுக்கு உதவுகிறது. பொருளாதார மற்றும் வரலாற்று மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்கள் போன்ற புதிய பிரிவுகள் உட்பட எல்லா மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானப் பிரிவுகளின் வளர்ச்சிக்குமான அடிப்படையை ஏற்படுத்துவது தத்துவார்த்த மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலின் நோக்கமாகும். மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் மேற்கொண்ட வளர்ச்சியானது, முறையியல் விஞ்ஞானம் என்ற வகையிலும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்களின் முறை உருவாவது மற்றும் தனிப்பட்ட மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்கள் வளர்ச்சியின் அடிப்படை என்ற வகையிலும் தத்துவார்த்த மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலின் ஆராய்ச்சிப் பொருளை திட்டவட்டமாக வரையறுக்கக் கோருகிறது.

**மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் வரலாறு.** மக்கள்தொகை பிரச்சினைகளைப்பற்றிய கருத்துக்களை ஆராய்வது, விஞ்ஞானம் என்ற வகையில் மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் உருவாகி வளர்ந்தது, சமூக விஞ்ஞானங்களின் முறையில் இதன் இடத்தை நிர்ணயிப்பது ஆகியவற்றை இது தனது ஆராய்ச்சிப் பொருளாகக் கொண்டிருக்கிறது. மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் வரலாறு தத்துவார்த்த மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலுடன் அங்கக ரீதியாக இணைந்துள்ளது, ஓரளவிற்கு இதன் பகுதியாக விளங்குகிறது. விஞ்ஞானங்களை வகையீடு செய்யும் பல்வேறு முறைகளில் விஞ்ஞானங்கள் தோன்றிய காலத்தின்படி இவற்றை வகையீடு செய்யும் முறையும் ஒன்றாகும். இதன்படி மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் தோன்றி வளர்ந்த வரலாற்றை காலக் கிரமத்தில் பார்க்கலாம். ஆனால் இது கணிசமான அளவிற்கு வருணிப்புக் கோட்பாடாகும்.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் உட்பட விஞ்ஞானங்களின் வரலாற்றைப் பற்றிய பகுப்பாய்வை வரலாற்று ரீதியாகப் பின்னோக்கிய திசையில் மேற்கொள்வதானது (இதில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் வளர்ச்சியின் ஆராய்ச்சி இதன் நிலையைத் தெளிவுபடுத்துவதிலிருந்து ஆரம்பமாகிறது) அதிகப் பயன்மிக்கதாகக்

காட்சியளிக்கிறது. கடைசியாக அடையப்பட்ட விஞ்ஞான வளர்ச்சியின் மட்டம் மட்டுமே முன்னர் மூலவுண்மைகளாகக் கருதப்பட்ட தத்துவங்களை மதிப்பிட உதவும். இக்கோட்பாடானது பின்வரும் அடிப்படைக் கருத்து நிலையை ஆதாரமாகக் கொண்டது: மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலால் ஆராயப்படும் புலப்பாடுகள் உட்பட சகலவித புலப்பாடுகளின் விளக்கங்களும் எப்போதுமே முழுமையானவையாக இருக்க முடியாது, ஏனெனில் முன்னர் மூலவுண்மைகளாகக் கருதப்பட்ட விஞ்ஞானக் கருதுகோள்கள் பின்னர் முறுக்கப்படலாம் அல்லது புதிய தத்துவார்த்த முறையில் சேர்க்கப்படலாம் (இது மக்கள்தொகையில் உள்ள அதிக ஆழமான தொடர்புகளையும் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்துடன் இதற்கு உள்ள தொடர்புகளையும் வெளிப்படுத்த உதவும்). அதிக உயர்வான மட்டத்தையுடைய வேறொரு தத்துவம் தோற்றுவிக்கப்படும் வரை (இது தோன்றியதும் முன்னர் பயன்படுத்தப்பட்ட தத்துவம் புதிய தத்துவத்தின் தனிப்பட்ட அங்கமாக கருதப்படும்) மக்கள்தொகை பற்றிய விஞ்ஞானத்தின் எந்த ஒரு வளர்ச்சி கட்டத்திலும் இதன் தத்துவார்த்தப் பங்கையும் நடைமுறை முக்கியத்துவத்தையும் உணர முடியாது. இந்த விஷயத்தில், அறிதல் நிகழ்ச்சிப் போக்கு எப்படி முடிவற்றதோ அதே போல் காணும் மற்றும் பகுப்பாய்வு செய்யும் புலப்பாடுகளை விளக்கும் நிகழ்ச்சிப் போக்கும் முடிவற்றது.

இதன் தொடர்பாக, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலிலும் மற்ற துணை விஞ்ஞானங்களிலும் குறிப்பிட்ட பிரச்சினை சம்பந்தமாக இதுவரை செய்யப்பட்டுள்ள அனைத்தையும் பரிபூரணமாக கணக்கில் எடுத்துக் கொள்வதும் இப்பிரச்சினையின் ஆராய்ச்சியினுடைய வரலாற்றிற்கும் மக்கள்தொகை பற்றிய ஞானங்களின் வளர்ச்சியின் பொதுவான நிகழ்ச்சிப் போக்கிற்கும் இடையிலுள்ள உறவைத் தெளிவுபடுத்துவதும் மக்கள்தொகை பற்றிய எந்த ஒரு ஆராய்ச்சிக்கும் கண்டிப்பான நிபந்தனையாக இருக்க வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்ட வேண்டும். இவ்வாறாக மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலின் வரலாற்று அம்சம் மக்கள்தொகை பற்றிய ஒவ்வொரு ஆராய்ச்சியிலும் இருக்க வேண்டும்.

**வருணிப்பு மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல்** மக்களைப் பற்றிய சித்தரிப்பைத் தரும் குறியீடுகளின்(இவை புள்ளிவிவர மற்றும் மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் விவரங்களின் அடிப்படையிலானவை) பரவலான முறையைத் தருகிறது. வருணிப்பு மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் விஞ்ஞானத்திற்கும் நடைமுறைக்கும் அளிக்கும் மக்கள் சம்பந்தமான தன்மைகள் அனைத்தையும் ஒரு சில பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த வகையீடு ஆராய்ச்சிப் பொருளைச் சுட்டிக் காட்டி விளக்க உதவுகிறது. வருணிப்பு மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் மக்களைப் பற்றிய பரவலான புள்ளி விவர சித்திரத்தைத் தருகிறது, புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகள் மற்றும் சகலவிதமான ஜனத்தொகைக் கட்டமைப்புகளைப் பற்றிய விவரங்களைத் தருகிறது. மக்கள் மத்தியில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளின் பரந்த அளவு ரீதியான நியதிகள் அல்லது சரியாகச் சொன்னால், மக்கள் மற்றும் இவர்களுடைய கட்டமைப்புகளின் புனருற்பத்தியின் அளவு ரீதியான நியதிகள்தான் இதன் விசேஷ ஆராய்ச்சிப் பொருளாகும்.

**பொருளாதார மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல்** பொருளாதார மற்றும் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளுக்கு இடையிலான, எல்லாவற்றிற்கும் மேலாக மக்களுடைய இயற்கை மற்றும் இயந்திரகதியான இயக்கத்தின் பரஸ்பரத் தொடர்பு முறையை ஆராய்கிறது. ஜனத்தொகைப் புலப்பாடுகளை நிர்வகிக்கும் வாய்ப்பை வரையறுப்பதும் பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிடுவதில் ஜனத்தொகைக் காரணிகளின் தாக்கத்தை கவனத்தில் கொள்வதும் இதன் நோக்கமாகும். ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்பிலும் பொருளாதார மற்றும் ஜனத்தொகைப் புலப்பாடுகளின் பரஸ்பரத் தொடர்பு முறைக்கு விசேஷ அம்சங்கள் உண்டு, எனவே இது அந்தந்த அமைப்பிற்கேற்றவாறு ஆராயப்பட வேண்டும். இதில் இரண்டு முக்கிய ஆராய்ச்சிப் போக்குகள் உள்ளன—ஜனத்தொகைப் புலப்பாடுகளின் மீதான பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளின் தாக்கத்தைப் பற்றிய பகுப்பாய்வு அல்லது பொருளாதார மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் மற்றும் சமூக புனருற்பத்தியின் வளர்ச்சி மீதான ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் தாக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சி அல்லது மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் பொருளாதாரம்.

**வரலாற்று மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல்** மக்கள் தொகை வளர்ச்சியின் வரலாற்று முன்தேவைகள், நியதி கள், தன்மை ஆகியவற்றையும் உற்பத்தி முறைக்கும் ஜனத் தொகை நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் இடையிலான பரஸ் பரத் தொடர்புகளையும் ஆராய்கிறது. தனிப்பட்ட மக்கள் தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் பிரிவு என்ற வகையில் வரலாற்று மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் உலகின், கண்டங்களின், தனிப்பட்ட பிரதேசங்களின், நாடுகளின் மக்கள்தொகை வளர்ச்சியின் வரலாற்றை ஆராய்கிறது; இதன் மூலம் வெவ்வேறு சமூக-பொருளாதார அமைப்பு களில் மக்களுடைய சமூக, இயற்கை மற்றும் பிரதேச ரீதியான இடமாற்ற வேகத்தின் உண்மையான வரலாற்று முக்கியத்துவத்தை நிர்ணயிக்கிறது.

சமூக-ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளைப் பகுப் பாய்வு செய்யும் முறைகளும் மக்களைப் பற்றிய விவரங்களின் தோற்றுவாய்களும் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் நியதிகளை வெளிப்படுத்துவதில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவற்றில் புள்ளிவிவர முறைகள் விசேஷ இடத்தை வகிக்கின்றன. தனியாக எடுத்துக் கொள் ளப்பட்ட சமூகப் புலப்பாடு ஒரே இயல்புள்ள அங்கங்களின் ஒட்டுமொத்தத்தால் ஆனது. ஒவ்வொரு ஒட்டுமொத்த அல கிற்கும் பல குணங்களும் பண்புகளும் உண்டு. தம்மை ஒரே மொத்தமாக ஒன்றிணைக்கும் ஒத்த பண்புடைய எல்லா அலகு களும் அதே சமயம் ஒரே மாதிரியானவை அல்ல, ஒவ்வொன் றின் பண்புகளும் குறிப்பிட்ட அளவு மாறுபடுகின்றன. ஒட்டு மொத்த அலகுகளின் குணங்கள் மாறுபடுவதானது சமூக வாழ்க்கையின் பெருமளவு புலப்பாடுகளின் நியதிகளை மறைக்கிறது. எதிரெதிராகச் செயல்படும் காரணிகளின் செல்வாக்கு பரஸ்பரம் அடைபடும் போதுதான், அதா வது போதுமான அளவு அதிகமான சந்தர்ப்பங்களில் மட்டுமே இவை வெளிப்படும். எனவே இந்நியதிகளை அறிய ஏராளமான கண்காணிப்புகள் தேவைப்படுகின்றன. பெரும் எண்களுடைய விதியின் செயலாக்கம் இதில் பிரதிபலிக் கிறது. இதன் சாரம் அவசியம் மற்றும் தற்செயலின் இயக்க வியல் ஒற்றுமையை நிர்ணயிக்கிறது. சமுதாய வாழ்வின் ஒரே அம்சத்தின் மீது ஏராளமான தற்செயலான காரணிகள் தாக் கம் செலுத்துகின்றன, எனவே இது புலப்பாட்டின் நியதிகளை

வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தரவில்லை. பெரும் எண்ணிக்கையிலான அம்சங்கள் மட்டுமே அவசியத்தை, புலப்பாட்டில் உள்ள நியதியை உணர்த்துகின்றன. சமுதாய வாழ்வின் புலப்பாடுகளுடைய வளர்ச்சிக்கான உள் காரணங்களைச் சூட்சுமமான தத்துவார்த்தப் பகுப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தலாமெனில், புள்ளிவிவர முறைகளைப் பயன்படுத்தி அனுபவ பூர்வமான நியதிகளை நிலைநாட்டி ஆராயலாம். மக்களைப் பற்றிய விவரங்களைப் பெற்று, பரிசீலித்து, பகுப்பாய்வு செய்யும் முறைகள் இதில் அடங்கும். புள்ளிவிவரக் கண்காணிப்பு, அறிக்கை, விவரங்களை வகையீடு செய்தல், மக்கள்தொகையை வருணிக்கின்ற சார்பு நிலையற்ற மற்றும் சார்புநிலை அளவுகள் ஆகியன மக்கள் தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை ஆழ்ந்து பகுப்பாய்வு செய்யவும் அதிகத் துல்லியமாக அளவீடு செய்யவும் புள்ளிவிவர முறைகள் போதுமானவையல்ல. இங்கே உயர் கணிதத்தைப் பயன்படுத்துவது தேவைப்படுகிறது. இது பிரதான ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை இவற்றின் சமூக-பொருளாதாரக் காரணங்களோடு அளவு ரீதியாக மதிப்பீடு செய்ய மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலில் தேவை. கணித முறைகளைப் பயன்படுத்துவதானது எதிர் காலத்திலும் கடந்த காலத்திலும் மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளைக் கணிக்கவும் அளவீடுகளின் தவறுகளைக் கண்டுபிடிக்கவும் வாய்ப்பளிக்கிறது. ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளைக் கணித ரீதியாகச் சித்தரிப்பதானது இவற்றின் ஆராய்ச்சியைக் கணிசமான அளவு எளிமையாக்குகிறது, ஏனெனில் அந்தந்த ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கின் வேகத்தை நிர்ணயிக்கும் ஏராளமான காரணிகளிலிருந்து ஏதாவது ஒரு காரணியின் செல்வாக்கைத் தனியே சுட்டிக் காட்டவோ முற்றிலுமாகப் பிரித்துக் கூறி அளவிடவோ இது வாய்ப்பளிக்கிறது. இதன் மூலம் ஜனத்தொகை மற்றும் சமூக-பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளுக்கு இடையிலான, பல நேரங்களில் சிக்கலானதாகக் காட்சியளிக்கும் பரஸ்பரத் தொடர்பை ஆராய்வது சாத்தியமாகிறது. உயர் கணிதத்தின் அடிப்படையில் ஒரு சில ஜனத்தொகைக் காரணிகளுக்கு இடையிலும் ஜனத்

தொகை மற்றும் சமூக-பொருளாதாரக் காரணிகளுக்கு இடையிலும் நிலவும் தொடர்பின் நெருக்கத்தைக் கணித்து மதிப்பிட முடியும். மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலில் கணிதம் பகுப்பாய்வு வெளிப்பாட்டுச் சாதன மாகவும் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை மாடல் செய்யும் சாதனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இது மற்ற காரணிகளிடமிருந்து பிரித்தும் மற்ற ஜனத்தொகை மற்றும் சமூக-பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள், காரணிகளின் தொடர்பிலும் அந்தந்த ஜனத்தொகை நிலவரத்தை ஆராய உதவுகிறது.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலர்கள் மேன்மேலும் அதிகமாக சமூகவியல் முறைகளைப் பயன் படுத்துகின்றனர். ஆவணங்களை ஆராய்வது, கண்காணிப்பு கள், பலவிதமான கேள்வி கேட்கும் முறைகள் (பேட்டி, விவரக் குறிப்புகள், சோதனைகள்), பரிசோதனைகள் முதலியன இவற்றில் அடங்கும். மக்கள்தொகையை ஆராய்வதில் மற்ற முறைகளோடு கூட வரைபட முறையும் பயன்படுத்தப்படு கிறது. புலப்பாடுகளின் பிரதேச ரீதியான சிறப்பியல்புகளை அடையாளக் குறியீடு மாடல்களாகிய வரைபடங்களின் மூலம் பிரதிபலித்து பின்னர் இவற்றை ஆராய்ச்சிப் பொரு ளுக்கு மாற்றாக உள்ள மாடல்களாக ஆராய்வதுதான் இதன் சாரமாகும்.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவரப் பகுப்பாய்வில் கூட்டு முறைகள், அதாவது முதல் பார்வைக்கு எளிமை யாகத் தோன்றும் எண் விகிதங்கள் அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றன. இவை சாராம்சத்தில் ஏராளமான விஷயங் களை (பால் விகிதம், மாறுபாடற்ற, நிலையான மக்களின் மாடல்கள், மரண விகித அட்டவணைகளின் குறியீடுகள், இயற்கையான பெருக்கத்தின் உண்மைக் குணகம், இத்தி யாதி) பொதுமைப்படுத்துகின்றன. பகுப்பாய்வு மாடல்கள், மக்களின் எதிர்காலத் தோற்றுவாய்கள், ஜனத்தொகைக் கணிப்பு சம்பந்தமான பல்வேறு துணை முறைகள், நிபந்தனை தலைமுறைக்கான அட்டவணைகள் முதலியவற்றிற்கு மக்கள் தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலில் பெரும் பங்குண்டு.

பல்வேறுவிதமான நிகழ்ச்சிப் போக்குகள் (இவற்றில் ஒவ்வொன்றும் அளவில் பெரியது, புள்ளிவிவரக் குறியீடு களின் மூலம் விளக்கப்படலாம்) **பிரதேச மக்கள்தொகைப் புள்ளி**

**விவர ஆய்வியலின்** நேரடியான ஆராய்ச்சிப் பொருளாக விளங்குகின்றன. பிறப்பு விகிதம், திருமண விகிதம், மரண விகிதம், மக்களின் ஆரோக்கிய நிலை, நிரந்தரமான மக்களும் நிரந்தர உழைப்பு மூலாதாரங்களும் பிரதேசத்தில் உருவாதல், நீண்ட நாட்கள் குடியிருப்பவர்கள் மற்றும் புதிதாகக் குடியேறியவர்களின் சாத்தியமான மற்றும் நடைமுறை இடப்பெயர்ச்சித் தன்மை, பொருளாதாரத் துறைகளில் உழைப்பு மூலாதாரங்களின் பங்கீடு, மக்களின் பூகோள ரீதியான பரப்பீடு இன்னும் சில புலப்பாடுகள் ஆகியவை இதிலடங்கும். உழைப்பின் பொருளாதாரம், உற்பத்திச் சக்திகளின் பரப்பீடு பற்றிய விஞ்ஞானம், மற்ற தனி விஞ்ஞானங்கள் ஆகியவற்றுடனை இணைப்பில் பிரதேச மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் பொதுப் பிரச்சினைகளைக் கொண்டிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகள் உற்பத்தி உறவுகளின் தீர்மானகரமான தாக்கத்தின் கீழ் நடைபெறுகின்றன. அரசியல் பொருளாதாரத்துடனும் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியின் வரலாற்றுடனும் பிரதேச மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலுக்கு நெருக்கமான தொடர்புகள் உண்டு என்பது இதன் பொருள். நிரந்தர மக்கள் உருவாகும் போது புதியவற்றிற்கு பழகிக்கொள்ளும் நிகழ்ச்சிப்போக்குகளின் முக்கியப் பங்கானது சமூகவியல், சமூக உளவியலின் ஆராய்ச்சிப் பொருளாக உள்ள புலப்பாடுகளின் பகுப்பாய்விற்கு பிரதேச மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியலை இட்டுச் செல்கிறது.

**செயல்முறை மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல்** மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் பிரிவுகளின் முறையாகும். தேசியப் பொருளாதாரத் திட்டமிடுதலுக்கும் அதிகரித்து வரும் மக்களின் பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் தொடர்பு கொண்ட தேசியப் பொருளாதாரத் துறைகள், பிரிவுகளின் திட்டவட்டமான பிரச்சினைகளின் தீர்விற்கும் இது பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏற்கெனவே உருவாகியுள்ள மற்றும் எதிர்பார்க்கும் வயது, பால் ரீதியான கட்டமைப்பு, திருமண, கல்விக் கட்டமைப்பு ஆகியவற்றின் தொடர்பில் உணவுப் பொருட்கள், ஆடைகள், மருந்துகள் மற்றும் வீடுகளின் அளவுகள், வகைகள், கட்டமைப்பு, வீட்டு வசதி

சேவை, உற்பத்தியில்லாத துறையின் (கல்வி, உடல்நலம், கலாச்சாரம்) அளவுகள் முதலியவற்றில் மக்களின் தேவைகளை நிர்ணயிக்க மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியலர்கள் உதவுகின்றனர்.

உருவாகி வரும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வு விஞ்ஞானங்களின் முறையைச் சித்தரிக்கும் முக்கிய அம்சங்கள் இவைதான். ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் சமூக-பொருளாதாரப் பரஸ்பரத் தொடர்புகள் மற்றும் விளைவுகள் சம்பந்தமான பிரச்சினைகளை முன்னுக்குக் கொண்டு வந்தது நவீன சோவியத் மக்கள்தொகைப் புள்ளி விவர ஆய்வியலின் மிக முக்கிய அம்சமாகும். இப்படிப் பட்ட ஆராய்ச்சியின் நோக்கத்திற்கும் பயனுக்கும் இரண்டு தன்மைகள் உண்டு: இது ஒரு புறம் ஜனத்தொகைக் கணிப்பிற்கும் பொருளாதாரத்தைச் சரிவரத் திட்டமிடவும் நடைமுறை பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவுகிறது, மறு புறம் சோஷலிச அரசின் சமூக-பொருளாதாரக் கொள்கையைத் திட்ட வழிகோலுகிறது.

(பிரதேசப் பங்கீடு) கட்டமைப்புகள், இன்னும் சில ஆகியன இக்கட்டமைப்புகளில் அடங்கும். இவற்றில் வயது, பால் ரீதியான கட்டமைப்பின் மாற்றங்கள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் வேகங்கள் ஊசலாடுவதாலும் (பிறப்பு விகிதம் குறைவது அல்லது அதிகரிப்பது, வயது ரீதியான மரண விகித அளவுகளில் ஏற்படும் மாற்றங்கள், தனிப்பட்ட பிரதேசங்களுக்கு—இடப்பெயர்ச்சியின் வயது ரீதியான வேகத்தின் வேறுபாட்டளவு) யுத்தங்கள் போன்ற சம்பவங்களாலும் (வயது மற்றும் பால் ரீதியாக மக்களின் பங்கீட்டில் இவை தீவிர விகிதமின்மைகளைத் தோற்றுவிக்கின்றன) நிகழ்கின்றன.

வயது, பால் ரீதியான கட்டமைப்பின் மாற்றங்கள் முதலாவதாக, உழைக்கும் திறனுள்ள வயதிலிருக்கும் மக்களிடையே வயது ரீதியாகவும் பால் ரீதியாகவும் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் எண்ணிக்கை மாற்றங்களின் மூலம் பொருளாதாரத்தின் மீது தாக்கம் செலுத்துகின்றன. சோவியத் யூனியனில் 16 முதல் 60 வயது வரையிலான ஆண்களும் 16 முதல் 55 வயது வரையிலான பெண்களும் உழைக்கும் திறனுள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர். உதாரணமாக, இவர்களின் எண்ணிக்கை 1939இல் 102.2 மில்லியனாக இருந்ததெனில் 1974இல் இது 142.7 மில்லியனாக உயர்ந்தது, அதாவது மாபெரும் தேசபக்த யுத்த ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகளைப் பொருட்படுத்தாது இவர்களின் எண்ணிக்கை 40.5 மில்லியன் அதிகரித்தது, இது சமுதாயத்தின் உழைப்பு உள்ளாற்றல் கணிசமாகக் கூடியுள்ளதற்குச் சான்று பகர்கிறது.

ஆனால் உழைப்பு மூலாதாரங்களின் மொத்த எண்ணிக்கை கூடியதில் மட்டும் விஷயம் அடங்கியிருக்கவில்லை. மக்களின் வயது, பால் ரீதியான உள்ளடக்கமும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. மக்களின் உழைப்பு நடவடிக்கை (உடல் உழைப்பு மட்டுமின்றி மூளையுழைப்பும்) பெரிதும் வயதின் செயற்பாடாகும். புதிய ஞானத்தையும் உற்பத்தியில் உள்ள முறைகளையும் இளைஞர்கள் எளிதாக கிரகிக்கின்றனர், அதே நேரத்தில் நடுத்தர வயதுடையவர்களும் முதியோரும் தமக்குப் பழகிப் போன வேலை முறைகளில் நல்ல அனுபவம் உள்ளவர்களாக இருக்கின்றனர். காலப்

போக்கில் மக்களின் உடற்கூறு ரீதியான வாய்ப்புகள் மாறுகின்றன, புதிய வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகளுக்குப் பழகிக் கொள்ளும் வேகமும் மாறுகிறது. எனவே மக்களின் வயது ரீதியான உள்ளடக்கத்தின் மாற்றம் நாட்டில் உற்பத்தி அளவின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகிறது.

வயது ரீதியான பொருளாதார நடவடிக்கையின் செயல் வன்மையை மதிப்பிடுவது சிக்கலானது, ஏனெனில் மக்களுடைய வயது ரீதியான நடவடிக்கையின் சராசரி மட்டத்தைப் பற்றிய பொது விவரங்கள் இல்லை, மேலும் வயது கூடும் போது வேலையாளின் அனுபவம் அதிகமாவது மட்டுமின்றி இவருடைய வேலை அந்தஸ்தும் வருமானங்களும் மாறுகின்றன. 1959—1960ஆம் ஆண்டுகளில் ஹங்கேரிய மக்கள் குடியரசில் நடத்தப்பட்ட விசேஷ ஆராய்ச்சியின் அடிப்படையில் இப்படிப்பட்ட அளவுகோல் ஒன்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி பொருளாதார ரீதியாக சராசரி சுறுசுறுப்புடைய வேலையாளின் உழைப்பின் உற்பத்தித் திறனை 100 சதவிகிதமாகக் கொண்டால், 15—19 வயது உள்ளவர்களுக்கு இது 71 சதவிகிதமாயும் 30—34 வயதுப் பிரிவில் 110 சதவிகிதமாயும் 50—54 வயதுப் பிரிவில் 107 சதவிகிதமாயும் 60—64 வயதுப் பிரிவில் 90 சதவிகிதமாயும் இருக்கும்.

பால் ரீதியான மக்களின் பங்கீடும் உற்பத்தி மட்டத்தின் மீது தாக்கம் செலுத்துகிறது, ஏனெனில் குறிப்பிட்ட பொருளாதாரத் துறைகளில் ஆண்கள் அல்லது பெண்களின் உழைப்பைப் பயன்படுத்துவது சிறந்தது. உதாரணமாக, தோண்டியெடுக்கும் தொழில்துறையிலும் உலோகத் தொழில்துறையிலும் ஆண்களின் உழைப்பு பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது என்றுல் நுகர்வுத் தொழில்துறையில் பெண்களின் உழைப்பு பரவலானது. குழந்தை பிறப்பு வேகம் பெண்களின் உழைப்பு நடவடிக்கை மீது தாக்கம் செலுத்துகிறது, ஏனெனில் குடும்பத்தில் குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, பெண்கள் உற்பத்தியில் ஈடுபடாமலிருக்கும் காலகட்டம் அவ்வளவுக்கவ்வளவு அதிகமானது.

மக்களின் வயது ரீதியான கட்டமைப்பு நுகர்வின் அளவு மற்றும் கட்டமைவின் மீதும் தாக்கம் செலுத்துகிறது. நவீன உடைகள், நீண்ட காலம் பயன்படுத்தத் தக்கப் பொருட்

களின் மீது இளைஞர்கள் பெரும் அக்கறை காட்டுகின்றனர். நடுத்தர மற்றும் முதிய வயதுடையவர்களின் நுகர்வுக் கட்டமைவில் விசேஷ அம்சங்கள் உள்ளன. மேலே கூறப் பட்ட ஹங்கேரிய ஆராய்ச்சியின் விவரங்களில் நுகர்வு அளவில் உள்ள வயது ரீதியான மாறுபாடுகள் பின்வருமாறு காட்சியளிக்கின்றன. ஒரு மனிதனின் சராசரி நுகர்வை 100 சதவிகிதமாகக் கொண்டால் 15—19 வயதுப் பிரிவில் இது 99 சதவிகிதமாயும் 25—29 வயதுப் பிரிவில் 138 சதவிகிதமா யும் 50—64 வயதுப் பிரிவில் 109 சதவிகிதமாயும் 65—69 வயதுப் பிரிவில் 98 சதவிகிதமாயும் உள்ளது.

ஜனத்தொகை மற்றும் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளின் பரஸ்பரத் தொடர்பைப் பற்றிய ஆராய்ச்சி யின் அங்கங்களில் ஒன்று பல்வேறு தலைமுறையினரின் உற் பத்திக்கும் நுகர்விற்கும் இடையிலான விகிதத்தை (இது மக்களுடைய வயது ரீதியான கட்டமைப்பைப் பெரிதும் பொறுத்தது) நிலைநாட்டுவதாகும். மக்கள் மத்தியில் இளைய மற்றும் நடுத்தர வயதுப் பிரிவினர் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உள்ளனரோ (மற்ற நிபந்தனைகள் அனைத்தும் சமமானவையாக இருந்தால்) நுகர்வை விட உற்பத்தி அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக இருக்கும், அதாவது சமு தாயத்தின் மேற்கொண்ட வளர்ச்சிக்காக அதன் வசமுள்ள நிதி அதிகமாக இருக்கும்.

ஒவ்வொரு தலைமுறையினரும் தம் வாழ்க்கையின் குறிப் பிட்ட ஒரு கட்டத்தில் உழைப்பு நடவடிக்கைக்குத் தயாரா வார்கள், குறிப்பிட்ட பயிற்சிகளைப் பெறுவார்கள். இதிலும், இவர்களின் கல்வித் தரம் எவ்வளவு உயர்வானதோ இப் பயிற்சிகளும் அவ்வளவு அதிகமானவை, அதாவது இறுதி யாகப் பார்த்தால் இவற்றின் பண்பு ரீதியான உள்ளடக்கம் உயர்வானது. உழைப்பு நடவடிக்கைக் கட்டம் ஆரம்ப மானதும் ஒவ்வொரு மனிதனும் அவசியமான உற்பத்திப் பொருட்களைத் தோற்றுவிக்கத் துவங்குகிறான். காலப் போக் கில் இவற்றின் அளவு அவனுடைய நுகர்வின் மட்டத்தை விட மேன்மேலும் அதிகமாகிறது. அவன் ஓய்வு பெற்றதும் அவன் சமுதாயத்தின் சாதனங்களின் உதவியோடு வாழு கிறான், ஆனால் உண்மையில் அவன் தன்னுடைய கடந்த காலத்திய சேமிப்புகளைக் கொண்டு வாழுகிறான். பல்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த மக்களின் மத்தியில் இப்படிப்பட்ட

''சேமிப்புகளின்'' அளவை நிர்ணயிப்பதும் மக்களுடைய வயது ரீதியான உள்ளடக்கம் மற்றும் கல்வி மட்டம், தொழில் ரீதியான கட்டமைப்பு போன்ற இவர்களின் பண்பு ரீதியான தன்மைகள் ஆகியன இந்த சேமிப்பு அளவுகளின்மீது செலுத்தும் தாக்கத்தை வரையறுப்பதும் இத்துறையின் கடமைகளில் சிலவாகும். உதாரணமாக, சோவியத் விஞ் ஞானியாகிய உர்லானிசின் மதிப்பீடுகளின்படி உழைப்பின் உற்பத்தித் திறனின் மட்டம் 1968ஆம் ஆண்டின் மட்டத் தில் இருக்கிறது என்று வைத்துக் கொண்டால் பொருளா யத உற்பத்தித் துறையில் உள்ள ஒருவன் தன் வாழ்நாளில் வேலை செய்த காலத்தில் சராசரியாக 1,08,000 ரூபிள்கள் மதிப்பைத் தோற்றுவிக்கிறான்.

வயது ரீதியான மரண விகித வேகத்தின் மாற்றமும் மக் களுடைய வயது, பால் ரீதியான உள்ளடக்க மாற்றத்தின் மூலம் பொருளாதாரத்தின் மீது தாக்கம் செலுத்துகிறது. மரண விகிதம் குறையும் போது உழைக்கும் வயதுப் பிரிவி னர் உட்பட பொதுவாக மக்களின் வாழ்க்கை நீடிக்கிறது. நம் காலத்தில், உழைக்கும் திறனுள்ள வயதுப் பிரிவினரின் மரண விகிதத்தைக் குறைத்து, வாழ்க்கையை நீட்டிப்பது சம்பந்தமான நடவடிக்கைகள் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. உதாரணமாக, பொதுவில் உழைக்கும் திற னுள்ள ஆண்கள் அதிக பட்சம் உழைக்கும் காலம் 44 ஆண்டு களாக இருக்க வேண்டுமெனில் (அதாவது 16 வயது முதல் 60 வயது வரை) நடைமுறையில் இந்த குறியீடு 1896—1897 ஆம் ஆண்டுகளில் 36.2 வருடங்களாயும் 1958—1959ஆம் ஆண்டுகளில் 40.5 வருடங்களாயும் இருந்தது.

மற்ற ஜனத்தொகைக் கட்டமைப்புகளும் பொருளாதார வளர்ச்சியின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகின்றன. நீண்ட காலம் பயன்படக் கூடிய பொருட்களின் நுகர்வு அளவின் மீது மக்களின் குடும்ப உள்ளடக்கம் செல்வாக்கு செலுத்துகிறது. வெவ்வேறு விதமான குடும்பங்கள் வீட்டு வசதிகளை வெவ்வேறாக நாடுகின்றன. குழந்தையில்லாத மற்றும் ஓரிரண்டு குழந்தைகளையுடைய குடும்பங்கள் எளிதாக மனம் மாறுதலடையக் கூடியவை, பல்வேறு விதமான சேவைகளை இவை அதிகமாக நாடுகின்றன, ஓய்வு நேரத்தைப் பரவலான முறையில் பயன்படுத்துகின்றன.

மக்களின் கல்வித் தரம் பொருளாதார வளர்ச்சி வேகங்

களின் மீது பெரும் செல்வாக்கைச் செலுத்துகிறது. மற்ற நிபந்தனைகள் சமமாக இருக்கையில் வேலை செய்யும் மக்களின் கல்வித் தரம் சராசரியாக எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு உழைப்பின் உற்பத்தித் திறன் கூடுதலானது. மக்களின் பிரதேச ரீதியான பங்கீடும் பெரும் தாக்கம் செலுத்துகிறது. மக்களின் இடப்பெயர்ச்சி இன்றி, நாட்டில் இவர்களை மறு பங்கீடு செய்யாமல் புதிய பிரதேசங்களை மீட்க முடியாது, பெரும் தேசியப் பொருளாதார இணையங்களைத் தோற்றுவிக்க இயலாது. நாட்டின் ஒரு பகுதியில் உழைப்பு மூலாதாரங்கள் போதாமலிருப்பதோ, வேறு பகுதியில் இவை மிதமிஞ்சியிருப்பதோ சமுதாயத்தின் மூலாதாரங்கள் விவேகமின்றி பயன்படுத்தப்படுவதற்கு இட்டுச் செல்லும், பொருளாதார வளர்ச்சி வேகங்களைக் குறைக்கும்.

பொருளாதார புனருற்பத்தி பரஸ்பரம் தொடர்புடைய பல அங்கங்களால் (உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, தனிப்பட்ட மற்றும் உற்பத்தி நுகர்வு) ஆனது. இவற்றில் ஒவ்வொன்றும் சிக்கலான, விசேஷ புலப்பாடாகும், ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகள் உட்பட மற்ற எல்லா சமூக நிகழ்ச்சிப் போக்குகளுடனும் குறிப்பிட்ட பரஸ்பரத் தொடர்பைக் கொண்டுள்ளது. மக்களுக்கும் உற்பத்திக்கும், மக்களுக்கும் பொருளாயத நலன்களின் வினியோகத்திற்கும், மக்களுக்கும் நுகர்விற்கும் இடையிலுள்ள பரஸ்பரத் தொடர்பைத் தனித்தனியே ஆராய்ந்து, சமுதாய அமைப்பின் விசேஷத் தன்மையைக் கவனத்தில் கொண்டால் ''ஜனத்தொகை-பொருளாதார பரஸ்பரச் செயலாக்கத்தை'' மிகவும் பரிபூரணமாக ஆராயலாம். இப்பிரச்சினைகளில் ஒவ்வொன்றும் பெரிய, விசேஷ ஆராய்ச்சிப் பொருள் என்பது புரியக் கூடியதே. எனவே இந்தப் பரஸ்பரத் தொடர்புகளைப் பொதுவான அம்சத்தில் பார்ப்பதுடன், முக்கியமாக மக்கள் மற்றும் உற்பத்தி, மக்கள் மற்றும் நுகர்வு சம்பந்தமாக ஆராய்வதுடன் (இங்கேதான் பொருளாதார-ஜனத்தொகைத் தொடர்புகள் மிகத் தெளிவானவை) நம் ஆராய்ச்சியை மட்டுப்படுத்திக் கொள்வோம்.

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மாற்றம் உற்பத்தி உட்பட பொருளாதாரத்தின் மீது செல்வாக்கு செலுத்துகிறது. முதலாவதாக, உழைப்பு மூலாதாரங்களின்

அளவும் பண்பும் மாறுவதன் மூலம் இது நடைபெறுகிறது. உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சி, சமுதாய உற்பத்தியின் கட்டமைவைக் கணக்கில் கொண்டால் பயன் தன்மையோடு இயங்கும் பொருளாதாரத்திற்கு வெவ்வேறு தேர்ச்சியுடைய வேலையாட்கள் குறிப்பிட்ட அளவு மட்டுமே தேவை. எனவே இருக்கக் கூடிய உழைப்புச் சக்தியின் மூலாதாரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பானது, வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த வேலையாட்கள் உற்பத்திக்கு எவ்வளவு தேவைப்படுகிறார்கள் என்பதையும் தம் உடற்கூறு ரீதியாகவும் கல்வி மற்றும் தொழில் பயிற்சித் தகுதிகளின்படியும் பல்வேறு விதமான வேலைகளைச் செய்ய வல்ல வேலையாட்கள் இருப்பதையும் பொறுத்தது.

விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தாக்கத்தினால் மக்கள், வேலையாட்களின் பண்புநிலைக் காரணிகளின் மீதும் (கல்வித் தரம், புதிய தொழில்நுட்பத்தை அல்லது தொழிலைக் கற்றுக் கொள்ளும் காலம் போன்றவை,) இவர்களின் எண்ணிக்கை மீதும் உள்ள கோரிக்கைகள் இடைவிடாது மாறி வருகின்றன. மக்களுடைய கல்வித் தரம் உயர்வதும் கல்வி பெறும் காலகட்டம் அதிகரிப்பதும் உழைப்பு மூலாதாரங்களின் எண்ணிக்கைமீது தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக, சோவியத் யூனியனில் உழைப்பில் நுழையும் இளைஞனின் வயது சட்டபூர்வமாக 16 என்றிருந்தாலும் நடைமுறையில் 17.5 வயதாக உள்ளது. பொது செகண்டரிக் கல்வி முறை நிலவுகையில், செகண்டரிப் பள்ளியையும் தொழிற்பள்ளிகளையும் முடிப்பவர்களில் நான்கில் ஒரு பங்கினர் உயர்கல்வி நிலையங்களில் சேர்வதாக வைத்துக் கொண்டால் இது 19.5 வயதாக அதிகரிக்கும். ஊழியர்களின் பயிற்சிக் கட்டமைப்பு ஜனத்தொகைக் கட்டமைப்புகளை விட அதிக விரைவாக காலத்தில் மாறினாலும் இதுவும் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் கோரிக்கைகளிலிருந்து பின் தங்கியிருக்கக் கூடும் என்பதை இதன் தொடர்பாக நினைவு படுத்த வேண்டும். தொழில் ஞானம் ''ஆன்மீக ரீதியாக'' பழமையாகி வருவதன் சராசரி காலகட்டம் இப்போது சுமாராக 8 ஆண்டுகளாக உள்ளது. இக்காலகட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது. எனவே ஏற்கெனவே குறிப்பிட்டபடி, போதுமான அளவு இளைஞர்கள் இல்லாத சமுதாயம் (மற்ற எல்லா நிபந்தனைகளும் சமமாக இருக்கையில்) தன் வளர்ச்சி

யில் குறிப்பிட்ட சில இடர்ப்பாடுகளைச் சந்திக்கக் கூடும். இன்னும் பல ஜனத்தொகைக் கட்டமைப்புகளும் சமுதாய உற்பத்தியின் அளவு மற்றும் கட்டமைப்பின் மீது தாக்கம் செலுத்துகின்றன.

சோஷலிசச் சமுதாயத்தின் வினியோகக் கோட்பாடானது (''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் அவரவர் உழைப்பிற்கேற்ப'') உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் வினியோகம் ஏற்கெனவே உருவாகியுள்ள மக்களின் பொருளாதாரத் துறை, கல்வி, தொழில் ரீதியான கட்டமைப்பை பெரிதும் சார்ந்திருக்கு மாறு செய்கிறது. இது தன் பங்கிற்கு பல்வேறு மக்கள் பிரி வினரின் வாங்கும் திறன் மீது கணிசமான தாக்கம் செலுத்து கிறது. மக்களின் பிரதேச ரீதியான கட்டமைப்பும் உயர் வான வருமான மட்டங்களையுடைய பிரதேசங்கள் இருப்ப தன் மூலம் (பிரதேசப் பரப்பீடும் சில விசேஷ சூழ்நிலைகளும் இதற்குக் காரணம்) மக்களுடைய நுகர்வு மட்டம் மற்றும் கட்டமைப்பின் மீது தாக்கம் செலுத்துகிறது.

சோஷலிசச் சமுதாயம், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் வினியோகத்தை உணர்வு பூர்வமாக குறிப் பிட்ட வயதுப் பிரிவினர் மற்றும் சில பிரிவினருக்கு ஆதரவாக மாற்றியமைக்கிறது. குழந்தைகள், முதியோர், யுத்தத்திலும் உழைப்பிலும் உடல் ஊனமுற்றோர் ஆகியோர் இந்த வகை யினராவார்கள். இவர்களுக்காகப் பல சலுகைகள், குறிப் பாக சமூக நிதிகள் முறையின் மூலம் அளிக்கப்படுகின்றன. எனவே எல்லாக் கட்டமைப்புகளின் மாற்றம் தேசிய வரு மானப் பங்கீட்டின் கட்டமைப்பையும் மாற்றுகிறது. சோவி யத் யூனியனில் பிறப்பு விகித வேகத்திற்கு ஒரு சில குறிப் பிட்ட தேசியச் சிறப்பியல்புகள் உள்ளன என்பதைக் கணக் கில் கொள்ளும் போது மக்களுடைய தேசிய உள்ளடக்கத் தின் மாற்றம் நாட்டிலும் குடியரசுகளிலும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் வினியோகத்தின் மீது குறிப் பிட்ட அளவு தாக்கம் செலுத்துகிறது. மொத்தத்தில், மக் களின் வயது, பால் ரீதியான கட்டமைப்பும் மற்ற எல்லாக் கட்டமைப்புகளும் சோஷலிசச் சமுதாயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் வினியோகக் கட்டமைப்பின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகின்றன எனலாம்.

அடுத்த கட்டம் நுகர்வு ஆகும். இதன் உள்ளடக்கமும்

மட்டமும் ஜனத்தொகைக் கட்டமைப்புகளைப் பொறுத்த வையாகும். வயதுவந்த ஒவ்வொரு மனிதனின் நுகர்வு மட்டமும் எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டின் மொத்த உழைப்பு முயற்சிகளுக்குச் செலுத்தும் பங்கால் நிர்ண யிக்கப்படுகிறது. தனிநபரின் கல்வித் தரம், தொழிற்பயிற்சி, வயது ஆகியவை, அதாவது பெரும்பாலும் சமூக-பொருளா தாரக் காரணிகள் இவனுடைய உழைப்புப் பங்கின் மீது (எனவே நுகர்வின் மீது) தாக்கம் செலுத்துகின்றன. மொத்த மாக மக்களுடைய நுகர்வின் மொத்த அளவிற்கு (அளவு ரீதியாக மட்டுமின்றி கட்டமைப்பிலும்) மக்களுடைய வயது, பால் ரீதியான உள்ளடக்கம் பெரும் முக்கியத்துவம் வாய்ந் தது. இறுதியாக, மக்களுடைய சொந்தச் சொத்துகள் அதி கரிப்பதன் மூலம் ஜனத்தொகைக் கட்டமைப்புகள் சோஷ லிசச் சேமிப்பின் அளவு மீது தாக்கம் செலுத்துகின்றன. சொந்தச் சொத்து தன் பங்கிற்கு ஓரளவு சில ஜனத்தொகை அளவுகோல்களைச் சார்ந்தது.

இவ்வாறாக, மக்களுடைய புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகள் ஜனத்தொகைக் கட்டமைப்புகளின் இயக்கப் போக்கின் மூலம் ''பொருளாதார'' புனருற்பத்தி மீது கணிச மான தாக்கம் செலுத்துகின்றன. இந்தப் பரஸ்பரச் செய லாக்க முறை போதுமான அளவு சிக்கலானது. பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கு களின் மீது முக்கியமாக கருத்துக்கள் முறை மூலம் தாக்கம் செலுத்துகின்றன என்றால், ஜனத்தொகை கட்டமைப்பு களின் மாற்றங்கள் கணிசமான அளவிற்குச் சமுதாயத்திற்கு உரித்தான பொருளாயத நலன்களின் வினியோக முறை மூலம் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளின் மீது தாக் கம் செலுத்துகின்றன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், முற்றிலும் ஜனத் தொகை மற்றும் சமூக-பொருளாதாரப் புலப்பாடுகளின் இயக்கப் போக்கின் படிப்படியான மாற்றங்கள் மக்களின் கட்டமைப்பு காலத்தில் ஒப்பீட்டளவில் மெதுவாக மாறு வதற்கு இட்டுச் செல்கின்றன, திட்டப் பொருளாதாரத்தில் இம்மாற்றங்களை உரிய முறையில் கவனத்தில் கொள்ளலாம். உதாரணமாக, உழைப்பு மூலாதாரங்களின் மொத்த அளவு குறையும் போது உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும், சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் நாட்

டின் தனிப்பட்ட பகுதிகளில் பற்றுக்குறையான பிரிவின் வேலையாட்களைக் கொண்டு வர ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் (இவை பல நேரங்களில் ஏதாவது அசாதாரண சம்பவங்களாலும் இவற்றின் விளைவுகளினாலும் ஏற்படுகின்றன) ஜனத்தொகைக் கட்டமைப்புகள் வரலாற்று ரீதியாக குறுகிய காலகட்டத்தில் மாறக் கூடும். இது பொருளாதாரத்தின் முன் சிக்கலான கடமைகளை வைக்கக் கூடும். உதாரணமாக, நடுத்தர வயதுடைய ஆண்கள் யுத்தத்தில் பெருமளவு மாண்டால் பெண்களையும் முதியோரையும் பால்ய பருவத்தினரையும் உழைப்பில் ஈடுபடுத்தும் அவசியம் ஏற்படுகிறது, வேலை செய்யும் மக்களின் கட்டமைவைக் கணிசமாக மாற்றியமைக்க வேண்டியதாகிறது.

ஜனத்தொகை மற்றும் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளுக்கு இடையிலான பரஸ்பரத் தொடர்பு இவற்றின் இடையேயான மிகவும் உகந்த விகிதங்களை நிர்ணயிப்பதை (முதலில் கருத்தியல் ரீதியாகவும் பின்னர் நடைமுறையிலும்) அவசியமாக்குகிறது. இவ்விகிதங்களை நெருங்கி வருவதானது தேசியப் பொருளாதாரம் முழுவதன் பயன் தன்மையை உயர்த்த உதவுகிறது. இவ்விகிதங்களின் கோட்பாட்டுச் சாரம், ஒவ்வொரு சமூக அமைப்பின் முக்கிய ஜனத்தொகை மற்றும் பொருளாதார விதிகளின் செயலாக்கத்தால் பெரிதும் நிர்ணயிக்கப்படுகிறது.

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை மிகவும் உகந்தவையாக ஆக்குவதானது சோஷலிசத்தின் முக்கியப் பொருளாதார விதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான மிகச் சிறந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தும் அதே சமயத்தில் எல்லா தேசியப் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளையும் மிக உகந்தவையாக ஆக்கும் அம்சமாகத் திகழுகிறது.

ஜனத்தொகை ஏற்பு நிலையை அடைவது எதார்த்தமாக நிலவும் கடமை. இது ஒரு சில நிபந்தனைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. இவற்றில் ஒன்று சமுதாயத்தின் மூலாதாரங்கள், குறிப்பாக உழைப்பு மூலாதாரங்கள் மட்டானவையாக இருப்பதாகும். இவை 15—20 ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட வரம்புகளுக்குள் இருக்கும். எனவே, எல்லா மூலாதாரங்களையும் பயன்படுத்தும் பயன்தன்மை நிலையிலிருந்து தனக்கு மிகவும் ஏற்ற மக்கள்தொகை வளர்ச்சி வகையைத் தன்

எதிர்காலத் திட்டங்களில் இருந்து சோஷலிசச் சமுதாயத்தால் நிர்ணயிக்க முடியும், நிர்ணயிக்க வேண்டும். சோஷலிசச் சமுதாய வளர்ச்சிக்கான ஒரே லட்சியம் நிலவுவது (இது ஜனத்தொகை வளர்ச்சி உட்பட சமூக-பொருளாதார வளர்ச்சியினுடைய பயன் தன்மையின் அளவுகோல்களை நிர்ணயிக்க உதவ வேண்டும்) ஏற்பு நிலைப் பிரச்சினைகள் இருப்பதற்கான முக்கிய நிபந்தனையாகும். ஜனத்தொகை ஏற்பு நிலையின் அளவுகளை நிர்ணயிப்பதில் உள்ள இடர்ப்பாடுகள் மிகவும் பெரியவை. முதலாவதாக, மிக உகந்ததாக ஆக்கப்படும் பொருள் என்ற வகையில் மக்களுடைய அந்தந்தப் புனருற்பத்தி வகை தோன்றுவதை நிர்ணயிக்கும் காரணிகளின் சிக்கலான தன்மையாலும் பன்முகத் தன்மையாலும் இவை வரையறுக்கப்படுகின்றன. இரண்டாவதாக, ஜனத்தொகை ரீதியாக நாட்டின் பல்வேறு பகுதிகளின் முன் நிற்கும் லட்சியங்கள் எல்லா நேரங்களிலும் ஒத்துப் போவதில்லை. அதே சமயம் இவை எப்போதுமே பொதுவான, பிரதான வளர்ச்சிக் கொள்கையின் அங்கங்களாகும், ஒரே பொது லட்சியத்தின் தீர்விற்கு உட்பட்டவை. எனவே ஜனத்தொகை ரீதியான மிகவும் உகந்த அம்சத்தின் பொது அளவுகோலைப் படிவரிசை முறையாகக் கருத வேண்டும்.

பொருளாதார-ஜனத்தொகை பரஸ்பரத் தொடர்புகளின் சிக்கலான தன்மை ஏற்பு நிலையின் பொருளாதார அளவுகோலின் கூட்டுத் தன்மையை முன் நிர்ணயம் செய்கிறது. இது பின்வருவதில் அடங்கியுள்ளது: மக்களுடைய புனருற்பத்தியின் விவேகமான வகையைத் தோற்றுவிக்கும் கடமையை வெறும் பொருளாதார நிலைகளிலிருந்து மட்டும் தீர்ப்பதானது சில தனிப் பிரச்சினைகளின் தீர்வையும் முன்னனுமானிக்கிறது. அகில யூனியன் மற்றும் பிரதேசப் பொருளாதார-ஜனத்தொகை ஏற்பு நிலைகளின் விகிதப் பிரச்சினை, நாடு தழுவிய அளவிலும் தனிப்பட்ட பிரதேசங்களிலும் மக்களுடைய சகலவிதமான இயக்கங்களின் மிகவும் உகந்த விகிதம் பற்றிய பிரச்சினை, நாடு முழுவதிலும் பிரதேசங்களிலும் உழைப்பு மூலாதாரங்களின் மிக விவேகமான தொழில் ரீதியான கட்டமைப்புப் பிரச்சினை, இன்னும் சில பிரச்சினைகள் ஆகியன இவற்றில் அடங்கும்.

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் பெரும் சடத்துவத்தின் பயனாய் மக்கள்தொகை புனருற்பத்தியின் மிகவும்

உகந்த வகையைத் தோற்றுவிக்க நீண்ட காலம் தேவைப் படும் என்பதாலும் ஏற்பு நிலையின் பொருளாதார அளவு கோலைத் தேர்ந்தெடுப்பது கடினமாகிறது. வேறுவிதமாகச் சொல்வதெனில், ஏற்பு நிலையின் பொருளாதார-ஜனத் தொகை அளவுகோல் இன்று கணிசமாக மாறினால் நாளை இதற்கேற்றபடி ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் தன்மையும் மாறும் என்று எண்ணக் கூடாது.

ஜனத்தொகை ஏற்பு நிலையின் குறியீட்டை (அல்லது இவற்றின் முறையை) உருவாக்கும் கடமையும் மிக முக்கிய மானது. இக்குறியீடு சில கோரிக்கைகளுக்கு உகந்ததாயிருக்க வேண்டும்: 1) மொத்தமாகவும் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் செல்வாக்கின் கீழும் ஏற்பு நிலையின் அளவுகோல் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புலப்பாடுகளின் மாற்றங் களில் முக்கியப் போக்குகளையும் இவற்றின் தலைகீழான தொடர்பையும் (பொது வடிவத்திலாவது) சித்திரிக்க வேண் டும்; 2) இக்குறியீட்டை (அல்லது இவற்றின் முறையை) கணக்கிடுவது உண்மையில் நிலவும் (அல்லது சாத்தியமான) தகவல் முறையின் அடிப்படையில் நடைமுறை ரீதியாகச் சாத்தியமானதாக இருக்க வேண்டும்; 3) இத்தகைய கணக் கீடு நாடு முழுவதற்குமாக இருப்பதோடு கூட இதன் பிர தேசங்களுக்கும் இருப்பது சிறந்தது; 4) பொருளாதார அளவுகோலின் பொது அளவின் மாற்றத்தை மட்டுமின்றி இதன் கட்டமைப்பையும் இயன்ற அளவிற்கு இதன் பண்பு ரீதியான அம்சத்தையும் காட்ட வேண்டும்; 5) பொருளா தாரப் புலப்பாட்டின் வளர்ச்சி நிகழ்ச்சிப் போக்குகளை மட்டு மின்றி இதன் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளையும் சித்தரிக்க வேண்டும். எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட குறியீடு பெரும்பாலும் பொருளாதார நிலவரம் மற்றும் நாட்டு பொருளாதார வளர்ச்சியின் தொகுப்பு அம்சமாக இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட குறியீட்டை (அல்லது இவற்றின் தொகு தியை) தேர்ந்தெடுப்பது பொருளாதார ஆராய்ச்சிகளின் மிக முக்கியத் துறைகளில் ஒன்றாகும். தேசிய வருமானக் குறியீட்டை (அல்லது இதன் பல்வேறு மாதிரிகளை) ஜனத் தொகை ஏற்பு நிலையின் அளவுகோலை வருணிக்கும் காரணி யாகப் பயன்படுத்தினால் இதன் முழுமுதல் அளவுகளை (அல்லது இதன் அதிகரிப்பு வேகங்களை) ஒப்பிடுவதிலிருந்து தேசிய

வருமான புனருற்பத்திக் குறியீடுகளுக்கு மாறி வர முயல வேண்டும். இக்கடமையின் நிறைவேற்றம், அதிலும் குறிப்பாக தேசிய வருமானம் மற்றும் மக்களின் புனருற்பத்திக்கு இடையிலான பரஸ்பரத் தொடர்பைப் பற்றி பேசும் போது முறையியல் இடர்ப்பாடுகளுடன் தொடர்புடையது. மக்களின் (இவர்களில் உழைக்கும் பிரிவினரையும் சேர்த்து) மற்றும் தேசிய வருமானத்தின் புனருற்பத்தி வேகங்களில் காலத்தில் நிலவும் வேறுபாடு இவற்றில் ஒன்றாகும். நாடு தழுவிய அளவில், பொருளாதார முறை முழுவதன் அளவில் மட்டுமே தேசிய வருமானம் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் ஏற்பு நிலையின் அளவுகோலைச் சித்தரிப்பதற்காகப் பயன்படுத்தப்படலாம். தேசிய வருமானத்தைக் குடியரசுகளுக்கிடையில் பொருளாதார ரீதியாக மறு பங்கீடு செய்யும் முறை நிலவுவதானது (இதன் அளவுகள் பல சமயங்களில் சோஷலிசச் சமுதாயம் முழுவதன் உயர் நலன்களால் நிர்ணயிக்கப்படுகின்றன, உதாரணமாக முன்னர் பின்தங்கியிருந்த மக்கள் உயர்வான பொருளாதார வளர்ச்சி மட்டத்தை அடைய மிகக் குறுகிய காலகட்டத்தில் உதவ வேண்டும் என்ற முயற்சியால் நிர்ணயிக்கப்படுகின்றன) குடியரசால் உற்பத்தி செய்யப்பட்டு, நுகரப்பட்ட தேசிய வருமானம் அளவில் பெரிதும் மாறுபடுவதற்கு இட்டுச் செல்கிறது. விலைகள் தோன்றும் முறையின் செயலாக்கத்தையும் கவனத்திலிருந்து தவறவிடக் கூடாது. ஏற்பு நிலையின் அளவுகோல் என்ற வகையில் தேசிய வருமானம் (குறிப்பாக நாட்டின் தனிப்பட்ட பிரதேசங்களுக்காக இதைக் கணக்கிட்டால்) மக்கள்தொகையின் பண்பு ரீதியான உள்ளடக்கத்தின் மாற்றத்தை முழுமையாகக் காட்டுவதில்லை.

ஒரே ஐக்கிய முறையின் பகுதிகள் என்ற வகையில் நாட்டின் தனிப்பட்ட பிரதேசங்களுக்கு தேசிய வருமானத்தின் அதிகரிப்பு சில சமயங்களில் ஜனத்தொகை ஏற்பு நிலையின் அளவுகோலாக இருக்க முடியாது, உதாரணமாக, இப்பகுதியின் உற்பத்திச் சக்திகளின் துரிதமான வளர்ச்சி, இங்குள்ள இயற்கைச் செல்வங்களை வரலாற்று ரீதியாகக் குறுகிய காலகட்டத்தில் மீட்பது என்பவைதான் இத்தகைய அளவுகோலாக இருக்க முடியும். ஏற்பு நிலையின் அகில யூனியன் அளவுகோல் இருப்பதானது தனிப்பட்ட, பொது லட்சியத்திற்கு உட்பட்ட பிரதேச ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கு

கள் மற்றும் கட்டமைப்புகளின் அளவுகோல்கள் முறை நிலவு வதை மறுக்காதது மட்டுமல்ல, இதை முன்னனுமானிக்கவும் செய்கிறது.

பொருளாதார-ஜனத்தொகை ஏற்பு நிலை சம்பந்தமான பிரச்சினைகளின் ஆராய்ச்சியில் மக்களுடைய புனருற்பத்தி யின் ஏற்பு நிலையின் அளவைகளை நிர்ணயிப்பது மிக முக்கிய மானதாகும். மற்ற எல்லாவற்றையும் போன்றே ஜனத் தொகை நிகழ்ச்சிப் போக்குகளும் காலத்தில் நடைபெறு வதால் ஏதாவதொரு கால இடைவெளியைக் கவனத்தில் கொண்டு மட்டுமே ஏற்பு நிலை விகிதங்களைப் பற்றிக் கூற முடியும். எனவே குறிப்பிட்ட வரலாற்று மற்றும் சமூகச் சூழ்நிலைகளில் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தின் அதிக பட்ச சாத்தியமான வளர்ச்சி நிலைகளிலிருந்து (அல்லது வேறு அளவுகோல்களிலிருந்து) ஜனத்தொகை ஏற்பு நிலையை ''மக்கள்—பொருளாதாரம்'' என்ற முறையின் குறிப்பிட்ட நிலையாகச் சித்தரிக்க முடியும்.

மக்களுடைய புனருற்பத்தியில் நிலவும் பிரதேச வேறு பாடுகளை இயன்ற அளவு அதிகபட்சம் குறைத்து, பிறப்பு விகிதத்தை திட்டமிட்டு குறைப்பதைப் பொதுவாகப் பரவச் செய்தாலும் கூட கட்டமைப்புக் காரணிகளால் உண்டாக்கப் படும், சமயாசமயங்களில் ஏற்படும் பிறப்பு, இறப்பு விகிதங் களின் ஒரு சில ஊசலாட்டங்கள் சாத்தியம். இவை செயல் படும் வட்டங்கள் படிப்படியாகக் குறையும், ஆனால் இவை அனேகமாக நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும். எனவே மக் களுடைய மிகவும் உகந்த புனருற்பத்தியைப் பற்றி பேசும் போது ஒரு சிறிய ''மண்டலத்தைப்'' பற்றிக் கூற வேண்டும், இதன் வரம்புகளுக்குள், திட்டவட்டமான வரலாற்றுச் சூழ் நிலைகளுக்கேற்ப இந்த மிகவும் உகந்த புனருற்பத்தியின் குறியீடுகள் நீண்ட காலகட்டத்திற்கு மாற்றமுறும்.

பொதுவாக மக்களுடைய புனருற்பத்தியின் மிகவும் உகந்த முறையை மட்டுமின்றி மக்களின் தேவையான வயது ரீதியான கட்டமைப்பை உருவாக்கிப் பாதுகாக்க உதவும் முறையையும் தோற்றுவிப்பதில் சமுதாயம் அக்கறை கொண் டுள்ளது. இக்கட்டமைப்பு ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கு களின் மீது மட்டுமின்றி ஏற்கெனவே குறிப்பிட்டபடி உற் பத்தி மற்றும் நுகர்வின் மட்டம், வேகங்கள் மீதும் தாக்கம் செலுத்தும். மக்களுடைய புனருற்பத்தியும் இதன் குறி

யீடுகளும் ஒப்பீட்டளவில் நிலையானவையாக இருக்க, விகிதாச்சாரமான வயது ரீதியான கட்டமைப்பில் தலைமுறை ரீதியான பிறப்பு விகிதங்களின் வேகமும் (கோட்பாட்டளவில் மரண விகிதம் வெவ்வேறு வேகங்களில் குறைய வேண்டும்) காலத்தில் இவற்றின் பங்கீடும் ஒப்பீட்டளவில் மாற்றமின்றி இருக்க வேண்டியது அவசியம்; இது பெரும்பாலும் மக்களுடைய புனருற்பத்தி முறை முழுவதன் ஸ்திரத் தன்மைக்கும் வழிகோலுகிறது.

சோவியத் விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மக்களுடைய புனருற்பத்தியின் மிகவும் உகந்த வகை பற்றிய ஒரு சில கோரிக்கைகளை முன்வைக்க உதவுகின்றன, இவை இதன் அளவுகளைத் துல்லியமாக்கும் வாய்ப்பை அளிக்கின்றன. சோவியத் மக்களின் முக்கியக் கடமையை (கம்யூனிசச் சமுதாயத்தைக் கட்டி மேற்கொண்டு வளர்த்தல், மக்களுடைய பொருளாயத வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்) விரைவாக நிறைவேற்ற மிகச் சிறப்பான முறையில் உதவும் புனருற்பத்தி வகையாக இது இருக்க வேண்டும். தீவிர ஜனத்தொகைக் கொள்கையின் உதவியோடு நாடு தழுவிய அளவிலும் இதன் பல்வேறு பகுதிகளுக்கும் கோட்பாட்டு ரீதியாக மக்களுடைய புனருற்பத்தியின் ஒரே வகையை (பிறப்பு விகித, மரண விகித முறையைச் சேர்த்து) உருவாக்குவதைப் பற்றி இங்கே பேசப்படுகிறது; இது புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளின் ஒரு சில, சிறிய பிரதேச மாறுபாடுகளின் வாய்ப்பை மறுக்கவில்லை.

புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளில் உள்ள அங்கங்களின் ஒரு சில ஊசலாட்டங்கள் சமயாசமயங்களில் தவிர்க்க இயலாதவை. இவை பெரும்பாலும் கட்டமைப்புக் காரணிகளால் உண்டாக்கப்படுகின்றன. இவற்றின் தவிர்க்க இயலாத் தன்மை பின்வருபவற்றைக் கூறுகிறது: மிகவும் உகந்த புனருற்பத்தி வகை என்பதை ''வரையறுக்கப்பட்ட'' ஏற்பு நிலையாகப் புரிந்து கொள்ளாமல், புனருற்பத்திக் குறியீடுகள் மாற்றமடையக் கூடிய, ஒப்பீட்டளவில் சிறிய ஒரு ஏற்பு நிலை மண்டலமாகப் புரிந்து கொள்ள வேண்டும். தலைமுறைகளின் சமமான, சீரிசைவான பரஸ்பர மாற்றீட்டு தன்மைக்கு மக்களின் வயது ரீதியான கட்டமைப்பு (இது பெரும் பிரதேச அலகுகளுக்காக புனருற்பத்தி முறையால் அளிக்கப்படும்) ஒப்பீட்டளவில் விகிதாச்சாரமானதாக

மக்கள்தொகையின் பூகோளம் ஒரேவிதமான புலப்பாடு களை ஆராயும் போது இது இதை ஒட்டிய விஞ்ஞானங்களை ஆதாரமாகக் கொள்கிறது. மக்கள்தொகையில் நடைபெறும் புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்குகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கக் கூடிய, பொது முறையியல் விஞ்ஞானங்களால் கண்டுபிடிக்கப்பட்ட பொது விதிகளைப் பயன்படுத்தி பூகோளம் இவற்றை ஆராயும் அதே நேரத்தில் எதிர்கால பூகோள ஆராய்ச்சிகளுக்கும் தகவல்களுக்கும் அடித்தளமாக விளங்கும் விஞ்ஞான விவரங்களையும் கருத்து நிலைகளையும் பொறுக்கியெடுத்து சேமிக்கிறது.

மக்கள்தொகை பூகோளத்தின் மற்ற அணுகுமுறை குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களை ஒரே முழுமை என்ற வகையிலும் சகலவிதத் தொடர்புகள், உறவுகளுடனும் ஆராய்கிறது.

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களைப் பற்றிய சர்வாம்ச சித்தரிப்புதான் மக்கள்தொகையின் பூகோளத் திற்குரிய ஆராய்ச்சிப் பொருளாகும். இப்பிரதேசம் வெவ் வேறு அளவானதாக (நாடு—பிரதேசம்—நகரம்) இருக்க லாம். இந்தச் சர்வாம்ச சித்தரிப்பு மக்களின் கட்டமைப்பு, இயக்கப் போக்கு, பரப்பீடு, பூகோளச் சூழலுடன் உள்ள தொடர்புகள் (பரஸ்பரத் தொடர்புகள் மற்றும் பரஸ்பரச் சார்புநிலைகள்) ஆகியவற்றைத் தெளிவுபடுத்துகிறது.

இவ்விஞ்ஞானம் பல்வேறுவிதமான முறையியல் அணுகு முறைகளையும் முறைகளையும் பயன்படுத்துகிறது. பிரதேச ரீதியான பகுப்பாய்வுதான் பூகோள ஆராய்ச்சிகளின் அடிப் படைக் கோட்பாடாகும். மக்களுக்கு உரித்தான அந்தந்தக் குறியீடுகள் அல்லது நிகழ்ச்சிப் போக்குகளின் வெளிப்பாடு, இவற்றின் வகையீடு, இந்த அம்சங்கள் அல்லது இவற்றின் இணைப்பிலான, சகலவித பிரதேச ரீதியான பிரிவு (உதாரண மாக, மக்கள் வரும் அல்லது வெளியேறும் பிரதேசங்களையும் கிராம மற்றும் நகர குடியேற்றத்தின் பல்வேறு விதமான வடிவங்கள் வளர்ச்சியுறும் பிரதேசங்களையும் சுட்டிக் காட்டு வது,இத்தியாதி) ஆகியவற்றில் உள்ள பிரதேச மாறுபாடுகளை வெளிப்படுத்துவது இதனுடன் தொடர்புடையதாகும். மக்கள், இவர்களுடைய கட்டமைப்புச் சிறப்பியல்புகள், பரப்பீடு ஆகியவற்றை வரைபடங்களில் காட்டுவது (இடப் பெயர்ச்சி பெருக்குகள், மக்களின் நெருக்கம், நகரங்கள்

முதலியவை சம்பந்தமான வரைபடங்கள்) பெரிதும் முக்கியமான இடத்தை வகிக்கிறது. பகுப்பாய்வு, தொகுப்பு, மற்றும் எதிர்காலக் கணிப்பு வரைபடங்களை உருவாக்குவது மக்கள்தொகையின் பூகோளத் துறையில் ஆராய்ச்சிகளின் பிரிக்க இயலா அம்சமாகும்.

சமீப காலமாக கணித ஆராய்ச்சி முறைகள், குறிப்பாக மக்களை ஒரு சிக்கலான இயக்கப் போக்கு முறையாகச் சித்தரிக்கின்ற பல்வேறு நிகழ்ச்சிப் போக்குகள், கட்டமைப்பு அம்சங்களைக் கணித மாடல்களாகத் தீட்டும் முறைகள் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றன; மக்கள்தொகையின் பூகோளத் துறையில் கணிப்புகளைக் கூறுவதற்கும் பெரும் முக்கியத்துவம் உள்ளது.

மக்கள்தொகையின் பூகோளம் மற்ற விஞ்ஞானங்களுடன் ஒன்றுசேர்ந்து மக்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளை ஆராய்ந்தாலும் இந்நிகழ்ச்சிப் போக்குகளின் பிரதேச மாறுபாடுகளையும் இவற்றின் காரணத் தொடர்புகளையும் வெளிப்படுத்துவதன் மீது முக்கியக் கவனத்தைச் செலுத்துகிறது. இப்பிரச்சினைகளின் வட்டம்—மக்களுடைய இயக்கப் போக்கின் பூகோள மாறுபாடுகளைப் பற்றிய ஆராய்ச்சி சம்பந்தமான பெரும் விஞ்ஞானப் பிரிவின் ஒரு பகுதியாகும்.

உழைப்பு மூலாதாரங்களின் பரப்பீட்டை ஆராய்வது முக்கிய சர்வாம்ச பிரச்சினையாகும். இந்த விஷயத்தில் பூகோள இயலர்களின் கடமை பின்வருவதில் அடங்கியுள்ளது: மக்களுடைய உள்ளடக்கம், கட்டமைவு, பொருளாதாரப் பரப்பீடு, உற்பத்தி நடைபெறும் இயற்கைச் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்து உழைப்பு மூலாதாரங்கள் தோன்றுவது மற்றும் இவற்றை பயன் தன்மையோடு பயன்படுத்துவதில் உள்ள பிரதேச ரீதியான மாறுபாடுகளை ஆராய்வதுதான் இவர்களின் கடமையாகும். தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் உழைப்பைச் செலவிடுவது பற்றிய விஞ்ஞான வரையளவுகளைத் தீட்டும் போது உழைப்பின் உற்பத்தித் திறனின் மீது தாக்கம் செலுத்தும் ஏராளமான காரணிகளை (இயற்கைச் சூழ்நிலைகளாலும் குடியேற்றத் தன்மையாலும் நிர்ணயிக்கப்படும் காரணிகளும் இவற்றில் அடங்கும்) கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த முக்கியக் கடமையின் நிறைவேற்றமானது உழைப்பு மூலாதாரங்களின் பிரதேசப் பங்கீடு மற்றும் இவற்றைப் பயன் தன்மையோடு

பயன்படுத்துதலே விஞ்ஞான ரீதியாக ஆதாரப்படுத்தும் முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அடிப்படையாகும்.

மக்கள்தொகையின் பூகோளம் மக்களின் குடியேற்றப் போக்குகளை, அதாவது பிரதேசங்களில் குடியேறும் நிகழ்ச்சிப் போக்கை ஆராய்வதன் மீது விசேஷ கவனம் செலுத்துகிறது. பிரதேசக் குடியேற்றத்தின் மீதான இயற்கை மற்றும் பொருளாதாரக் காரணிகளின் தாக்கத்தை நிர்ணயிக்கும் பூகோள விஞ்ஞானங்களோடு கூட இதன் ஆராய்ச்சியில் வரலாற்று விஞ்ஞானங்களுக்கு, குறிப்பாக வரலாற்றுப் பூகோளத்திற்குப் பெரும் பங்கு உண்டு. குடியேற்ற ஆராய்ச்சியின் இந்த அம்சம் இன்னொரு பூகோளப் பிரச்சினையுடன் (நாட்டில், குடியரசில், மாகாணத்தில் மக்களின் பரப்பீடு) நெருக்கமாகத் தொடர்புடையது, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் குடியேற்றத்தின் அளவு (இது மக்களுடைய நெருக்கக் குறியீட்டால் நிர்ணயிக்கப்படுகிறது) பரஸ்பரம் தாக்கம் செலுத்தும் பல காரணிகளால் (இயற்கை, வரலாற்று, பொருளாதாரக் காரணிகளால்) வரையறுக்கப்படுகிறது. பல்வேறு பிரதேசங்களின் குடியேற்றத்தில் உள்ள பிரதேச மாறுபாடுகளையும் இவற்றிற்கான காரணங்களையும் ஆராய்வதும் மக்கள் நெருக்க வரைபடங்களைத் தோற்றுவிப்பதும் மக்கள் தொகையின் பூகோளத்தின் முக்கியப் பிரிவாகும்.

''குடியேற்றம்'' எனும் சொல் குடியேறும் நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலிப்பதை விட இதன் இறுதி விளைவைப் பிரதிபலிக்கிறது எனலாம். இந்த இறுதி விளைவு குறிப்பிட்ட குடியிருப்பு வகைகளில் உருக்கொண்டுள்ளது; இது தவிர இக்குடியிருப்புகள் எந்த பிரதேசத்தில் உள்ளனவோ அதைப் பொறுத்தும் எந்த உற்பத்தி அமைப்புகளுடன் இவை தொடர்பு கொண்டுள்ளனவோ அதைப் பொறுத்தும் அமைந்திருக்கும் வடிவங்களிலும் இது அடங்கியுள்ளது. இந்தப் பல அம்சப் பிரச்சினையின் ஆராய்ச்சியில் சில பிரிவுகள் (இவை ஒவ்வொன்றிற்கும் அதனதன் ஆராய்ச்சிப் பொருட்களும் முறைகளும் உள்ளன), எல்லாவற்றிற்கும் மேலாக கிராம மற்றும் நகர குடியேற்றங்கள் உள்ளன. ஒரே குடியேற்றத் தத்துவத்தின் பிரிவுகள் என்ற வகையில் இந்த இரு பிரிவுகளும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகத் தொடர்புடையவை, ஏனெனில் கிராம மற்றும் நகரக் குடியேற்றங்கள் பிரிக்க முடியாதவை, ஒன்றன் மேல் ஒன்று பரஸ்பரம் செயலாக்கம்

புரிகின்றன. மற்ற பல விஞ்ஞானங்களுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு மக்கள்தொகையின் பூகோளம் ஆராயும் பரவலான பிரச்சினைகள் குடியேற்றப் பிரச்சினைகளில் அடங்கும்.

இவைதான் மக்கள்தொகையின் பூகோளத்திலுள்ள முக்கிய விஞ்ஞானப் போக்குகளாகும். இவை மக்களுடைய கட்டமைப்பு, இயக்கப் போக்கு மற்றும் பரப்பீட்டின் தனிப்பட்ட அம்சங்களை ஆராய்கின்றன. இவை பின்னால் வரும் தொகுப்பிற்கான, அதாவது பல்வேறு அளவுகளையுடைய பிரதேசத்தின் மக்களைச் சர்வாம்ச ரீதியாக ஆராய்வதற்கான ஒருவிதப் பகுப்பாய்வுக் கட்டமாகும்.

மக்கள்தொகையின் பூகோளம் விரைவாக வளர்ந்து வருகிறது. இதன் பல பிரிவுகள் புதிய கருத்துக்களாலும் ஆராய்ச்சி முறைகளாலும் செழுமைப்பட்டு தனி விஞ்ஞானங்களாகப் பிரிகின்றன. உதாரணமாக, நகரமயமாக்கலின் பூகோளம், சேவைப் பூகோளம், பொழுதுபோக்குப் பூகோளம் முதலியவை இவற்றிலடங்கும். ஆனால் இவை மக்கள்தொகையின் பூகோளத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன, ஒட்டுமொத்தத்தில் மக்கள்தொகையைப் பற்றிய பூகோள விஞ்ஞான முறையை உருவாக்குகின்றன. அதே சமயத்தில் மக்கள்தொகையின் பூகோளம் தன்னை ஒட்டிய மற்ற பல விஞ்ஞானங்களுடன் உள்ள தொடர்புகளை விரிவுபடுத்தி ஆழமாக்குகிறது; இதன் மூலம் புதிய விஞ்ஞானப் போக்குகள் தோன்றுவதற்கான பயன்மிகு அடித்தளத்தை ஏற்படுத்துகிறது.

பொருளாதார பூகோளத் துறையின் சோவியத் நிபுணர்கள், மக்கள்தொகையின் பூகோள நிபுணர்கள் சோவியத் யூனியனில், இதன் பிரதேசங்களில் உற்பத்திச் சக்திகளின் பரப்பீட்டை மேம்படுத்துவதில் கணிசமான பங்காற்ற வேண்டும். சோவியத் நாட்டின் கிழக்கத்திய பிரதேசங்களின் பொருளாதார உள்ளாற்றலை மேற்கொண்டு வளர்த்தல், நாடு தழுவிய தொழில்துறைப் பொருட்களின் உற்பத்தியில் இவற்றின் பங்கை அதிகப்படுத்துதல், முக்கியமாக, இயங்கக் கூடிய தொழில் நிறுவனங்களைத் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்துவதன் மூலமும் மறுசீரமைப்பதன் மூலமும் சோவியத் நாட்டின் ஐரோப்பியப் பகுதியிலும் உராலிலும் தொழில்துறையை வளர்த்தல், உழைப்பு மூலாதாரங்களின்

ஆதாயமான சமன்நிலை உள்ள யூனியன் குடியரசுகளிலும் பொருளாதாரப் பிரதேசங்களிலும் உழைப்பு அதிகம் தேவைப்படும் தொழில்துறை உற்பத்திப் பிரிவுகளை நிறுவுதல், பெரும் நகரங்களின் அதிகரிப்பை மேற்கொண்டு மட்டுப்படுத்தி பொருளாதார ரீதியாக எதிர்காலமுள்ள சிறிய, நடுத்தர நகரங்களை வளர்த்தல், கிராமப் புறத்தில் உழைப்பு மூலாதாரங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துதல் ஆகிய கடமைகளையும் இன்னும் பல கோட்பாட்டு ரீதியான கடமைகளையும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி முன்வைக்கிறது. மற்ற விஞ்ஞானப் போக்குகளுடன் சேர்ந்து சோவியத் யூனியனுடைய மக்கள்தொகையின் பூகோளமும் இக்கடமைகளின் நிறைவேற்றத்தில் தீவிர பங்கேற்கிறது.

இந்திய மக்கள்தொகைப் பூகோளம் பெரும் வெற்றிகளை அடைந்துள்ளது. 60—70ஆம் ஆண்டுகளில் இந்திய இயற்கை மற்றும் மக்களைப் பற்றி பல நூல்கள் வெளியாயின. மக்கள் குடியேற்றம், நகரமயமாக்கல் பிரச்சினைகள், கிராமக் குடியேற்றம் சம்பந்தமான படைப்புகளில், பி.எஸ். அகர்வால், க்யூ.எம். அஹமத், எஸ்.எம். அலாம், எஸ்.எம். அலி, எஸ். போஸ், ஏ.பி. சாட்டர்ஜி, எஸ்.பி. சாட்டர்ஜி, பி.ஏ. ஜானகி, பிரகாச ராவ், எச். சிங், எர்.எல். சிங், உ. சிங் முதலியோரின் படைப்புகளைக் குறிப்பிடலாம்.

இன்று கிராம குடியேற்றப் பூகோளம் இந்தியாவில் பிரபலமான ஆராய்ச்சித் துறையாக மாறியுள்ளது. விமானத்திலிருந்து படமெடுக்கும் துறையும் குடியிருப்புப் பகுதிகளின் பரப்பீடு பற்றிய வரைபடப் பகுப்பாய்வும் இத்தகைய ஆராய்ச்சிகளின் வாய்ப்புகளைக் கணிசமாக விரிவுபடுத்துகின்றன.

நகரமயமாக்கல் அதிகரித்து வருவதானது நகரங்களின் அதிகமான வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் புதுமையான தீர்வுகளையும் கருத்தமைப்புகளையும் கோருகிறது.

மக்களின் ஓய்வு நேரம் அதிகமாவதால் எதிர்காலத்தில் உலாப்பயணம் முக்கியப் பொருளாதாரத் துறையாக மாறக்கூடும் எனும் அம்சம் ஒரு சில இந்திய பூகோள இயலர்களை இந்தியாவில் உலாப்பயணம் மற்றும் ஓய்வின் வரலாற்றையும் வளர்ச்சி வாய்ப்புகளையும் ஆராயும்படி தூண்டியுள்ளது (டி. வி. சிங்).

மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பிரச்சினைகளின் தீர்விற்கு பூகோள ஆராய்ச்சிகளும் இதனுல் அளிக்கப்படும் சிபாரிசுகளும் எவ்வளவு முக்கியமானவை என்று சுட்டிக் காட்டிய எர்.எல். சிங்கும் எஸ்.பி. தாஸ் குப்தாவும் 23வது சர்வதேச பூகோள காங்கிரசில் (1976) ஆற்றிய உரையில், மனிதனுடனும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடனும் நெருக்கமாக, நேரடியாகத் தொடர்புடைய ஆனுல் அதே சமயம் பிரதேச மாறுபாடுகளை உடைய புலப்பாடுகளை விளக்கவும் பகுப்பாய்வு செய்யவும் பயன்படுத்தப்படும் விஞ்ஞான முறைகளின் வளர்ச்சிக்கு மக்களை ஆராயும் பூகோள இயலர்கள் குறிப்பாகப் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்று குறிப்பிட்டனர்.

# அத்தியாயம் பத்தொன்பது

## மக்கள்தொகையும் சட்டமும்

மக்கள்தொகை வளர்ச்சி மீது தாக்கம் செலுத்தும் காரணிகளில் சட்டம் முக்கிய இடத்தை வகிக்கிறது. ஜனத் தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மீது சட்டம் தாக்கம் செலுத்தும் முறை சிக்கலானது. சட்டத்தின் முயற்சிகள் எந்த உறவுகளை ஒழுங்கமைப்பதன் மீது திருப்பப்பட்டுள்ளனவோ அந்த உறவுகளின் தன்மையாலும் சட்ட ஒழுங்கமைப்பின் லட்சியங்கள், கடமைகளாலும் இது நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக, இடப்பெயர்ச்சி உறவுகளின் மீது சட்டம் தாக்கம் செலுத்தும் முறையும் மக்களின் இயற்கையான புனருற்பத்தியுடன் தொடர்புடைய உறவுகளின் மீது சட்டம் தாக்கம் செலுத்தும் முறையும் வெவ்வேறானவை. இந்தச் செல்வாக்கின் இறுதி லட்சியங்களுக்கேற்ப வெவ்வேறு சட்டச் சாதனங்களும் சட்டத் தாக்கத்தின் பல்வேறு வழி களும் முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன; உகந்த திசை களில் மக்களின் இடமாற்றத்திற்கான சூழ்நிலைகளுக்கு வகை செய்வது, தேவையான பிறப்பு விகித மட்டத்தை அடையத் துணை புரிவது போன்றவை இந்த லட்சியங்களாகும்.

மக்கள்தொகை உறவுகளின் மீது சட்டம் செலுத்தும் தாக்கம் பரவலானது. இடைநிலைக் காரணிகளின் உதவியோடு மட்டுமே (உதாரணமாக பொருளாதாரக் காரணிகள் மூலம் மட்டுமே) இவற்றின் மீது சட்டத்தால் தாக்கம் செலுத்த முடியும் எனும் ஒரு கருத்து பரவியுள்ளது. இது தவறான கருத்தாகும். உண்மையிலேயே மக்கள்தொகையின் உறவு களை சட்ட ரீதியாக ஒழுங்கமைக்கும் போது அடிக்கடி இடை நிலைக் காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன. இது நியாய மானதே, ஏனெனில் இவ்வழியில் மிகக் குறைவான செல வில் மிக அதிகப் பயனை அடையலாம்.

சட்டம் என்பது வரையளவுகளின் ஒட்டுமொத்தத்தால் ஆனது. இதில் சட்ட ரீதியான வரையளவுகளும் மற்ற வரை யளவுகளும் (தீர்மானங்கள், கட்டளைகள், விதிமுறைகள்,

ஆணைகள் போன்றவை) சட்டத் துறைகளாக ஒன்றிணை கின்றன. இவற்றில் ஒவ்வொன்றிற்கும் அதனதன் ஆராய்ச்சிப் பொருள் உண்டு, ஒவ்வொன்றிற்கும் விசேஷ ஒழுங்க மைப்பு முறை உண்டு, அதாவது சமூக உறவுகளின் மீது தாக்கம் செலுத்தும் வழிகளும் சாதனங்களும் உண்டு. சோவியத் சட்டத்தில் பின்வரும் சட்டத் துறைகள் உள்ளன: சிவில் சட்டம் (பொருளாதாரச் சட்டத்தையும் சேர்த்து), உழைப்புச் சட்டம், கூட்டுப்பண்ணைச் சட்டம், நிலச் சட்டம், குடும்பச் சட்டம், அரசுச் சட்டம், நிர்வாகச் சட்டம், நிதிச் சட்டம், சர்வதேசச் சட்டம், குற்றத் தடுப்புச் சட்டம், விசா ரணைச் சட்டம். சட்டத்தின் துறை ஒவ்வொன்றிற்கும் அதன தன் ஒழுங்கமைப்புப் பொருள், அதாவது சமூக உறவுகளின் குறிப்பிட்ட ஒட்டுமொத்தம் உண்டு. உதாரணமாக, சிவில் சட்டம் சோஷலிச ஸ்தாபனங்கள்,'குடிமக்களின் சொத்துறவு களையும் சொத்து உறவுகளால் முன் நிர்ணயிக்கப்பட்டுள்ள அல்லது நேரடியாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில சொத்தில்லா உறவுகளையும் ஒழுங்குபடுத்துகிறது. குடி மக்கள் உழைப்பதற்கான தம் உரிமைகளை நிறைவேற்றுகை யில் தோன்றும் உறவுகளை உழைப்புச் சட்டம் ஒழுங்குபடுத்து கிறது. குடும்ப உறுப்பினர்களின் மத்தியிலும் குடும்ப உறவு களில் பங்கேற்கும் மற்றவர்களுக்கு இடையிலும் தோன்றும் தனிநபர் சொத்தில்லா மற்றும் சொத்துறவுகளைக் குடும்பச் சட்டம் ஒழுங்குபடுத்துகிறது.

ஆனல் இத்துறைகளில் ஒன்று கூட மக்கள்தொகை உறவு களை நேரடியாக ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண் டிருக்கவில்லை, இத்தகைய லட்சியங்களை முன்வைக்கவில்லை. அதே சமயம், மக்கள்தொகைப் பிரச்சினைகளுடன் ஏதாவது ஒரு வழியில் தொடர்பு கொள்ளாத சோவியத் பொருளாயத சட்டப் பிரிவோ, விசாரணைச் சட்டப் பிரிவோ கிடையாது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆம், உண்மையில் சட்டப் பிரிவு ஒவ்வொன்றின் உள்ளேயும் மக்கள்தொகை உறவு களுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டுள்ள சட்ட வரையளவுகளைக் காணலாம். உதாரணமாக, சிவில் சட்டத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக வீடுகளைப் பற்றிய சட்ட வரையளவுகள், கொள்வினை கொடுப்பினை சட்ட வரையளவுகள், குறிப்பாக தவணை முறையிலான கொள் வினை கொடுப்பினை சட்ட வரையளவுகள், பரம்பரைச்

சொத்து பற்றிய சட்ட வரையளவுகள் முதலியவை இத்தகையவையாகும். உழைப்புச் சட்டத்தில் தேசியப் பொருளாதாரத்தின் தனிப்பட்ட துறைகளில் உழைப்புச் சூழ்நிலைகளைப் பற்றிய வரையளவுகள், உழைப்பு ஊதியம், விடுமுறைகள், உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான சலுகைகள் போன்றவற்றைக் குறித்த வரையளவுகள் ஆகியன இப்படிப்பட்டவையாகும். கூட்டுப்பண்ணை உறுப்பினர்களின் உழைப்பை ஒழுங்கமைக்கும் இது போன்ற வரையளவுகள் கூட்டுப்பண்ணைச் சட்டத்தில் உள்ளன.

வீட்டு வசதி பெறுவது குடும்ப வாழ்வில் எவ்வளவு முக்கியமானது என்பது தெரிந்ததே. ஆனால் வீட்டு-சுகாதார வசதிகளின் வரையளவுகள் பற்றிய பிரச்சினை எல்லா சோவியத் யூனியன் குடியரசுகளின் சட்டங்களிலும் ஒரே மாதிரியாகத் தீர்க்கப்படவில்லை. சோவியத் யூனியன் மற்றும் யூனியன் குடியரசுகளின் சிவில் சட்ட முறையின் அடிப்படையின்படி நபர் ஒருவருக்கான வசிப்பிடம் 9 சதுர மீட்டருக்கு குறைவாக இருக்கக் கூடாது (59வது ஷரத்து). பெரும்பாலான யூனியன் குடியரசுகளில் இது இந்த அளவாகத்தான் நிலைநாட்டப்பட்டுள்ளது. அதே பொழுது ஒரு சில யூனியன் குடியரசுகள் இதை விட அதிகமான வசிப்பிடத்தைத் தம் சட்ட முறைகளில் சேர்த்துள்ளன. உதாரணமாக, உக்ரேனியாவில் இது 13.6 சதுர மீட்டர், அஸர்பெய்ஜானிலும் ஜியார்ஜியாவிலும் 12 சதுர மீட்டர் ஆகும். வசிப்பிட வரையளவுகளில் உள்ள வேறுபாடு, வசிப்பிடத்தைத் தேர்ந்தெடுக்கும் போதோ, வேறு இடத்திற்கும் இடம் மாறிச் செல்லுகையிலோ குடிமக்களும் குடும்பங்களும் வசிப்பிடத்தை முடிவு செய்வதன் மீது தாக்கம் செலுத்தக் கூடும். எனவே சிவில் சட்ட முறையின் இந்த வரையளவு மற்ற பலவற்றைப் போன்றே இடப்பெயர்ச்சிகளின் மீது தாக்கம் செலுத்தக் கூடும்.

ஆனால் இந்த வரையளவுகள் ஏற்கப்படும் தருணத்தில் மக்கள்தொகை நிகழ்ச்சிப் போக்குகளோடு தொடர்புடைய கடமைகளை எப்போதும் கவனத்தில் கொள்வதில்லை. மக்கள் தொகையின் சிறப்பியல்புகளையும் விசேஷ அம்சங்களையும் கவனத்தில் கொண்டு மக்கள்தொகையின் உறவுகளை ஒழுங்கு படுத்துவதை முக்கிய லட்சியமாகக் கொண்ட ஒரு விசேஷ சட்டப் பிரிவைத் தோற்றுவிக்கும் பிரச்சினை இன்று சோவியத்

சட்ட இலக்கியத்தில் முன்வைக்கப்படுவது தற்செயலான தல்ல.

ஆனல் சட்டமானது இடைநிலை அங்கங்கள் இன்றியே நேரடியாக மக்கள்தொகை உறவுகளின் மீது தாக்கம் செலுத்த வல்லது. நாட்டின் வட கோடியிலும் இதை யொத்த பிரதேசங்களிலும் உழைப்பவர்களுக்கான உழைப்பு, மற்ற வகையான சலுகைகள் சம்பந்தமான சட்ட முறை இப்படிப்பட்டதுதான். பல்வேறு துறைகளைச் சேர்ந்த குடி மக்களை வேலை செய்வதற்காக இந்த இடங்களுக்கு வரும்படி கவருவதுதான் இச்சட்ட முறையில் சேர்க்கப்பட்டுள்ள சலு கைகளின் நோக்கமாகும். குடிபெயர்ச்சிகளுக்கான சலுகை கள் சம்பந்தமான சட்ட முறையும் இதே லட்சியங்களைக் கொண்டுள்ளது. குறைவான மக்களை உடைய ஆனல் தொழில் துறை மற்றும் விவசாய ரீதியாக நல்ல எதிர்காலமுள்ள இடங் களுக்கு மக்களைத் தீவிரமாக இடம் பெயரச் செய்வது, சிறு கிராமங்களைப் போல் உள்ள குடியிருப்புப் பகுதிகளைப் பெரும் குடியிருப்புப் பகுதிகளாக ஒன்றிணைப்பது, இத்தியாதி இதன் நோக்கமாகும்.

சில தனிப்பட்ட சட்டத் துறைகள் மக்கள்தொகை நிகழ்ச்சிப் போக்குகளுடன் நெருக்கமாகத் தொடர்புடை யவை, எனவே இந்நிகழ்ச்சிப் போக்குகளின் ஒழுங்கமைப்பில் இவற்றின் பங்கு குறிப்பாகக் கணிசமானது. உதாரணமாக, சோவியத் குடும்பச் சட்டம் திருமணம், குடும்பம், குடும்ப உறவுகள் போன்றவற்றை (இவை அதே சமயத்தில் முக்கிய மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் கருத்தினங்களும் ஆகும்) ஒழுங்குபடுத்துவதால் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மீது தீவிரத் தாக்கம் செலுத்துகிறது. திரு மணம் மற்றும் குடும்பம் பற்றிய சோவியத் யூனியன் மற்றும் யூனியன் குடியரசுகளின் சட்ட முறையின் அடிப்படைகள் தான் தற்போது குடும்ப உறவுகளை ஒழுங்குபடுத்தும் முக்கிய சட்ட அடிப்படையாகும்.

இச்சட்ட முறையின் அடிப்படைகள் பொது யூனியன் சட்டமாகும். இவை நாட்டு பரப்பு முழுவதும் செயல்படு கின்றன, சோவியத் நாட்டின் அதிகாரிகள், குடிமக்கள் அனை வருக்கும் இவை கட்டாயமானவை. திருமண, குடும்ப உறவு களை ஒழுங்குபடுத்தும் மிக முக்கிய, மிக கோட்பாட்டு ரீதி யான பிரச்சினைகள் சம்பந்தமான வரையளவு கருத்து நிலை

கள் இவற்றில் அடங்கியுள்ளன. திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய தனித்தனி யூனியன் குடியரசுகளின் சட்டத்தொகுப்பு கள் மேற்கூறிய உறவுகளை விரிவாக ஒழுங்கமைப்பதை முன்னனுமானிக்கின்றன. சோவியத் குடும்பத்தைப் பலப்படுத் துவது, குடும்பத்தில் குழந்தைகளின் கம்யூனிச வளர்ப்பிற் கான மிகச் சிறந்த சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பது, குடும்ப உறவுகளைப் பொருளாயதக் கணக்கீடுகளிலிருந்து இறுதியாக விடுவித்து தூய்மைப்படுத்துவது, திருமணம் மற்றும் குடும்ப விஷயத்தில் கம்யூனிச உறவு முறைகளை ஏற்படுத்துவது— இவைதான் திருமணம் மற்றும் குடும்பத்தைப் பற்றி இன்று நிலவும் சட்ட முறையின் முக்கியக் கடமைகளாகும். இச்சட்ட முறை சோவியத் நாட்டின் இன்றைய வளர்ச்சி சூழ்நிலைகளில் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மீது பெரும் தாக்கம் செலுத்தும் முக்கியக் காரணியாகத் திகழ்கிறது.

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மீது, குறிப்பாக பிறப்பு விகிதத்தின் மீது குடும்பச் சட்டம் எந்த வடிவங் களில் தாக்கம் செலுத்துகிறது? இவை பல்வேறுனவை. சோவியத் யூனியனில் ஜனத்தொகைக் கொள்கையின் மிக வெற்றிகரமான தீர்விற்கு உதவும் சூழ்நிலைகளைத் தோற்று விப்பதுதான் இவற்றில் முக்கியமானது ஆகும். இச்சூழ்நிலை கள் எல்லாவற்றிற்கும் மேலாக, சோவியத் குடும்பச் சட்டத் தின் சாரமாக விளங்கும் ஜனநாயகக் கருத்து நிலைகளில் வெளிப்படுகின்றன. முதலாவதாக, குடும்பத்திலும் குடும்ப உறவுகளிலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சட்ட ரீதியாக வும் நடைமுறையிலும் சமத்துவத்தை ஏற்படுத்துவது இதி லடங்கும். இக்கோட்பாடு திருமணம் மற்றும் குடும்பம் சம் பந்தமான சோவியத் ஆட்சியின் முதல் ஆவணங்களிலேயே (1917 டிசம்பர் 18இல் வெளியான ''சிவில் திருமணம்'' பற்றிய அரசாணை, 1917 டிசம்பர் 19இல் வெளியான ''விவாக ரத்து'' பற்றிய அரசாணை, இவற்றையடுத்து 1918 மற்றும் 1926இல் ஏற்கப்பட்ட குடும்பச் சட்டத் தொகுப்புகள்) பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

பெண்களின் விஷயத்தில் கட்சி மற்றும் சோவியத் ஆட்சி கடைப்பிடிக்கும் கொள்கையின் முக்கிய அம்சத்தை வி. இ. லெனின் இக்கடமையின் நிறைவேற்றத்தில் கண் டார். ''உழைப்பாளி மக்கள்தம் ஆட்சியதிகாரமான

சோவியத் ஆட்சியதிகாரம் தான் தோன்றியதும் முதலாவது மாதங்களிலேயே பெண்டிர் சம்பந்தமான சட்டங்களில் திட்டவட்டமான ஒரு புரட்சி நடந்தேறச் செய்தது. பெண்டிரைக் கீழ்நிலையில் இருத்திய அந்தச் சட்டங்களில் எதுவுமே சோவியத் குடியரசில் ஒழிக்காது விட்டு வைக்கப்படவில்லை. முக்கியமாய், பெண்களின் பலவீன நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை அசமத்துவ நிலையில், ஏன் பல சந்தர்ப்பங்களில் இழிவான நிலையிலுங் கூட இருத்திய சட்டங்களைக் குறிப்பிடுகிறேன்...''* என்று லெனின் கோடிட்டுக் காட்டினார். இப்போது சட்டத்தில் இக்கருத்து அடிப்படை சட்டத்தின் 3வது ஷரத்திலும் திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டத் தொகுப்புகளின் 3வது ஷரத்திலும் பிரதிபலிக்கிறது. இவற்றின்படி குடும்ப உறவுகளில் பெண்ணிற்கும் ஆணிற்கும் சமமான தனி மற்றும் சொத்துரிமைகள் உண்டு. சோவியத் சட்டத்தின் கோட்பாடு வழிப்பட்ட இந்தக் கருத்து நிலை சகலவிதமான குடும்ப உறவுகளுக்கும் (தம்பதிகளின் தனிப்பட்ட மற்றும் சொத்துறவுகள், தம் குழந்தைகளின் விஷயத்தில் பெற்றோர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள், குடும்பத்தில் சகோதரர்கள், சகோதரிகளின் உரிமை நிலை போன்றவை) பொருந்தி வரும். குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும், மனைவிக்கும் கணவனுக்கும், தாய்க்கும் தந்தைக்கும் உள்ள சட்ட ரீதியான சமத்துவம் குடும்பத்தில் சுமுகமான தார்மீகச் சூழல் நிலவுவதற்கான நிபந்தனைகளைத் தோற்றுவிக்கிறது, இது இல்லாமல் குழந்தைகளைச் சரியானபடி வளர்க்க முடியாது. எனவே மேலே குறிப்பிட்ட கோட்பாடு, எவ்வளவு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனும் பிரச்சினையைத் தம்பதிகள் தீர்க்கும் போது கணிசமான தாக்கம் செலுத்தும் காரணிகளில் ஒன்ருக இறுதியில் விளங்குகிறது.

குடும்பத்தில் பெண்ணிற்கும் ஆணுக்கும் உள்ள சமத்துவக் கோட்பாட்டை நிறைவேற்றுவது மட்டுமின்றி, வாழ்க்கையில் இவர்களின் உண்மை நிலையும் குழந்தை வளர்ப்புப் போக்கை நிர்ணயிப்பதன் மீது தாக்கம் செலுத்துகிறது. பெண்கள் மற்றும் குடும்பம் பற்றி கம்யூனிஸ்டுக் கட்சியும்

* வி. இ. லெனின், **சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?** கட்டுரைகளும் சொற்பொழிவுகளும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 80.

சோவியத் அரசும் செலுத்தும் பெரும் அக்கறை, தாய்மார் களுக்காக சோவியத் சட்ட முறை வழங்கும் பல்வேறுவித மான சலுகைகள், குழந்தை வளர்ப்பின் மீது சமுதாயமும் அரசும் செலுத்தும் பெரும் கவனம் முதலியன சோவியத் நாட்டில் குடும்பத்திலும் அன்ருட வாழ்விலும் ஆண், பெண் நடைமுறை சமத்துவத்தை அடைவதற்கான உத்திரவாதமாகும். கம்யூனிச சமூக உறவுகளைக் குடும்பத்தில் புகுத்துவதற்கான மிக முக்கியக் காரணி என்ற வகையில் அன்ருட வாழ்வில் எஞ்சியுள்ள பெண்களின் சமமற்ற நிலையை அகற்ற உதவக் கூடிய சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதை திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்ட முறை தன் கடமைகளில் ஒன்ருகக் கருதுகிறது. இந்தக் கருத்து நிலையை முற்றிலுமாக நிறைவேற்றுவது என்பது குடும்பத்தில் குழந்தைகளின் எண்ணிக்கை பற்றிய பிரச்சினையின் தீர்வைப் பாதிக்கும் இன்னுமொரு அம்சத்தை அகற்றுவதைக் குறிக்கும்; இந்தத் தீர்வு இப்பிரச்சினையில் குடும்பம் மற்றும் சமுதாயத்தின் நலன்களை அதிக பட்சம் ஒன்றிணைக்க வழிகோலுகிறது.

திருமண நிபந்தனைகள் பற்றிய சோவியத் சட்டங்களின் ஜனநாயகத் தன்மை, தம்பதிகளின் குழந்தை வளர்ப்பு போக்கின் மீது தாக்கம் செலுத்தும் மிக முக்கிய அம்சமாகும். பெண்ணிற்கும் ஆணிற்கும் இடையிலான முழு, பரஸ்பர ஒப்புதலின் பேரில் செய்து கொள்ளப்படும் திருமணம்தான் குழந்தை வளர்ப்பிற்கான மிக அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்தும். திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சோவியத் சட்டத்தின் இரண்டு நிபந்தனைகளில் ஒன்று இதுதான். ''திருமணம் நடைபெற திருமணம் செய்து கொள்ளப் போகும் இரு நபர்களின் பரஸ்பர ஒப்புதல் அவசியம்'' என்று திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய அடிப்படை சட்ட முறையின் 10வது ஷரத்து கூறுகிறது (இரண்டாவது நிபந்தனை திருமண வயதைப் பற்றியதாகும்). சோவியத் சட்டத்தின் இக்கோட்பாடு தம்பதிகளுக்கு இடையே மிகச் சிறந்த வகையில் மன ஒற்றுமை நிலவ வழிகோலுகிறது, பரஸ்பர நலன்களைக் கவனத்தில் கொண்டு குழந்தைகளின் எண்ணிக்கை உட்பட குடும்ப வாழ்வின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க உதவுகிறது.

தாய், சேய் நலமும் இவர்களுடைய நல்வாழ்வின் மீதான அக்கறையும் முக்கிய சட்ட நிலைகளாகும். இவை ஜனத்

தொகை மனநிலையும் இதற்கேற்ற வகையில் தம்பதிகளின் போக்கும் உருவாவதன் மீது தாக்கம் செலுத்துகின்றன. சோவியத் சட்ட முறை தான் தோன்றியதிலிருந்தே தாய் மார்களின் மீதும் வளரும் தலைமுறையின் மீதும் அதிகபட்ச அக்கறை செலுத்தி வருகிறது. உலகிலேயே சோவியத் யூனியனில்தான் முதன்முதலாக பெண் ஆணுக்குச் சரிநிகர் சமானமாக உழைக்கவும் உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ற ஊதியம் பெறவும் உரிமையைப் பெற்றுள். உலகிலேயே முதன்முதலாக சோவியத் சட்டம், கருவுற்றிருக்கும் போதும் குழந்தை பிறப்பின் போதும் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறையை அளித்தது, 1973இலிருந்து வேலைக் காலத்தைப் பொருட்படுத்தாது மேற்கூறிய விஷயங்களில் முழு ஊதியம் வழங்கும் கோட்பாடு அமல்படுத்தப்பட்டுள்ளது.

தாய், சேய் நலத்தைப் பேணிக் காத்தல், குழந்தை வளர்ப்பு, மனிதனின் வாழ்நாளை நீட்டித்தல் ஆகியவற்றிற்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பது சம்பந்தமான புதிய நடவடிக்கைகளை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டம் தம்பதியினர் மற்றும் குழந்தைகளின் பொருளாயத வசதிகள் பற்றிய பிரச்சினையைத் தாய், சேய் நோக்கில் மிக அனுகூலமாகத் தீர்த்துள்ளது. இன்று அமலில் உள்ள சட்டம் இத்திசையில் இன்னுமொரு படி முன் சென்றுள்ளது. உதாரணமாக, திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய அடிப்படை சட்ட முறையின் 13வது ஷரத்தின்படி கணவன் பொருளாயத ரீதியாக ஆதரவளிக்க மறுத்தால் கருவுற்றிருக்கும் காலத்திலும் குழந்தை பிறந்து பின் ஒரு வருடத்திற்கும் தன் கணவனிடமிருந்து நீதிமன்றக் கட்டளைப்படி உதவித் தொகை பெறும் உரிமை மனைவிக்கு உண்டு. விவாகம் ரத்து செய்யப்பட்டு பத்து மாதங்களுக்குள் குழந்தை பிறந்தால் விவாக ரத்து செய்து கொண்ட மனைவிக்கு இவ்வுரிமை உண்டு. குழந்தைக்காகப் பெறும் உதவித் தொகையைச் சாராது இந்த உரிமை மனைவிக்கு உண்டு. ஜனத்தொகை ரீதியாகப் பார்த்தால் இந்தச் சட்டங்களின் முக்கியத்துவம், திருமண வாழ்க்கை சரியானபடி அமையாவிடில் குழந்தைகளைப் பராமரித்து வளர்ப்பது சம்பந்தமான தவிர்க்க இயலா இடர்ப்பாடுகள் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதைப் பற்றிய பெண்களின்

சட்டம் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் சித்தத்தைப் பிரதிபலிக்கிறது. இது சமூகக் கொள்கையின் முக்கிய சாதனமாகும், இதற்கு முற்றிலும் வர்க்கத் தன்மை உண்டு. எனவே முதலாளித்துவச் சமுதாயத்திலும் சோஷலிசத்திலும் மக்கள்தொகை உறவுகளின் மீது இது தாக்கம் செலுத்தும் முறைகளும் வடிவங்களும் வெவ்வேறானவை. சோஷலிசச் சமுதாயம் மார்க்சிய-லெனினியச் சித்தாந்தத்தை வழிகாட்டியாகக் கொண்டு கம்யூனிசச் சமுதாயக் கட்டுமானத்தின் கடமைகளுக்கு ஏற்ப சமுதாய உறவுகளின் மீது தாக்கம் செலுத்தும் விசேஷ வழிகளை உருவாக்குகிறது. சட்டம் மக்கள்தொகைக் கொள்கைக்கு வகை செய்வதில் ஒரு முக்கியக் கருவியாகும். இது மக்கள் தொகையின் உடனடிக் கடமைகளை நிறைவேற்றுவதில் பரவலாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

## அத்தியாயம் இருபது

# மக்கள்தொகைக் கொள்கையின் தத்துவார்த்த அடிப்படைகள்

சமுதாயச் சக்திகளின் தன்மையை அறியாமல், இவற்றின் செயற்பாட்டையும் திசையமைவையும் செல்வாக்கையும் புரிந்து கொள்ளாமல் இச்சக்திகளை உணர்வு பூர்வமான கண்காணிப்பிற்கு உட்படுத்தி நிர்வகிப்பது இயலாதது. அதே போல் மக்கள் வளர்ச்சிப் போக்குகளை நிர்வகித்து ஒழுங்கமைக்க, இவற்றின் தன்மைகளை அறிந்து கொள்ள வேண்டும், இவற்றின் நியதிகளையும் சாரத்தையும் உட்பொருளையும் செயற்பாட்டையும் திசையமைவையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மிகப் பொதுவான வடிவத்தில் மக்கள்தொகைக் கொள்கை என்பது மக்கள்தொகை வளர்ச்சியின் மீதான ஏதோ ஒரு நேரடியான அல்லது மறைமுகமான தாக்கமாகும். இது அரசின் சமூக-பொருளாதாரக் கொள்கையின் அங்கமாகும்; மக்களுடைய பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறிப்பிட்ட சமுதாயத்திற்கு உள்ள வாய்ப்புகள்தான் மக்கள்தொகைக் கொள்கையின் நிறைவேற்றத்திற்கான புறவய ரீதியான அடிப்படையாகும்; மேற்கூறிய தேவைகளின் கட்டமைவு மக்கள் வளர்ச்சியடையும் போது மாற்றமடைகிறது. இந்த வாய்ப்புகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டத்திலும் சமுதாய உறவுகளின் தன்மையிலும் அடங்கியுள்ளன. இவை மக்கள்தொகைக் கொள்கையின் செயல்நோக்கம் மற்றும் கடமைகள் மீது பெரும் முத்திரையைப் பதிக்கின்றன. எல்லா வர்க்கப் பகை முரண்பாட்டுச் சமுதாயங்களிலும் இது சுரண்டலாளர்களின் (அடிமைச் சொந்தக்காரர்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகள்) நலன்களால்தான் நிர்ணயிக்கப்பட்டது, நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. இவர்களைப் பொறுத்தமட்டில் பொருளாயத நலன்களை நேரடியாக உற்பத்தி செய்யும் உழைப்பாளிகளின் புனருற்பத்தி என்பது லாபம் அடைவது, செல்

வத்தைப் பேணிக் காத்து பெருக்குவது ஆகியவற்றால் மட்டுமே கட்டளையிடப்படுகிறது.

சோஷலிசச் சமுதாயத்தில் மக்கள்தொகைக் கொள்கை சமுதாயத்தின் அதிகரித்து வரும் பொருளாயத மற்றும் ஆன்மீகத் தேவைகளை அதிகபட்சம் பூர்த்தி செய்யும் இடையறா நாட்டத்துடன் நேரடியாகத் தொடர்புடையது; இது மக்களுடைய வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகளை மேம்படுத்துவது, இவர்களுடைய உடல், மன பலத்தை அதிகப்படுத்துவது, பொதுக் கல்வி மற்றும் கலாச்சார வளர்ச்சி, தொழில் ரீதியான மற்றும் விசேஷ பயிற்சி ஆகியவற்றை நோக்கமாகக் கொள்கிறது. இதன் முக்கிய அங்கம் தாய், சேய் நலம் பற்றிய அக்கறை, குடும்பத்தைப் பலப்படுத்துவதற்கு அவசியமான எல்லாவற்றையும் அளித்தல், வயது முதிர்ந்தவர்களைப் பராமரித்தல் ஆகும். நாட்டின் பரப்பில் மக்களைத் திட்டமிட்ட வகையில் பரப்பீடு செய்வதும் இக்கொள்கையின் நோக்கமாகும்.

சோஷலிச அரசில் எதிர்காலத்தின் தேசியப் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் போது மக்களுடைய நுகர்வை அதிகப்படுத்தும் நோக்கத்தோடு சமூக உற்பத்தியின் அளவை விரிவாக்கத் திட்டமிடப்படுகிறது; ஒரு புறம் உற்பத்தி, நுகர்வு, நாட்டின் பொருளாயத, நிதி, உழைப்பு மூலாதாரங்கள் ஆகியவற்றிற்கு இடையேயும் மறு புறம் மக்கள், இவர்களுடைய வளர்ந்து வரும் தேவைகள் ஆகியவற்றிற்கு இடையேயும் மிகப் பயன்மிகு விகிதம் நிலை நாட்டப்படுகிறது. மிகத் துல்லியமான எதிர்கால தேசியப் பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டுவதில் உள்ள நாட்டம் என்பது உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையே, வளர்ந்து வரும் உற்பத்திச் சக்திகளுக்கும் மக்களுடைய எண்ணிக்கைக்கும் இவர்களுடைய தேவைகளின் கட்டமைப்பிற்கும் இடையே மிகவும் உகந்த விகிதங்களைப் பெற முயலும் விருப்பமே அன்றி வேறில்லை. சோஷலிசச் சமுதாயத்தில் தேவைகளின் முன்னேக்கிய வளர்ச்சி பற்றிய விதி செயல்படுவதானது உழைப்பின் உற்பத்தித் திறன் இடையறாது வளர்வது பற்றிய விதியின் செயற்பாட்டை நிர்ணயிக்கிறது. இது உற்பத்திக்குத் தேவையான புதிய வகையான வேலையாளின் தேவையை ஏற்படுத்துகிறது.

இவ்வாறாக மக்கள்தொகைக் கொள்கை என்பதை,

முக்கிய உற்பத்திச் சக்தியாகிய, சமூக உற்பத்தியின் அக வயப் பொருளாகிய மனிதனின், மக்களின் உற்பத்தியையும் புனருற்பத்தியையும் ஒழுங்கமைப்பதை விசேஷ நோக்க மாகக் கொண்ட நடவடிக்கை என வரையறுக்கலாம். வேறு விதமாகச் சொன்னுல் இதன் துறை மக்களுடைய உழைப்பு, வாழ்க்கைச் சூழ்நிலைகளாகும். இங்கே முக்கிய உற்பத்திச் சக்தி வெறுமனே வேலைச் சக்தியாகவோ பன்முக வளர்ச்சி யடைந்த தனிநபராகவோ புனருற்பத்திக்கு உட்படலாம். இத்தகைய புனருற்பத்திக்கு வகை செய்யும் சூழ்நிலைகள் இதற்கேற்றபடி மாறுகின்றன, எனவே மக்கள்தொகைக் கொள்கை துறையும் மாறும்.

உழைப்பு மூலாதாரங்களின் இயற்கையான அடிப்படை என்ற வகையில் மக்கள்தொகை சம்பந்தமாக ஒவ்வொரு சமுதாய அமைப்பிற்கும் விசேஷ கோரிக்கைகள் உண்டு. இது அந்தந்த அமைப்பிற்கு உரித்தான மக்கள்தொகைக் கொள் கையின் அம்சங்களிலும் உள்ளடக்கத்திலும் பிரதிபலிக் கிறது. சமூக-பொருளாதார அமைப்பின் மக்கள்தொகைக் கொள்கை பின்வரும் மூன்று முக்கிய அம்சங்களால் ஆனது: உழைப்புச் சூழ்நிலைகளின் மீதான தாக்கம் (வேலை செய்ய வல்ல வயது வரம்பையும் மக்களில் வேலை செய்ய வல்ல பகுதியினரின் வேலை வாய்ப்பையும் நிர்ணயித்தல், வேலை நாள் மற்றும் வேலை வாரத்தின் தொடர்ச்சி, தேர்ச்சி மிகு மற்றும் விசேஷ பயிற்சி, வேலை சார்ந்த கல்வி முதலியவை); மக்களில் எல்லா பிரிவுகளின் வாழ்க்கைச் சூழ்நிலைகளின் மீதான தாக்கம் (உண்மை ஊதியம் அல்லது வருமான மட்டம், வீட்டு வசதிகள், சேவை வசதிகள் மற்றும் கலாச் சார சாதனைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு, மருத்துவ வசதி, இது கிட்டும் தன்மை, ஓய்வு நேர அளவுகள் முதலியவை); மக்களுடைய புனருற்பத்தியின் மீதான செயற்பாடு (இவர் களின் சமூக ரீதியான இடம்பெயர்வாற்றல், தலைமுறை களின் இயற்கையான புதுப்பிப்பு, இடப்பெயர்ச்சி ரீதியான தன்மை, மக்களின் குடியேற்றம்).

மேலே கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் காட்டும்படி மக்கள்தொகைக் கொள்கையின் விசேஷ நோக்கம் நேரடி யாக ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளில் இல்லை, மாருக, சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்தியாகிய, சமூக உற் பத்தியின் அகப்பொருளாகிய மனிதனின் உற்பத்தியையும்

புனருற்பத்தியையும் நிர்ணயிக்கும் மக்களுடைய வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகளின் தொகுப்பில் உள்ளது. நேரடியாக ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகள், மக்கள் தொகைக் கொள்கையின் அங்கமாக விளங்கும் மக்கள் தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையின் விசேஷ நோக்கமாகும். அரசின் சமூக-பொருளாதாரக் கொள்கையைப் பொதுவானது என்று வரையறுத்தால் தத்துவார்த்த ரீதியாக மக்கள்தொகைக் கொள்கையை விசேஷமானதாயும் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையை தனியானதாயும் கருதலாம்.

சமூக-பொருளாதாரக் கொள்கை, மக்கள்தொகைக் கொள்கை, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை ஆகியவற்றின் அகப்பொருளின் பயன்மிகு நடவடிக்கை எந்தத் துறைகளின் ஒழுங்கமைப்பை நோக்கி திசைப்படுத்தப்பட்டுள்ளதோ அதற்கேற்றபடி இக்கொள்கைகள் மாறுபடுகின்றன. வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் சூழ்நிலைகளில் மக்கள் அனைவரும் இத்தகைய அகப்பொருளாக உள்ளனர், இதில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் முக்கியப் பங்காற்றுகிறது.

இந்தத் துறைகள் யாவை? சமூக-பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தமட்டில் இது பொதுமக்கள் அரசின் வாழ்க்கை நடவடிக்கையின் உள் சூழ்நிலைகளின் ஒட்டுமொத்தத்தையும் இதன் எல்லா நிகழ்ச்சிப் போக்குகளையும் நாட்டின் சமுதாய வளர்ச்சியின் எல்லா நிகழ்ச்சிப் போக்குகளையும் சமுதாய வாழ்வின் எல்லா அம்சங்களையும் ஒழுங்குபடுத்துகிறது. மக்கள்தொகைக் கொள்கையும் மக்கள் தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையும் சமூக-பொருளாதாரக் கொள்கையின் பகுதிகளாகும்.

மக்கள் வளர்ச்சிதான் சோஷலிசத்தில் மக்கள்தொகைக் கொள்கையின் குறிக்கோளாகும். இது மக்களுடைய சாதாரண எண்ணிக்கைப் பெருக்கமாகப் புரிந்து கொள்ளப் படவில்லை, இது அகப்பொருள் தோன்றி வடிவமைந்து வளர்ச்சியுறும் பரவலான நிகழ்ச்சிப் போக்காக, நேரடியான வாழ்க்கையின் உற்பத்தி மற்றும் புனருற்பத்தி தொடர்பாயும் இதன் காரணமாயும் ஒன்றிணைந்துள்ள மக்கள் கூட்டின் சமூக வாழ்க்கை நடவடிக்கை எனும் பரவலான நிகழ்ச்சிப் போக்காகப் புரிந்து கொள்ளப்படுகிறது. உற்பத்தியாளர்

கள் உற்பத்திச் சாதனங்களுடன் தங்குதடையின்றி தொழில் நுட்ப-பொருளாதார ரீதியாக ஒன்றிணைய வகை செய்யும் சூழ்நிலைகளை ஒழுங்கமைப்பதுதான் மக்கள்தொகைக் கொள்கையின் குறிக்கோளாகும். மக்கள் வளர்ச்சியானது புலப்பாடுகளின் மேற்பரப்பில் மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் நிகழ்ச்சிப் போக்குகளின் வடிவத்தைப் பெறுகிறது. மக்கள்தொகைக் கொள்கை சோஷலிசச் சமுதாயத்தின் குறிக்கோள்களின் நோக்கிலிருந்து பார்க்கும் போது பண்பு ரீதியாகவும் அளவு ரீதியாகவும் இந்நிகழ்ச்சிப் போக்குகளின் பயன்மிகு தன்மை, திசையமைவு மற்றும் வேகத்திற்கு வகை செய்ய வேண்டும். அப்போது மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் சாதாரண அளவு அம்சத்தை ஒழுங்கமைக்கும் நடவடிக்கையாக வரையறுக்கப்படும்.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மீது செயலாக்கம் புரியும் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தத்தால் ஆனது, மக்கள்தொகைக் கொள்கையைப் போன்றே இதுவும் பொருளாதாரக் காரணிகளால் மட்டுமின்றி (இவை இதன் அடிப்படையாக இருந்தாலும்) குறிப்பிட்ட சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் சமூக உறவுகளாலும் மக்களுடைய கூட்டங்கூட்டமான போக்காலும் (கூட்டங்கூட்டமான ஜனத்தொகைப் போக்கு) நிர்ணயிக்கப்படுகிறது.

முக்கியமாக மக்கள்தொகைக் கொள்கையின் அங்கங்களாகிய மேற்கூறிய மூன்று அம்சங்களில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை பிரதானமாக மக்களுடைய புனருற்பத்தி மீது ஏதாவதொரு விதத்தில் செயலாக்கம் புரிய வேண்டும். இதன் தொடர்பாக மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையின் பின்வரும் பரஸ்பரத் தொடர்புடைய, பரஸ்பரம் பின்னிப் பிணைந்த பிரதான போக்குகளைக் குறிப்பிடலாம்: சமூக இடம் பெயர்வாற்றலின் மீதான செயலாக்கம் (ஒரு சமூகப் பிரிவிலிருந்து வேறொரு பிரிவிற்கு மக்கள் மாறுதல்); தலைமுறைகளினுடைய இயற்கையான புதுப்பித்தலின் தன்மைகளின் மாற்றம் (பிறப்பு விகிதம், திருமணங்கள், மரண விகிதம், இயற்கைப் பெருக்கம், சராசரி வாழும் வயது); மக்களுடைய இடப்பெயர்ச்சியின் மீதான தாக்கம்; அரசு பின்பற்றும்

இடப்பெயர்ச்சிக் கொள்கை நாட்டின் பரப்பில் மக்கள் குடியேற்றத் துறையில் உள்ள கொள்கையுடன் இயற்கையாக இணைந்துள்ளது (இடப்பெயர்ச்சி, நாட்டிற்குள் வருதல், நாடுபெயர்தல், மக்களின் பூகோள ரீதியான பரப்பீடு, இவர்களின் நெருக்கம், இத்தியாதி).

ஒவ்வொரு சமுதாயத்திலும் பொருளாதாரம், சமூகக் கட்டமைவு, மற்ற பல அம்சங்கள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் காலப் போக்கில் இடையறுது மாற்றமடைகின்றன. மக்களுடைய பொது எண்ணிக்கை மாற்றமடைவதோடுகூட இவர்களுடைய வயது,பால் ரீதியான கட்டமைப்பும் கல்வி, கலாச்சார மட்டமும் நாட்டின் பரப்பில் மக்களின் பரப்பீடும் மாற்றமடைகின்றன, எண்ணிக்கையிலும் உள்ளடக்கத்திலும் குடும்பக் கட்டமைவு மாறும் நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுகிறது. வேறு விதமாகச் சொன்னுல் சமுதாயத்தில் பொருளாதார, சமூக மற்றும் ஜனத்தொகை புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகள் இடையருது நடைபெறுகின்றன. எனவே சமுதாயத்தின் பயன்மிகு வளர்ச்சிக்கு, ஒரு புறம் பொருளாதார, சமூக நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் மறு புறம் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் இடையிலான மிகவும் உகந்த விகிதங்கள் அவசியம். இக்கடமையின் நிறைவேற்றம் ஜனத்தொகை ஏற்பு நிலே என்றழைக்கப்படுவது உருவாவதுடன் தொடர்புடையது. இதை உருவாக்குவது மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையின் நடவடிக்கைகளுடன் பிரிக்க இயலாதவாறு தொடர்புடையது.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை பின்பற்றும் முறைகளே மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்: பொருளாதார, நிர்வாக-சட்ட மற்றும் சமூக-மனவியல் செயலாக்க முறைகள்.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை சுரண்டலாளர்களின் நலன்களுக்காக நிறைவேற்றப்படும் வர்க்கப் பகை முரண்பாட்டு சமுதாயங்களில் இம்முறைகள் இயற்கையாகவே ஆதிக்க வர்க்கங்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ''குடும்ப உதவி செயல்திட்டங்கள்'', நவீன வளர்முக நாடுகளில் குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உதவுவதில் அமெரிக்கா மற்றும் முக்கிய முதலாளித்துவ நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள்

மேற்கொண்டுள்ள தீவிர நடவடிக்கை இதற்கு தக்க உதாரண மாகும். அமெரிக்க ஐக்கிய நாடும் மற்ற முக்கிய முதலாளித் துவ நாடுகளும் வளர்முக நாடுகளில் தம் நிலைகளைத் தக்க வைக்க முயலுவதை மூடி மறைக்கும் சாதனமாக, நவீன காலனியாதிக்கத்தைப் புகுத்தும் சாதனமாக மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் நடவடிக்கைகளைப் பயன் படுத்துகின்றன.

சோஷலிசச் சூழ்நிலைகளில்தான் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையின் மேற்கூறிய முறைகள் சமுதாயம் முழுவதன் நலன்களுக்காக வளர்ச்சியுறும் வாய்ப் பைப் பெறுகின்றன. சோஷலிசச் சமுதாயத்தில் இவற்றைப் பயன்படுத்தும் ஒரு சில வழிகளைப் பார்ப்போம். உதாரண மாக குழந்தை பெறுவதை ஊக்குவிக்கும் முகமாக பின்வரும் பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம்: குழந்தை களின் எண்ணிக்கைக்கேற்ப குடும்பங்களுக்குப் பல்வேறு நேரடி உதவிகள்; வரி செலுத்துவதிலும் அரசிடமிருந்து கடன் பெறுவதிலும் பலவித சலுகைகள்; குழந்தை பெறு வதை ஊக்குவிக்கும் மற்ற சில சலுகைகள் (குடும்ப உதவித் தொகைகள் இவற்றில் அடங்கும்). பல குழந்தைகளை உடை யோருக்கான உதவித் தொகைகளும் தனிப்பட்ட குடும்பங் களுக்கு அளிக்கப்படும் நேரடியான பொருளாதார உதவி நடவடிக்கைகளும் அளவில் குறைவாக இருந்தாலும் கூட உட்பொருள் உள்ளவையெனில் குடும்ப உதவித் தொகை கள் குறிப்பிட்ட அளவில்தான் செயல்வன்மையுள்ளவை. இவை குடும்பத்தில் குழந்தைக்காக ஆகும் செலவுகளை (உணவு, உடை, மற்ற சில பொருளாயதச் செலவுகள்) முழு மையாகவோ கணிசமான அளவிலோ ஈடுகட்ட வேண்டும். குழந்தைகளைப் பராமரிக்கும் நிறுவனங்களைப் பெருக்குவது, இவற்றின் தரத்தை உயர்த்துவது மற்றும் பல்வேறு குழந்தை சேவை வசதிகளை விரிவுபடுத்துவது (பல்வேறு வயதுள்ள குழந்தைகளுக்கான தயாரான உணவைப் பரவலாக விற்க ஏற்பாடு செய்தல், குழந்தைகளின் துணிமணிகளைத் துவைத்து வீட்டிற்குக் கொண்டு வந்து தருவது, இன்னும் பல) ஆகியவை மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையின் பொருளாதார நடவடிக்கைகளில் அடங்கும். வேலை செய்யும் தாய்மார்களுக்காக அளிக்கப்படும் பல்வேறு சலுகைகளும் (வேலை நேரத்தில் சலுகை, சிறந்த பருவக் காலத்

தில் குடும்பத்துடன் ஓய்வெடுக்க விடுமுறை அளிப்பது, குடும்ப ஓய்வில்லங்கள், ஆரோக்கிய இல்லங்களுக்குச் சலு கைகளுடன் அனுமதிச் சீட்டு வழங்குவது, சேவை வசதிகளை அதிகப்படுத்துவது) பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

முக்கியமாக திருமணம் மற்றும் விவாகரத்து, தம்பதியர், தாய், சேய் ஆகியோருடைய சொத்துரிமைகள் சம்பந்தமான சட்டமுறையுடன் தொடர்புடைய பல்வேறு வரையளவு பத்திரங்கள் நிர்வாக-சட்ட நடவடிக்கைகளில் அடங்கும். இவை திருமணத்தை ஊக்குவிக்கும், ஆதாரமற்ற விவாகரத்துகளைக் கடினமாக்கும், தாயின் உரிமைகளை விரிவாக்கும், இத்தியாதி. சட்டப் பத்திரங்கள் பெண்களின் விருப்பத்திற்கேற்ற கருக் கலைப்பிற்கான உரிமையை அளிக்கலாம் அல்லது முழுமை யாகவோ கணிசமான அளவிலோ இவ்வுரிமையை அகற்ற லாம். கருக்கலைப்பைத் தடுப்பதால் மருத்துவ நிறுவனங் களுக்கு வெளியே செய்யப்படும் கருக்கலைப்புகள் அதிகரிக் கின்றன, எனவே தாய்மார்களின் உடல்நலம் கேடுறுவதும் மரண விகிதமும் கூடுகின்றன என்று சோவியத் யூனியன், மற்ற நாடுகளின் அனுபவம் காட்டுகிறது. உயர் செயல் வன்மை மிக்க, எல்லோருக்கும் கிட்டக் கூடிய, மக்களுக்குத் தெரிந்த கருத்தடுப்புச் சாதனங்களைப் பரவலாக நடைமுறை படுத்துவதுதான் இதற்குள்ள ஒரே மாற்று வழி. மொத்தத் தில் பிறப்பு விகிதத்தை ஊக்குவிக்கும் நிர்வாக-சட்ட நட வடிக்கைகள் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை நடவடிக்கைகளின் தொகுப்பின் அங்கம் என்ற வகையில்தான் பயன் தர வல்லவை.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை முறைகளின் மூன்றாவது பிரிவு சமூக-மனவியல் செய லாக்க முறைகளாகும். குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் குறிப்பிட்ட அளவு குழந்தைகள் இருப்பது எவ்வளவு சிறந் தது எனும் கருத்தை வெகுஜன பிரச்சாரச் சாதனங்களின் மூலம் முறையாக, வலுக்கட்டாயமின்றி பரப்புவதுதான் இதன் முக்கிய கடமையாகும். மிக உகந்த எண்ணிக்கை யிலான குழந்தைகள் சமுதாயத்திற்கு மட்டுமின்றி குடும்பத் திற்கே தேவை என்பதை இங்கே உண்மையாக உணரச் செய்ய வேண்டும். அரசின் நேரடி மற்றும் மறைமுக உதவி யோடு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குழந்தைகளைப் பெற்று வளர்ப்பது ஒவ்வொரு தம்பதியினராலும் இயலக்

கூடியதே என்பதைத் திட்டவட்டமான விவரங்களின் அடிப் படையில் நம்பச் செய்ய வேண்டும். குழந்தைகளைப் பெற்று வளர்ப்பது என்பது தம்பதியரின் உழைப்பு நடவடிக்கைக்கு சற்றும் குறையா முக்கியத்துவம் வாய்ந்த சமுதாயக் கடமை, தாய்மார்களோ பெண் மருத்துவர்கள், பெண் விஞ்ஞானி கள், முன்னணிப் பெண் தொழிலாளிகளுக்குச் சற்றும் குறையா வகையில் கௌரவமானவர்கள் என்னும் கருத்து இத்தகைய பிரச்சாரத்தில் சகலவிதங்களிலும் ஊடுருவி நிற்க வேண்டும்.

மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள் கையின் நடவடிக்கைகளில் திருமணத்திற்கு அளிக்கப்படும் ஊக்கம் முக்கிய இடத்தை வகிக்கிறது, ஏனெனில் சோஷலிச அரசில் பெரும்பாலான குழந்தைப் பிறப்பு இதனுடன் தொடர்புடையது. இதில் ''வெறும் ஜனத்தொகை'' அம்சங் களைத் தவிர இப்பிரச்சினையின் மற்ற சில அம்சங்களை, உதா ரணமாக மருத்துவ, சமூக ரீதியான அம்சங்களைக் கவனத் தில் கொள்ள வேண்டும். சோவியத் சமுதாயத்தில் திருமணம் செய்து கொள்வதற்கான சகலவித சொத்து வரம்புகளும் ஒழிக்கப்பட்டு விட்டன. ஆனால் ஒரு சில ஊக்குவிப்பு நடவடிக் கைகள், உதாரணமாக இளம் தம்பதியினர் குடும்பம் நடத்தக் கடன் வழங்குதல், வீடு ஒதுக்குதல் முதலியன பிறப்பு விகி தத்தை உயர்த்தக் கூடும். ஆனால் இவை, குழந்தை பிறப்பை ஊக்குவிக்கும் மற்ற நடவடிக்கைகளோடு, முக்கியமாக பொருளாதார நடவடிக்கைகளோடு சேர்ந்துதான் பயன் தர வல்லவை.

ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மீது செயலாக் கம் புரிய வல்ல எல்லா வழிகளையும் தன் கரங்களில் கொண்டு, இவற்றை உணர்வு பூர்வமாகப் பயன்படுத்தும் சோஷலிசச் சமுதாயத்தில் பயன்மிகு மக்கள்தொகைக் கொள்கை என்பது முற்றிலும் எதார்த்தமானது, அவசியமானது, இது கம்யூனி சத்தை நோக்கிய வெற்றிகரமான இயக்கத்தின் புறவயத் தேவைகளால் முன்வைக்கப்படுகிறது. மக்கள்தொகைக் கொள்கையின் பொதுவான போக்கில் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளின் முறை யில் சேர்க்கப்பட்ட மக்கள்தொகைப் புள்ளிவிவர ஆய்வியல் கொள்கை தனிப்பட்ட ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கு களின் வேகத்திற்கும் சமுதாய வளர்ச்சியின் புறவய ரீதி

யான தேவைகளுக்கும் இடையே உள்ள தற்காலிகப் பொருத்தமின்மைகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமுதாய வளர்ச்சியின் புறவய ரீதியான தேவைகளுக்கு ஏற்றதாயிருக்கக் கூடிய மக்களின் உணர்வு பூர்வமான ஜனத்தொகைப் போக்கை ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட நடவடிக்கை முறையாக இது விளங்கும்.

சமூக-பொருளாதார அடிப்படைகளை உருவாக்குவது, மக்கள்தொகைக் கொள்கையின் முறைகளைச் செயல்படுத்துவது ஜனத்தொகை நிலவரத்தைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துவதிலிருந்து ஆரம்பமாக வேண்டும். இந்நிலவரம் குறிப்பிட்ட காலத்தில் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் நிலை பற்றிய சித்தரிப்பாகும், இது இவற்றின் மாற்றப் போக்குகளைக் காட்டுகிறது. ஜனத்தொகை நிலவரத்தின் பொருளாதார, ஜனத்தொகை, தார்மீக, சமூக-சுகாதார மற்றும் மரபியல் பண்புவழி விளைவுகளை வெளிப்படுத்துவதும் பெரிதும் முக்கியமானது.

உதாரணமாக பிறப்பு விகிதத்தைப் பார்ப்போம். 60ஆம் ஆண்டுகளிலிருந்து சோவியத் யூனியனில் இது குறையத் துவங்கியுள்ளது. இது குறைந்த அளவு குழந்தைகளையுடைய (ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள்) குடும்பங்கள் பரவுவதுடன் தொடர்புடையது, இன்று சோவியத் யூனியனில் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் இத்தகைய குடும்பங்கள் மூன்றில் ஒரு பங்காகும். அதுவும் தனிப்பட்ட சில குடியரசுகளில் (ருஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசு, உக்ரேனியா, எஸ்தோனியா, லிதுவேனியா) குறைந்த அளவு குழந்தைகளையுடைய குடும்பங்கள் 80—84 சதவிகிதமாக உள்ளன. இந்த ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்கில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் தீவிர விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பொருளாதார விளைவுகள் உழைப்பு மூலாதாரங்களின் பற்றுக்குறையோடு தொடர்புடையவை. குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்களின் பங்கு குறைவதிலும் அனுகூலமற்ற வயது, பால் ரீதியான மக்கள் கட்டமைப்பு உருவாவதிலும் ஜனத்தொகை விளைவுகள் வெளிப்படுகின்றன. குறைந்த அளவு குழந்தைகளையுடைய குடும்பங்கள் பரவியிருப்பதானது குழந்தைகள், இளைஞர்கள் மத்தியில் சுயநலத்தை வளர்க்கிறது, குடும்பத்தின் ஸ்திரத் தன்மையைக் குலைக்கிறது. இது தார்மீக விளைவுகளாகும். சமூக மதிப்பு

களின் முறையில் குழந்தைகளின் மதிப்பு குறைவது நீதிநெறி விளைவாகும். ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் சமூக-மனவியல் விளைவுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். இது வாழ்வின் பாலான நுகர்வு ரீதியான உறவு முறையிலும் ஒரு சில ஒழுக்க வரையளவுகளின் மாற்றத்திலும் வெளிப்படுகிறது. இந்த உதாரணம் அவசியத்தின் காரணமாக மிகவும் எளிதாக்கி தரப்பட்டுள்ளது. ஜனத்தொகை நிலவரத்தின் மாற்றத்தில் காணப்படும் முக்கியப் போக்குகளின் பகுப்பாய்வும் மதிப்பீடும் மிகவும் சிக்கலானவை, பன்முகத்தன்மை வாய்ந்தவை; மக்களுடைய புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகள் மற்றும் இவர்களின் இடப்பெயர்ச்சித் தன்மை மீது ஏதாவது ஒரு வகையில் தாக்கம் செலுத்தும் ஏராளமான காரணிகளை இதற்குக் கணக்கில் கொண்டு கூட்டாக ஆராய வேண்டும்.

இன்றைய வளர்ச்சி, உடனடியான எதிர்கால வளர்ச்சி மற்றும் நீண்ட எதிர்கால வளர்ச்சி ஆகியவற்றின் தேவைகளுடனான நெருங்கிய பரஸ்பரத் தொடர்பில் மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையின் திட்டவட்டமான குறிக்கோளையும் கடமைகளையும் வரையறுப்பது என்பது இன்னமும் சிக்கலான, அடுத்த கட்டமாகும். மக்கள்தொகை வளர்ச்சியை நிர்வகிக்கும் அடிப்படைக் கோட்பாடுகளையும் நீண்ட எதிர்காலத்திற்கான இந்நிர்வாக முறைகளையும் உருவாக்கும் சிக்கலான கடமையும் இதிலடங்கும். இறுதியாக, மக்கள்தொகை பற்றிய புள்ளிவிவர ஆய்வியல் கொள்கையின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதே மிக முக்கியக் கட்டமாகும். ஆனால் இந்நடவடிக்கைகளைத் தீட்டி செயல்படுத்துவதை ஏதோ ஒரேசீரான மூன்றுபடியான நிகழ்ச்சிப் போக்காகப் பார்க்கக் கூடாது. உண்மையில் இக்கட்டங்களில் ஒவ்வொன்றும் காலத்தில் ஒன்றுடன் ஒன்று பரஸ்பரம் பின்னிப் பிணைந்து கொள்கின்றன.

மக்கள்தொகை நிகழ்ச்சிப் போக்குகளுக்கு தம் இயல்பான கால அலகு (தலைமுறையின் வாழ்க்கைக் காலம்) உண்டு. மக்களுடைய வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகளின் மீது தாக்கம் செலுத்தும் எல்லா அம்சங்களும் புனருற்பத்திப் போக்கில் பல ஆண்டுகள் கழித்துதான் (இக்காலம் தோராயமாக தலைமுறையின் வாழ்க்கைக் காலத்திற்குச் சமமானது) அந்தந்த மாற்றங்களை ஏற்படுத்தும். அதே சமயம் மக்களின் வளர்ச்சியானது, மக்களின் முன்னும் உழைப்பு மூலாதாரங்

களின் முன்னும் சமுதாயமும் பொருளாதாரமும் வைக்கக் கூடிய, விரைவாக மாறக் கூடிய கோரிக்கைகளுக்கேற்ப சமுதாயத்தின், பொருளாதாரத்தின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் மக்களுடைய பண்புகளை மேம்படுத்தும் அவசியத்தை உள்ளடக்கியுள்ளது. மக்களின் பண்பு ரீதியான தன்மைகள், நவீன மற்றும் எதிர்கால தொழில்நுட்பத்தின் பால் தேவையான ''நெகிழ்வை'' ஏற்படுத்த உழைப்பு மூலாதாரங்களுக்கு உள்ள திறமை மேன்மேலும் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றன, ஏனெனில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி மக்களின், குறிப்பாக இவர்களில் உழைக்கும் பகுதியினரின் பண்பு ரீதியான தன்மைகளின் முன் இடையறுது அதிகரித்து வரும் கோரிக்கைகளை வைக்கிறது. அரசு மேற்கொள்ளும் விசேஷ நடவடிக்கைகளின்றி மக்கள் தம் வளர்ச்சியில் சமூக மற்றும் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் கோரிக்கைகளிலிருந்து பின்தங்கி இதற்குத் தடையிடக் கூடும். மக்கள்தொகையின் வளர்ச்சி சமுதாயம் மற்றும் நாட்டு பொருளாதாரத்தின் வளர்ச்சியோடு நேரடியாகவும் தலைகீழான சார்பு முறையிலும் தொடர்புடையது. இது தவிர, அந்தந்த ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளின் மீதான பல்வேறு சமூக-பொருளாதாரக் காரணிகளின் தாக்கம் முற்றிலும் எதிர்பாராததாக இருக்கலாம், பல சமயங்களில் சமூக ஒழுங்கமைப்பிற்கோ, கண்காணிப்பிற்கோ உட்படாமல் போகலாம். ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை, குறிப்பாக பிறப்பு விகிதங்களை ஒழுங்குபடுத்தும் பிரச்சினை உலக விஞ்ஞான நடைமுறையில் மிகச் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றாகும். அதிலும் திருமணம் (அல்லது விவாகரத்து), குழந்தை பெறுதல், மக்களின் இடப்பெயர்ச்சி முதலியன லட்சோபலட்சம் மக்களின் உணர்வு பூர்வமான, சுதந்திரமான சித்தத்தைப் பொறுத்தவை என்பதால் ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை ஒழுங்கமைப்பது இன்னமும் சிக்கலானது.

நீண்டகால செயல்திட்டத்தில் மட்டுமே மக்கள்தொகை வளர்ச்சியின் மீது செயலாக்கம் புரிய முடியும். இத்திசையிலான நடவடிக்கைத் திட்ட உள்ளடக்கத்தின் மீதான சர்வாம்ச அணுகுமுறைதான் மக்கள்தொகை வளர்ச்சியை நிர்வகிக்கும் முறைகளின் முக்கிய கோட்பாடாகும். மக்கள் தொகை வளர்ச்சி பற்றிய நடவடிக்கைகள் சமுதாயத்தால்

நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோளை (மக்கள் அனைவரின் வளர்ச்சி) அடைவதை நோக்கமாகக் கொண்ட, இயற்கையாக இணைந்த கூட்டு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தமாக இருக்க வேண்டும்.

அளவு ரீதியாக சமூக வளர்ச்சியின் கடமைகளுக்கு உகந்ததாயிருந்து சமுதாய வளர்ச்சியின் பொருளாதார வாய்ப்புகளை ஆதாரமாகக் கொண்டு இயங்கக் கூடிய மக்கள்தொகை வளர்ச்சியின் மிகவும் சிறந்த வகையை உருவாக்குவதுதான் நீண்ட எதிர்காலத்திற்கு மக்கள்தொகை விஷயத்தில் செயல் திட்டத்தின் குறிக்கோளாயிருக்கும். இதைக் குறிக்கோளாக வைத்து சமுதாயம் மக்களின் இயற்கைப் புனருற்பத்தி, இடப்பெயர்ச்சி நிகழ்ச்சிப் போக்குகள் மற்றும் குடியேற்றம், தன் சமூகக் கட்டமைவில் தனக்கேற்ற மாற்றங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவது சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கலாம். ஜனத்தொகை நிகழ்ச்சிப் போக்குகளை மிகவும் உகந்தவையாக ஆக்குவது மக்களின், இவர்களுடைய பன்முக முன்னேற்றத்தின் பண்பு ரீதியான தன்மைகளின் மாற்றத்துடனும் தேசியப் பொருளாதார வளர்ச்சியின் நீண்டகாலத் திட்டங்களுடனும் தனிநபரின் நலன்களுடனும் இயற்கையாக இணைந்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் சமுதாயம் மற்றும் தனிப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கையின் பல அம்சங்களின் மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன, இவை இவற்றின் சமூக மற்றும் பொருளாதாரப் பயன் நோக்கிலிருந்து சர்வாம்ச ரீதியாக ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*

*சென்னை—600098*

**ஷோ-ரூம்**

*136, அண்ணாசாலை, சென்னை—600002*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001*

*3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018*

*42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008*

*செர்ரி ரோடு, சேலம்—636001*

**விற்பனை நிலையங்கள்**

*3—22—75—D, மதுரை சாலை;*

*திருநெல்வேலி ஜங்ஷன்—627001*

*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*

*சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001*

*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001*

EELAN BOOKS
SIGNATURE
NORWAY

இந்நூலில் மார்க்சிய-லெனினிய தத்துவம் மற்றும் முறையியலின் அடிப்படையில் மக்கள்தொகை வளர்ச்சியின் முக்கிய நியதிகள் ஆராயப்பட்டுள்ளன.

முதலாளித்துவ உற்பத்தி முறை சம்பந்தமான அத்தியாயங்களில் இச்சமுதாய அமைப்பில் மக்கள்தொகை வளர்ச்சியின் சிறப்பியல்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன, மக்கள்தொகை பற்றிய பூர்ஷ்வா கருத்தமைப்புகள் விமரிசிக்கப்பட்டுள்ளன, இவை எப்படி விஞ்ஞான பூர்வமாக ஆதாரமற்றவை என்று விளக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் சோஷலிசச் சமுதாயத்தில் மக்கள்தொகைப் பிரச்சினைகள் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சோவியத் யூனியனில் மக்கள்தொகை வளர்ச்சியை உதாரணமாக கொண்டு நூலாசிரியர்கள் முதலாளித்துவத்தை விட சோஷலிசம் மேம்பட்டது என்று காட்டுகின்றனர்.



மக்கள்தொகை பற்றிய ஞான முறைக்கு இப்புத்தகத்தில் தனி பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மக்கள்தொகை பற்றிய ஞான முறையை வகையீடு செய்வதன் அடிப்படைகள் தரப்பட்டுள்ளன, இவ்வகையீட்டின் பல்வேறு அம்சங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.